563

# தமிழ்நாடு

# சட்டமன்றப் பேரவை

நடவடிக்கைகள் செயலக

வெளியீடு

©

தொகுதி-15 எண்-2

பிப். 6. 1992

V2ll,81 N92
N92-15-2

வெளியீடு 10-8-1992 Issued 10-8-1992

563

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வியாழக்கிழமை பிப்ரவரி 6, 1992 - தொகுதி 15 - எண் 2
Thursday the 6th February, 1992 - Volume 15 - No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

## உள்ளடக்கம்.

6—2—1992.


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள். | 133—172 |
| **2. சிறப்புக் குறிப்பு—** | |
| தஞ்சை மாவட்டத்தில் கடலோரக் கடைமடைப் பகுதிகளில் பயிர்கள் வாடுவததைத் தவிர்க்க தண்ணீர் விட வேண்டியதன் அவசியம் குறித்து. | 173—174 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| (அ) பேராவூரணி ஒன்றியம், களத்தூர் மற்றும் இடையாத்தியில் கல்லணைக் கால்வாய் பாலங்கள் சீர் செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து. | 174—175 |
| (ஆ) கோயம்புத்தூரில் பால் முறையாக வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து. | 175—177 |
| **4. அறிக்கைகள் அளித்தல்—** | |
| மனுக்கள் குழு. | 177 |
| **5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம் — தொடர்ச்சி.** | 178 |
| திரு. செ. கு. தமிழரசன் .. | 178—186 |
| திரு. கா. பூ. முனுசாமி . | 186—188 |
| *திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் .. | 188—195 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு . | 196—211 |
| *திரு. வ. சத்தியமூர்த்தி .. | 211—218 |
| திரு. ஆர். சிங்காரம் .. | 218—223 |
| டாக்டர் தே. குமாரதாஸ் . | 224—238 |

| | | பக்கங்கள். |
|---|---|---|
| *திரு. எஸ். வி. சண்முகம் | .. | 239—244 |
| திரு. வே. தம்புசாமி | .. | 245—256 |
| *திரு. ச. இராமச்சந்திரன் | .. | 256—278 |
| 6. விதி 110-இன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை— | | |
| 1992-93 ஆம் ஆண்டிற்கென மத்திய அரசு ஒதுக்கியுள்ள திட்ட ஒதுக்கீடு குறித்து. | | 225—226 |
| 7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள். | | 278 |



162265

600

Y211,31 N92

N92.15.2




## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### 1992 பிப்ரவரி 6, வியாழக்கிழமை.

### தை 23, பிரஜோற்பத்தி — திருவள்ளுவர் ஆண்டு 2023.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்".

அறிவாற்றல் மிக்க பெரியோர்களை எல்லாம் பேணிப் போற்றி அவர்களைத் தம்மவர்களாக்கிக் கொள்ளுதல் பெறற்கு அரிய பேறுகள் எல்லாவற்றுள் சிறந்ததாகும்.

### 1. வினாக்கள் — விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் — விடைகள். வினா எண். 61, திரு. செ. பெருமாள், மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 62-வது வினாவையும் சேர்த்து எடுத்துக் கொள்ளும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர், அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க, ஒரேபொருள் பற்றியதாக இருக்கிற காரணத்தால், இரண்டு வினாக்களும் சேர்த்து எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

வினா எண். 62, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

61.

### ஜவ்வாது மலையில் பழங்குடியினர் தொகுதி.

(*) 3988,—திரு. செ. பெருமாள் :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

ஜவ்வாது மலையை மையமாக வைத்து ஒரு பழங்குடியினர் தொகுதியை உருவாக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

62.

## தனித்தொகுதிகளை மாற்றியமைத்தல்.

(*) 4996—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சட்டமன்ற தனித்தொகுதிகளை மாற்றியமைக்குமாறு மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா எண். 61 மற்றும் 62 ஆகியவற்றுக்கான விவர அறிக்கைகள் இந்த அவையின் முன் வைக்கப்பட்டு இருக்கின்றன.

### விவர அறிக்கை

அரசியலமைப்புச் சட்டத்தில் தற்பொழுது உள்ள தடையின்படி நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கையையும் அவைகளின் பரப்பளவுகளையும் கி.பி. 2001-ல் எடுக்கப்படும் மக்கள் கணக்கெடுப்பிற்கு முன்னர் மாற்ற இயலாது. தமிழ்நாட்டிற்கு அளிக்கப்பட்டுள்ள 234 சட் மன்றப் பேரவைத் தொகுதிகளில் 42 தொகுதிகள் ஆதிதிராவிடர் தனித் தெகுதிகளாகவும், 3 தொகுதிகள் பழங்குடியினர் தொகுதிகளாகவும் உள்ளன.

2. நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் எண்ணிக்கையில் பெரிய மாற்றங்கள் எற்பட்டுள்ளதால், அவைகளை மாற்றியமைக்க வேண்டுமென்றும், ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்காக தொகுதிகள் நீண்ட காலமாக தொடர்ந்து தனித் தொகுதிகளாக உள்ளதால் அவைகளைத் தற்பொழுதுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி சுழற்சி முறையில் பிற தொகுதிகளுக்கு வழங்க வேண்டுமென்றும், மக்கள் பிரதிநிதிகளும் பொது மக்களும் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டனர்.

3. இந்திய தேர்தல் ஆணையமும் இக்கருத்துக்களை மைய அரசிற்குப் பரிந்துரைத்தது. மைய அரசு, தேர்தல் முறைகளில் மாற்றங்களைச் செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவிடம் இந்த வேண்டுகோள்களையும் பரிசீலிக்க அனுப்பியது. பரிசீலனைக்குப்





பிறகு, இக்குழு, 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, எல்லா மாநிலங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையில் எவ்வித மாற்றமும் செய்யாமல், 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் பரப்பளவுகளில் மாற்றம் செய்யவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தனித் தொகுதிகளை 1981 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கின்படி பிற தொகுதிகளுக்குச் சுழற்சி முறையில் வழங்கவும், அரசியலமைப்பில் திருத்தம் கொண்டுவரலாம் எனப் பரிந்துரைத்தது. அந்த பரிந்துரைகளின் அடிப்படையில், மைய அரசு, அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர 71-வது அரசியலமைப்புச் சட்ட முன்வடிவை 30–5–1990-ல் மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தியது. நிலுவையிலுள்ள இந்தச் சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேறியபின், தொகுதி வரையறை ஆணையம் (Delimitation Commission) புதிதாக நியமிக்கப்படும். இவ்வாணையம் மாநிலங்களிலுள்ள பல்வேறு இடங்களுக்குச் சென்று பொதுமக்களின் கருத்துக்களையும், மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களையும் அறிந்தபின் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதியின் எல்லைகளை வரையறை செய்வது பற்றியும், தனித் தொகுதிகளை மாற்றியமைப்பது பற்றியும் முடிவெடுக்கும். எனவே, ஜவ்வாது மலையை மையமாக வைத்து தனித் தொகுதி ஒன்றினை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை புதிதாக நியமிக்கப்படும் தொகுதி வரையறை ஆணையத்தினால்தான் பரிசீலிக்க முடியும்.

### விவர அறிக்கை

அரசியலமைப்புச் சட்டத்தில், தற்பொழுது உள்ள தடையின்படி, நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கையும் அவைகளின் பரப்பளவுகளையும் கி.பி. 2001 ஆம் ஆண்டில் எடுக்கப்படும் மக்கள் கணக்கெடுப்பிற்கு முன்னர் மாற்ற இயலாது. தமிழ்நாட்டிற்கு அளிக்கப்பட்டுள்ள 234 சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் 42 தொகுதிகள் "ஆதிதிராவிடர்" தனித் தொகுதிகளாகவும், 3 தொகுதிகள் "பழங்குடியினர்" தொகுதிகளாகவும் உள்ளன.

2. நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் எண்ணிக்கையில், பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால், அவைகளை மாற்றியமைக்க வேண்டும் என்றும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தொகுதிகள், நீண்ட காலமாகத் தொடர்ந்து தனித் தொகுதிகளாக உள்ளதால் அவைகளை தற்பொழுதுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, சுழற்சி முறையில் பிற தொகுதிகளுக்கு வழங்க வேண்டுமென்றும், மக்கள் பிரதிநிதிகளும், பொது மக்களும் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டனர், இந்தியத் தேர்தல் ஆணையமும் இக்கருத்துக்களை மைய அரசிற்குப் பரிந்துரைத்தது.

3. மைய அரசு, தேர்தல் முறைகளில் மாற்றங்களைச் செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவிடம் இந்த வேண்டுகோள்களையும் பரிசீலிக்க அனுப்பியது. பரிசீலனைக்குப் பிறகு, இக்குழு 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி எல்லா மாநிலங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையில் எவ்வித மாற்றமும் செய்யாமல், 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் பரப்பளவுகளில் மாற்றம் செய்யவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தனித் தொகுதிகளை 1981 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கின்படி பிறதொகுதிகளுக்குச் சுழற்சி முறையில் வழங்கவும், அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வரலாம் எனப் பரிந்துரைத்தது. அந்த பரிந்துரைகளின் அடிப்படையில், மைய அரசு, அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர 71-வது அரசியலமைப்பு சட்ட முன்வடிவினை 30–5–1990-ல் மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தியது. நிலுவையிலுள்ள இந்தச் சட்டமுன் வடிவு, சட்டமாக நிறைவேறிய பின், தொகுதி வரையறை ஆணையம் (Delimitation Commission) புதிதாக நியமிக்கப்படும். இவ்வாணையம் மாநிலங்களிலுள்ள பல்வேறு இடங்களுக்குச் சென்று பொது மக்களின் கருத்துக்களையும், மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களையும் அறிந்த பின் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதியின் எல்லைகளை வரையறை செய்வது பற்றியும், தனித் தொகுதிகளை மாற்றி அமைப்பது பற்றியும் முடிவெடுக்கும்.

திரு. செ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே, ஏற்காடு, சேந்தமங்கலம், உப்பிலியாபுரம், ஆகிய இந்த மூன்று தொகுதிகளும் எஸ்.டி. தொகுதிகளாக இருக்கின்றன. மேலும், தமிழகத்தின் விடிவெள்ளியாய் எண்ணற்ற மக்களின் இதயங்களின் குடிகொண்டிருக்கும் எங்களது இதய தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியிலே பழங்குடியினர் பயன் பெறும் வகையில் — ஜவ்வாது மலையிலே பழங்குடி மக்கள் அதிகமாக வாழ்கின்றார்கள் — அந்தமாவட்டத்திலே 75 ஆயிரம் மக்கள் தொகை இருக்கின்றபடியால், அந்தத் தொகுதியினை மத்திய அரசுக்கு மாநில அரசு வற்புறுத்தி ஒரு எஸ்.டி. தொகுதியை உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் அமைப்புச் சட்டத்தின் 1977 ஆம் ஆண்டு ஒரு திருத்தம் கொண்டு வந்து, கி.பி. 2001-ம் ஆண்டு மக்கள் எண்ணிக்கைக்கு பிறகுதான், இந்தத் தொகுதி வரை முறைகளை எல்லாம் செய்ய வேண்டும் என்று நிறைவேற்றப்பட்டதன் காரணமாக, இப்போது



அரசியல் அமைப்புச் சட்டத்தில் தடை இருந்து கொண்டு வருகிறது. அந்தத் தடையை நீக்க வேண்டும் என்று ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டு, தேர்வு ஆணையமும், மத்திய அரசுக்கு இதுபற்றி எழுதிற்று. மத்திய அரசும் இதுபற்றி பரிந்துரை செய்வதற்காக ஒரு குழு ஒன்றை அமைத்து, அந்தக் குழுவினரும் இப்போது, அந்தத் தொகுதிகளின் எண்ணிக்கையிலே எந்த மாற்றமும் இல்லாமல், ஆனால் அதனுடைய பரப்பளவிலே சிலபல மாற்றங்களைச் செய்யலாம் என்று மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்தது. அதனுடைய அடிப்படையிலே ஒரு சட்ட முன்வடிவை மாநிலங்களவையிலே மத்திய அரசு கொண்டு வந்திருக்கிறது. அது நிலுவையில் இருந்து வருகிறது. அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால், அதற்குப் பிறகு. தொகுதி ஆணையம் அமைக்கப்படும். தொகுதிகளை வரை முறை செய்கின்ற ஆணையம் அமைக்கப்பட்டதற்குப் பிறகு, அவர்கள் ஒவ்வொரு மாநிலமாக பொதுமக்களுடைய கருத்துக்களையும், மற்ற கோரிக்கைகளையும் அறிவார்கள். அறிந்ததற்குப் பிறகுதான், அங்கங்கே தொகுதிகளை மாற்றியமைக்கின்ற பணிகளும், மற்றவைகளும் நடைபெற முடியும். அதற்கிடையிலே எந்த ஒரு தொகுதியையும், ஆதி திராவிடர் தொகுதியாகவோ, பழங்குடி மக்கள் தொகுதியாகவோ, அல்லது பொதுத் தொகுதியாகவோ நாம் மாற்றியமைப்பதற்கு இல்லை. இப்போதுள்ள 234, சட்டப்பேரவைத் தொகுதிகளில், 42 தொகுதிகள் ஆதி திராவிடர்களுக்கான தனித் தொகுதிகள் என்றும், 3 தொகுதிகள் பழங்குடியினருக்கான தொகுதிகள் என்றும் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றை மாற்றி அமைப்பதற்கு இந்தத் தொகுதி வரைமுறை ஆணையம் அமைக்கப்பட்டதற்குப் பிறகுதான் இயலும். அதுவரையில், எந்த ஒரு தொகுதியையும் மாற்றி அமைக்க, சட்டப்படி இடம் இல்லை.

முற்பகல் 9-35

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967 ஆம் ஆண்டு தனித் தொகுதிகளாக அறிவிக்கப்பட்ட தொகுதிகள் 10 ஆண்டுகள் கழித்து 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது மாற்றி அமைக்கப்பட்டன. 1977-ல் மாற்றி அமைக்கப்பட்ட தனித் தொகுதிகள் இன்று வரையிலும் கடந்த 15 ஆண்டுகளாக மாற்றி அமைக்கப்படாமல் உள்ளன. எனவே, மத்திய அரசின் மூலமாக தேர்தல் கமிஷனிடம் சொல்லி இதை மாற்றி அமைப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய விளக்கத்தைத் தான் நான் இப்போது கொடுத்தேன். 1951 மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையிலும் 1961 ஆம் ஆண்டு மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையிலும் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை தொகுதிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. இப்போது தொகுதியினுடைய அளவையும், எண்ணிக்கையும் மாற்றி அமைப்பதற்கு தேர்தல் வரைமுறை

ஆணையத்திற்கு அனுமதி அளிக்கப்படவேண்டும். 1977-ல் ஒரு தனி திருத்த சட்டம் கொண்டு வந்தார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு கி.பி. 2001 வரையிலும் எந்த மாற்றமும் செய்யக் கூடாது என்பது சட்டம். அந்தத் தடை இப்போதும் இருந்து வருகிறது. இந்தத் தடையை நீக்கலாம் என்பதை தேர்வு ஆணையமும் இப்போது ஒப்புக்கொண்டிருக்கிறது. மத்திய அரசு இதை நீக்குவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகின்றது. 1981 ஆம் ஆண்டு எண்ணிக்கையின்படி எந்தத் தொகுதியினுடைய எண்ணிக்கையையும் மாற்றாமல் பரப்பளவை மட்டும் மாற்றி தொகுதியையும் மாற்றி அமைக்கலாம் என்பதற்கு இடம் வகுத்திருக்கிறார்கள். அந்தச் சட்டம் நிறைவேறியதற்குப் பிறகு தொகுதி வரைமுறை ஆணையம் அமைக்கப்படும். அது வந்ததற்குப் பிறகு பொதுமக்கள், பொறுப்பானவர்களுடைய கருத்துக்களை அறிந்து, எந்தெந்ததொகுதியை அமைக்கலாம் என்பது முடிவாகும். இப்போது 42 தனித் தொகுதிகளும், ஏற்காடு, சேந்தமங்கலம், உப்பிலியாபுரம் ஆகிய மூன்றும் பழங்குடிகளுக்கான தொகுதிகளாக இருந்து வருகின்றன. இந்தத் தொகுதிகளை தொகுதி ஆணையம் வந்ததற்குப் பிறகு தான் மாற்றி அமைக்கலாம். அது ஜவ்வாது மலையோ, அல்லது வேறு பல தொகுதிகளாகவோ கூட இருக்கலாம். ஆக ஆணையம் தான் மாற்றி அமைக்கமுடியுமே தவிர, அதற்கிடையில் மாற்றி அமைக்க வழி இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. சுப்புரத்தினம்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சட்ட அமைச்சர், திரு. விஜயபாஸ்கர ரெட்டி அவர்களின் சமீபத்திய பேட்டியில் தனித் தொகுதிகளை சுழல் முறையில் மாற்றி அமைப்பது குறித்த ஒரு சில கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அது குறித்து அதிகாரபூர்வமான தகவல் ஏதேனும் மத்திய அரசிடமிருந்து நம் அரசுக்கு பெறப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, அதுபற்றிய விளக்கங்களைத்தான் இதுவரையிலும் சொல்லிக் கொண்டு வந்தேன். ஆகவே சட்டத்தில் தடையாணை இருந்து வருகிறது.. தடையை நீக்கலாம் என்று ஒரு சட்டமுன்வடிவு கொண்டுவந்து அது நிலுவையில் இருக்கிறது. மத்திய அமைச்சரவையும் அதை மாற்றி அமைப்பதற்கு அனுமதி அளித்திருக்கிறது. அந்தச் சட்டம் நிறைவேற்றியதற்குப் பிறகு தொகுதி வரைமுறை ஆணையம் அமைக்கப்படும். அமைந்தால் எந்தெந்தத்தொகுதியைத் தனித்தொகுதி ஆக்குவது எதைப் பொதுத்தொகுதி ஆக்குவது என்று பொதுமக்களின் கருத்துக்களை கேட்பார்கள். அப்படிக் கேட்டதற்குப் பிறகு அவர்கள் தொகுதிகளை வரைமுறை செய்வார்கள். பரப்பளவையும் வரைமுறை செய்வார்கள். இப்போது எண்ணிக்கையை மாற்ற மாட்டார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு உறுப்பினர் கேட்டிருக்கிற கேள்வியைப் பற்றித்தான் உங்களுடைய துணைக் கேள்வி இருக்கலாமே தவிர, ஒரு உறுப்பினரைப் பற்றியே இருக்கக் கூடாது. அது ஒரு உறுப்பினர் சொன்னதற்கு உள்நோக்கம் கற்பிப்பது போல இருக்கும். எனவே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

வினா எண் 63 திரு. செ. ஆறுமுகம். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

63—

வானூர் வட்டத்தில் முன்சீப் கோர்ட்.

*3749—திரு. செ. ஆறுமுகம்

மாண்புமிகுசட்டத்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வானூர் தொகுதியில், வானூர் வட்டத்தில் முன்சீப் கோர்ட் ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

(ஆ) ஆம் எனில், அது எந்த ஆண்டு முதல் செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உயர்நீதி மன்றத்தின் கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதி மக்கள் நலன் கருதியும், அரசின் நிதிநிலையை உத்தேசித்தும், தற்போது வட ஆற்காடு மாவட்டம், செய்யாற்றிலே உள்ள மாஜிஸ்டிரேட் கோர்ட்டிலே முன்சீப் கோர்ட்டாகவும் செயல்படச் செய்ததுபோல், என்னுடைய வானூர் தொகுதி வட்டத்திலும் முன்சீப் கோர்ட் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்பதோடு, இதனால் அரசுக்கு செலவு ஏதும் இல்லை என்பதைத் தங்கள் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முற்பகல் 9.40.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே கேள்வி இல்லை. கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள், அவ்வளவுதான். கேள்வியாகக் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவனத்திற்குக் கொண்டு வந்ததைக் கவனத்தில் வைத்துக் கொள்கிறேன்.

திரு. செ. ஆறுமுகம் : ஏழை எளிய ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப் பட்ட மக்களின் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருக்கும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்திலேயே அதிக கிராமங்களைக் கொண்ட எங்களுடைய வானூர் தொகுதி, திண்டிவனம் வட்டத்திலே மொத்தமாக இருந்ததை பொன் மனச் செம்மல் ஆட்சியில் தனி வட்டமாகப் பிரித்து ஒரு குற்றவியல் நீதிமன்றத்தை ஏற்படுத்தி எங்கள் தொகுதி மக்கள் உள்ளங்களிலே உறைந்து விட்ட அந்த மாமேதைக்குப் பிறகு, இன்று ஏழைகளுக்கென்றே பிறவி எடுத்திருக்கின்ற எங்கள் இதய தெய்வம் ஆட்சியில் வானூர் வட்டத்தில் ஒரு நிரந்தர முன்சீப் கோர்ட் அமைத்துத் தர அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப்போல, மாண்புமிகு போற்று தற்குரிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதல்வர் பொறுப்பை ஏற்ற பிறகுதான் கடந்த 7 மாதங்களில், கடந்த ஆட்சியில், கடந்த 2 ஆண்டுக்காலமாக இருந்த அந்த ஆட்சியில் தேங்கிக் கிடந்த நீதிமன்றங்கள் எல்லாம்—இப்போது திறக்கப் பட்டிருக்கின்றன. குறிப்பாக, ஸ்ரீவில்லிபுத்தூரிலே திறக்கப்பட இருக்கிறது. அதேபோல இராமநாதபுரத்திலே திறக்கப்பட இருக் கிறது, சிவகெங்கையிலே திறக்கப்பட இருக்கிறது. அதேபோல திண்டுக்கல்லிலே புதிய நீதிமன்றம் திறக்கப்பட இருக்கிறது. நிலக்கோட்டையிலும் திறக்கப்பட இருக்கிறது. திருப்பத்தூர் —வட ஆற்காடு மாவட்டம் டாக்டர் அம்பேத்கார் மாவட்டத் திலும் திறக்கப்பட இருக்கிறது. கடந்த 2 ஆண்டு காலமாக இருந்த முந்தைய ஆட்சியில் ஒரு நீதிமன்றம் கூட திறக்கப்பட வில்லை. ஆனால் இநத 6 மாதங்களில் மாண்புமிகு போற்று தற்குரிய புரட்சித் தலைவி அவர்கள் இந்த 7 நீதிமன்றங் களையும், 6 மாதங்களில திறப்பதற்கு ஏற்பாடு செய்திருக் கிறார். அனேகமாக மார்ச்சுக்குள்ளாக இவைகள் எல்லாம் திறக்க ஏற்பாடு செய்யப்படும்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சஞ்சய் இராமசாமி.

THIRU SANJAY RAMASAMY : Hon'ble Speaker Sir,as the Law Minister has stated that a Court will be opened at Srivilliputhur

HON'BLE SPEAKER : You cannct deviate frcm the main quesition. The Hon'bl Minister has stated that we are going to open Courst in such and such places. You have to restrict. your question with regard to Vanur Court, which is the main question

THIRU SANJAY RAMASAMY : Hon'ble Speaker Sir, the basic point in that question was whether a Court will be cpened in the Hon'ble Members Constituency. Is the answer relates to that particular Constituency or does it relate to opening of Courts in other Constituencies also.?

Hon'BLE THIRU K. A. KRISHNASWAMY: Mr. Speaker Sir let him put a separate question, I will provide necessary answers.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆசைமணி.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு தாலுக்கா தலைநகரத்திலும் இது போன்ற முன்சீப் கோர்ட்டுகள் திறக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நீதிமன்றம் தொடங்கு வதற்கு அங்கே வழக்குகள் இருக்க வேண்டும், அதற்குப் பிறகு உயர்நீதிமன்றம் அதை அங்கீகரிக்க வேண்டும். பிறகு அரசாங்கத்தினுடைய நிதிநிலையும் சரியாக இருக்க வேண்டும். ஆக இந்த 3 அம்சங்களும் இருந்தால்தான் ஒரு பகுதியில் நீதி மன்றங்கள் தொடங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன். இது வானூர் சம்பந்தப்பட்டது.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது வானூரிலே எப்படி உயர்நீதிமன்றத்தி னுடைய ஆணையை எதிர்பார்த்து நீதிமன்றத்தைத் திறக்க இருக் கிறோம் என்று கூறுகிறார்களோ, அதே போல வேலூரிலும் ஒரு மாவட்ட நீதிமன்றம் . . . (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் பலமுறை இந்தத் தகவலை நேரிலும் சொல்லியிருக்கிறேன், இந்த மன்றத்திலேயும் சொல்லியிருக்கி றேன். உயர்நீதிமன்றத்தில் வேலூர் நீதிமன்றத்தினுடை

டிசைனைப்பற்றி எப்படி அமைப்பது என்று—தமிழ்நாட்டில் எல்லா நீதிமன்றங்களும் ஒரே டிசைனில் இருக்க வேண்டும் என்பதற்காக ஆராய்ந்து முடிவு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் வேலூரில் இந்த நீதி மன்றம் அமையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. வெங்கட்டராம ரெட்டி.

THIRU M. VENKATRAMA REDDY: Hon'ble Speaker Sir, the Hon'ble Minister has given some names of places where Courts will be opened this year. But he has omitted to mention the Court at Denkanikottai which he has promised already. Whether the Hon'ble Minister will come forward to open that Court this year?

HON'BLE THIRU K.A. KRISHNASWAMY : Mr. Speaker Sir, it is premature to indicate the Courts that would come in the ensuring year.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 64, திரு. வ. மு. சுப்ரமணியம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு பதவி உயர்வு.

64—

1463—திரு. வ. மு. சுப்பிரமணியம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு பதவி உயர்வு அளிக்கும் வாய்ப்பை அரசு ஏற்படுத்தித் தரும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

முற்பகல் 9.45.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 5 ஆண்டுகள் பணி நிறைவு செய்த கிராம நிர்வாக அலுவலர்களை ஒரு மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் காலி ஏற்படும் இளநிலை உதவியாளர் பணியிடங்களில் 20 விழுக்காடு கிராம நிர்வாக அலுவலர்களை நியமிக்க இதற்கு முன்பே அரசு ஆணையிட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அதிகாரிகள் சொந்த மாவட்டங்களைவிட்டு நீண்ட தூரம் பலமாவட்டங்களில் இருக்கிறார்கள்.



அவர்களை தங்களுடைய சொந்த மாவட்டங்களுக்கு மாற்றுவதற்கு அரசிடம் செயல்குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாறுதல் எல்லாம் துறையினுடைய நிர்வாகச் சம்பந்தப்பட்ட விஷயம். அது இந்தக் கேள்வியிலே வராது. இது பதவி உயர்வு பற்றியது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பதில் வேண்டாம் என்று நினைக்கிறேன். மாறுதல் எல்லாம் நிர்வாகச் சம்பந்தப்பட்டது. திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சியில் கிராம பணியாளர்கள் என்று முன்னால் பதவி நிறுத்தம் செய்யப்பட்ட கிராமப் பணியாளர்களை நியமித்திருக்கிறார்கள். அந்த கிராமப் பணியாளர்கள் தேவையா ? அதனால் அரசுக்கு ஏற்படும் வருமானம் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கூறுவது வருவாய்த் துறையில் வராது. உள்ளாட்சித் துறையில் வருகிறது. இது சம்பந்தம் இல்லாத கேள்வி. (குறுக்கீடு) நீங்கள் உள்ளாட்சித் துறையிலே நியமித்ததைப்பற்றிக் கேட்கிறீர்கள். இது வருவாய்த் துறை. நீங்கள் நியமித்ததைத் தானே சொல்கிறீர்கள் நியமித்தது உள்ளாட்சித் துறையில். திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களை, இந்த கிராம நிர்வாக அதிகாரிகள் பதவி உயர்வு பற்றி இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதோடு ஏற்கனவே கிராம நிர்வாக அதிகாரிகளாக இருந்தவர்களை—நம்முடைய சபாநாயகர் அவர்கள் ஏற்கனவே அதற்கு பதில் சொல்லிவிட்டார்கள்—என்றாலும்கூட இன்று பணியாளர்களாக நியமித்து இருக்கிறார்கள். தயவு செய்து அவர்களை மறுபடியும் ரெவின்யூ இலாக்காவுக்கு ஊழியர்களாக எடுத்துக் கொண்டு, இவர்களுக்கு பஞ்சாயத்து கலெக்ஷன் போன்ற பணிகள் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நியமிக்கப்பட்டு இருப்பது உள்ளாட்சித் துறையில.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 65. டாக்டர் மு. சீனியம்மாள். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

65—

## கிராமங்களில் கம்ப்யூட்டர் மையம்.

4501 டாக்டர் (திருமதி.) மு. சீனியம்மாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராம மாணவ மாணவியர்கள் விஞ்ஞான நுணுக்கங்களை நகரங்களில் உள்ள மாணவர்கள் போல அறிந்துகொள்ள கம்ப்யூட்டர் செண்டர்களை கிராமங்களில் நிறுவ அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அப்படிப்பட்ட திட்டம் இப்போது அரசிடத்தில் இல்லை.

(ஆ) எனவே, அடுத்த கேள்விக்கு இடம் இல்லை.

டாக்டர் (திருமதி, மு. சீனியம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலம் புதுமைகளை பலவாறாகப் புகுத்திக் கொண்டு இருக்கின்ற விஞ்ஞானக் காலம். காலத்திற்கு ஏற்ப, தங்களது விஞ்ஞான அறிவைப் பெருக்கி, நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுகின்ற வகையிலே நகரங்களில் வாழ்கின்ற பலதரப்பு மக்களின் குழந்தைகள், மாணவர்கள் கம்ப்யூட்டர் கல்வி பயில்வது போல கிராமங்களிலே வாழ்கின்ற வசதியற்ற, கம்ப்யூட்டர் சாதனங்களைக் கூடபார்த்து அறியாத, ஏழை எளிய நடுத்தர குழந்தைகள் விஞ்ஞான அறிவு பெற்றிட நடமாடும் கம்ப்யூட்டர் மையம் அல்லது வெறும் கம்ப்யூட்டர் மையம் ஏற்படுத்த, எந்த இம்சைகளையும் எளிதாக, யதார்த்தமாக தாங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசில் செயல்படுத்த இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9—50

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் புறத்திலே பயிலுகின்ற மாணவர்களுக்கு இளைஞர்களுக்கு இப்போது வளர்ந்து கொண்டிருக்கின்ற விஞ்ஞானத்தின் மிகச் சிறந்த புதுமையான இந்த கம்ப்யூட்டர் அறிவை வளர்க்க வேண்டியது இன்றியமையாதது. ஆனால் கிராமத்திலே இருக்கின்ற மேல் நிலைப் பள்ளிகளில் இதை அறிமுகப்படுத்த வேண்டுமானால் மிகப் பெரிய செலவுகள் ஏற்படுகிறது. ஆகவே தான் இப்போது அரசின் பரிலனையில் இல்லை என்று தெரிவித்திருக்கிறேன். ஆனால் இதற்கிடையில் தம்முடைய அண்ணா பல்கலைக் கழகத்தின் சார்பில் இதை ஒரு



பரிட்சார்த்த திட்டமாக, காட்பாடி, செஞ்சி, அணைக்கட்டு, பள்ளிக்கொண்டா, ஊசூர், போன்ற இடங்களில் அமெரிக்காவில் வாழ்கிற தமிழ் மக்கள் கொடுத்திருக்கிற சுமார் 5 இலட்சம் ரூபாய் நிதியுதவியைக் கொண்டு இங்கிருந்து ஆசிரியர்களையும் கணிப்பொறி இயந்திரங்களையும் கொண்டு சென்று அங்கே பயிற்சி அளித்துக் கொண்டு வருகிற திட்டம் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து நடைபெற்று வருகிறது. அங்கே கிராமப் புறத்திலே உள்ள பள்ளி மாணவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு இதை பயின்று கொண்டு வருகிறார்கள். ஆசிரியர்களின் பயிற்சியையும் 2 வார பயிற்சி என்று அண்ணா பல்கலைக் கழகம் அளித்து வருகிறது. ஆகவே, இந்தத் திட்டம் சிறந்த முறையில் செயல் ஆக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக நகரத்திலே இப்போது தனியார்கள் நடத்துகிற கம்ப்யூட்டர் மையங்களில் 10 ஆயிரம், 15 ஆயிரம் ரூபாய் செலவு செய்து தான் மாணவர்கள் இதைக் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே, கிராமப் புறத்தில் வாழ்கிற மாணவர்களுக்கு இந்த அடிப்படை அறிவை எதிர் காலத்திலே மேல் நிலைக் கல்விக்கு ஆனாலும், அல்லது 12-வது முடித்து விட்டு வேறு ஏதாவது வேலைக்கு செல்லுவது ஆனாலும் இந்த கம்ப்யூட்டரைப் பற்றி தெரிந்து கொண்டு இருக்கிற ஆரம்ப அறிவு அவர்களுக்கு பயன்படும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதைப் போன்று கிராமப் புறங்களிலே இந்த கம்ப்யூட்டர் மையங்களை உருவாக்கி அந்த மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு இந்த அறிவை உருவாக்க வேண்டும் என்பது தான் அரசினுடைய கொள்கை. அது தக்க சமயத்தில் பரிசிலிக்கப்படும்.

டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைக்கோடியில் வாழ்கிற ஒவ்வொரு ஏழைக் குடிமகனும் மாண்புமிகு புரட்சித் தலைவி இலவச மருத்துவ சிகிச்சையின் மூலம் பயன் பெறுவது போல செலவு பண்ண இயலாத ஏழை மாணவர்களை அவர்கள் இருக்கின்ற இடங்களில் வசதி இல்லா விட்டாலும் கூட கொடையுள்ளம் கொண்ட பெரியவர்களின் மூலம் ஒரு தனி பஸ் மூலமோ; நடமாடும் பஸ்களில் அந்த கம்ப்யூட்டர் சாதனங்களைப் பொருத்தியோ இந்தக் கடைக்கோடியில் வாழ்கிற ஏழை எப்படி பயன் பெறுகிறானோ அது போல் அந்த விஞ்ஞான அறிவை அடுத்த ஆண்டிலாவது உருவாக்க நமது தாயுள்ளம் கொண்ட தங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதைத்தான் மிகுந்த விளக்கத்தோடு பதில் அளித்து இருக்கிறேன். மிகப் பெரிய செலவைக் கொண்டிருக்கிற ஒரு திட்டம் இது. ஆகவே தான் அமெரிக்காவில் வாழ்கிற தமிழ் மக்கள் 5 இலட்சம் ரூபாய் இதற்குக் கொடுத்து உதவி இருக்கிறார்கள். இதை வைத்துக் கொண்டு அண்ணா

பல்கலைக் கழகம் 6 கிராமப் பகுதிகளில் இப்போது முயிற்சி மேற்கொண்டிருக்கிறது. ஒரு பள்ளியிலிருந்து இன்னொரு பள்ளிக்கு இந்த இயந்திரங்களைக் கொண்டு செல்வதற்கு அங்கே இருக்கிற கொடையுள்ளம் கொண்டவர்கள் தான் வாகன வசதிகளைச் செய்து தருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நம்முடைய புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளம் கொண்டவர்கள் அவர்களுடைய காலத்திலே இது நிறைவேற்றப்பட வேண்மென்று தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தாய் தான். ஆகவே, நான் முன்னால் எடுத்துச் சொன்னதை கொஞ்சம் மறைமுகமாகச் சொன்னேன். இந்த முயற்சியை அவர்கள் மேற்கொள்ள வேண்டும் ; அவர்களுடைய தொகுதியிலிருந்து சுமார் 2 இலட்சம் ரூபாய் அவர்கள் திரட்டித் தருவார்களானால் உடனடியாகப் பாரதியார் பல்கலைக் கழகத்தோடு தொடர்பு கொண்டு அவர்களுடைய பகுதிக்கு, கிராமப் பகுதி மக்களுக்கு இந்த கம்ப்யூட்டர் மைய பயிற்சியைத் தொடங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் .

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு தொகுதியில் 2 இலட்சம் ரூபாய் திரட்டிக் கொடுத்தால் அந்தப் பகுதியிலே அந்த கம்ப்யூட்டர் படிப்புக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார்கள். யாராவது பெரிய செல்வந்தர்கள் அந்த 2 இலட்சம் ரூபாய் அளிக்க முன் வந்தால் அவர்கள் பெயரால் இந்த கம்ப்யூட்டர் நிலையத்தை துவக்க அரசு அனுமதிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கம்ப்யூட்டர் மையம் தொடங்குகின்ற திட்டத்தை 2 இலட்சம் ரூபாயில் நிறைவேற்ற முடியாது. நான் இப்போது சொன்னது அண்ணா பல்கலைக் கழகம் மேற்கொண்டிருக்கிற முயற்சிகளைப் போல் நடமாடும் கம்ப்யூட்டர் மையங்கள் பற்றியது. அதைத்தான் இப்போது அண்ணா பல்கலைக் கழகம் அடுத்தக் கட்டத்திற்கும் செல்ல இருக்கிறது. ஒவ்வொரு பள்ளிக் கூடத்திற்கும் சென்று போதிப்பதை விட ஒரு 4, 5 பள்ளிக்கூடங்களை இன்றைக்கு ஒன்றாக இணைத்து ஒரு இடத்திலே அவர்களையெல்லாம் சேர்த்து ஒய்வு நேரத்திலே, பள்ளிக்குச் சென்றதற்குப் பிறகு மாலை நேரத்திலே ; இன்றைக்கு கிராமப் புறங்களிலே இருக்கிற மாணவர்கள் அவ்வளவு





முற்பகல் 9.55

அவ்வளவு அக்கறையோடு இதிலே பயிலுகிறார்கள். இரவு 7 மணி 8 மணிவரை அவர்கள் பயிலுவதற்கு வருகிறார்கள். இதிலே ஆசிரியர்களும் பொறுப்பேற்றுக் கொண்டு ஒரு சமுதாயத்திற்கு செய்கிற கடமையாக அவர்களும் இதிலே ஈடுபட வேண்டும். ஆகவே, அந்த நடமாடும் கம்ப்யூட்டர் பயிற்சி மையத்தைத்தான் உருவாக்க முடியும் என்று நான் தெரிவித்து இருக்கிறேனே தவிர ஒரு நிலையான பயிற்சி மையத்தை ஏற்படுத்த முடியாது. அதற்கு பல இலட்சம் ரூபாய் செலவாகும். குறைந்த பட்சம் 2 இலட்சம் ரூபாய் இருந்தால் அதிலே இந்த கம்ப்யூட்டர் இயந்திரங்களை வாங்குவதற்கும் மற்றவர்களுடைய துணையோடு போக்குவரத்து சாதனங்களை ஏற்படுத்திக் கொண்டு 4, 5 பள்ளிகளுக்கு ஒரு மையம் என்ற வகையில் அந்தப் பள்ளிகளில் இந்தப் பயிற்சியைத் தொடங்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. தர்மலிங்கம்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் முதன் முதலாக இந்த கணிப்பான் பொறி பயிற்சி என்னுடைய தொகுதியான அணைக்கட்டிலும், ஊசூர், பள்ளிக் கொண்டா போன்ற இடங்களிலுள்ள 3 மேல் நிலைப் பள்ளிகளில் தான் நடந்தது. கம்ப்யூட்டர் பயிற்சி பெற்ற, கிராமப் புறத்திலே இருக்கும் மாணவர்கள் அத்தனை பேரும்.... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. கி. தர்மலிங்கம் : நிரந்தரமாக எங்களுக்கு இந்த கம்ப்யூட்டர் கிளாஸை ஒதுக்கித் தர வேண்டுமென்று, ஏராளமான மலைவாழ் மக்களெல்லாம் கேட்டதன்பேரில், கல்வித் துறைக்கு நான் மனு செய்ததன் பேரில், ஒடுகத்தூர் மேல்நிலைப் பள்ளிக்கு அந்த கணிப்பான் பொறியை அமைப்பதற்கு, நீங்களே அந்த கணிப்பான் பொறியைப் பெற்று அந்த செலவினங்களை ஏற்றுக் கொள்வதாக இருந்தால் அனுமதி தருவதாக எழுதி இருந்தார்கள். இங்கே நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை வேண்டுவது, ஜவ்வாது மலைவாழ் இனத்தைச் சேர்ந்த , பெருவாரியாக படிக்கும் அந்த மாணவர்கள் ஒடுகத்தூர் பகுதியிலே இருப்பதால், நான் தற்போது 30 ஆயிரம் ரூபாயை நிதியாக அந்த கிராமப் புறத்திலேயிருந்து நான் சேர்த்து உள்ளேன். இரண்டு இலட்சம் ரூபாய் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாதி தொகையை மக்கள் தருகிறோம் ; பாதி தொகையை அரசு தந்து அவர்களுக்கு கணிப்பான் பொறி பெற்றுத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தொடக்கப் பள்ளி, அதற்குப் பிறகு நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, இந்தக் கல்விகளை உறுதிப்படுத்துவதற்காகவும், எல்லா மாணவர்களும் கற்றுக் கொள்வதற்காகவும் மிகப் பெரிய அளவிலே முதலீடு செய்து இந்த முயற்சியில் அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இதற்கு உறு துணையாக இருக்கவேண்டும். நம்முடைய ஆளுநர் உரையிலேயே இந்த பள்ளிக் கல்வி திட்டத்திற்கு கட்டிடங்கள் கட்டுவதற்கு மற்றவர்கள் நிதியுதவி செய்ய வேண்டுமென்கிற வேண்டுகோளும் விடப்பட்டிருக்கிறது. அதே போலத்தான் இந்த கம்ப்யூட்டர் பயிற்சியும். ஆகவே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களைப் போன்றவர்கள் அரசினிடத்திலே, கொடுங்கள், கொடுங்கள் என்று நிதி நிலைமையை முழுவதுமாக தெரிந்து கொண்டதற்குப் பிறகும் கோரிக்கை வைக்காமல் அவர்கள் ஆளுக்கு 5 ரூபாய் , 10 ரூபாய் என்று வசூலித்து குறைந்த பட்சம் 2 இலட்சம் ரூபாயையாவது, அவர்கள் வழங்குவார்களேயானால் அதற்குப் பிறகு தேவையான நிதியை அரசு முதலீடு செய்து, கிரமப்புற மாணவர்களுக்கு இந்த முக்கியமான பயிற்சியாகிய கம்ப்யூட்டர் பயிற்சியை வழங்குவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 66. திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

66—

வெள்ளக்குட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம்.

*418—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வாணியம்பாடி தொகுதியில் வெள்ளக்குட்டை என்ற இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வெள்ளக்குட்டை என்ற இடத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேலூர் மாவட்ட சுகாதார அலுவலர் ஒரு செயற்குறிப்பை அனுப்பியுள்ளார். இந்த வருடம் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க செயற்குறிப்பு பரிசீலனை செய்யும்போது இப்பொருள் பரிசீலனை செய்யப்படும்.



திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெள்ளக்குட்டை கிராமம் என்பது நான் பிறந்த ஊர். (சிரிப்பு) மாண்புமிகு அமைச்சர் திருமதி இந்திர குமாரி அவர்களும் பிறந்த ஊர் அதுதான். அந்த ஊரிலும், சுற்றுப்புற கிராமங்களான துறிஞ்சிக்குப்பம், நன்னேரி, வெள்ளக்கல், திம்மியம்பட்டு, முண்டிக்கோயில் போன்ற கிராமங்களில் வாழும் சுமார் ஒரு லட்சம் கிராம மக்கள் இன்றைக்கு மருத்துவ வசதி இல்லாமல் அவஸ்தை பட்டுக்கொண்டிருக்கிறார்கள் ''மக்கள் நல்வாழ்வு மருத்துவப் பணிகள், முழுமையாக மக்களுக்குப் போய்ச் சேரவில்லை'' என்று ஆளுநர் உரையிலே 24-வது பாராவிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு முதல்வரவர்கள் இன்று முழு முயற்சி எடுத்து மக்களை மருத்துவப் பணிகள் சென்றடைய வேண்டுமென்று முயற்சி எடுத்தமைக்காக நான் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் போலவே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் இந்த 76 பிரைமரி ஹெல்த் சென்டர்களை இந்த ஆண்டு துவக்க இருக்கிறார்கள். அந்த 76-லே இந்த வெள்ளக்குட்டையை ஒன்றாகச் சேர்த்து, உடனடியாக அதை ஆரம்பிக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரவர்களும் அவதரித்திர்கள் என்பதற்காக அவ்வளவு அவசரப்படக் கூடாது. (சிரிப்பு).

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களின் கோரிக்கைபடி, இந்த ஆண்டு அதைப்பற்றிப் பரிசீலிக்கவிருப்பதாக நாங்கள் தெரிவித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் அங்கே பிறந்ததாகத் தெரிவித்தார்கள். எனவே, ஏற்கனவே நல்ல வசதிகள் இருந்ததாகவே தெரிகிறது. இருந்தாலும் கூட இன்றைக்கிருக்கின்ற நிலையைப் பொறுத்து அரசாங்கம் நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 67, திரு. எஸ். எம். துரை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

67—ஆலரம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம்,

*3896—திரு. எஸ். எம். துரை :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் அண்ணா மாவட்டம், ஆத்தூர் தொகுதி ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் குட்டத்து ஆவரம் பட்டியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க அரசு முன்னுரிமை அளிக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திண்டுக்கல் அண்ணா மாவட்டம், ஆத்தூர் தொகுதி ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியம் குட்டத்து ஆவரம் பட்டியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க தற்போது திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். எம். துரை : பேரவைத் தலைவரவர்களே, குட்டத்து ஆவரம்பட்டியில் சுற்றி 25 கிராமங்களில் சுமார் 5,000 மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் 15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திண்டுக்கல்லுக்கு வந்து மருத்துவ வசதி பெற வேண்டியதாக இருக்கிறது. ஏழை எளிய மக்களின் காவல் தெய்வமாக இருக்கும் எங்களது இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் அடுத்த வருஷமாவது இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைப்பதைப் பற்றி அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு இலட்சத்து மூன்றாயிரத்து முன்னூறு பேர் ஜனத்தொகை என்று கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஊராட்சி ஒன்றியத்திற்குள்ளே உள்பட்டு இப்போழுது மூன்று இடங்களிலே, கன்னிவாடி, புதுக்கோட்டை, ஸ்ரீராமபுரம் என்ற மூன்று இடங்களிலே இப்பொழுது ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அரசினுடைய ஒரு கொள்கையின்படி 30,000 ஜனத்தொகைக்கு ஒரு மருத்துவ மனை—ஆரம்ப சுகாதார நிலையம் என்று வைத்திருக்கிறோம். எனவே, அந்தக் கணக்கிற்குள்ளே இது வருகின்ற காரணத்தால் புதிதாக இந்த இடத்திற்கு இந்த ஆண்டு ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் வரை மக்களின் நலனை முன்னிட்டு ஒரு சப்-சென்டர் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 5,000 ஜனத் தொகைக்கு ஒரு சப்-செண்டர் வீதம் தமிழகத்திலே இப்பொழுது அமைத்திருக்கிறோம். எனவே அதற்கு உட்பட்டு இந்த இடத்திலே சப்-செண்டர் இல்லாமல் இருந்தால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 30,000 ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று நாம் அமைத்துக் கொண்டிருக்கிறோம். அந்த ஒரு ஊரிலே இல்லாவிட்டால் கூட, ஐந்து மைல் ரேடியஸுக்குள்ளே 30,000 இருக்கிறதே, அப்படிப்பட்ட இடமாகத் தான் ஆவரம்பட்டி இருக்கிறது. ஆகையினாலே மீண்டும் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமா? அது மாத்திரம் அல்ல, நாம் பல இடங்களிலே ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்திக் கொண்டே வருகிறோம். அங்கே அதற்குக் கட்டிட வசதி இல்லை; அங்கே டாக்டர்கள் குடியிருப்பதற்கு வசதி இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆவரம்பட்டியோடு போதும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : இல்லை சார், நான் விஷயத்திற்கு வருகிறேன் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆவரம்பட்டியோடு கேள்வி நின்றால் பரவாயில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவரவர்களே, ப்ளீஸ். ஆகையினாலே கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏதாவது மூன்றாண்டுத் திட்டம் என்று வைத்து இதற்கான ஏற்பாட்டைச் செய்ய முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இப்பொழுது 30,000 ஜனத்தொகை என்று சொன்னது, அந்த ஊரிலே இருக்கின்ற 30,000 ஜனத்தொகை கணக்கு அல்ல. நாம் எந்தவொரு இடத்திலே ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்கிறோமோ அதைச் சுற்றியிருக்கின்ற 30,000 ஜனத்தொகை. அந்தக் கணக்கிலே தான் இப்பொழுது தமிழகம் முழுவதும் அமைத்திருக்கிறோம். எனவே அப்படிப் பார்க்கிறபொழுது இந்த இடத்திலே அதை அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை. எனவே, எதிர் காலத்தில் அதைப் பற்றி யோசிக்கலாம். அதே போன்று, கட்டிடங்களைப் பொறுத்த வரையில் அரசாங்கம் தனிக் கவனம் செலுத்தி வருகிறது. கொஞ்ச காலமாக இதற்குக் கட்டிடங்கள் கட்டுவதற்

கான நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் கொஞ்சம் தேங்கியிருக்கிறது. இருக்கின்ற நிதிப் பிரச்சினையைப் பற்றி நாடு முழுவதும் தெரிந்திருக்கிறது. எனவே, அந்த நிதிப் பிரச்சினைக்கு உட்பட்டு எந்தெந்த இடங்களிலே உடனடியாகக் கட்டிடங்கள் கட்ட முடியுமோ அதைக் கட்டுவதற்கான நட வடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. தனியார் துறையின் மூலமாகப் பல பேர் கட்டுவதற்கு முன் வந்து அரசாங் கத்திற்கு முதலிலே பணத்தை அவர்கள் கட்டிவிட வேண்டும்; பி.டபிள்யூ. டி. மூலமாகத் தான் கட்ட வேண்டும் கட்டிடத்தை என்ற நிலையையெல்லாம் மாற்றி அவர்களே கட்டலாம் என்று ஏற்படுத்திய பின்னாலே பல் பேர் முன் வந்திருக்கிறார்கள். எனவே, அப்படி யாராவது வந்தால் கூட தங்களுடைய பகுதி களிலே அல்லது மற்றச் சட்டமன்ற உறுப்பினருடைய பகுதி களிலே வந்தால் கூட அந்தக் கட்டிடத்தை நாம் கட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

முற்பகல் 10-05.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அ. ஸ்ரீதரன். ஆவரம்பட்டியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது பற்றி மட்டும் கேளுங்கள்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு 3 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆனால், சில இடங்களில் இடப் பற்றாக்குறை காரணமாக, 2 , 2-3/4 ஏக்கர் இருக்கிற இடத்தில் ஆரம்ப சுகாதார நிலை யம் அமைப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. எனவே, இதைத் தளர்த்தி $2\frac{1}{2}$ அல்லது 2-3/4 ஏக்கர் உள்ள இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு, அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனை, அங்கே தங்குகிற மருத்துவர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு குவார்ட்டர்ஸ் இவற்றையெல்லாம் கட்டுவதற்கு குறைந்தபட்சம் 3 ஏக்கர் இருந்தால் வசதியாக இருக்கும் என்று கருதிதான், அரசாங்கம் இதை வைத்திருக்கிறது. மிகக் கடினமாக இடமே கிடைக்காத இடத்திலே தனி நேர்வாகக் கருதி, அதற்கு அரசாங்கத்திலே விதிவிலக்கு அளிப்பது என்பதைப் பற்றி தனித் தனியாக நாம் முடிவெடுக்கலாமே தவிர, இதை குறைத்துக் கொண்டால், பிறகு $2\frac{1}{2}$ ஏக்கர், 2 ஏக்கர், $1\frac{1}{2}$ ஏக்கர், 1 ஏக்கர் என்று குறைந்து கொண்டே போகும். எனவே, 3 ஏக்கர் மினிமம் தேவை என்ற நிலையை அப்படியே வைத்துக் கொள்ளலாம். எங்கேயாவது பிரச்சினை இருக்கிற இடத்தில், தனிப்பட்ட முறையில் அரசு ஆய்வு செய்து அதை ஏற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளலாம்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 68, திருமதி சியாமளா ; மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

68- .

நெசவாளர்களுக்கு கொடுக்கப்பட்ட கடன் தள்ளுபடி.

*1142—திருமதி ரெ. சியாமளா :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெசவாளர்களுக்கு கொடுக்கப்பட்ட கடன் ரூபாய் 10,000 தள்ளுபடி செய்யப்பட்டது முழுமையாக அமலாக்கப்பட வில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அறியும்

(ஆ) கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருடன், கலந்தாலோ சித்து, நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைச் சார்ந்த எட்டயபுரம், கடலூர் ஆகிய பகுதிகளில் உள்ள நெசவாளர் பெருமக்களுக்கு அந்தக் கடன் தள்ளுபடி முழுமையாக அமலாக்கப்படவில்லை. நமது ஒப்பற்றத் தலைவி மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர் களுடைய அரசு அதைப் பரிவோடு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 30 சதவிகிதம்தான் 'நாபார்டு' பரிந்துரை வாயிலாக, கூட்டுறவு பதிவாளரிடமிருந்து நமக்கு ரூபாய் 96.01 இலட்சமாக கிடைத்திருக்கிறது. இதிலிருந்து தமிழகத்திலேயுள்ள 56,717 நெசவாளர்கள் கொண்ட 1,018 கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கிறது. மீதிப் பணம் வர வர விநியோகிக்கப்படும், தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாகவி பாரதி பிறந்த எட்டயபுரத்திலுள்ள மூன்றில் இரண்டு பங்கு நெசவாளர்களுக்குத்தான் அந்த சலுகை

அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சலுகையையும், அதாவது அவர்களின் அந்தப் பணத்தையும் ஸ்பெஷல் ஆபீசர்ஸ் அக்கவுண்ட்டில் போட்டுள்ளார்கள். நெசவாளர்களுக்கு அந்தச் சலுகை போய்ச் சேரவில்லை. அதை அரசு விரைவில் பரிசீலிக்குமா என்பதை மீண்டும் அரசிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுப் பதிவாளரோடு கலந்தாலோசித்து மானியம் வராத நெசவாளர்களுக்கு வருவதற்காக ஆவன செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 69, திரு. எஸ். நாகூர் மீரான், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

69—

கூட்டுறவு நூற்பாலை.

*1495—திரு. எஸ். நாகூர் மீரான் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடையநல்லூர் பகுதியில் அரசு கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது'

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது போன்ற திட்டமே இல்லை. (சிரிப்பு).

திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்குலூர் தொகுதி மிகவும்பின்தங்கிய பகுதியாக இருப்பதாலும், அந்தப் பகுதியில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர்கள் நலிவடைந்த நிலையில் உள்ளதாலும், அவர்கள் வாழ்வில் ஒளியேற்ற, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில், இந்த கடையநல்லூர் தொகுதி மீது கருணை காட்டி, அரசு கூட்டுறவு நூற்பாலை அமைக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் கடையநல்லூர் பகுதிக்கு அருகாமையில், தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை 50 ஆயிரம் கதிர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. 50 ஆயிரம் கதிர்கள் கொண்ட நூற்பாலை செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, தமிழகத்தில் ஏறத்தாழ 18 நூற்பாலைகள்



இருக்கின்றன. இவைகளில் உற்பத்தி செய்யப்படுகிற நூல் சிட்டநூல், மற்றும் கோன் நூல் போன்றவை நெசவாளர்களுக்குத் தருவதுபோக மீதி இருக்கிறது. இப்போது தமிழகம் நூல் உற்பத்தியில் உபரி மாநிலமாக இருக்கிற காரணத்தினால், தற்சமயம் அது தேவையில்லை என்று துறை கருதுகிறது.

முற்பகல் 10-10

திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதி மட்டுமல்லாது சுற்றுப் பக்கத்தில் உள்ள சங்கரன்கோயில், தென்காசி போன்ற பகுதிகளில் 10,000-க்கும் மேற்பட்ட நெசவுத் தொழிலாளர்கள் உள்ளனர். எனவே, வரும் ஆண்டிலாவது, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியிலாவது எனது கோரிக்கை பரிசிலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்த மாவட்டத்தில் ஒரு நூற்பாலை இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், நாம் நூல் உற்பத்தியில் உபரி மாநிலமாக இருக்கின்றோம். நம்முடைய நூற்பாலைகள் இல்லாமல், பல நூற்றுக்கணக்கான நூற்பாலைகள் தமிழகத்திலே இருக்கின்றன. நூல் உற்பத்தி விநியோகத்தில் நாம் உபரி மாநிலமாக இருக்கின்ற காரணத்தால் தற்போது இது அவசியம் இல்லை என்று துறை கருதுகின்ற காரணத்தால், இதைப் பரிசீலிக்க இயலாது என்பதனை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 70, திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

70—

வைகை ஆற்றைக் கடக்க மதுரையில் புதிய பாலம்.

*3252—திரு. ஓ. எஸ். அமர்நாத் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை நகரில் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட விக்டர் பாலம் உடைந்து விழும் நிலையில் உள்ளதால் மாற்று வழியாக வேறு பாலம் ஒன்றை தியாகராசர் கல்லூரி பக்கம் வைகை ஆற்றைக் கடந்து அண்ணா நகரை இணைக்க பாலம் கட்டப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரிலிருந்து வெளியூர்களுக்குச் செல்ல வேண்டுமென்றால், வைகை ஆற்றில் விக்டர் பாலம் வழியாகத் தான் கடந்து செல்ல வேண்டும். அந்தப் பாலம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட பாலம். மிகவும் பலவீனமாக இருக்கின்றது. எந்த நிலையிலும் உடைந்து விடும் அபாயக் கட்டத்தில் இருப்பதால், அதற்கு மாற்று வழியாக, வைகையின் குறுக்கே தியாகராயர் கல்லூரியிலிருந்து அண்ணா நகர் வரை இணைக்க பாலம் கட்டுப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தினுடைய சீர்கேடுகளைக் களைவதற்காக ஏறத்தாழ 22 இலட்சம் ரூபாய் இப்போது செலவழிக்கப்பட்டு வருகின்றது. இப்பாலத்தின் வழியாகச் சென்ற வாகனப் போக்குவரத்துக்கள் எதுவும் இதுவரை பாதிக்கப்படவில்லை. இது தவிர, மதுரைக்குப் புறநகர் வழி ஏற்படுத்துவதற்காக ஏறத்தாழ 3.26 இலட்சம் ரூபாய் செலவிலே ஒரு '' ரிங் ரோடு '' போடுவதற்கு அனுமதி கேட்டிருக்கிறோம். இது போக, இந்தப் பாலத்திற்கு அருகாமையிலே இருக்கின்ற ஒரு தாம்போகி பாலத்தை உயர் பாலமாகக் கட்டுவதற்காக 6½ கோடி ரூபாய் செலவிலே இன்றைக்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இப்படிப்பட்ட நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே இந்தப் பாலத்தை மேற்கொண்டு செலவிட்டுக் கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரிலே லாரி போன்ற போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாகப் போய்க் கொண்டிருக்கின்றது. அந்த மேம்பாலம் வழியாக லாரிகள் போவதைத் தடுத்து, அதற்குச் சமமாக இருக்கும் தரைமட்டப் பாலத்தின் வழியாகப் போக்குவரத்து ஏற்படுத்துவதற்கு ஏதேனும் கருத்து உள்ளதா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : இதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எ. தெய்வநாயகம்.





திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது, விக்டர் பாலம் பழுதினைச் செப்பனிடுவதற்குக் கையாளப்படுகின்ற உத்தியைக் காட்டிலும், இந்த '' ரிங் ரோடு'' பாலம் அமைப்பதிலும், குருவிக்காரன் சாலைப் பாலம் அமைப்பதிலும் பல கோடி ரூபாய்க்கான திட்டங்களைத் திட்டமிட்டுக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், இந்த நிலை எவ்வளவு காலத்தில், செய்து முடிக்கப்படும் ; எவ்வளவு சீக்கிரத்தில் விரைவுபடுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' ரிங் ரோடு '' என்று சொல்லப்படுகின்ற '' வட்டச் சாலை '' சம்பந்தமான நடவடிக்கைகளுக்கு ஏறத்தாழ 88 இலட்சம் ரூபாய்க்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட இருக்கிறது. ஆகவே, அந்த நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட நடவடிக்கை முடிந்தவுடன், அந்த வேலை தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது தவிர, இந்த 6½ கோடி ரூபாய் செலவிலே ஏற்படுத்தப்பட இருக்கின்ற உயர் மட்டப் பாலத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திட்டம் உலக வங்கியின் நிதி உதவியோடு செயலாக்கப்பட வேண்டிய திட்டம். தமிழ்நாடு அர்பன் டெவலப்மெண்ட் ப்ராஜெக்ட் என்று சொல்லுகின்ற அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே இந்தத் திட்டம் செயலாக்கப்பட இருக்கின்ற காரணத்தினால், உலக வங்கியின் ஒப்புதலுக்காக இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டு இருக்கின்றது. அந்தத் திட்டத்தினுடைய ஒப்புதலைப் பெற்றவுடன் இந்த அரசு அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்தப் பாலங்களை கட்டுவதற்கான நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 71, திருமதி கே. பஞ்சவர்ணம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

சுல்லான் ஆற்றை அழப்படுத்துதல்

—71*4207—திருமதி கே. பஞ்சவர்ணம் :-

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், வலங்கைமான் தொகுதியில் சுல்லான் ஆற்றில் மழைக்காலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து ஆயிரக்கணக்கான பயிர் நிலமும் குடியிருப்புகளும் பாதிக்கலபடுவதால் சுல்லான் ஆற்றை ஆழப்படுத்தவும், அகலப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்தகைய திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

முற்பகல் 10.15

திருமதி கே. பஞ்சவர்ணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுல்லான் ஆறு என்''து என்னுடைய தொகுதி

யில் முழுமையாக பாசனத்திற்குரிய ஒரு பெரிய ஆறு. மேட்டூர்
டாமில் தண்ணீர் திறந்துவிட்டால் இந்த ஆற்றின் மூலம்
நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறக்கூடிய
நிலையில் உள்ளது. அதே நேரத்தில் வெள்ளக் காலத்தில்
ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் உள்ள நீரை வடிக்கின்ற
வடிகால் பாசனமாகவும் அதைப் பயன்படுத்திக் கொள்கிறார்
கள். அப்படிப்பட்ட ஒரு மிகப்பெரிய அந்த ஆற்றில் நீண்ட
நெடிய காலமாக புல்டோசர் விட்டு அடிக்காத காரணத்தால்
நெய்வேலி காட்டாமணி என்ற செடி நிறைய முளைத்து
அதன் இரு கரைகளும் உடைந்து பல நூற்றுக்கணக்கான ஏக்
கர்கள் பாதிக்கப்படுகின்றன. பயிர்கள் சேதம் அடைகின்றன.
ஆகவே அந்த ஆற்றில் உடனடியாக சீர் செய்கின்ற பணியைத்
துவங்கி இரு பக்கமும் கரைகள் கட்டி, ரிவிட்மென்ட் கட்டக்
கூடிய திட்டம் அரசிடம் உள்ளதா? இல்லை என்ற பதிலை
நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.
அதை மீண்டும் பரிசீலிக்கக்கூடிய நிலை இருக்கிறதா என்பதை
நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, சுல்லான் ஆறு என்பது பாசனம்
மற்றும் வடிகால் செய்து கொடுக்கும் ஆறு என்பதை இந்த
அரசும் உணர்ந்திருக்கிறது. இதனுடைய நீளம் 30 கிலோ
மீட்டர். இந்த ஆற்றின் சராசரி அகலம் 10 மீட்டர். சுல்லான்
ஆற்றில் தூர் எடுக்கும் வேலையைச் செய்வதற்கு அதிகமாக
நிதி தேவைப்படுகிறது. பொதுவாகவே காவிரிப் பாசனத்
தைச் சீர் செய்யவேண்டும் என்பது நம்முடைய ஒப்பற்ற
தலைவி புரட்சித் தலைவி அவர்களுடைய நோக்கம்.
அதற்கான திட்டங்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டு உலக வங்கி
உதவிக்காக மத்திய அரசின் ஒப்புதலுக்காகக் காத்துக்கொண்டு
இருக்கிறோம். ஆகவே தனிப்பட்ட முறையில் இந்த ஆற்றினை
சீர் செய்வதற்கு அதிகமாக நிதி தேவைப்படுகிற காரணத்தால்
இல்லை என்று நான் சொன்னேன். இருந்தாலும் இதில் உள்ள
மணல் மற்றும் திட்டு மேடுகளை எல்லாம் அகற்றி பாசனப்
பகுதிகளில் ஒழுங்காகப் பாசனம் நடைபெறுவதற்கும் மழைக்
காலங்களில் உடைப்பு ஏற்படாமல் தடுக்கும் வண்ணமும் உரிய
நடவடிக்கைகளைப் பொதுப்பணித்துறை மேற்கொள்ளும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 72. திரு.
சி. தாமோதரன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

72—

தரைமட்டப்பாலம் அமைத்தல்.

*4222.—திரு. சி. தாமோதரன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா :





(அ) பரிசமங்கலம் கிராமத்திலிருந்து கெடிலம் நதிக் கரையின் குறுக்கே தரைமட்டப்பாலம் (Cause way) அமைத்து கடலூர்— திருக்கோவிலூர் அணைக்கட்டு சாலையுடன் இணைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

திரு. சி. தாமோதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசமங்கலம் கிராமத்திலிருந்து கெடிலம் நதியின் குறுக்காக ஒரு தரைமட்டப் பாலம் அமைத்து திருக்கோயிலூர் அணைக்கட்டு சாலையுடன் அதாவது பிரதான சாலையுடன் இணைப்பதன் மூலம் அந்தப் பகுதியிலே வசிக்கின்ற 20–க்கும் மேற்பட்ட குக்கிராமங்களிலுள்ள சுமார் 30,000–க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மாவட்ட தலைநகருக்கும், கடலூருக்கும், நெல்லிக்குப்பம் நகருக்கும் சென்று பலனடைய வாய்ப்பாக இருக்கும். இதனை அரசு பரிசீலனை செய்து இந்த ஆண்டிலாவது அல்லது 1993–94 வது ஆண்டிலாவது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே குறிப்பிடப்படுகிற பாலம் கட்டப்பட வேண்டிய சாலை ஒரு ஊராட்சி ஒன்றியத்தினுடைய பகுதியில் இருக்கிற சாலையாகும். இதனுடைய நீளம் சுமார் 300 மீட்டர் ஆகும். இதற்கு ஆகிற செலவு ஏறத்தாழ 85 இலட்சம் ரூபாயாகும். ஆனால் இந்தப் பகுதி மக்கள் அங்கே இருக்கின்ற நகரங்களை அடைவதற்கு உரிய வகையில் இதற்கு அருகாமையில் உள்ள திருமணிக்குழி சாலையில் ஒரு பாலமும் மேலப்படுவிலே ஒரு பாலமும் இருக்கின்ற காரணத்தால் இந்தப் பாலம் அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது. இருந்தாலும் உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று வருகிற காலங்களில் இந்தப் பாலத்தினுடைய முக்கியத்துவத்தினை உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளில் இந்த அரசு இறங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 73. திரு. சி. இராமசுவாமி. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

[1991 பிப்ரவரி 6

73—4989—திரு. சி. இராமசுவாமி :

கரியாலூர் அருகே மின்நிலையம்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்வராயன் மலைப்பகுதியில் கரியாலூர் அருகே மலையிலேயே தோன்றி மலையிலேயே விழுகின்ற அருவியின் மூலம் கிடைக்கும் தண்ணீரை வைத்து மின்சாரம் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தென்ஆற்காடு மாவட்டம், கல்வரா
யன் மலையில் கரியாலூர் அருகே பாயும் கோமுகி நதியின்
குறுக்கே, வெள்ளிமலை என்ற இடத்தில் ஒரு நீர்த்தேக்க
அணையும், கோமுகி நதியின் மற்றொரு கிளையின் குறுக்கே
தொரடிப்பட்டி என்ற இடத்தில் ஒரு நீர்த்தேக்க அணையும்,
கோமுகி நதியின் கிளை நதியில் ஒருமுக அணை தாழ்வாரமுப்
பாடி என்ற இடத்தில் கட்டி, சுரங்க நீர்ப்பாதை வழியாக
எடுத்துச் சென்று, பரங்கிநத்தம் அருகே அமையவிருக்கும் மின்
நிலையத்தினுடைய திறன் 20 மெகாவாட் என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன். இத்திட்டத்திற்கு கோமுகி நதி நீர்
மின்திட்டம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஆய்வு
வேலைகள் முடிந்தவுடன் திட்ட அறிக்கை தயாரித்து மத்திய
அரசின் ஒப்புதலோடு இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்
பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இடத்திற்கான ஆய்வுப் பணிகள் எந்நிலையில்
உள்ளன ? விரைவில் முடித்திட ஆவன செய்யப்படுமா ? கரி
யாலூர் என்ற பகுதி தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள என்
தொகுதியில் வருகிறது. பின் தங்கிய தொகுதியாக உள்ள
சங்கராபுரம் பகுதி இத்திட்டத்தின் மூலம் பயன்பெற வாய்ப்பு
இருப்பதால் இதற்கு தனி கவனம் செலுத்தி முன் உரிமை
அளித்திட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்



1992 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியபடி நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சி தலைவி அவர்களுடைய அரசு வந்தவுடனே இதற்கான துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இன்றைக்கு இந்தத் திட்டத்திற்கான விரிவான ஆய்வுப் பணிகளை தமிழ்நாடு மின் வாரியம் மேற்கொண்டுள்ளது. ஆய்வுப் பணிகள் முடிந்தவுடன் திட்ட அறிக்கை' தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 74.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

74—

இராமநாதபுரம் மாவட்டத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*1117—திரு. வ. சத்தியமூர்த்தி:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பராமரிக்கப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் சரிவர இயங்காததால், குடி தண்ணீர் வழங்கப்பெறவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் உள்ளடக்கப்பட்ட கிராமங்கள் ஏறக்குறைய 10–க்கு 9 கிராமங்களுக்கு குடிநீர் கொடுக்கப்படாத நிலை இருக்கிறது. ஆனால் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் அரசுக்கு கொடுக்கப்பட்ட புள்ளிவிவரத்தில் அந்த கிராமங்களுக்கு எல்லாம் குடிநீர் கொடுக்கப்பட்டு விட்டது என்று தகவல் வந்துள்ளது. ஆகவே கூட்டு குடிநீர்த் திட்டத்தின் மூலம் தண்ணீர் கொடுக்கமுடியாத நிலை ஏற்பட்ட கிராமங்களைப் பிரித்தெடுத்து புதிய திட்டம் வகுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இதுபற்றி பரிசீலனை செய்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் டாக்டர் அ. ஸ்ரீதரன். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுற துறை அமைச்சர்.

75—

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கூட்டுற சிறப்பங்காடி.

*5789—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமை கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மில் தொழிலாளர்களுக்கு கூட்டுறவு அங்காடி உள் போல் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் கூட் சிறப்பங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : (அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மில் தொழிலாளர்களுக்கு கூட்டுறவு சிறப்பங்காடி, சூப்பர் மார்க்கெட் இருப்பதைப் போல தேயிலைத்தோட்ட தொழிலாளர்களுக்கும் அமைக்கின்ற எண்ணம் இந்த அரசுக்கு உண்டு. அப்படி சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கத்திடம் இருந்து முறையான முன்மொழிவு வருமானால் அவைகளை தகுதி அடிப்படையிலே பரிசீலனை செய்து அரசு முடிவெடுக்கும்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதாக சொன்னார். என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இப்படி அமைக்கப்படுகின்ற தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை தொழிலாளர்கள் உள்ளடக்கியதாக அந்த கூட்டுறவு சங்கம் அமையும், எவ்வளவு தூரங்களை உள்ளடக்கியதாக அமையும் என்பதை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய சூப்பர் மார்க்கெட்டுகளை மாவட்ட அல்லது வட்ட அளவில் ஒல்சேல் ஸ்டோர்ஸ் தான் இந்த மொத்த விற்பனைப் பண்டக சாலைகளை நடத்தி வருகின்றன. பிரைமரி ஸ்டோர்ஸ் இப்படிப்பட்ட கூட்டுறவு சிறப்பங்காடிகளை நடத்துவதில்லை. ஆகவே, அப்படிப்பட்ட மொத்த விற்பனை பண்டக சாலைகள் முன்மொழிவு அனுப்பினால் அந்த விதிகளின் அடிப்படையிலே பரிசீலனை செய்யலாம்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 76, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

76—

போளூரில் வேளாண்மைக் கல்லூரி.

*6151 திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) விவசாய மக்கள் நிறைந்த போளூர் பகுதியில் வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம் போளூரில் புது வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. இது தொடர்பான மற்றொரு கேள்விக்கு இடமில்லை.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நான் திண்டிவனம் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தபோது போளூர் தொகுதியில் எங்கள் அத்திமூர் பகுதியில் வேளாண்மைக் கல்லூரி நிறுவுவதற்கு என்று அனைத்து குறிப்புகளுடன் அரசு அதிகாரிகள் வந்து அந்த இடத்தைப் பார்வையிட்டு இடம் ஒதுக்கப்பட்டது. அதனுடைய குறிப்பு அடிப்படையிலே கூடிய விரைவில் அடுத்த நிதி ஆண்டிலாவது இதனைப் பரிசீலித்து நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் வேளாண்மை மக்கள் நிறைந்த பகுதியாகிய போளூர் பகுதியில் வேளாண்மைக் கல்லூரி நிறுவ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வேளாண்மைக் கல்லூரி துவக்கப்படுகின்ற காலத்தில் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 77, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

77—

அரசு ஊழியர்களுக்கு குடியிருப்பு வசதி.

*4826 திரு. ஆர். பி. பரமசிவம் :
மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டு வசதி வாரியம் மூலம் அரசு ஊழியர்களுக்கு குடியிருப்பு வசதி செய்து தரும் திட்டம் மாவட்டத்தலைநகரிலும் கோட்டாட்சியர் தலைநகரிலும் மட்டும் இருப்பதை, வட்டாட்சியர் தலைமையகம் வரை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டிலிருந்து விரிவுபடுத்தப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானிடப் பிறவிக்குத் தேவையான மூன்று முக்கிய வசதிகளில், இருக்க வீடு என்பதும் ஒன்று என்பதை உணர்ந்து நம்முடைய இதய தெய்வம் அவர்கள் வீட்டு வசதிக்கு முக்கியத்துவம் கொடுத்து வீட்டு வசதி செய்து கொடுக்கும் இந்த பொற்காலத்தில் வட்ட ஆட்சியாளர்களின் தலைமையகம் இருக்கும் நகரில் வீட்டு வசதி செய்து தர இந்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி, அரசு ஊழியர்களுக்கு வாடகைக்கு வீடு கட்டித் தர முடியுமா என்பது. வட்ட ஆட்சியாளர்களுடைய தலைமையகத்தைப் பொறுத்தவரையில், போதிய நிலமும், குடியிருப்புகளுக்கான தேவையும் மற்றும் மாவட்ட ஆட்சியாளரின் பரிந்துரை இருந்தாலும் விசேஷ அங்கீகாரம் அளித்து வட்ட ஆட்சியாளர் தலைமையிடத்திலேயும் இத்திட்டத்தை செயல்படுத்த இயலும் என அறிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 78, திருமதி ரமணி நல்லதம்பி, திரு. சி. ஞானசேகரன், திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. ஆர். தங்கராஜ், திரு. செ. து. வரதராஜன், திரு. பி. வி. இராஜேந்திரன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.



178—

சத்துணவுத் திட்டப் பணியாளர்கள்.

*74—திருமதி ரமணி நல்லதம்பி,
திரு. சி. ஞானசேகரன்,
திரு. எஸ். எஸ். ராமசுப்பு,
திரு. ஆர். தங்கராஜ்,
திரு. செ. து. வரதராஜன்,
திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சத்துணவுத் திட்டத்தின் பணியாளர்கள் நிரந்தர அரசு ஊழியர்களாக்கப்படுவார்களா ?

(ஆ) பிற அரசு ஊழியர்களைப் போல் சத்துணவு ஊழியர்களுக்கும் சம ஊதியம் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) ஆகவே இக்கேள்விக்கே இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி. இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, ஆளுநர் உரையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் படிப்படியாக இந்த சத்துணவுக் கூடங்களில் வேலை செய்பவர்களுடைய பணி நிரந்தரம் ஆக்கப்படும் என்று அறிவித்தார்கள். சத்துணவு கந்த சரித்திர நாயகனான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் உரையின் மீதான விவாதம் இப்போதுதான் நடந்துகொண்டிருக்கிறது. சமூக நலத் துறை அமைச்சர் பதில் சொல்லியிருக்க மாட்டார்கள். மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது என்று சொல்லுங்கள்

திரு. சி. ஞானசேகரன் : இப்பொழுது சுமார் 63 ஆயிரம் சத்துணவுக் கூடங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அமைப்பாளர்கள் 210 ரூபாய் ஊதியத்திற்கும், சமையற்காரர்கள் 100 ரூபாய் ஊதியத்திற்கும், அட்டெண்டர்கள்

60 ரூபாய் ஊதியத்திற்கும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது சத்துணவு தந்த சரித்திர நாயகனாக விளங்கிய புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு நம்முடைய நாட்டில் மட்டுமல்லாமல், வெளிநாடுகளில் எல்லாம் கூட நல்ல பாராட்டு இருக்கிறது என்று 25-வது பாராவிலே சொல்லப்பட்டிருக்கிறது. 'நினைத்தை முடிப்பவன் நான்' என்று பாடி, அதை சாதித்துக் காட்டிய புரட்சித் தலைவரின் ஒரே வாரிசாக விளங்கிக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கால கட்டங்களிலே அதிலே பணியாற்றக் கூடிய ஊழியர்களுடைய பணி நிரந்தரம் ஆக்கப்படுமா என்பதையும், அதுபோல் தென்னாற்காடு மாவட்டத்தில் மட்டும் குழந்தைகளுடைய பயனடைவு அதிகம் இருப்பதை எல்லாம் குறைத்து ஞாயிற்றுக்கிழமைகளில் எல்லாம் விடுமுறை விட்டு, பணத்தை மீதப்படுத்தி, இவர்களை நிரந்தரப் படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஞாயிற்றுக்கிழமை பற்றியது சம்பந்தம் இல்லாத கேள்வி. மற்றத் தொடர்புடைய கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 63 ஆயிரம் சத்துணவுக் கூடங்கள் என்று உறுப்பினர் குறிப்பிட்டார். 67 ஆயிரம் சத்துணவுக் கூடங்கள் இருக்கின்றன. இந்த 67 ஆயிரம் சத்துணவுக் கூடங்களிலும் பணியாற்றுகின்ற சத்துணவுப் பணியாளர்கள் மீது, அவர்கள் விடுத்திருக்கிற கோரிக்கைகள் மீது, எந்த அரசும் எடுத்துக்கொள்ளாத அக்கறையை, இதுவரை தமிழ்நாட்டிலே எந்த முதலமைச்சரும் எடுத்துக் கொள்ளாத அக்கறையை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர் களை நிரந்தரமாக்க வேண்டுமென்கின்ற கோரிக்கையை பரி சீலிக்க வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு அரசுக்கு இருக்கிற நிதிநிலை நெருக்கடியில், இந்த கோரிக்கையை ஏற்றுக்கொள்ள இயலாது. ஆகவேதான், தற்சமயம் இல்லையென்று பதி லளித்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். தங்கராசு—இருக்கையில் இல்லை. திரு. செ. து. வரதராஜன்.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் சிறப்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் தொடர்ந்து நடைபெற்று அதிலே பணியாற்றுகின்ற பணி யாளர்கள் தற்காலிகமாகவே பணிபுரிந்து வருகிறார்கள். இத்திட்டம் காலாகாலமாக நடைபெற வேண்டுமென்ற





நல்லுணர்வோடு இவர்களை நிரந்தர அரசு ஊழியர்களாக ஆக்கினால் மிகச் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றோம். இவர்கள் எல்லாம் தற்காலிக ஊழியர்களாக இருக்கின்ற காரணத்தால் எந்த நேரத்திலும் வேலை போகுமோ என்ற நிலையில் பொறுப்பற்று செயல்பட்டு, வேண்டா வெறுப் போடு பணியாற்றி வருகிறார்கள். அரசு ஊழியர்களாக இருப் பவர்களை 6 மாதத்திலிருந்து 1 வருடத்திற்குள் நிரந்தரப் படுத்துகிறார்கள். ஆனால் இவர்கள் இறந்தால் அரசு ஊழியர்களுக்கு வழங்கும் குடும்ப நல நிதியும், போதுமான....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. து. வரதராஜன், கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. செ. து. வரதராஜன் : இவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும் என்று நம்முடைய தானைத் தலைவி, மாண்பு மிகு புரட்சித் தலைவி, தங்கத் தலைவி அவர்களுடைய ஆட்சியில் நல்ல செய்தி கிடைக்குமென்று சத்துணவுக் கூடங் களில் பணியாற்றுகின்ற ஊழியர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும் எதிர்பார்க்கின்ற காரணத்தினால்தான், இதனை மறுபரிசீலனை செய்து ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம், அவையின் முன்னனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பு குறிப்பிட்டது போல புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தச் சத்து ணவுத் திட்டத்தை ஆரம்பித்தபோது சிறப்பாகச் செயல் பட்டது என்று சொன்னால், புரட்சித் தலைவியினுடைய காலத்தில் இன்னும் ஒரு படி மேலே போய் இந்தச் சத்துணவு கூடங்கள் அதி சிறப்போடு இன்று செயல்பட்டுக் கொண்டிருக் கின்றன. ஆனால் அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்க வேண்டுமென்றால், இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டதற்குப் பின்னால், ஏறக்குறைய 1,200 கோடி ரூபாய் நிதிநிலை நெருக்கடியில் அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்கிற காரணத்தால், அவர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்குகின்ற பரிசீலனை இந்த ஆண்டு அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கோரிக்கையை பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தெரிவித்து இருப்பதால் சில விளக்கங்களை இங்கே அளிப்பது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். சத்துணவுத் திட்டத்திற்காக மட்டும் ஆண்டுக்கு நமது அரசு 236 கோடி ரூபாய் செலவழிக்கிறது. ஏற்கெனவே அரசு ஊழியர்களுக்கான சம்பளங்கள், பென்ஷன் இவற்றுக்காக மட்டும் ஆண்டுக்கு 2,790 கோடியே 15 லட்சம் ரூபாய் செலவாகிறது. இது தவிர இன்னும் அரசாங்கத்தை நடத்துவதற்கான ஓவர்ஹெட்ஸ் செலவுகள் மெயின்டெனன்ஸ் செலவுகள்—வாட்டர் சப்ளை, பவர் சப்ளை, ஸ்டேஷனரி இது போன்ற பல்வேறு செலவுகளுக்காக மட்டும் 1,250 கோடி ரூபாய் செலவாகிறது. இது தவிர இப்போது விலையேற்றத்திற்குப் பின்னால் அரிசிக்காக மட்டும் மக்களுக்கு பொது விநியோக முறையின் மூலம் குறைந்த விலையில், அரிசி வழங்குவதற்காக அரசு ஏற்றுக் கொண்டுள்ள மானியம் அந்தச் சுமை ரூ. 346 கோடியாகும். விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்படுவதால் அரசுக்கு ஏற்படுகிற இழப்பு 350 கோடி ரூபாயாகும். ஒவ்வோர் ஆண்டும் கைத்தறித் துணிக்குக் கொடுக்கின்ற ரிபேட், அதற்காக மட்டும் 42 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. பேருந்துகளில் மாணவர்களுக்கு இலவசமாக பஸ் பாஸ் மற்றும் உடல் ஊனமுற்றவர்களுக்கு கன்செஷனல் டிராவல்—இந்தச் சலுகைகளுக்காக மட்டும் ஒவ்வொர் ஆண்டும் 26 கோடி ரூபாய் நஷ்டம் அரசுக்கு ஏற்படுகிறது. பள்ளிக்குச் செல்லும் சிறார்களுக்கும், மாணாக்கருக்கும் இலவசமாக சீருடை வழங்குவதற்காக அரசு ஆண்டுக்கு 19 கோடி ரூபாய் செலவு செய்கிறது. மாணவர்களுக்கு இலவசமாக காலணி வழங்கும் திட்டத்திற்காக ஒவ்வோர் ஆண்டும் அரசாங்கம் 4 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவு செய்கிறது. பள்ளிக்குச் செல்லும் மாணவர்களுக்கு, மாணவியருக்கு இலவசமாக பாடப் புத்தகங்கள் வழங்குவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அரசு 18 கோடி ரூபாய் செலவு செய்கிறது. உள்ளாட்சி மன்றங்களுக்குப் பல்வேறு பணிகளுக்காக அரசு கிராண்ட் கொடுக்கிறது. மானியம் கொடுக்கிறது. இதற்காக மட்டும் ஆண்டுக்கு அரசு 60 கோடி ரூபாய் செலவு செய்கிறது. கர்ப்பமாக இருக்கின்ற தாய்மார்களுக்கு உதவி அளிக்கும் திட்டத்திற்காக அரசு ஒவ்வோர் ஆண்டும் 5 கோடி ரூபாய் செலவு செய்கிறது. மேலும் திருமணத்திற்கு உதவி செய்யும் திட்டம். இந்தத் திட்டத்திற்காக ஒவ்வோர் ஆண்டும் அரசு 5 கோடி ரூபாய் செலவு செய்கிறது. இது போக Distressed relief scheme—துயர் துடைப்புப் பணிகளுக்காக சிறப்புத் திட்டத்தின்கீழ் அரசு 5 கோடி ரூபாய் செலவு செய்கிறது. முதியோர்களுக்கு உதவித் தொகை Old Age Pension—இதற்காக அர-





சாங்கம் ஒவ்வோர் ஆண்டும் 32 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவு செய்கிறது. இது போக இந்த ஆண்டு பொங்கல் திருநாளை ஒட்டி நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கும் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்களுக்கும் இலவசமாக வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறோம்.

முற்பகல் 10-35

இந்தத் திட்டத்திற்காக ரூபாய் 41 கோடியே 56 லட்சம் செலவு செய்கிறது. இதுபோக அரசு ஒவ்வொரு ஆண்டும் கொடுக்கவேண்டிய— திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை 617 கோடியே 14 லட்சம் ரூபாயாகும். இதைத் தவிர, மத்திய அரசாங்கம், தமிழக அரசுக்கு பல்வேறு கடன்களைக் கொடுத்திருக்கிறது. அதற்காக ஒவ்வொரு ஆண்டும் கடன் தொகை திருப்பிச் செலுத்தப்பட வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசு மத்திய அரசாங்கத்திற்குத் திருப்பிச் செலுத்தும் கடன் தொகை ரூ. 1,500 கோடியாகும். ஒவ்வொரு ஆண்டும் அரசாங்கத்திற்கு இருக்கிற வருவாய், பட்ஜெட் எஸ்டிமேட்டையும் சேர்த்து, Capital Account and Public Account —எல்லாவற்றையும் சேர்த்து அரசுக்கு இருக்கின்ற மொத்த வருவாய் ரூ. 7,147 கோடியே 34 லட்சம். ஆனால் இப்போது நான் குறிப்பிட்டேனே, இந்தத் தலைப்புகளின் கீழே மட்டும் அரசாங்கத்திற்கு ஆண்டொன்றுக்கு ஏற்படுகின்ற செலவு 7,504 கோடியே 85 லட்சம் ஆகும். ஆகவே, இங்கேயே துண்டு விழுகிறது. ஏறத்தாழ 500 கோடி ரூபாய் பற்றாக்குறை இந்தக் கணக்கிலேயே வந்து விடுகிறது.

இதற்கு மேலும் இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு நாளும் பேசுகின்றபோது, இங்கே புதிதாக சாலை போட்டுத் தாருங்கள், அங்கே பாலம் கட்டித் தாருங்கள், புதிதாகப் பள்ளிக் கூடம் கட்டித் தரவேண்டும், அங்கே மருத்துவமனை அமைக்க வேண்டுமென்றும் பல்வேறு கோரிக்கைகளை அரசின் முன் வைக்கிறார்கள். இந்த வளர்ச்சிப் பணிகளுக்கெல்லாம் ஏற்கெனவே அரசாங்கத்திடம் நிதி இல்லை. இந்த நிதிநிலைமையை விளக்குவதன் நோக்கமே இந்த அரசு எத்தகைய ஒரு கடுமையான நிதிப் பற்றாக்குறை சூழ்நிலையிலும் கடுமையாகப் போராடி, மக்களுக்கு நன்மைகள் செய்ய முனைந்து கொண்டிருக்கிறது என்பதை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காகத்தான் (மேசையைத் தட்டும் ஒலி).

ஆகவேதான் சமூகநலத்துறை அமைச்சர் பதில் அளிக்கின்ற போது, சத்துணவுப் பணியாளர்களை இப்போது நிரந்தரமாக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை என்று பதில் அளித்தார்கள்.

[1992 பிப்ரவரி 6

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 79. திரு. ஆர். தங்கராஜ், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

79—

சாலக்கரை கிராமத்திற்கு பாலர் பள்ளி.

*4245. திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆண்டிமடம் தொகுதியில் சாலக்கரை கிராமத்திற்கு தனியாக பாலர் பள்ளி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 80, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

80—

தனியார் தொழிற்சாலைகளில் ஆதிதிராவிடர்களுக்கு இட ஒதுக்கீடு.

*3868. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறைர அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாா :

தனியார் நடத்தும் தொழிற்சாலைகளில் 18 சதவீதம் ஆதிதிராவிடர் மக்களுக்கு கட்டாயமாக வேலை கொடுக்க வேண்டுமென்று சட்டத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

விவர அறிக்கை.

அரசுப் பணிகளில் உள்ளது போலவே, தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு 18 சதவீதம் இட ஒதுக்கீடு செய்ய ஒரு சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்று 1981 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-9 தேதிகளில் நடந்த மாநில அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.



1992 பிப்ரவரி 6]

2. மேற்கண்ட பொருளின்மீது தொடர் நடவடிக்கை எடுத்து இந்திய அரசின் தொழிலாளர் அமைச்சகத்துடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது. வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட மாத்தியூ (Mattew Committee) குழுவின் பரிந்துரையின்படி ஆதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குத் தனியார் நிறுவனங்களில் பணி நியமன ஒதுக்கீடு செய்வதை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு மத்திய அரசால் ஆராயப்பட்டது என்றும், இது குறித்து சட்ட அமைச்சகத்தின் ஆலோசனை கேட்கப்பட்டபோது, இத்தகைய தீர்மானத்தை அமுல்படுத்துவது என்பது அரசியல் சட்டத்தை மீறுவதற்கு ஒப்பாகும் என சட்ட அமைச்சகம் கருத்துத் தெரிவித்துள்ளது என்றும் இந்திய அரசு கூறியது. இக்கருத்தின்மீது சட்டத் துறையின் ஆலோசனையைக் கேட்டபோது, அத்துறை மைய அரசின் கருத்தை ஏற்பதுடன், தனியார் நிறுவனங்களில் 80 சதவீதத்துக்கும் குறையாமல் உள்ளூர் ஆட்களை நியமனம் செய்ய வேலைவாய்ப்புத் துறையில் ஒரு வேண்டுகோள் வெளியிடப்பட்டுள்ளது என்றும் இதுபோன்று தனியார் நிறுவனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு பணி ஒதுக்கீடு செய்ய ஒரு வேண்டுகோள் வெளியிடலாமா என்று ஆராயலாம் என்று கருத்து தெரிவித்தது. இக்கருத்துப் பரிசீலிக்கப்பட்டுத் தனியார் நிறுவனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 சதவீததிற்குக் குறையாமல் பணி நியமனம் செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளலாம் என்கிற அரசின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்குத் தங்களுடைய முழு மன ஒத்துழைப்பையும் ஆதரவையும் நல்குமாறு அனைத்துத் தனியார்துறை மற்றும் தொழில் நிறுவனங்களின் அதிபர்களுக்கு ஒரு வேண்டுகோள் அனுப்ப அரசு முடிவு செய்தது. அதன்படி இவ்வேண்டுகோளின் நகல்கள் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றில் அச்சடிக்கப்பட்டு அவற்றை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் 1988-ஆம் ஆண்டில் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்களுக்கும் அனுப்பினார். அவ்வேண்டுகோளைத் தங்கள் மாவட்டத்திலுள்ள எல்லாத் தனியார் மற்றும் தொழில்துறை நிறுவனங்களுக்கும் விநியோகம் செய்யும்படியும், மேற்படி நிறுவனங்களில் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குப் பணியில் இட ஒதுக்கீடு விதிமுறைகளின்படி முன்னுரிமை அளிக்க அறிவுரை வழங்கும்படியும் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். அதன்படி தங்கள் மாவட்டங்களிலுள்ள தனியார் மற்றும் தொழில்துறை நிறுவனங்களுக்குத் தக்க அறிவுரை வழங்கியதாக மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்களிடமிருந்து தகவலும் கிடைக்கப்பெற்றுள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக நடத்தப்படுகின்ற தொழிற்சாலைகளுக்கெல்லாம் அரசுதான் லைசென்ஸ் கொடுக்கிறது.

மத்திய, மாநில அரசுகள்தான் கடன் கொடுக்கிறது, மானியமும் கொடுக்கிறது. அப்படி தருகிறபோது, தகுதியுள்ள நபர்களுக்காகிலும் 18 சதவீத ஒதுக்கீடு அளவுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுமா என்றுதான் நான் கேள்வி கேட்டிருந்தேன். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலத்திலேயே இதை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால்தான் பல பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற திட்டமாக இது அமையும். ஆகவே இது மீண்டும் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு சட்டமுன்வடிவு கொண்டு வர இயலாது என்று விவர அறிக்கையில் இருக்கிறது. மீண்டும் நினைவூட்டுக் கடிதம் மூலமாக தொழில் நிறுவனங்களுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக கடிதம் அனுப்பப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகத் தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அங்கேயிருந்து இன்னின்ன ஊர்களில் இந்த இந்த தொழிற்சாலைகளில் இந்த வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டதா என்பதை யாவது நீங்கள் கேட்டுத் தெரிந்திருக்கிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விபரங்கள் சேக்கரிகப்பட்டு வந்தவுடன் அறிவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். அன்பழகன்.

திரு. எஸ். அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மானியம் பெற்றுக் கொண்டு நிர்வாகம் நடத்திவரும் கல்லூரிகள், மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகளில் 18 சதவீத ஆசிரியர்கள் ஆதி திராவிட ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அப்படி நியமனம் செய்யாத பள்ளிகளுக்கு ஆதிதிராவிட ஆசிரியர்களை நியமனம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் லைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

---

[குறிப்பு :ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிப்பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தஞ்சை மாவட்டத்தில் தாளடிப் பயிர் இன்னும் ஒரு தண்ணீர் விட்டால் அதில் நல்ல சாகுபடி கிடைப்பதற்குரிய வாய்ப்பு இருக்கிறது, அங்கே தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கின்ற காரணத்தால், பெரும் பாதிப்புக்கு ஆளாகிற நிலை ஏற்பட்டிருக்கிறது என்கின்ற ஒரு முக்கியமான பிரச்சினையை திரு. ஆர். சிங்காரம், திரு. கு. தங்கமுத்து ஆகிய இருவரும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். சுருக்கமாக அந்த விபரத்தை மட்டும் படிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். திரு. ஆர். சிங்காரம்.

முற்பகல் 10–40

## 2. சிறப்புக் குறிப்பு

**தஞ்சை மாவட்டத்தில் கடலோர கடைமடைப் பகுதிகளில் பயிர்கள் வாடுவதைத் தவிர்க்க தண்ணீர் விட வேண்டியதன் அவசியம் குறித்து.**

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதியில் கடலோர கடைமடைப் பகுதிகளில் கல்லணை கால்வாயில் சி. எம். டி. தண்ணீர் தாமதமாக கிடைத்ததால் சாகுபடி தாமதமாகிவிட்டது. சுமார் பத்தாயிரம் ஏக்கர் நிலங்கள் அப்பகுதியில் பச்சையாக இருக்கின்றன. இது வரை பல ஆண்டுக் காலமாக பச்சையையே பார்க்காத அந்தப் பகுதி, கடைமடைப் பகுதி மக்கள், இன்று புரட்சித் தலைவி முதல்வர் அவர்களின் காலத்திலேதான் வறட்சி நீங்கி மறுமலர்ச்சி ஏற்பட்டு இந்த விவசாயிகள் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அப்பயிர்களைக் காப்பாற்ற வேண்டுமானால் இன்னும் இருபது நாட்களுக்காவது கடைமடைப் பகுதியில் தண்ணீர் விட்டால் தான் காப்பாற்ற முடியும், அந்தப் பகுதி மக்களை வாழ வைக்க முடியும். இப்படிப்பட்ட அவலநிலை இருப்பதால், தயவு செய்து மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இதைப் பரிசீலனை செய்து இருபது நாட்களுக்காவது அந்தப் பகுதியில் தண்ணீர் திறந்துவிட்டால் அந்த மக்களை காப்பாற்ற முடியும். இந்த அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் இங்கே தன்னுடைய நிலையை எடுத்துச் சொன்னார்கள். தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி மற்றும் பட்டுக் கோட்டை பகுதிகளுக்கு இப்போது இருக்கின்ற பாசன பயிர் களுக்கு வேண்டிய தண்ணிரை திறந்துவிட வேண்டும் என்கிறார். நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர் களுடைய உத்தரவின் பேரிலே மகாமகத்திற்குத் தண்ணீர் விட இருக்கிறோம். அத்தோடு சேர்த்து நம்முடைய உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளையும் ஏற்று—ஏற்கெனவே நாங்கள் கொடுப்பதாகத்தான் இருந்தோம்—இருந்தாலும் உறுப் பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள்—ஆகவே வருகின்ற 7-ஆம் தேதியிலிருந்து 11-ஆம் தேதிக்குள் தண்ணீர் திறந்துவிடப்பட்டு அந்தப் பயிர்கள் பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே நம்முடைய புரட்சி தலைவியினுடைய காலத்திலே அவர் என்றைக்கும் மகிழ்ச்சியாக இருப்பார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம் திரு. கு. தங்கமுத்து தவிர திரு. ஜி. பழனிசாமி அவர்களும் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கான வேறு ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) உங்களுடைய பெயரும் இதிலே வந்திருக்கிறது. மூன்று பேரும் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொல்லிவிட்டேன். மேலும் இதிலே ஒன்றும் சொல்ல வேண்டாம். பிறகு உங்களுக்கு அனுமதி கொடுத்தால் திரு. தங்கமுத்து அவர்களும் பேச வேண்டிவரும், வேண்டாம்.

## 3. கவன ஈர்ப்பு

### (அ) பேராவூரணி ஒன்றியம் களத்தூர் மற்றும் இடையாத்தியில் கல்லணைக் கால்வாய் பாலங்கள் சீர் செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு திரு. ஆர். சிங்காரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருவார். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் களத்தூர் மற்றும் இடையாத்தி ஊர்களில் கல்லணைக்





கால்வாயிலுள்ள பாலங்கள் இடிந்திருப்பது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப் பிடுகிற பாலம் 1932-லே கட்டப்பட்ட பாலம் என்பதை இந்த அரசு நன்றாக அறியும். இந்தப் பாலங்கள் இப்போது ஓரளவிற்கு நல்ல நிலையிலே இருக்கின்றன. பாலங்களின் இரு புறங்களிலும் உள்ள கைப்பிடி சுவர்கள் மட்டுமே பழுது பார்க்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்த இரண்டு பாலங்களையும் சீரமைக்க வேண்டி ஏறத்தாழ ரூபாய் 5 இலட்சம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே அந்த கோரிக்கையை ஏற்று, இந்தக் கோடை பருவத்திலே அந்தப் பாலங்கள் சீர் செய்யப் பட்டு, போக்குவரத்து பாதிக்காத நிலை ஏற்படுத்தப்படும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த இரண்டு பாலங்களும் அபாயகரமான நிலையில் உள்ள பாலங்கள் என்று அங்கே போர்ட் வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவசரமாகச் செய்ய வேண்டிய பாலங்கள் அவை. இந்த போர்ட் கடந்த மூன்று ஆண்டுக் காலமாக அங்கே வைக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் பல முறை இந்தச் சட்ட மன்றத்திலே நான் கவனத்திற்குக் கொண்டு வந்தும் கூட கடந்த ஆட்சிக் காலத்திலே, நான் காங்கிரஸ்காரன் என்ற காரணத்தால் அது நிராகரிக்கப்பட்டது. இந்த ஆட்சியில், நம் முடைய புரட்சித் தலைவி டாக்டர் ஆட்சியில் இதை நீங்கள் பரிசீலனை செய்து அவசரமாக, அவசியமாக உடனடியாகச் செய்வதற்கு முயற்சி எடுப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்த மட்டில் அனைத்துத் தொகுதிகளும் தன்னுடைய சொந்த தொகுதியாகக் கருது கிறார் என்று ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். இதிலே பாரபட்சம் கிடையாது. ஆகவே உடனடியாக இந்தப் பாலங் களைச் சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(ஆ) கோயம்புத்தூரில் பால் முறையாக வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கே. செல்வராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. செல்வராஜ்.

முற்பகல் 10-45மணி

*திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " கோயம்புத்தூர் மாநகரில் பால் முறையாக விநியோகிக்காதது குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

கடந்த மூன்று மாதங்களில் கோயம்புத்தூர் நகரில் கொள் முதல் செய்யப்பட்ட பாலின் விவரமும். உள்ளூர் விற்பனை விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| மாதம். | கொள்முதல் (லிட்டரில்). | உள்ளூர் விற்பனை (லிட்டரில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| அக்டோபர் 1991 | 69,035 | 70.818 |
| நவம்பர் 1991 | 75,257 | 70,350 |
| டிசம்பர் 1991 | 74,399 | 70,000 |

1991-92-ஆம் ஆண்டில் 84,923 லிட்டர் பால் கொள் முதல் செய்யப்பட்டு 74,163 லிட்டர் விற்பனை செய்யப் பட்டது. அதாவது உற்பத்தியாகும் பாலில் 87 சதவிகிதம் விற்பனை செய்யப்பட்டது. கடந்த அக்டோபர் 1991 முதல் சனவரி 1992 வரை சராசரி நாளொன்றுக்கு 74,785 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, 70,389 லிட்டர் அதாவது 94 சதவிகிதம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் கோவை நகர் மக்களிடமிருந்து புகார்கள் வராத வண்ணமும், பால் விநியோகத்தில் முறைகேடுகள் நடப்பதைத் தவிர்க்கவும் தனித்தனி அதிகாரிகளைக் கொண்ட ஆய்வுக்குழுக் கள் அமைக்கப்பட்டு, அவர்களது கண்காணிப்பில் பால் விநி யோகம் கோவை நகரின் முழுத்தேவையையும் நிவர்த்தி செய்யும் வண்ணம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் நகரில் பால் விநியோகம், பால்வளக் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. தற்போது வீடுகளுக்கு விநியோகத்திற்காக வரும் பாலை தனியார் ஹோட்டல்களுக்கு ஆயிரக் கணக்கான லிட்டர் பாலை அதிக விலைக்குக் கொடுத்துவிடுகிறார்கள். அதிகாலை யிலே பால் வாங்குவதற்குப் பால் பூத்துக்குச் சென்றால், பால் தீர்ந்துவிட்டது என்று பதில் சொல்கிறார்கள். பால் வாங்க வரும் பெண்களைத் தரக் குறைவான வார்த்தைகளால் பேசு கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இருக்கவும், முறையாக பால் பொது மக்களுக்குக் கிடைக்கவும், சென்னை மாநகரிலுள்ளதுபோல் தானியங்கி பால் நிலையம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளை தனிக் குழுவாக அமைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் இது போன்ற குறைகள் ஏற்படாவண்ணம் அரசு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் பூத்துகளுக்கு பால் வாங்க வரும் பெண் களைத் தரக் குறைவாகப் பேசுகின்ற காரணத்தால், அந்த பால் பூத்துகளில் பணியாற்றுவதற்கு பெண்களையே அமர்த்து வீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

## 4. அறிக்கைகள் அளித்தல்.

### மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கா. ப. பட்டாபிராமன், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92-ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள திருத்தங் கள் இன்று முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட வேண்டும். திரு. மா. சுந்தரதாஸ்.

THIRU M. SUNDARADOSS : I move the following amendment:
"Add at the end the following:
'but regret to note that no mention is made about'

(1) The steps taken to check the price rise and to uncover the hoardings of foodgrains by traders;

(2) The lawlessness created by a section of the people near Kuzhtihurai Post Office Junction;

(3) Implementation of any proposal for generation of employment in the State;

(4) providing opportunities to the youth to play their part in the economic development of the State:

*Thirumathi A. S. PONNAMMAL: I second it.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச். எம். ராஜு, இருக்கையில் இல்லை.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம். திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது இந்தியக் குடியரசுக் கட்சியின்சார்பில் கருத்துக்களை வழங்க வாய்ப்புத் தந்தமைக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆளுநர் உரை வரவேற்கத் தகுந்ததாக அமைந்து இருக்கிறது என்று நான் குறிப்பிடுகிற போது, சிலர் இதிலே ஒன்றுமே இல்லை என்று சொல்வதையும் இணைத்துப் பார்க்கிறேன். மஞ்சள் காமாலைக்காரன் பார்த்தால், பார்ப்பது எல்லாம் மஞ்சளாகத் தெரியும். இந்த உரை, நாம் பார்க்கின்ற பார்வையிலே இருக்கிறது. அடித்தளத்து மக்களின் பிரதிநிதியாக, ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாக, ஒதுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாக, நான் இந்த ஆளுநர் உரையைப் பார்க்கிறபோது இதிலே அரசின் உயர்வான கொள்கைகள் விளக்கப்பட்டு இருப்பதை மகிழ்ச்சியோடு வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஒரு நல்ல அரசினுடைய கடமை, ஏழை எளிய மக்களுக்கு உண்ண உணவு தருவது, உடுக்க உடை தருவது, இருக்க இடம் தருவது, அவர்கள் வாழ உத்தரவாதம் அளிப்பது இவைகள்தான். இதைத்



தான் நம்முடைய அரசியல் சட்டம், அரசின் தலையாய கடமையாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. வளர்ந்து வருகிற ஏழை ஜனநாயக நாடாகிய நம்முடைய இந்தியாவில் 70 விழுக்காட்டிற்கு மேலே ஏழை எளிய மக்கள், கிராமப்புற மக்கள் வாழ்ந்துவருகிறநம்முடைய நாட்டில்இந்தப்பிரச்சினையை எந்த அரசு முனைப்போடு ஆராய்கிறதோ, எந்த அரசு இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு வேகமாக செயல் படுகிறதோ. அதுவே ஒரு நல்ல அரசாக இருக்க முடியும். 'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்' என்று புரட்சிக் கவிஞர் பாரதி பாடினார்.

" இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் "

என்றார் வான்புகழ் வள்ளுவர். ஆகவே, இரக்கிற நிலைமையும், பிச்சையெடுக்கிற நிலைமையும், பசிக்கொடுமையால் வாழ்கிற நிலைமையும், இந்த உலகத்திலிருந்து தூக்கியெறியப்பட வேண்டுமென்று ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பல அறிஞர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். அதற்கு ஒரு விடிவைக் கண்டவர், ஒரு மாற்று வழியைக் கண்டவர், தமிழகத்திலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அதற்கு பிறகு அவருடைய ஒரே அரசியல் வாரிசாக, அவருடைய ஒப்புயர்வற்ற திட்டங்களை இன்றைக்கு மிக முனைப்போடு நடைமுறைப் படுத்திக் கொண்டிருப்பவர் தமிழகத்தை ஆண்டுகொண்டிருக்கிற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் அவர்கள் உண்ண உணவு கொடுத்தார். இன்றைக்கு இவர் ஒரு கோடியே 20 இலட்சம் மக்களுக்கு உடுக்க உடை கொடுத்துக் கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) 45 ஆயிரம் மக்களுக்கு இருக்க இடம் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இதற்கு மேலே ஔவை பாட்டி சொன்னாரே, 'அரிது அரிது மானிடராய்ப் பிறந்தல் அரிது, அதிலும் கூன், குருடு, செவிடின்றி பிறத்தல் அரிது' என்று இந்த மாநிலத்திற்கு பெருமையை சொன்னாரே, அந்த பிறப்பின் பெருமையை போற்றி பாதுகாக்க வேண்டும் என்பதற்காக இன்றைக்கு உண்ண உணவு தந்து, உடுக்க உடை தந்து, இருக்க இடம் தந்து, இலவச மின் விளக்கு தந்து, காலணியைத் தந்து, அதற்கு மேலே வாழ்வதற்கு உத்தரவாதம் தருகிற வகையிலே புரட்சித் தலைவி அவர்கள் மருத்துவ நலத் திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–50

மானிடப் பிறப்பின் பெருமையைக்காப்பாற்றுகிற வகையிலே இந்தத் திட்டத்தை முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தியக் குடிமகனுடைய சராசரி வாழ்நாள் 48 ஆண்டுக் காலமே என்கிறது நம்முடைய விஞ்ஞான புள்ளி விவரம். ஒரு சராசரி மனிதனுடைய சராசரி வாழ்க்கை 48 ஆண்டுக்காலம் தான், மேலை நாடுகளில் 45 வயதுக்கு மேலே தான் பலர்

தங்களுடைய வாழ்க்கையைத் தொடங்குகிறார்கள். இங்கே 48 ஆண்டுகாலத்தோடு இந்தியக் குடிமகனின் வாழ்நாளே முடிந்து போய்விடுகிறது. காரணம் மருத்துவ சிகிச்சை வசதி போதிய அளவுக்கு இல்லாதது தான். இது இரசாயன உலகம். எல்லாமே கலப்படமாக இருக்கிறது. பயிருக்கு போடுகிற மருந்திலேயிருந்து, குடிக்கிற தண்ணீரிலேயிருந்து, வாழ்கிற வயதில் மனிதன் எல்லா வகையிலும் இரசாயன உலகத்தில் கலப்படத்தை சந்தித்துக் கொண்டிருக்கிறான். இந்த நிலையில் கிராமப்புற மக்கள் பலர் போதிய எழுத்தறிவும், படிப்பறிவும் இல்லாததால், விஞ்ஞான அறிவை அவர்கள் புரிந்து கொள்ளாததால், அவர்களுக்கு என்ன நோய் ஏற்படுகிறது என்பதை தெரியாமலே இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை களைந்தெறிகிற வகையில், இன்றைக்கு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாட்டு மக்களை வாழ்விக்க வந்த ஒப்புயர்வற்ற மிகப்பெரிய டாக்டராக, டாக்டர்களுக்கெல்லாம் டாக்டராக,— டாக்டரை நாம் கடவுளாகச் சொல்கிறோம்— இந்த ஏழையெளிய மக்களை காப்பாற்றுகிற ஒரு ஒப்புயர்வற்ற டாக்டராக இந்த மருத்துவ நலத் திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). சென்ற ஆண்டு ஒரு விஞ்ஞான ஏஜென்சி ஒரு மாவட்டத்தில் ஒரு கிராமத்திற்கு போய் ஆயிரம் பேரை பரிசோதித்தது. அதிலே 300 பேருக்கு சர்க்கரை நோய் இருப்பதைக் கண்டறிந்தது. ஒரு சிலருக்கு ரத்தக் கொதிப்பு நோய் இருந்ததைக் கண்டறிந்தது. வேறு சிலருக்கு இருதய நோயே இருந்திருக்கிறது. ஆனால், அந்த கிராம மக்கள் அவைகளை அறிந்திருக்கவே இல்லை. இன்றைக்கு தமிழக முதல்வர் அவர்கள் எல்லோரையும் கட்டாய பரிசோதனைக்கு உட்படுத்தி, எல்லா கிராமங்களுக்கும் இவர்களே தேடிப்போய் இந்தத் திட்டத்தைச் செய்கிறார்களே இதைப் பாராட்டாமல் யாராவது இருந்தால் அவர்களுக்கு மனித நேயமே இல்லையென்றுதான் பொருள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மனிதநேயம் மிக்க இந்த ஆளுநர் உரையை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழர்களுடைய தன்மானத்திற்கு சவாலாக இருக்கிற கர்நாடக தமிழர்கள் பிரச்சினையாக இருந்தாலும், பல நூறு ஆண்டுக்காலமாக கிடப்பிலே கிடந்த காவிரி நீர்ப் பிரச்சினையாக இருந்தாலும், உலக ஒருமைப்பாட்டிற்கே சவால் விட்டுக் கொண்டிருக்கிற விடுதலைப் புலிகளுடைய பிரச்சினையாக இருந்தாலும். இந்தப் பிரச்சினைகளையெல்லாம் இன்றைக்கு உலக அரசியல் கண்ணோட்டவாதிகளானாலும், இந்தியத் துணைக்கண்டத்திலே இருக்கிற எல்லா அரசியல் தலைவர்களானாலும், ஏன் எதிர்க்கட்சியிலே கூட வியக்கிற அளவுக்கு மிக சாமர்த்தியமாக சமாளித்து இருக்கிற அந்தப் பெருமை இன்றைக்கு தமிழகத்திலே அரசியல் வீராங்கனையாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு இருக்கிறது.



(மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பிரச்சினைகள் சாதாரண பிரச்சினைகள் அல்ல. ஆண்டாண்டு காலமாக தமிழகத்திலே புரையோடிக் கிடந்த பிரச்சினைகள். இந்தப் பிரச்சினைகளை மிகச் சாமர்த்தியமாக சமாளித்திருக்கிற முதல்வர் அவர்களை ஆளுநர் உரை மூலமாக, ஆளுநர் பாராட்டி இருப்பதை நான் மகிழ்ச்சியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-55

இந்தச் சந்தர்ப்பத்திலே நான் என்னுடைய வேறு சில பிரச்சினைகளையும் சொல்லியாக வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சில பிரச்சினைகள் இருப்பதை நான் சொல்லியாக வேண்டும். வீட்டு மனைப் பிரச்சினை தொடர்ந்து இருந்து வருகிறது. இங்கேகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரால் பேசப்பட்ட பிரச்சினை. நம்முடைய அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டித் தருவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்தாலும் கூட, பல சந்தர்ப்பங்களிலே அதை முழுமையாகத் தர முடியவில்லை. காரணம் வீட்டுமனைப் பட்டா கிடைப்பதில்லை. அதற்குக் காரணம் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட வழக்குகள் நிலச் சொந்தக்காரர்களால் போடப்பட்டு இன்றைக்கு நீதிமன்றங்களிலே தேங்கிக் கிடக்கின்றன. பல வழக்குகள் இப்படி கிடப்பிலே கிடக்கின்றன. ஒரு தாழ்த்தப்பட்டவன் தனக்கு வீட்டு மனை வேண்டும் என்று, வேண்டி விரும்பி, மனு போட்டால் அரசு அவனுக்கு அந்த இடத்தை ஒதுக்கினாலும்கூட, நிலச் சொந்தக்காரர்கள் நீதிமன்றத்திற்குப் போய்விடுவதால் நின்றுபோய் விடுகிறது. பிறகு பிரச்சினைகள் வளர்ந்து விடுகின்றன. எனவே நான் பணிவோடு இந்த அரசிடம் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு ஒரு தனிக் கோர்ட்டை அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தனிக் கோர்ட் அமைப்பது என்பது புதிதான விஷயம் அல்ல. வரதட்சணை விஷயங்களை நாம் ஆராய்வதற்காக, தீர்ப்பதற்காக ஏற்கனவே வரதட்சணைக் கொடுமைகளுக்கு குடும்பக் கோர்ட்டுகளை போட்டிருக்கிறோம். வரதட்சணைக் கோர்ட்டுகளைப் போட்டு இருக்கிறோம். அதைப்போல, இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களின் வீட்டு மனைப் பிரச்சினைகளை, வழக்குகளை ஆராய்வதற்காக ஒரு தனி நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்தி, வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆயிரம் பேர்கள் இருக்கிற ஒரு சாதாரணக் குடியிருப்புக்குக்கூட பேருந்து வசதியைக் கொண்டு வருகிற ஒரு நல்ல கொள்கையை இன்றைக்கு இந்த அரசு எடுத்துச் சொல்லியிருக்கிறது. இப்போதெல்லாம் உலகமே சுருங்கிப் போய்விட்டது. ஒரு காலத்திலே பரந்த உலகம் என்று சொல்வோம். இப்போது சுருங்கிப் போய்விட்டது. காரணம் போக்குவரத்து அந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறது. இன்றைக்கு காலையிலே புறப்பட்டால் 2 நாட்களுக்குள், உலகத்தையே சுற்றிவிட்டு வந்து

[திரு. செ. கு. தமிழரசன்] [1992 பிப்ரவரி 6

விடலாம். அப்படிப்பட்ட நிலைமையில், சின்ன குக்கிராமங்
களுக்கும் பேருந்துகள் போகாமல் இருந்த அந்த நிலையை மாற்றி
இன்றைக்கு ஆயிரம் பேர்கள் இருக்கிற ஊர்களுக்குக் கூட
பேருந்து வசதியைக் கொண்டு வருவேன் என்று சொல்லி
இருக்கிற தமிழக முதல்வர் அவர்களை நான் இந்தச் சந்தர்ப்
பத்திலே மகிழ்ச்சியோடு பாராட்டுகிறேன்.

சட்டப்பேரவையிலே இன்றைக்குக் கூட இட ஒதுக்கீட்டுப்
பிரச்சினையைக் குறித்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள்
வினா தொடுத்தார்கள். தொடர்ந்து பேசி வருகிறோம்.
60 ஆண்டுகளாக இந்த இட ஒதுக்கீட்டு முறையை மத்திய
மாநில அரசுகள் பின்பற்றி வருகின்றன. 60 ஆண்டுகளாக
இது பின்பற்றப்பட்டும், தொடர்ந்து பேசப்பட்டும் கூட, இது
வரையிலும் எவ்வளவு விழுக்காடுகள் நிரப்பப்பட்டு இருக்கின்றன
என்றால், இன்னமும் அரசு சொல்லிக் கொண்டிருக்கிற 18
விழுக்காட்டை மத்திய அரசும் நிரப்பவில்லை, மாநில அரசு
களும் நிரப்பவில்லை. அரசு எவ்வளவு உயர்வான திட்டங்
களைக் கொண்டு வந்தாலும் அதைச் செயல்படுத்துகின்ற
அதிகாரிகள் பல சந்தர்ப்பங்களிலே பிற்போக்குவாதிகளாக, சம
யங்களிலே மதவாதிகளாக திசை திருப்புகிறவர்களாக இருப்ப
தால், அது போக வேண்டிய இடத்திற்கு போய்ச் சேராமல்
தடைபட்டு போய்விடுகிறது.

இங்கேயே கூட நம்முடைய மாநில அரசிலே கூட 18
விழுக்காடு இன்னமும் பல துறைகளிலே நிரப்பப்படவேயில்லை.
நாம் வேறு பல கோரிக்கைகளை வலியுறுத்துவது வேறு. இருக்
கிற நம்முடைய அரசியல் சட்டப் பாதுகாப்பு கூட இன்னமும்
முழுமையாக நிரப்பப்படவில்லை.

நம்முடைய குடிநீர் வடிகால் வாரியத்திலே 400 என்ஜீனியர்
பொறுப்புகள் தாழ்த்தப்பட்டவர்களுக்குப் போக வேண்டியது
காலியாக இருக்கிறது. போடப்பட்ட நேரங்களிலே எல்லாம்
தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து உரிய விண்ணப்பங்கள் வர
வில்லை என்று சொல்லி கடந்த 15 ஆண்டுக்காலமாக அவர்
களுக்கு உரிய 18 விழுக்காடு நிரப்படாமலே இருக்கிறது.

கூட்டுறவு வங்கிகள் இருக்கின்றனவே அந்த வங்கிகளிலே
எல்லாம் இன்னமும் 4 விழுக்காடு—18 விழுக்காடு எங்கே—
4 விழுக்காடு கூட நிரப்பப்படவில்லை. தனியார் துறைகளிலே
18 விழுக்காட்டை நாம் எப்போது பெறப்போகிறோம் என்பது
வேறு விஷயம். இதுவே இன்னும் முழுமையாக நிரப்பப்பட
முடியாத நிலையில் இருக்கிறது.

இந்த ஆண்டு அரசுக் கல்லூரிகளைப் பற்றிக்கூட சொன்னார்
கள். மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அரசுக்
கல்லூரிகளிலே குறிப்பாக நம்முடைய சென்னையிலே இருக்கிற
மாநிலக் கல்லூரியிலே பர்ஸ்ட் இயர் பி.எஸ்.ஸி. (கெமிஸ்ட்ரி)யிலே



1992 பிப்ரவரி 6] [திரு. செ.கு. தமிழரசன்]

ஒரு எஸ்.சி. கூட இல்லை. ஒரு தாழ்த்தப்பட்டவன் கூட
இல்லை. முதல் வருட பி.எஸ்.ஸி. (மேத்ஸ்) ஒரு தாழ்த்தப்
பட்டவர் கூட இல்லை. முதல் வருட பி.எஸ்.சி. (பிசிக்ஸ்)
ஒரு தாழ்த்தப்பட்டவர் கூட இல்லை. இந்த ஆண்டு. ஆனால்
தமிழிலும் வரலாற்றிலும் தமிழ் பயிற்றுவிப்பு மொழியிலும்
அவர்கள் நிரப்பப்படுகிறார்கள். அதேபோன்று பல நிறுவனங்
களிலே உயர் பதவிகளிலே 18 விழுக்காடு இருக்காது. துப்புரவுத்
தொழிலாளர்களில் 18 விழுக்காட்டிற்கு மேலே 50 விழுக்காடு
வரையிலும் கூட இருக்கலாம். இதை அவர்கள் சொல்வார்கள்
நாங்கள் 18 விழுக்காடு நிரப்பி விட்டோம் என்று. ஆக இந்தப்
பிரச்சினை 60 ஆண்டுகளாக நாம் இந்த இட ஒதுக்கீடு முறை
யினை பின்பற்றியும்கூட இப்படிப்பட்ட நிலைமை இருந்து
கொண்டு இருப்பதனால் பாராளுமன்றத்தில் இருப்பதைப் போல்
ஆதி திராவிட நலன்களை அவர்களுடைய விழுக்காடுகளை
கவனிக்க எங்களுடைய தாழ்த்தப்பட்ட மக்களுடைய நம்பிக்கை
நட்சத்திரமாக இருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்
களுடைய தலைமையில் ஒரு ஆராய்ச்சிக் குழு அமைக்கப்பட
வேண்டுமென்று நான் வேண்டி விரும்பி மிகப் பணிவோடு இந்தக்
கோரிக்கையை வலியுறுத்த விரும்புகிறேன்.

முற்பகல் 11–00

மத்திய அரசிலே கூட ஒவ்வொரு ஆண்டும் சொல்லிக் கொண்
டிருக்கிறார்கள். இந்த ஆண்டும்கூட அண்ணல் அம்பேத்காரின்
நூற்றாண்டு விழாவினையொட்டி சமூக நீதி ஆண்டாகக் கொண்
டாடுகிறோம். எனவே 18 விழுக்காடு நிரப்பப்பட்டு விட்டதா
என்ற ஒரு சுற்றறிக்கையை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.
அனுப்பிக் கொண்டிருக்கிறார்களே தவிர அங்கேயும் அது
நிரப்பப்படவில்லை. அது வேறு விஷயம். ஆக இங்கே
தமிழக முதல்வர் அவர்கள் எங்களுக்குரிய பாதுகாப்பாக
அவர்களே ஒரு குழுவை நியமித்து இயங்க வேண்டுமென்று
நான் வேண்டுகிறேன்.

ஆதி திராவிட நல ஆலோசனைக் குழு என்ற ஒரு குழு
உண்டு. 12 ஆண்டுக் காலமாக இந்தக் குழு போடப்படவே
இல்லை.கடந்த 12 ஆண்டுக் காலமாக மாவட்ட அளவிலோ
வட்ட அளவிலோ மாநில அளவிலோ இந்தக் குழு போடப்பட
வேயில்லை. எனவே அந்தக் குழுவை நம்முடைய முதல்வர்
அவர்கள் கொஞ்சம் விரைந்து நியமிக்க வேண்டுமென்று நான்
இங்கே பணிவன்போடு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.
அண்ணல் அம்பேத்கார் அவர்கள் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தை
முன்னுக்குக் கொண்டுவர முதலில் அவர்களை 'எஜுகேட்
செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களை கல்வி
அறிவிலே போதிய அளவிலே கொண்டு வந்தால் தான் மற்ற
எல்லா துறைகளிலேயும் அவர்களை முன்னேற்ற முடியுமென்று
சொன்னார்கள். எனவே இந்த கல்லூரிகளிலே விடுதிகளிலே
இந்த 18 விழுக்காட்டை உடனடியாக கவனிக்க வேண்டுமென்று
தான் வேண்டி, தொழிற்துறையிலே தாழ்த்தப்பட்ட மக்களை'

முன்னுக்குக் கொண்டு வருவதற்கு நம்முடைய தாயன்பு மிக்க புரட்சித் தலைவி அவர்கள் ஒரு அரிய திட்டத்தை இப்போது வெளிப்படுத்தியிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் தொழில் தொடங்குவதற்கு வருமான வரம்பே தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்றுப் பாராட்டுகிறேன். அவர்களை தொழிற் துறையிலே கொண்டு வருவதற்கு பொருளாதார ரீதியாகக் கொண்டு வருவதற்கு இந்த அரசினுடைய அறிவிப்பு மிகுந்த அளவிலே பயன்படும். எனவே நான் இதை வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

10 அம்சத் திட்டம் என்கிற ஒரு சிறப்புத் திட்டத்தை தமிழக முதல்வர் அவர்கள் ஆதி திராவிட மக்களுக்காக தனியாக அறிவித்திருக்கிறார்கள். இந்த 10 அம்ச திட்டத்தில் இடம் பெறுவது நான் இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தேனே அவைகளுக்கெல்லாம் முடிவு காண்பதுதான். கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரையிலும் எல்லா தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், குடிநீர் வழங்குதல், சுடுகாட்டுப் பாதை அமைத்துத் தருதல், வீட்டுமனை பிரச்சினையைத் தீர்த்து வைத்தல், அவர்களுக்கு ரோடுகளைப் போடுதல் இப்படிப்பட்ட அடிப்படை வசதிகளை செய்து தருவதற்காக இன்றைக்கு 10 அம்ச சிறப்புத் திட்டத்தை தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதை நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் அண்ணல் அம்பேத்காரின் நூற்றாண்டு விழாவை சிறப்பிப்பதற்காக நம்முடைய தமிழக அரசு அவருடைய நூல்களை தமிழிலே கொண்டு வருவதற்கு ஒரு உத்தரவை பிறப்பித்து, நூற்றாண்டு விழாக் குழுவின் பரிந்துரையின் சார்பாக அந்த உத்தரவை பிறப்பித்தது. பண ஒதுக்கீடும் செய்தது. ஆனால் இதுவரையிலும் நூல்கள் தமிழிலே மொழி பெயர்க்கப்படவும் இல்லை. வெளியிடப்படவும் இல்லை. அரசு பணம் ஒதுக்கியும்கூட அந்த வேலையிலே மந்தம் இருக்கிறது. அதை விரைவுபடுத்த வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வேறு ஒன்றையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல சந்தர்ப்பங்களிலே மிக அதிகமான மக்கட்தொகையை உள்ளடக்கிய தொகுதிகளிலே தாழ்த்தப்பட்ட மக்கள் சிலரால் திசை திருப்பப்படுவதனால் பாதிப்பிற்கு உள்ளாகி விடுகிறார்கள். கிராமங்களிலே ஒரு பழமொழி உண்டு. இலை முள் மீது பட்டாலும், முள் இலை மீது பட்டாலும் கிழிவது இலைதான் என்று சொல்வார்கள். அதுபோல் தாழ்த்தப்பட்ட மக்கள் எந்த நிலைமையிலும் எப்படி யாரோடு சேர்ந்தாலும் பாதிக்கப்படுவது அவர்களாகத்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். சில வன்முறையாளர்களுடைய சொந்த சுய நலத்தினால்



ஏதாவது திசை திருப்புகிறபோது, அதிலே அவர்களுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்பட்டு விடுகிறது. வன்முறை நன் முறையும் அல்ல அது நம் முறையும் அல்ல என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். சமீபத்தில் திருச்செந்தூர் பகுதியில் சில வன்முறையாளர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரை திசை திருப்பியதனால் அங்கே நிகழ்ந்த ஒரு கலவரத்தினால், நாலு மூலைக் கிணறு என்கிற கிராமமே காவல்துறையினால் சூறையாடப்பட்டு விட்டது. காவல் துறையினர் யாரோ ஒரு சிலர் செய்த தவறுக்காக ஒட்டுமொத்தமாக இந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரின் குடியிருப்புகளை தரை மட்டமாக்கி, துப்பாக்கிச் சூடு நடத்தி, 6 வயது பெண்கூட பாதிக்கப்படக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. 6 வயது பெண் எந்த வன்முறையில் ஈடுபட்டிருக்கப் போகிறார்கள். இதை அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே நாம் இருந்துக் கொண்டிருக்கிறோம். விஞ்ஞானம் வெகுவாக வளர்ந்திருக்கிறது. இன்னமும் கூட இவ்வளவு விஞ்ஞானம் வளர்ந்தும் கூட சில பகுதிகளிலே மனிதன் மலத்தை மனிதனே சுமக்கிற அவல நிலை இருந்துக் கொண்டிருக்கிறது. இன்னமும் கூட இத்தகைய விஞ்ஞான வளர்ச்சிக்கு பிறகும் கூட நம்முடைய நகராட்சிகளிலேயும், பேரூராட்சிகளிலேயும் துப்புரவு பணியிலே ஈடுபட்டிருக்கிற ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் மலத்தை தலையிலே தூக்க வேண்டிய கொடுமை இருந்து கொண்டிருக்கிறது. இது மனித சமுதாயத்திற்கே மனித தர்மத்திற்கே. மனித நேயத்திற்கே சவாலாக இருக்கிற பிரச்சினை. எனவே இந்த மனிதன் மலத்தை மனிதன் தூக்குகிற—காந்தியார் இந்தக் கொடுமையை நீக்கவேண்டும் என்பதற்காக, அதற்கு முன் உதாரணமாக தன்னுடைய கழிவு அறையை அவரே சுத்தப்படுத்திக் கொண்டார் என்பதையெல்லாம் நாம் அவருடைய சத்திய சோதனை என்ற புத்தகத்திலே படித்திருக்கிறோம். எனவே இந்த முறையே அடியோடு ஒழிக்க வேண்டும் எப்படி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவகள் மனிதனை. மனிதன் ரிக்ஷா இழுக்கிற கொடுமையை ஒழித்தாரோ அதே போல தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த மனிதன் மலத்தை தூக்கும் கொடுமையை ஒழிக்க வேண்டும் என்று நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11.05

அதேபோல நாம் இந்த வாரத்தை தீண்டாமை ஒழிப்பு வாரமாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். குடியுரிமை பாதுகாப்பு வாரத்தை கொண்டாட இருக்கிறோம். தீண்டாமை என்பது பெரிய பாவச்செயல் என்று நாம் இரயில் நிலையங்களிலேயும் பஸ் நிலையங்களிலேயும் எழுதி காட்டிக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஏதோ ஒரு வகையிலே அன்டச்சபிலிட்டி இருக்கிறது என்பதை நான் ஒரு சின்ன சம்பவத்தினால் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். டெல்லியிலே குடியரசு தின அணி

வகுப்பு நடந்தது. சென்னையிலே கூட குடியரசு தின அணி வகுப்பு நடந்தது. நம்முடைய தொன்மையான கலாச்சாரங்களை இங்கே வாழுகின்ற பழங்குடி மக்களின் கலாச்சாரங்களை பார்த்து பூரிக்கிற வகையிலேயும் கலை நிகழ்ச்சிகளாக பல நிகழ்ச்சிகள் காட்டப்பட்டன. இதை டெல்லியிலே ஆனாலும் சரி, சென்னையிலே ஆனாலும் சரி, நாம் நாதஸ்வரத்தைக் காட்டுகிறோம். கரகாட்டத்தைக் காட்டுகிறோம், உருமி மேளம் காட்டுகிறோம், வேறு எத்தனையோ காட்டுகிறோம். ஆனால் இந்த மேளம் அடிப்பது என்பது இழிந்த கலாச்சாரமா' அப்படிபட்ட எண்ணம் ஏன் நமக்கு இருக்க வேண்டும். பல்லாயிரக்கணக்காக இந்த மண்ணிலே ஊறிப் போன விஷயம் இது என்பதை யாரும் மறுக்க முடியாது, மறக்க முடியாது, மறைக்கவும் முடியாது. அப்படி பல்லாயிரம் ஆண்டுக் காலமாக இந்த மண்ணிலே ஊறிப்போனது இன்றைக்கும் எல்லாக் கிராமங்களிலும் தப்படிப்பது என்பதும் மேளம் அடிப்பது என்பதும் நம்முடைய மக்களால் எப்போதும் இருந்துக் கொண்டிருக்கிற விஷயமாகும். ஆனால் இதைக் காட்டுவதற்கு நமக்கு கஷ்டம் என்றால் அதை ஒரு இழிந்த கலாச்சாரமாக நாம் கருதுகிறோமா என்ற சந்தேகத்தை, ஐயப்பாட்டை நான் கேட்க விரும்புகிறேன். இதற்கு நீங்கள் கௌரவம் தருவதன் மூலம் தான் பெருமையை ஏற்படுத்த முடியும். எனவே அடுத்த ஆண்டிலாவது டெல்லியிலே குடியரசு தின அணி வகுப்பானாலும், சென்னையிலே குடியரசு தின அணிவகுப்பானாலும் அதைக் காட்ட வேண்டும் என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். எனவே இத்தகைய பிரச்சினைகளிலும் நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு அன்போடு பரிசீலிக்க வேண்டும் என்ற என்னுடைய கருத்துகளை நான் இங்கே எடுத்து வைத்து வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பை உருவாக்கித் தந்த இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியை காணிக்கையாக்குகின்றேன். இந்தியா சுதந்திரம் அடைந்த பின்பு சிதறுண்டு கிடந்த இந்த இந்திய திருநாட்டை, சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் தான் ஒருங்கிணைந்த இந்தியாவாக உருவாக்கினார்கள். ஆனால் 40 ஆண்டுக் காலத்திற்கு பின்பாக ஒருங்கிணைந்த இந்தியா மீண்டும் சிதறுண்டு போகின்ற நிலை உருவாகிய போது, அந்த நிலையை அறவே ஒடுக்கி, இந்தியத் திருநாட்டை இன்று தேச ஒற்றுமையோடு கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு காரணம், தென்னகத்திலே சர்தார் வல்லபாய் பட்டேலாக நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்கள்.



முற்பகல் 11-10.

அதற்குக் காரணம் உலக அரங்கிலே இருக்கின்ற கொரில்லா படைகளிலே தலைசிறந்தப் படையாக விளங்கிக் கொண்டிருக்கின்றது எல்.டி.டி.இ.என்பதுஉலகவல்லுநர்களின்கணிப்பு. ஆனால் தலைசிறந்த கொரில்லாப் படை தென்னகத்தின் வழியாக இந்திய துணைக் கண்டத்தை சிதறுண்டுப்போகிற வகையிலே செயலாற்றிக்கொண்டிருந்தது. அதற்கு ஒத்துழைப்பாக கடந்த இரண்டு ஆண்டுக்காலம் ஆட்சிக் கட்டிலே அமர்ந்திருந்த கருணாநிதி அவர்கள் உறுதுணையாக இருந்தார்கள். கடலோரப் பகுதியிலே இருக்கின்ற தமிழகம் தமிழகத்தினுடைய ஆட்சி கட்டிலே அமர்ந்திருந்த கருணாநிதி கையிலே இல்லாமல் விடுதலைப் புலியின் கையிலே இருந்தது. அதன் அடிப்படையிலே தமிழகத்தோடு நில்லாமல் ஆந்திரத்திலேயும் முளைவிட்டு நக்ஸலைட்டுகள் என்ற போர்வையிலே உலவிக்கொண்டு அங்கே ஒரு தனி ஆட்சியை இன்றும் நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் உதவிகரமாக இருந்தார்கள். இப்படி உதவிகரமாக இருந்தவர்களை ஒழித்துக்கட்டி இந்திய துணைக் கண்டத்தில் ஒற்றுமையை நிலைநாட்டிக்கொண்டிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய புகழை மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே பாராட்டியிருக்கிறார்கள். இதே நிலை தான் வட நாட்டிலேயும் இருந்துக்கொண்டிருக்கிறது. பாரதிய ஜனதா தலைவர் அவர்கள் ஒரு யாத்திரையைத் தொடங்கி தென்னகத்திலே முடித்து வட நாட்டிற்குச் செல்லும் போது—தென்னகத்திலே அவர் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது அந்த மாநிலங்களிலே இருக்கின்ற மாநில அரசுகள் செய்த செலவுகளை ஒப்பிட்டு நோக்குகின்றபோது பல கோடிக்கணக்கான ரூபாயைச் செலவு செய்து வட மாநிலத்திலே இருக்கின்ற காஷ்மீரத்திலே தேசிய கொடியை ஏற்றினார்கள். இங்கே மைய அரசு நிதி ஒதுக்கீடு செய்யும்போது மாநில அரசினுடைய வருவாய்க்குத் தக்கவாறு மைய அரசு ஒதுக்குகிறது என்று சொன்னார்கள். ஆனால் பஞ்சாப் மாநிலத்திற்கும், காஷ்மீர் மாநிலத்திற்கும் வருகின்ற வருவாய்க்கு ஏற்ப அவர்கள் நிதியை ஒதுக்குவதில்லை. அங்கே சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயும் இந்த இந்திய திருநாடு சிதறுண்டுப் போகாமல் இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயும் நிதியை அதிகமாக ஒதுக்கித் தந்து கொண்டிருக்கிறார்கள். இங்கே தென்னகத்திலே இந்த நாடு சிதறுண்டுப் போகாமல் இருப்பதற்காக பல கோடி ரூபாயைச் செலவு செய்து தேசிய ஒற்றுமையை உருவாக்கித் தந்த இந்த அரசுக்கு வேறு வகையிலே வருமானத்தை இழந்தாலும் எப்படி பஞ்சாப் மாநிலத்திலேயும், காஷ்மீர் மாநிலத்திலேயும் அவர்கள் சிறப்பு நிதியை ஒதுக்கித்தருகிறார்களோ அதே போல இந்த தமிழகத்திற்கும் மைய அரசு ஒதுக்கித் தர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் ஏதோ மதுவிலக்கு கொள்கையினால் 400 கோடி ரூபாயை நாம் இழந்து விட்டோம். கர்நாடக மாநிலமும் அந்த 400 கோடி ரூபாயை ஈட்டித்தந்த காரணத்தினால்

அங்கே கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அங்கு
சாராயம் இருக்கின்ற காரணத்தினால் தான் ஏதோ காவிரி நீர்ப்
பிரச்சினையைப் பெரிதாக அவர்கள் எடுத்துக் கொள்வதோடு
மட்டுமல்லாமல் சமூக விரோத சக்திகளின் அட்டுழியத்தின் காரண
மாக கர்நாடக மாநிலத்திலே பெங்களூரிலே வாழ்கின்ற தமிழ்
மக்கள் இங்கே குடிபெயர்ந்திருக்கிறார்கள். இதற்குக் காரணம்
சாரயம். இப்படி பல கோடி ரூபாயை சாராயத்தால் வரு
மானத்தை ஏற்படுத்துவதைவிட சாராயத்தை ஒழித்து வரு
மானத்தை இழக்கின்ற இந்த மாநிலத்திற்கு, இந்த மாநிலம் சட்
டம் ஒழுங்கை நிலைநாட்டி அமைதி காக்கின்ற காரணத்தினாலே
சிறப்பு நிதியாக மைய அரசு வழங்க வேண்டும் என்று இந்த
நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.
பெங்களூர் பக்கத்திலே, அருகாமையிலே இருக்கின்ற தொகுதி
யைச் சேர்ந்தவன் நான்.

கர்நாடக தமிழர்கள் பாதிக்கப்பட்டு தர்மபுரி மாவட்டத்தில்
தங்கியபோது மத்திய அரசினுடைய பிரதிநிதியாக ஒரு பார்வை
யாளரை அனுப்பியது. திருவாளர் சாந்த் அவர்கள் அந்தப் பார்
வையாளராக வந்து முதலிலே பெங்களூர் நகரத்திலே தமிழர்கள்
பாதிக்கப்பட்ட பகுதியைப் பார்த்துவிட்டு, அடுத்த நாள் திரு
வாளர் ஹரிபாஸ்கர் அவர்களுடன் எங்களுடைய மாவட்டத்திலே
வந்து கண்காணித்தார். அவர் வந்த போது அங்குள்ள மக்கள்
குறைகளை தமிழிலே எடுத்துச் சொல்லும்போது, நாங்கள் அதை
ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொல்லும்போது அவர் அதை
அனுதாபத்தோடு கேட்கவில்லை. ஏதோ ஒரு கட்டாயத்திற்கு
செய்வதைப்போல் நினைத்துக்கொண்டு தமிழ்நாட்டு அதிகாரிகள்
இங்கே ரெக்கார்டுகளை ஒழுங்காக வைத்து இருப்பீர்கள் என்று
எனக்கு நன்றாகத் தெரியும் என்று கிண்டலாக ஒரு பதில் சொல்
லுவதாகத்தான் எங்களுக்கு அது தோன்றியது. காரணம்
அவர் கொடுக்கும் விவர அறிக்கை இந்த தமிழ் மக்களுக்கு சாதக
மாக இருக்குமா என்பது எனக்கு சந்தேகமாக இருக்கிறது.
எனவே முடிந்தால் அந்த அறிக்கையை இந்த மாமன்றத்திலே
அளிப்பதற்கு இங்கே இருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு வாய்ப்பு அளித்
தமைக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்,

முற்பகல் 11-15

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: திருமதி ஏ. எஸ். பொன்
னம்மாள்.

*<u>திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்</u>: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரை மீது ஒரு சில கருத்
துக்களைச் சொல்வதற்காக நான் இங்கே நிற்கிறேன். நம்மு
டைய மதிப்பிற்குரிய கவர்னர் அவர்கள் உரையிலே பல விஷ
யங்கள் இருக்கின்றன. குறிப்பாக தம்முடைய முதலமைச்சர்





அவர்கள் ரத்தக்கறைப் படிந்து இருந்த இந்த தமிழ்நாட்டில்
தீவிரவாதிகளை ஒடுக்கி, பஸ்ஸிலே கொலை, கொள்ளை; ரயிலிலே
கொலை, கொள்ளை; வீடுகளில் கொலை, கொள்ளை என்ற
நிலைமை எல்லாம் மாற்றி இன்றைக்கு இந்த இலங்கைப் போராளி
களை ஒழித்துக்கட்டுவதில் தன் உயிரை பணயமாக வைத்து என்ன
நேர்ந்தாலும் நேரட்டும் என்ற அந்தத் துணிவோடு செய்து இருக்
கிறார்கள். அந்த செய்கையை நான் உண்மையிலேயே தமிழ்
மக்கள் சார்பில் பாராட்டுகிறேன்.

அதுமட்டுமல்ல துப்பாக்கிச் சூட்டில் இறந்த ஒரு குடும்பத்
திற்கு அவர்கள் உதவி செய்ததோடு மட்டுமல்லாமல் அந்தக்
குடும்பத்தில் பிறந்த பெண்ணுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம்
கொடுத்து அதில் சேர்த்து இருக்கிறார்கள். இதுமாதிரி விஷயங்
கள் வரக்கூடிய காலங்களில் இருக்கக்கூடியவர்களுக்கு எல்
லாம் அது ஒரு பாடமாக, வழிகாட்டியாக இருக்க வேண்டும்
என்ற ஒரு நல்ல நிலைமையில் தான் அவர்கள் இது போன்ற
உயர்ந்த காரியங்களைச் செய்து இருக்கிறார்கள் என்று நினைத்து
நான் மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமை அடைகிறேன்.

அடுத்து இன்றைக்கு 322 கோடி ரூபாய் இழப்பு மதுவினால்
வரக்கூடிய நிலைமை. அந்த 322 கோடி ரூபாய் இழப்பு வந்தா
லும் பரவாயில்லை, வராவிட்டாலும் பரவாயில்லை என்று கருதி
அந்த மதுவிலக்கை தீவிரமாக அமல் செய்ய வேண்டும் என்ற நல்ல
நிலைமையை எடுத்து வந்தார்கள். ஆனால் கடந்த 4, 5 மாத
காலமாக அந்தத் திட்டம் உண்மையிலேயே செம்மையாக, நல்ல
முறையில் பயன்பட்டு வந்தது; நல்லமுறையில் நடைமுறைப்படுத்
தப்பட்டு வந்தது. ஆனால் கடந்த 2 மாத காலமாக அதற்கு
என்று தனிப் பிரிவாக ஒரு போலீஸ் பிரிவை நியமித்த பிறகு கள்
ளச் சாராயம் காய்ச்சுகின்ற நிலைமை நாட்டில் வந்து விட்டது.
நாம் பத்திரிகையில் பார்க்கிறோம், கள்ளச சாராயம் குடித்த
வன் இறந்து விட்டான், அவனை இவர்கள் பிடித்து விட்டார்கள்
என்பது எல்லாம் நாம் இன்றைக்கு பத்திரிகையிலே பார்த்துக்
கொண்டிருக்கிறோம். எனவே, இதற்கெல்லாம் பூரண மதுவி
லக்கு வேண்டும். அதை இந்த மாண்புமிகு அமைச்சரவையும்,
மாண்புமிகு முன்னவர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களும் கொண்டு வந்து இந்த மதுவிலக்கை அமல் செய்ய
வேண்டும். பெண்களின் கண்ணீரை நிரந்தரமாக துடைக்க
வேண்டும் என்றால், அவர்களின் அவல நிலையை போக்க வேண்
டுமென்றால் பூரண மதுவிலக்கு கொண்டு வரவேண்டும். அதற்
காக எவ்வளவு பணம் செலவு ஆனாலும் அதைப்பற்றி கவலைப்
படாமல், இப்போது எப்படி லட்சியத்தோடு செய்தீர்களோ அந்த
அடிப்படையில் செய்ய வேண்டுமென்று நான் அன்போடு, பணி
வன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு விலைவாசி ஏறிவிட்டது. விலைவாசி ஏறுவதை
எல்லாம் ஒரு வளர்ந்து வரக்கூடிய நாட்டில் யாருமே, எந்த அர
சும கட்டுப்படுத்த முடியாது. அது காங்கிரஸ் ஆட்சியாக இருந்
தாலும் சரி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக
ஆட்சியாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்டு கட்சி ஆட்சியாக இருந்
தாலும் சரி, எந்த ஆட்சியாக இருந்தாலும் விலைவாசி உயரும்.
அந்த உயரக்கூடிய விலைவாசிக்கு ஏற்றாற்போல் வாங்கக்கூடிய
சக்தியை உண்டாக்குவது தான் ஒரு அரசாங்கத்தின் வேலையே
தவிர ஒவ்வொன்றுக்கும் தக்காளி விலை ஏறிவிட்டது, கத்தரிக்
காய் விலை ஏறிவிட்டது; வெல்லத்தின் விலை ஏறிவிட்டது, மத்
திய அரசு உயர்த்தி விட்டது என்று சொல்லிக்கொண்டு இருப்போ
மானால் அது நியாயமாகப் படவில்லை. தக்காளியை எடுத்துக்
கொள்வோமானால் சென்ற வாரம் ஒரு கிலோ 12 ரூபாய்; இந்த
வாரம் ஒரு கிலோ 2 ரூபாய், 2¼ ரூபாய்; அதாவது உற்பத்தி அதிக
மாகிவிட்டது, விலை குறைந்து விட்டது.

அதேபோல் அரிசிக்கு மத்திய அரசு விலையை ஏற்றி இருக்
கிறது. உண்மை. மத்திய அரசும், மாநில அரசும் நுகத்தடிப்
பூட்டிய இரட்டைக் காளைகளைப் போல் இருந்து ஒரு வண்டியின்
பாரத்தை இழுக்க வேண்டும். அந்த இரண்டு காளைகளும் செம்
மையாக சென்றால்தான் அந்த வண்டியின் பாரத்தை இழுத்துக்
கொண்டு செல்ல முடியும். அதை விட்டுவிட்டு ஒரு காளை
கொஞ்சம் நொண்டி விழுந்தாலும் கூட அல்லது கால் தடுக்கினால்
கூட அந்த பாரத்தை இழுத்துக்கொண்டு போக முடியாது.
ஆகவே, சிலபேர்கள் மத்திய அரசை சுட்டிக்காட்டி ஏதோ ஒரு
பிளவை உண்டாக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்திக்கொண்டு
இருக்கிறார்கள். மத்திய, மாநில அரசுகள் இரண்டும், இரட்
டைக் காளைகள் போன்று நாம் இயங்கினால்தான் பல திட்டங்
களை நம்மால் தீட்ட முடியும். இன்றைக்கு மாண்புமிகு பிரதமர்
திரு. நரசிம்மராவ் அவர்களை எடுத்துக்கொள்வோமானால்
உலகம் எல்லாம் அவர்களை ஒரு சிறுபான்மை மக்களுடைய பிரத
மர் என்று சொன்னார்கள். அமெரிக்கப் பத்திரிகையும் வர்
ணித்தது. அவர்கள் ஒரு ஈர்ப்பு சக்தி இல்லாதவர் என்றும் அமெ
ரிக்கப் பத்திரிகை வர்ணித்தது. ஆனால் இன்றைக்கு ஐக்கிய
நாட்டு சபைக்குச் சென்று அவர்கள் அந்த சபையில் பேசிய பிறகு
அவர்கள் எல்லா தலைவர்களிடமும் அணுகி பேசிய பிறகு இன்
றைக்கு அவர்களை ஒரு உயர்ந்த லட்சியவாதி;
அவர் ஒரு சிறந்த அரசியல்வாதி. மக்களுடைய குறைகளை
அறிந்து அதைத் தீர்க்கக்கூடிய ஒரு சிறந்த தலைவர் என்று உலக
நாடுகளும், அமெரிக்க பத்திரிகையும் இன்றைக்கு பாராட்டிக்
கொண்டிருக்கின்றன. அப்பேற்பட்ட, மத்தியிலே இருக்கின்ற
மாண்புக்குரிய, மரியாதைக்குரிய பிரதமர் அவர்களை நாம்
அணுக வேண்டும்.



முற்பகல் 11-200

"How to approach the Centre" எப்படி நீங்கள் அணுகப்
போகிறீர்கள்' அம்மா இருக்கிறார்கள்; அவர்கள் நிச்சயமாக,
எப்படி அவர்களிடத்திலே கறக்க முடியுமோ அதை கறந்து வாங்க
முடியும். அவருக்கு அந்தத் திறமை இருக்கிறது; சக்தி இருக்கிறது.

நாங்கள் கமிட்டிகளிலே பார்க்கிறோம். மத்திய அரசு ஒதுக்
கக்கூடிய பணம் பல துறைகளிலே செலவு செய்யப்படாமல் திருப்பி
அனுப்பப்படுகிறது என்று அதிலே வருகின்றது. இது நியாய
மில்லை. மத்திய அரசு கொடுக்கக்கூடிய பணங்களை நாம்
ஒழுங்காக செலவு செய்து, இவ்வளவு பணம் செலவு செய்யப்
பட்டது; மீண்டும் இதற்காக இவ்வளவு பணம் கொடுங்கள் என்று
கேளுங்கள். 'டானிடா? திட்டத்தின் கீழ் இவ்வளவு பணம்
செலவு செய்யப்பட்டது; மீண்டும் பணம் கொடுங்கள் என்று
கேளுங்கள் அல்லது சுகாதாரத்துறைக்கு இவ்வளவு பணம் வந்
திருக்கிறது; செலவு செய்து விட்டோம்; மீண்டும் பணம் கொடுங்
கள் என்று கேட்டால் அவர்கள் கொடுப்பதற்குத் தயாராக இருப்
பார்கள். ஆனால் கொடுக்கக்கூடிய பணங்கள் பல துறை
களிலே செலவு செய்யப்படாமல், அதை ரிசர்வ் பாங்கியிலே
கட்டுக்கின்றார்கள். அப்படி ரிசர்வ் பாங்கிலே செலுத்திய பிறகு
அந்தப் பணத்தை நாம் நினைக்கும்போது எடுக்கமுடியவில்லை.
நினைக்கும்போது எடுக்க முடியாமல், பிறகு ஒரு அப்ரோபிரியே
ஷன் பில் கொண்டு வந்து இந்தச் சட்டமன்றத்திலே பாஸ் செய்த
பிறகு அந்தப் பணத்தை எடுக்கக்கூடிய நிலைமைகள் ஏற்படு
கின்ற காரணத்தாலேதான் இந்தப் பணம் குறைக்கப்பட்டிருக்
கும் என்று நான் கருதுகின்றேன். நம்முடைய மாண்புமிகு முதல்
வர் அவர்கள் இங்கே ஒரு கேள்வியின்போது சொன்னார்கள்,
நாங்கள் முழுமையாக பணத்தை செலவு செய்ய தயாராக
இருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படி, கொடுக்கக்
கூடிய பணம் முழுமையையும் நிச்சயமாகச் செலவு செய்வோமே
யானால், அவர்கள் மேலும் பணம் கொடுப்பதிலே எந்தவித
தயக்கமும் காட்டாமல் கொடுப்பார்கள் என்று நான் நம்பு
கிறேன் என்பதையும் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்பு
கிறேன்.

காவிரிப் பிரச்சினையைப் பற்றி சொல்ல விரும்புகிறேன்.
இந்தக் காவிரிப் பிரச்சினையில் மிகச் சாதுர்யமாக எல்லோரும்
போற்றக்கூடிய அளவிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்
கள் செய்த காரியத்தை மத்திய அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது.
நடுவர் மன்றத் தீர்ப்பை ஒப்புக்கொண்டு, அவர்களுடைய கெசட்
டிலே வெளியிட்டு இருக்கிறார்கள். அதை நடைமுறைப்படுத்து
வதிலே ஏதோ சற்று சுணக்கம் இருந்தாலும் கூட, அது குறித்து
மீண்டும் நாம் அவர்களிடத்திலே அணுகினோமானால் நிச்சய
மாக அந்தத் திட்டம் முடிவு பெறும் என்பதில் எந்தவிதமான
ஐயமும் இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட
ஆசைப்படுகிறேன். அதுமாத்திரமல்ல, பல ஆண்டுகளுக்கு

[திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்] [1992 பிப்ரவரி 6

முன்பு, பல கோடி ரூபாய் செலவு செய்து, கிருஷ்ணா தண்ணீரை
சென்னைக்கு குடிதண்ணீராகக் கொண்டு வருவோம்
என்று, அதற்கு குழாய்களெல்லாம் போடப்பட்டது. இன்
றைக்கு அந்தக் குழாய்களெல்லாம் என்ன ஆயிற்று? நம்முடைய
மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு கன்னடம் தெரியும். கர்
நாடக அமைச்சர்களோடு கன்னடத்திலே *பேசலாம், தெலுங்கு
தெரியும். தெலுங்கு தேசம் அமைச்சர்களோடு
தெலுங்கிலே *பேசலாம். இந்தி தெரியும். இந்தி
பேசக்கூடிய அமைச்சர்களோடு இந்தியிலே *பேசலாம். இப்படி
பல பாஷைகள் தெரிந்திருக்கின்ற காரணத்தினாலே, அவர்
களோடு அந்த பாஷையிலேயே பேசுகின்ற காரணத்தினாலே இன்
றைக்கு ஆந்திராவும், கிருஷ்ணா தண்ணீரைக் கொடுப்பதற்கு
ஒப்புக் கொண்டிருக்கிறது. அது மிகப் பெரிய சாதனை என்
பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படு
கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்
சர் கர்நாடகா சென்றால் கன்னடத்திலே பேசலாம். அது வேறு.
*"பேசலாம்" என்று திருத்திக் கொள்ளலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : , எனக்கே பட்டது.
அவர்களுக்கு இருக்கின்ற திறமையைச் சொல்கிறேன். எல்லா
பாஷைகளும் தெரிந்ததாலே எல்லோரோடும் அந்தந்த பாஷை
யிலே பேசலாம். அதனாலே அவர்கள் அதற்கு உடனே பணி
கின்றார்கள். பணிந்து, அந்தத் திட்டத்திற்கு ஒப்புக்கொள்
கிறார்கள் என்பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர, ஒன்றும்
இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

மருத்துவத் திட்டம் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். உண்
மையிலேயே இந்தத் திட்டம் மிகவும் பாராட்டக்கூடிய ஒரு
திட்டம். என்னுடைய கிராமத்திலே கூட நாளைக்கு 60 டாக்
டர்கள் வருகிறார்களாம். 60 டாக்டர்களும் வந்து அங்கே இருக்
கின்ற அத்தனை மக்களையும் பரிசோதனை செய்து, அவர்களுக்கு
என்ன நோய் இருக்கிறது என்பதை அறிந்து அவர்களுக்கு வேண்
டிய மருந்துகளை கொடுப்பதோடு, ஆப்பரேஷன் செய்யக்கூடிய
கேஸ்களாக இருந்தால், மருத்துவமனைக்கு வாருங்கள் என்று
சொல்கிறார்களாம். ஆகையால், கிராமங்களுக்குச் சென்று மருத்
துவ முகாம் நடத்தக்கூடிய திட்டம் இருக்கிறதே, அது மிகவும்
ஏழைகளால் வரவேற்கக்கூடிய ஒரு மிகப் பெரிய திட்டம்
என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்பு
கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க, திருத்தப
பெற்றது.



1992 பிப்ரவரி 6] [திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்]

இன்றைக்கு பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பது பற்றி ஒரு சில கருத்தை தெரிவிக்க விரும்புகிறேன். சத்துணவு பற்றி நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். எங்களுடைய அருமைத் தலைவர் காமராஜ் அவர்கள் கொண்டு வந்த திட்டம். அந்தத் திட்டத்தை நம்முடைய முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் விரிவுபடுத்தினார்கள். அப்படி விரிவுபடுத்தியதை இன்றைக்கு நல்லமுறையிலே நடத்துவதற்காக நம்முடைய முதல்வர் அவர்கள் மிகப் பெரிய நல்ல காரியங்களை ஆற்றிக்கொண்டு வருகிறார்கள். ஆகையால் அந்தத் திட்டம் செம்மையாக நடைபெற வேண்டும். அதிலே பணியாற்றுகின்ற பெண்களுக்கு அளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு போன்று, ஐ.சி.டி.எஸ்., அதாவது இன்டக்ரேட்ட் சைல்டு டெவலப்மெண்ட் ஸ்கீம், அந்தத் திட்டத்தை நீங்கள் முழுவதும், 380 பஞ்சாயத்து யூனியன்களிலும் நிலைநாட்டினால் நிச்சயமாக ஒவ்வொரு யூனியனுக்கும், அங்குள்ள 300 பெண்களுக்காவது வேலைவாய்ப்பு கொடுக்க முடியும். அதை அமல்படுத்துவதற்கான முயற்சியை நம்முடைய மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் எடுத்துக் கொள்வார்களானால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

பிறகு கால்நடை, இரண்டரை கோடி கால்நடைகள் இருப்பதாக அரசினுடைய அறிக்கை கூறுகிறது. இந்த இரண்டரை கோடி கால்நடைகளுக்குத் தீவனம் சரியாக இல்லை. நமக்கு நூறு மில்லியன் டன் தீவனம் வேண்டுமென்று குறிப்பிலே இருக்கிறது. ஆனால் நாம் எங்கெங்கேயெல்லாம் கண்மாய்கள் இருந்தனவோ— தனியார் கண்மாய்கள் இருந்தனவோ அந்தத் தனியார் கண்மாய்களிலே பலபேர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுத்து விட்டோம். இப்படிப் பலபேர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுத்துவிட்ட காரணத்தினாலே அதிலே தண்ணீரைத் தேக்கி வைக்க முடியவில்லை. மாடுகளுக்குத் தீவன உற்பத்தியைச் செய்ய முடியவில்லை. ஆகையினாலே, 1947-வது ஆண்டுக்கு முன்பு எந்தெந்தக் கண்மாய்களெல்லாம் கண்மாய்களாக இருந்தனவோ அதிலே உள்ள ஆக்கிரமிப்புகளையெல்லாம் அகற்றி, அவர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுத்திருந்தால், பட்டாவையெல்லாம் நீக்கி, இந்தக் கால்நடைகளுக்குத் தீவனம் உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு நாம் செய்வோமேயானால் தான் ஓரளவுக்காவது பால் பண்ணை வைத்திருப்பவர்களுக்குத் தீவனம் கிடைப்பதற்கான ஒரு வழிவகை ஏற்படும் என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையிலும் இரண்டொரு விஷயங்களைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். அதாவது, நாம் விவசாயம் செய்கிறோம். உங்களுக்கெல்லாம் தண்ணீர் வருகிறது. எங்களைப் போன்ற பகுதிகளிலே வானம்

பார்த்த பூமியாக இருக்கிறோம். கிணற்றை ஆழப்படுத்த ஆழப்படுத்த தண்ணீர் கிடைக்கவில்லை. போர் 300 அடி போட்டால் கூட தண்ணீர் கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட இடத்திலே, நீங்கள் 50 ஏக்கர் தனியார் நிலத்தை எடுத்துக் கொண்டு அதிலே வாட்டர் டிவைனரை வைத்து, தண்ணீர் எங்கே இருக்கிறது என்று பார்த்து, ஒரு பெரிய இராட்சசக் கிணறு போட்டு, அதன் மூலமாகப் பம்பு செட்டு வைத்து நீங்கள் தண்ணீர் கொடுப்பீர்களேயானால், depends upon the acreage யாருக்கு எவ்வளவு ஏக்கரேஜ் இருக்கிறதோ அந்த அளவிலே கூட நீங்கள் தண்ணீர்த் தீர்வையை வசூல் செய்து கொள்ளலாம் என்ற நிலைமையை நான் உங்களிடத்திலே எடுத்துக் கூற விரும்புகிறேன். அதைச் செய்தால், வறண்ட பகுதியிலே வாழக்கூடிய விவசாயிகளுக்கு பேருதவியாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இரண்டு பாலங்கள் இருக்கின்றன சார். நீண்ட நாட்களாக சொல்லிக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு நம்முடைய முன்னவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பல ஆண்டுக் காலம், ரெங்கப்ப நாயக்கன்பட்டி, ராமைய நாயக்கன்பட்டி-நிலக்கோட்டை தொகுதிலே இணைப்பதற்கு இரண்டே முக்கால் இலட்சத்திற்கு, நீங்கள் எதிர்க்கட்சியிலே இருந்தீர்களே அன்றைக்குப் போடப்பட்ட திட்டம். மாண்புமிகு முதல்வர் காமராஜ் அவர்கள் இருக்கும்பொழுது இரண்டே முக்கால் இலட்சத்திற்குப் போட்ட திட்டத்தை இதுவரைக்கும் ஏனோ எனக்குக் கையால் ஆகவில்லையா அல்லது அரசுதான் ஏற்றுக் கொள்ள முடியவில்லையா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இரண்டே முக்கால் இலட்சத்திற்குப் போடப்பட்ட அந்தப் பாலம் இன்றைக்கு ஒரு கோடி ரூபாய் ஆகி விட்டது. அந்தப் பகுதியிலே கிட்டத்தட்ட அறுபதாயிரம் மக்கள் வசிக்கிறார்கள். அவர்கள் இந்த ஆற்றைக் கடந்து செல்ல வேண்டுமென்றால், வைகை ஆற்றைக் கடந்து செல்ல வேண்டுமென்றால் பத்து கிலோ மீட்டர், பதினைந்து கிலோ மீட்டர் நடந்து வந்து இரண்டு பஸ்கள் ஏறி இங்கே வரக்கூடிய நிலைமையிருக்கிறது வத்தலக்குண்டுக்கு வர. ஆகையினாலே அந்தப் பாலத்தை இந்த ஆண்டு கட்டிக் கொடுப்பதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

ரோடுகள் எல்லாம் ரொம்ப மோசமாக இருக்கின்றன. அந்த ரோடுகளுக்கெல்லாம் நீங்கள் எவ்வளவோ பணத்தை ஒதுக்கலாம்—எல்லா ரோடுகளுமே, நேஷனல் ஹைவேஸ்ரோடு, ஹைவேஸ் ரோடு, டிஸ்டிரிக்ட் போர்டு ரோடு, நம் யூனியன் ரோடு ஆகிய ரோடுக்ள் மிக மோசமாக இருக்கின்ற ரோடுகளுக்கெல்லாம் பணம் ஒதுக்கி, அந்த மேடு பள்ளத்தைச் சீர் செய்யக்கூடிய ஒரு நிலைமையை அறிவிக்க வேண்டும்.



மஞ்சளாறும், மருதா நதியும் இணையக் கூடிய இடத்தில்-மீனாட்சி புரம்-அங்கே நாற்பது இலட்சத்திற்குத்தான் ஒரு பாலம் கட்டக் கேட்டிருக்கிறார்கள்." அவர்கள் "என்ன நினைக்கிறார்கள் என்றால், இந்த ஒரு அம்மாதான் அங்கே போய்க்கொண்டே இருக்கின்றார்கள். பல ஆண்டுக் காலமாக இது 6-வது முறையாக சட்டமன்ற உறுப்பினர் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இந்த அம்மாவுக்கு வோட்டுப் போட்டு கொண்டிருந்தோமே இந்த அம்மாவுக்கு இந்தப் பாலத்தை வாங்கத் தகுதியில்லையா என்று நினைக்கிறார்கள். ஆகவே, தொகுதி விட்டு தொகுதி நீங்கள் மாற்றினாலும் நான் போக மாட்டேன். ஆகையினாலே அந்தப் பாலங்களையாவது நீங்கள் கட்டிக் கொடுப்பதற்கு முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டும்.

குடிநீர்த் திட்டம் அதே போன்றுதான். நம்முடைய மதிப்பிற்குரிய முதல்வரவர்கள்,..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் பல நாட்கள் பேசப்போகிறீர்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : இதைச் சொல்லி விடுகிறேன். நம்முடைய மதிப்பிற்குரிய முதல்வரவர்கள் என்னுடைய தொகுதியிலே, குடிநீருக்கு, அம்மைய நாயக்கனூரிலே தண்ணீர் இல்லை என்று போராட்டம் நடத்தியதற்கு அவர்கள் வந்து ஒரு நோட்டீஸ் அனுப்பிவிட்டார்கள். நான் முதல்வரவர்களிடத்திலே நோட்டீஸைக் காண்பித்தேன். அவர்கள் கேட்டார்கள். கனிவான முறையிலே, "என்ன அக்கா, உங்கள் தொகுதியா ? போராட்டமா ?" என்று கேட்டுவிட்டு அன்றைய தினமே கலெக்டருக்கு ஆணை பிறப்பித்து கலெக்டர் புதிதாக வந்த கலெக்டர், மேகாலயாவிலிருந்து வந்த கலெக்டர் அவர்கள் இரவும் பகலும் தூங்காமல் நான்கு நாட்கள் அந்த இடத்திலேயே இருந்து, அந்தத் திட்டத்தைச் சீர்படுத்தி தண்ணீர் கொடுத்திருக்கிறார்கள். அதைப் போன்று எங்கெங்கெல்லாம் தண்ணீர் இல்லையோ அவர்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக அரசுக்கு அனுப்பியிருக்கும், திட்டம் அம்மையநாயக்கன் திட்டம், நூத்தலாபுரம் திட்டம், வத்தலக்குண்டு திட்டம் என்று என் தொகுதியிலே உள்ள மூன்று திட்டங்களை அனுப்பியிருக்கின்றார்கள். இந்தக் குடிநீர் திட்டங்களுக்கெல்லாம் நாம் முன்னுரிமை கொடுத்து இந்த ஆண்டு நாம்செய்வோமேயானால் மிகவும் நல்லது. இன்னும் ஒரு மாதமானால் ரொம்பக் கொடுமையாகிவிடும் நாட்டிலே. ஆகவே, முன்னுரிமை கொடுத்து இதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய நன்றியோடு முடித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.

[illegible] 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது [illegible] கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி.

நாளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை இருக்கிறது. இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் பேசுகிறார்கள். பொதுவாக, ஆளுநர் உரை, பட்ஜெட், இவை போன்ற விவாதங்கள் நடைபெறுகிறபோது, அதிகாரிகள் வந்து அமர்கிற மாடத்தில், அந்தந்தத் துறையினுடைய செயலாளர்கள் அதிகாரிகள் வந்து அமர்ந்திருந்து, குறிப்புகளை எடுத்துக் கொள்வது, கடந்த காலத்திலே நடைமுறையாக இருந்திருக்கிறது. அந்த மாடம் காலியாகக் கிடப்பதை........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தற்போது, நிதித் [illegible] இருந்து குறிப்பு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை [illegible] துறையினர் கவனிக்கிற காரணத்தினால், நிதித்துறையிலே [illegible] எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : நிதித் துறையினர் மட்டும் போதாது. நிதி இலாகாவிலே அல்லது பட்ஜெட்டிலே விவாதம் [illegible]. ஆளுநர் உரை என்கிறபோது, அவரவர்களுடைய [illegible] இருக்கிற, ரோட்டிலே இருந்து, பள்ளியிலே இருந்து [illegible], கொள்கை வரை ...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது அவ் வாறு சொன்னார். நாங்கள் அமைச்சர்கள் எல்லாம் அந்தந்தத் துறையைச் சார்ந்தவர்கள் இருக்கிறோம். ஆகவே, [illegible] ஆதங்கப்படத் தேவையில்லை. அவருடைய குறை [illegible] சொல்லலாம். அவருடைய உரையில் முடிவிலே அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்படும். அது உரிய முறையில் [illegible] கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் ; ஆளுநர் உரை [illegible] நிதித் துறை கவனிக்கிற காரணத்தினால், நிதித் துறையினர் இந்த மாடத்திலேயிருந்து குறிப்பெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மற்றபடி, எல்லாத் துறைகளிலேயும் [illegible] கூடிய அதனுடைய பிரதிநிதிகள், மேல் மாடத்திலே [illegible] எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால், இல்லை என்பது தவறாகப் [illegible] படும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்திலே தகராறு வேண்டிய [illegible] நான் சொல்ல வந்தது ..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தகராறே அல்ல. உங்களுக்குச் சரியான தகவல்கள் கொடுக்கவில்லையோ என்பதற்காக, நானே அந்தத் தகவலை உங்களுக்குத் தெரி[illegible] விடுகிறேன். உண்மை நிலையைச் சொல்ல வேண்டியிருக்கிறது. தகராறே அல்ல (குறுக்கீடு)

திரு. ஆர். சிங்காரம் : ஒரே ஒரு விஷயத்தை மட்டும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே [illegible] வேண்டாம் ; இது என் சம்பந்தப்பட்ட விஷயம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இந்த ஆளுநர் உரையிலே வேறு எதையும் அவர் கண்டுபிடிக்க முடியாமல், [illegible] பிரச்சினையைத் தேடிப் பிடித்து சொல்லிக்கொண்டிருக்கிறார். எனவே, அதிலேயும் குறுக்கிட்டுக் கொண்டிருப்பது [illegible] இருக்காது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுவும் சரியல்ல என் பதற்காகத்தான் நான் அவ்வாறு சொன்னேன். திரு. திருநாவுக் கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் '' ஓம் '' என்று ஆரம்பிக்கிறபோதே [illegible] கண்டுபிடிக்க முடிய வில்லை என்று முத்துசாமி சொல்[illegible] என்பது, மிகவும் அவசரப்படுகிற நிலை. இப்போ[illegible] ஆரம்பிக்கிறேன்; இன்னும் எதையெல்லாம் கண்டுபிடிக்[illegible] என்பதைப் பின்னாலே சொல்கிறேன் (குறுக்கீடு).

திரு. வி. மே. சின்னசாமி : வெறுமனே முத்துசாமி என்று சொல்கிறாரே !

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு [illegible] என்று சொல்லுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : இல்லை; இல்லை. பல்லாண்டு காலம் " ஃபிரண்ட் " என்பதால் அவ்வாறு சொன்னேன். மாண்புமிகு, மாண்புமிகு " டபுள் மாண்புமிகு " என்று வேண்டுமானால் போட்டுக்கொள்ளுங்கள். மாண்புமிகு அமைச்சர் என் இனிய சகோதரர் திரு. முத்துசாமி அவர்களுக்கு, நான் சொல் ஆகிற மாண்புமிகு அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் நான் பேசும்போது, பதில் சொன்னார். நான் சொல்ல வந்தது, அமைச்சர்கள் இருக்கிறார்கள்; முதலமைச்சர் இருக்கிறார்கள் ஆகவே, அவர்கள் இருக்கிறார்கள், எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார்கள் என்று சொன்னால், துறைக்குச் செயலாளர்களே தேவையில்லை. பொதுவாக, நான் சொல்ல வந்தது, நடைமுறையைத்தான். அதிலே குழப்பம் வேண்டியதில்லை. அவர்கள் வர வேண்டும்; அதிலே உங்களுக்கு என்ன கஷ்டம்? வரச் சொல்லுங்கள்; அவர்களை வரச்சொல்லி இங்கே அமரச் செய்யுங்கள்; குறிப்பெடுத்துக் கொள்ளச் சொல்லுங்கள்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வந்திருக்கிறார்கள் என்பதைத்தான் நான் உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் திரும்பத்திரும்ப வரவில்லை என்பதைச் சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது. வந்திருக்கிறார்கள்; செயலாளரே உட்கார்ந்திருக்கிறார். சில துணைச் செயலாளர்களும் வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, வரவில்லை என்பது சரியான பொருளாக இருக்காது என்பதற்காகத்திரும்பவும் இதைத் தெளிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : வந்திருந்தால் மகிழ்ச்சி.

அடுத்து, இந்த ஆண்டு தமிழகத்ினுடைய காவல் தெய்வமாக, தமிழக மக்களின் இதயங்களிலே நீக்கமற நிறைந்து, இதயத்திலே துடிப்பாகவும், இரத்தத்திலே அணுவாகவும் கலந்திருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பவள விழா, பிறந்த நாள் ஆண்டாகும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பவள விழா வந்தது. அந்த பவள விழாவிலே, அந்த ஆண்டு முழுவதும் அரசின் சார்பிலே என்னென்ன திட்டங்கள் துவக்கப்பட்டாலும், தமிழகம் முழுமையும், எங்கெங்கு என்னென்னக் கட்டிடங்கள் கட்டப்பட்டாலும், அனைத்திற்கும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரைச் சூட்டினார். அன்றைய முதல்வர் புரட்சித் தலைவர். இன்றைக்கு, தமிழகத்திலே நீங்கள் எந்த குக்கிராமத்திற்குப் போனாலும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பவள விழா நினைவுக் கட்டிடம் என்று பெயர் குறித்த கட்டிடங்களையும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய புகழ் பரப்புகிற கட்டிடங்களாக தமிழகம் முழுவதும் பார்க்க முடியும். அதேபோல், புரட்சித் தலைவர் அவர்களின் பவள விழா ஆண்டான இந்த ஆண்டும், தமிழக அரசின் சார்பிலே எந்த நல்ல திட்டங்களை அறிவித்தாலும், அனைத்திற்கெல்லாம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரைச்சூட்டி,



முற்பகல் 11-35

அதேபோல், கட்டப்படுகின்ற, திறக்கப்படுகின்ற கட்டிடங்களுக்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பெயரைச் சூட்ட வேண்டுமென்றும், அதன் மூலம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய புகழ் மேலும் பரவ இந்த அரசு வகை செய்ய வேண்டுமென்றும் நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே கடைசிப் பக்கத்தில், ஏழை மக்களுடைய வளமான வாழ்விற்கும் வளர்ச்சிக்கும், நீங்கள் எல்லாம் விவாதங்களிலே கலந்து கொண்டு ஆக்கபூர்வமான யோசனைகளைச் சொல்லவேண்டும். கொடுத்திருக்கிற அறிக்கையைநீங்கள் பாராட்டுவீர்கள் என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நானும், அருமைச் சகோதரர் திரு. முத்துசாமி அவர்கள் சொன்னது போல் தீவிரமாகத்தான் படித்துப், படித்துப் பார்த்தேன். படிக்கிறபோது, அதிலே பெரிய அளவிலே பாராட்டுவதற்கு ஒன்றும் இல்லாமல் இருப்பது உண்மையிலேயே வருத்தத்திற்குரியதாக இருக்கிறது.

ஆளுநர் உரையிலே இரண்டு, மூன்று திட்டங்கள் பெரிய திட்டங்களாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. முதலாவது, 1,000 எக்டேரில் இறால் பண்ணைகள் அமைக்கப்படும்; இரண்டாவது, 2,000 எக்டேரில் காடு வளர்க்கப்படும்; மூன்றாவது பள்ளிகளுக்கு கழிப்பிட வசதி செய்துதரப்படும்; நான்காவது, ஆரம்பப் பள்ளிகளுக்கு ஓராசிரியர் பள்ளிகளுக்கு இன்னும் ஓர் ஆசிரியர் தமிழகம் முழுவதும் நியமிக்கப்படுவார்கள் என்கிற அறிவிப்புகள் இருக்கின்றன. இதிலே, தமிழகம் முழுவதும் படித்துவிட்டு பல ஆசிரியப் பெருமக்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்ற அடிப்படையிலே, ஓர் ஆசிரியர் பள்ளிக்குக் கூடுதலாக இன்னும் ஓர் ஆசிரியர் போடுகின்ற அந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன். அதனால், பல பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது. ஆரம்பக் கல்வியிலே கல்வியும், நல்ல அடித்தளத்தோடு துவங்குகின்றது. அது வரவேற்கத் தக்க ஒன்றாகும்.

அதற்கடுத்து, பெரிய அளவிலே ஏழையெளிய விவசாயப் பெருமக்களுடைய கடனை, கடன் சுமையைக் குறைக்கவோ, தொழில் வளர்ச்சியை அதிகரிக்கவோ, படித்து விட்டுக் கோடிக் கணக்கிலே, இலட்சக் கணக்கிலே பதிவு பெற்ற நிலையிலே இருக்கிறார்கள். அப்படிப்பட்ட வேலைவாய்ப்புத் தேடுகிற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புத் தரவோ—எத்தப் பெரிய திட்டமும், ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட வில்லை என்பதை நான் வருத்தத்தோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பத்தி 12, பக்கம் 13இல் ஆளுநர் உரையில் " ஆண்டுத் திட்டத்தை நிறைவேற்ற நிதி ஆதாரங்களின் பற்றாக்குறை பெருமளவிற்கு உள்ளது. இதன் பொருட்டு, மாநில அரசு கணிசமான அளவிற்கு, லேசாகக் கூட அல்ல, கணிசமான அளவுக்கு நிதி ஆதாரங்களைத் திரட்ட முயற்சி மேற்கொள்ள வேண்டி இருக்கும் " என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கின்ற போது, இன்னும் அதிகமான வரிச் சுமைகளைச் சுமத்தப் போகிறீர்கள் என்று ஆளுநர் உரையிலே பயமுறுத்தப்பட்டிருக்கிறது. நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், இதற்கு மேலும் எதிலேயும் வரியை உயர்த்தாதீர்கள். அப்படி வரியை உயர்த்துகின்றபோது, தாங்குகின்ற சக்தி உள்ளவர்களுக்கு உயர்த்துங்கள். ஏழையெளிய மக்கள் பாதிக்கப்படுகின்ற விதத்திலே வரியை உயர்த்தாதீர்கள். மக்கள் தாங்க மாட்டார்கள் என்று நான் அரசுக்கு முதலிலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கடுத்து, பக்கம் 14இல், நடப்பாண்டிலே பருவ மழை நிறைவு அளிக்கிறது என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு பருவ மழை ஓரளவு நன்றாக இருந்தது என்பது உண்மை தான். ஆனால், புதுக்கோட்டை, இராமநாதபுரம், பசும்பொன் ஆகிய மாவட்டங்களிலே போதுமான பருவ மழை இல்லாத காரணத்தால், அங்கே இந்த ஆண்டு மகசூல் கூட விவசாயிகளுக்கு வந்து சேரவில்லை. முற்றிய நிலையிலே நெற்கதிர்கள் இந்த மூன்று மாவட்டங்களிலேயும் பட்டுப்போய், கடுமையான குடிதண்ணீர்ப் பற்றாக்குறை கூடத் துவங்கிவிட்டது. எனவே, இந்த மூன்று மாவட்டங்களிலேயும் விளைச்சல் இல்லாத பகுதிகளிலே, விவசாயிகளுக்கு, அவர்கள் தரவேண்டிய வரிகளை ரத்துச் செய்ய வேண்டும். குடிதண்ணீர் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-40

காவிரி நதி நீர்ப் பிரச்சினை பற்றி ஏறக்குறைய 4½ பக்கம்—மொத்தம் இருப்பது சுமார் 28 பக்கம். அதிலே 4½ பக்கம் காவிரி நதி நீர்ப் பிரச்சினை பற்றி வருகிறது. நடந்ததெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அமைச்சரவைக் கூட்டத்திலேயும், அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. பாதிக்கப்பட்ட சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் தமிழகத்திற்கு ஓடி வந்தார்கள்; ஓடிவந்தார்கள் என்று சொல்வதை விட, விரட்டப்பட்டார்கள் என்பதுதான் பொருத்தம். [illegible] 300 கோடி ரூபாய்க்கு மேலே தமிழர்களுடைய சொத்துக்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு



எல்லாம் நிவாரணம் பெறுவதற்காக உச்ச நீதிமன்ற நீதிபதி [illegible] கொண்டு ஒரு கமிஷன் நியமித்து அங்கே விசாரணை நடத்தி பாதிப்புக்கு உள்ளான தமிழர்களுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டுமென்று அமைச்சரவைக் கூட்டத்திலும், அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால், அது இந்த நாலரைப் பக்கத்திலே இரண்டு வரியிலே வரவேண்டிய வார்த்தைகள் அதாவது வேண்டுகோள் அல்லது மத்திய அரசுக்கு ஒரு நிர்ப்பந்தம் என்பது இந்த அறிக்கையில் விடப்பட்டிருக்கிறது. இது கண்டனத்திற்குரியது, வருந்துவதற்குரியது. எனவே, மத்திய அரசை இந்த ஆளுநர் உரையிலே வற்புறுத்தியிருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் மதுவிலக்குப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் கள்ளச்சாராயம் ஒழிக்கப்பட்டுவிட்டது என்று சொல்வது உண்மையல்ல. எனக்கு முன்னாலே பேசிய பல சட்டமன்ற உறுப்பினர்கள் கடந்த சில நாட்களில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். சில நாட்களுக்கு முன்னாலே கூட சென்னையிலே கூட கள்ளச் சாராயம் குடித்து 25 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் செய்திகள் பத்திரிக்கைகளிலே வந்திருக்கின்றன. எனவே, அதிலே இன்னும் அதிகபட்சமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இதில் நான் ஒன்றைக் கேட்டுக் கொள்வேன். அதாவது கள்ளச்சாராயம் ஒரு கிராமத்தில் பிடிக்கப்பட்டால் அந்தச் சரகத்திற்கு உட்பட்ட சப்-இன்ஸ்பெக்டர் முதலிலே எச்சரிக்கப்படுவார்; இரண்டாவது தடவை சஸ்பெண்ட் செய்யப்படுவார் என்றெல்லாம் இந்த அரசு அறிவித்திருப்பதன் மூலமாக உண்மையிலே கள்ளச்சாராயம் இருந்தாலும் கூட அதனைப் பிடிப்பதற்கு அதிகாரிகள் அஞ்சுவார்கள். ஏனென்றால், முதல் தடவைப் பிடித்தால் அதற்கு " வார்னிங் " வரும். இரண்டாவது தடவைப் பிடித்தால் சஸ்பெண்ட் ஆகி போவார். ஒரு வேளை இந்த அதிகாரிக்கு மேலே இருந்து சூப்பர்வைசிங் பண்ணுவதற்காக மாவட்ட அளவில் இருக்கிற குழு கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்காக எஸ்.பி. தலைமையில் போனால் கூட அது எப்படியும் கீழே இருக்கின்ற, உள்ளூரில் இருக்கின்ற சப்-இன்ஸ்பெக்டருக்குத் தெரியாமல் போய்விட முடியாது. அப்படி வருகிறார்கள் என்று தெரிந்தால் அவர்களே கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்களைக் கூப்பிட்டு பத்திரமாக இருந்து கொள்ளுங்கள், மேலே இருந்து ஆட்கள் வருகிறார்கள் என்று சொல்லக்கூடும். ஏனென்றால் பெரும்பாலான இடங்களில் மாமூல் வாங்கிக் கொண்டுதான் கள்ளச்சாராயம் காய்ச்ச அனுமதி தரப்படுகிறது. மாதத்திற்கு ஒரு வழக்கு வேண்டுமானால் போடுவார்கள் வழக்குக்காக. எனவே, மேலே இருந்துஆட்கள் வருகிறார்கள், பத்திரமாக இருங்கள் என்று அவர்களே பாதுகாப்பார்கள். ஆகவே கள்ளச்சாராயம் பெருகும். எனவே, இதற்குப் பதிலாக [illegible] கள்ளச்சாராயத்தைப் பிடித்துக் கொடுத்தால் அவர்களுக்கு [illegible]

ஊதியம், பதவி உயர்வு போன்றவற்றைத் தருவோம் என்று "கன்ஸ்ட்ரக்டிவ்" ஆக நீங்கள் சொல்வீர்களேயானால் அதன் மூலமாகக் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்குரிய நடவடிக்கையை அவர்கள் மனமுவந்து உற்சாகத்தோடு காவல் துறையில் இருக்கின்ற அன்பர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை இந்த அரசுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நெல் உற்பத்தி கடந்த காலத்தில் இல்லாத அளவுக்கு சுமார் 65 இலட்சம் மெட்ரிக் டன் வரப்போகிறது; அதைப்போல், கரும்பு, மற்றும் உணவு தானியங்கள் ஏறக்குறைய 90 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கு மேலே வரப்போகிறது என்றெல்லாம் அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. உற்பத்தி பெருக பெருக விலைவாசி குறைய வேண்டும். ஆனால் உற்பத்தி பெருகிக் கொண்டிருக்கும்போது விலைவாசியும் ஒரு பக்கத்திலே பெருகிக் கொண்டிருப்பது வேதனைக்குரியது. இதிலே, பொதுவாக கரும்பு விலையைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு சுமார் 20 ரூபாய்தான் உயர்த்தியிருக்கிறீர்கள். கரும்பு விவசாயிகள் கேட்டது 500 ரூபாய். நீங்கள் கொடுத்திருப்பதோ சுமார் 300 ரூபாய். இது சென்ற ஆண்டை விட சுமார் 20 ரூபாய்தான் அதிகம். ஆனால், உரம், பூச்சி மருந்து மற்றும் கூலி போன்றவற்றிற்கு ஆகிற செலவு இரண்டு மடங்கு அல்ல; பல மடங்கு உயர்ந்திருக்கிறது. இந்த நிலையில் 20 ரூபாய் மட்டும் உயர்த்தியிருப்பது விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டத்தை உண்டாக்கும். எனவேதான் அவர்கள் ஊர்வலம் என்றும், போராட்டம் என்றும் நடத்துவோம் என்று அறிவித்திருக்கிறார்கள்.

இன்றைக்கு சக்கரை ஆலைகளைப் பார்த்தால் எல்லா ஆலைகளும் பெரிய இலாபத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. பிரைவேட் ஆலைகளின் கணக்குகளைப் பார்த்தால் 3 கோடி இலாபம், சென்ற ஆண்டு 5 கோடி இலாபம், 4 கோடி இலாபம் என்று வருகிறது. இப்படி தனியார் ஆலைகள் எல்லாம் இலாபத்திலே ஓடுகிறபோது ஏன் அவர்கள் கொடுக்கின்ற பணத்தை இன்னும் அதிகரித்துத் தரச் சொல்ல இந்த அரசு உத்தரவிடக்கூடாது என்று நான் கேட்கிறேன். ஏறக்குறைய 300 ரூபாய் என்றிருப்பதை அதாவது 20 ரூபாய் மட்டுமே அதிகமாக்கியிருப்பதை அரசு பரிசீலித்து குறைந்தபட்சம் 400 ரூபாய் என்றாவது கரும்புக்கு விலையை இந்த அரசு நிர்ணயிக்க வேண்டும் என்று நான் விவசாயப் பெருங்குடிமக்களின் சார்பில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்போதுதான் விவசாயிகள் மத்தியில் அமைதி ஏற்படும். மத்திய அரசினுடைய முதலீடு கடந்த காலத்தில் இருந்ததை விட —அதாவது 1967-க்கு முன்பு காங்கிரஸ் ஆட்சியில் தமிழ்நாட்டில் சுமார் 10 சதவீதம் இருந்திருக்கிறது. இன்றைக்கு 4 சதவீதம், 5 சதவீதம் மத்திய அரசினுடைய முதலீடு தமிழகத்தில் இருப்பது வருந்துவதற்குரியது, கண்டனத்திற்குரியது.



முற்பகல் 11.45

அதுபோல, கடந்த காலங்களிலே நீங்கள் எண்ணிப்பார்த்தால் 20 ஆண்டு திராவிட இயக்க ஆட்சிகள் வந்த காலத்தில் இருந்து 1967-க்கு பின்னாலே இன்றுவரை தமிழகத்திலே ஒரு பெரிய தொழிற்சாலைகூட தமிழ்நாட்டிலே மத்திய அரசின் சார்பிலே அமைக்கப்படாதது மிகவும் துர்பாக்கியவசமானது. இந்தியா.. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றுமில்லை. இன்டஸ்ட்ரீஸ் மினிஸ்ட்டர்-ஆக இருந்தபோது செய்யவில்லையா என்று அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். அவர்கள் இப்போதுதான் புதிதாக வந்திருக்கிறார்கள். விவரம் தெரியவில்லை. நான் இங்கே வருவதைப் பற்றி சொல்லவில்லை. மத்திய அரசினுடைய துறையிலே சொல்லிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் தயவுசெய்து அமைதியாக இருங்கள். எனவே மத்திய அரசு போடுகிற ........ (குறுக்கீடு).

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன், சென்ட்ரல் கவர்ன்மென்ட் பற்றி. அதிலே உள்ள ரியல் ஸ்டேட் ஆப் அபயர்ஸ் ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசி முடியட்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கு சொல்கிறேன். நான் ஒன்றும் மத்திய அரசை கடுமையாகப் பேசவில்லை. உங்களோடு சேர்ந்து நானும் கேட்கிறேன். நீங்களும் கேட்கவேண்டும். நான் குறை சொல்லி ஒன்றும் பேசிவிடவில்லை. நீங்களும் கேட்க கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் பின்னாலே சொல்கிறேன். என்றாலும்கூட மத்திய அரசைக் குறை கூறவேண்டுமென்ற நோக்கத்தோடு முன்பே ஒரு சொற்றொடர் ஒன்று வந்தது. மத்திய அரசு நிர்பந்தமா? ஏன் இந்த அறிக்கையில் அது இடம் பெறவில்லை? என்று கேள்வியினை கேட்டார். அதுபோல இப்போதும் குறை கூறுவதுபோல நீங்கள் தொடர்ந்து பேசுகின்ற காரணத்தினாலே விளக்கம் அளிக்க எங்கள் கட்சி உறுப்பினர் அவர்கள் எழுந்தார்கள். நீங்கள் இப்போது பேசுவதற்கு நான் பின்னர் பதில் அளிக்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுதிக்கொண்டிருப்பதால் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். ''மத்திய அரசு நிர்ப்பந்திக்கிறது. அதனால் நீங்கள் விட்டு விட்டீர்கள்'' என்று நான் சொல்லவில்லை. இந்த கோரிக்கையை நீங்கள் ஆளுநர் உரையிலே வற்புறுத்தவில்லை என்றுதான் கேட்டேனே தவிர மத்திய அரசு நிர்பந்திக்கிறது என்று நான் சொல்லாததை அவர்கள் சொல்கிறார்கள். அப்படி ஒரு வேளை இருக்கிறதோ என்னவோ எனக்குத் தெரியாது. நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மத்திய அரசின் மீது ஏன் நிர்பந்திக்கவில்லை என்று சொன்னார்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே நான் கேட்கின்ற கோரிக்கை காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களும் கேட்கவேண்டிய கோரிக்கைதான். அவர்களும் தமிழர்கள். தமிழ்நாட்டிலே வாழ்கிறார்கள். மத்திய அரசினுடைய சார்பிலே பெரிய அளவிலே தொழில்கள் தமிழ்நாட்டிலே தொடங்கவேண்டுமென்பதற்காக சொன்னேன். தொடங்கவில்லை என்பதற்காகத்தான் கண்டித்தேன். தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, பக்கம் 18-லே அரசு 3 தொழில் பேட்டைகளைத் தொடங்க முடிவு செய்துள்ளது என்று வந்திருக்கிறது. வாசகத்தை நீங்கள் பார்த்தால் ''புதிதாக மூன்று பெரிய தொழில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்தச் செயற்குறிப்புகள் அனுப்பப் பட்டுள்ளன. அதற்கு மத்திய அரசு இதுவரையிலும் ஒப்புதல் அளிக்கவில்லை. இதற்கு எப்போது அனுமதி கிடைக்கும் என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. இந்த மூன்று தொழில் வளர்ச்சி மையங்களையும் ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளைத் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது'' என்று வந்திருக்கிறது. அதாவது என்ன பொருள் என்று சொன்னால், மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். இன்னும் தரவும் இல்லை. எனவே அவர்கள் தந்தாலும் தராவிட்டாலும், இல்லை என்றாலும் '' வீ ஆர் கோயிங் டு புரோசீட்''—ஆரம்பிக்கப்போகிறோம் என்கின்ற பொருளிலே வந்திருக்கிறது. ஒரு வேளை தமிழிலே மொழி பெயர்க்கின்றபோது தவறாக வந்திருக்குமோ என்று ஆங்கிலத்திலே பார்த்தால் அதிலேயும் ''The Centre has not yet given approval for the formation of three major new industrial growth centres for which proposals have been sent. It is also not quite clear as to when the clearances will be made available. The Government has decided to go ahead with the establishment of these three industrial growth centres.''



என்று ஆங்கிலத்திலேயும் அப்படி குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு தனி நாடல்ல. மத்திய அரசினுடைய அனுமதி கிடைக்காதபோது நீங்கள் எப்படி அந்த மூன்றையும் தொடங்கப்போகிறீர்கள்? அனுமதியே இல்லாமல். ஏதோ அறிவிக்கப் பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் ஆயிற்று. 20 நிமிடம் ஆகப்போகிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசி, 10 நிமிடம் இன்டர்வென்ஷன்ஸ் வந்து விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நிமிடம்தான் குறைந்திருந்திருக்கும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : நான் சுருக்கமாகப் பேசி முடித்து விடுகிறேன். பாயின்ட், பாயின்ட் ஆக சொல்லி முடித்துவிடுகிறேன். உங்களுக்கு ஹெல்ப் பண்ணுவதற்காகத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்று, இரண்டு, மூன்று என்று சொல்லி முடித்துவிடுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : அதற்கு அடுத்து ஜெயங்கொண்ட சோழபுரத்திலே 7 ஆயிரம் கோடியிலே 1,500 மெகாவாட்டிலே மின்சாரம் உற்பத்தி செய்யப்போகிறோம். தனியாருக்குக் கொடுக்கப்போகிறோம். அதற்கான லைசென்ஸ் மத்திய அரசிலே கேட்க இருக்கிறோம் என்று ஒரு அறிவிப்பு வருகிறது. மகிழ்ச்சியான அறிவிப்பு. 2 நாட்களுக்கு முன்னாலே தமிழ்நாட்டிற்கு வந்த மத்திய அமைச்சர் திரு. சங்மா, இந்த துறையினுடைய அமைச்சர் நிலக்கரி சுரங்கத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் தனியாருக்குக் கொடுக்கப்போவதில்லை என்று திட்டவட்டமாக அறிவித்து பத்திரிகையிலே, டி.வி., ரேடியோவிலே எல்லாம் வந்திருக்கிறது. 7 ஆயிரம்கோடியிலே செய்துநிலக்கரி தமிழ்நாட்டிற்குக் கிடைக்கவில்லை என்றால் வெளிநாட்டிலேயிருந்து இறக்குமதி செய்ய வேண்டும். 2 லட்சம் டன் என்று கேட்டு மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டியார் காலத்திலிருந்து, மாண்புமிகு பாட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலேயிருந்து கேட்டுக் கொண்டு இருக்கிறோம். மத்திய அரசு அனுமதியும் தரவில்லை. எனவே 7 ஆயிரம் கோடியிலே தனியாருக்கு மத்திய அரசு லைசென்ஸ் அனுமதி தராதபோது நீங்கள் எங்கேயிருந்து தொடங்கப்போகிறீர்கள். எனவே, இதுவும் பத்திரிகை அளவிலே வரும்

அறிவிப்பாக இருக்க முடியுமே தவிர, இது சாத்தியக் கூறு உள்ளதாக தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறைத் அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும் இது கூட்டு நிறுவனம் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். டிட்கோவும் தனியாரும் சேர்ந்து, தனியாரும் அரசுத் துறையும் சேர்ந்து நடத்துகின்ற நிறுவனம் ஆகும். ஆகவே, இதில் பிரச்சினை இருக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : ஜெயங்கொண்ட சோழபுரத்தில் நான் அறிக்கையை படிக்கிறேன். பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுப்பதற்கு தனியார் துறை மின் உற்பத்தி செய்வதற்கு இயலும் வகையிலே 7 ஆயிரம் கோடி செலவிலான புதிய பெரும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும், இதன்மூலம் 1,700 மெகா வாட் மின் உற்பத்தி செய்ய முடியும் என்பதையும் உறுப்பினர்கள் அறிந்து மகிழ்ச்சியடைவார்கள். இத்திட்டத்திற்கு மத்திய அரசின் இசைவைப் பெறவேண்டியுள்ளது. இதுதான் ஆளுநர் உரையில் தனியார் என்று இருக்கிறதே தவிர கூட்டுத் துறை என்றால் ஆளுநர் உரையிலே அரசாங்கமும், தனியாரும் சேர்ந்து கூட்டுத் துறையிலே என்று போட்டிருக்க வேண்டும். ஏன் அப்படி போடவில்லை? எனக்குத் தெரியாது. எனவே, கூட்டுத் துறையிலே என்று நீங்கள் அதற்குப் பின்னால் முடிவு செய்திருந்து மத்திய அரசினுடைய அனுமதி கிடைக்குமானால் நான் மகிழ்ச்சி அடைவேன். நீங்கள் தனியார் துறை என்று சொன்ன காரணத்தால், தனியாருக்கு தரமாட்டோம் என்று ஏற்கெனவே அமைச்சர் அறிவித்திருக்கிறார் ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமி பேரவைத் தலைவர் அவர்களே, பழுப்பு நிலக்கரியை எடுக்கின் சுரங்கத் தொழில் செய்வது என்பது ஒன்று. மின் உற்பத் மற்றொன்று. சுரங்கத் தொழிலை மத்திய அரசுதான் நிர்ணயி கும். அதிலேயிருந்து வருகின்ற பழுப்பு நிலக்கரியைப்பயன்படுத் அரசே மின் உற்பத்தியைப் பண்ணுவதா, தனியார் மின் உ பத்தியைப் பண்ணுவதா என்கின்ற வகையில் தனியாரும் மு வருவார்களானால் மின் உற்பத்தி செய்கின்ற பணியை அவ களிடம் விடுவது என்பதுதானே தவிர சுரங்கத்தையே தனியா டத்திலே விடுவது என்பது குறிப்பிலே இல்லை.



திரு. எஸ். திருநாவுக்கரசு : அப்படி என்றால் நிலக்கரியை எடுத்து மின்சாரம் தயாரிப்பது தனியாருக்கு. நிலக்கரியை வெட்டுகிற, சுரங்கத் தொழிலை, மைன் பண்ணுகிறது அரசாங்கம். நீங்கள் எடுத்து, தனியாருக்குக் கொடுக்கப் போகிறீர்கள். அது பற்றி தெளிவாக இல்லை. அதனால்தான் இவ்வளவு குழப்பம். இல்லையென்றால் இப்பிரச்சினை வந்திருக்காது.

எனவே, அதற்கு அடுத்து பக்கம் 20, பத்தி 12லே குடிதண்ணீர் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே 2,483 கிராமங்களில், 2,042-ல், குடிநீர் வழங்கிவிட்டோம். தமிழ்நாட்டிலே மீதம் 61 தான் இருக்கிறது. ஆதிதிராவிடர் குடியிருப்பிலே ஏறக்குறைய, 1956-ல் கொடுத்துவிட்டோம், என்றெல்லாம் போட்டுவிட்டு அதற்குப் பின்னால் இதன்மூலம் குடிநீர் ஆதாரம் ஒன்றுகூட இல்லாத கிராமங்கள் எதுவும் தமிழகத்தில் இல்லையென்று இருக்கிறது. நான் கேட்கிறேன், இதை மாண்புமிகு ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் ஒத்துக்கொள்வார்களா? மார்ச்சுக்குப் பின்னாலே நீங்கள் தொகுதிக்கு போகும் போது, கூட்டம் போடுகிறபோது, எங்கள் தொகுதியிலே தண்ணீர் தட்டுப்பாடே இல்லை என்று எந்தக் கிராமத்திலாவது குடிதண்ணீர் பஞ்சமே இல்லை, எல்லா கிராமத்திற்கும் குடிதண்ணீர் கொடுத்துவிட்டோம் என்று எங்காவது போய் சொல்ல முடியுமா? முடியாது. ஏன் என்றால் இப்பொழுது நீங்கள் போனால் கூட ஆங்காங்கே கிராமங்களில்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிதண்ணீர் ஆதாரமே இல்லாத கிராமங்கள் என்றுதான் சொல்லியிருக்கிறோமே தவிர முழுமையாக குடிநீர் கொடுப்பதற்கு முயற்சி எடுக்கும் இந்த அரசு என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : எனக்குப் புரியவில்லை. அறிக்கையில் இருப்பதைத்தான் நான் படித்தேன். அறிக்கையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : ஏதாவது ஒரு வகையில் கிராமங்களுக்கு குடிதண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம் என்பதைத்தான் இதிலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறோமே தவிர முழுமையாக குடிதண்ணீரை எல்லா மக்களுக்கும் கொடுத்திருக்கிறோம் என்பதைக் குறிப்பிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1992 பிப்ரவரி 6

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நிமிடத்தில் முடித்து
விடுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : ஒரு நிமிடத்தில் எப்படி முடிப்பது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நிமிடத்தில் முடித்துக்
கொள்ள வேண்டும் என்றால், அதை எப்படி முடிப்பது என்று
கேட்டால் 11.29-க்கு ஆரம்பித்தீர்கள். இப்போது 11.54.
உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள். இப்போது
முடித்துக்கொள்ளுங்கள் என்று சொன்னால் ஒரு நிமிடத்தில்
எப்படி முடிப்பது என்று சொன்னால், 15-வது நிமிடத்திலிருந்து
நீங்கள் அதிகமாக பேசியிருக்கிறீர்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : குறுக்கீடுகள் வந்தன. அமைச்
சர்கள் எல்லாம் 10 நிமிடம் எடுத்துக்கொண்டார்கள், நான்
பேசியது 5 நிமிடம். ஒரே ஒரு நிமிடத்திற்குள் முடித்துவிடுகிறேன்.
ஒன்றே ஒன்று மட்டும் சொல்லிவிடுகிறேன். அறிக்கையில்
வந்தது அப்படி. அதை இப்போது படித்தால் 'லேட்' ஆகி
விடும். அப்புறம் போய் அமைச்சர் வீட்டில் உட்கார்ந்து
படிக்கட்டும். அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று
சொன்னால், மார்ச்சோடு முடித்துவிடுவது என்று சொல்லி
யிருக்கிறார்கள். ஏன் என்றால் அதற்கு ஒரு சின்ன உதாரணம்
சொல்கிறேன். சர்ச்சில் பிரைம் மினிஸ்டராக இருந்தபோது,
ஒருமுறை. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சர்ச்சில் பற்றி ஒரு
நிமிடத்தில் முடிக்க முடியுமா?

முற்பகல் 11-55

திரு. எஸ். திருநாவுக்கரசு : அவர் புள்ளி விவரத்தைத்
தான் கேட்டார். ஒரு புள்ளிவிவரத்தைப் பற்றி அதிகாரி
களிடம் அவர் கேட்டபோது, அந்தப் புள்ளிவிவரத்தைத் தரு
வதற்கு எவ்வளவு நாட்கள் ஆகும் என்று கேட்டார்.
அதிகாரிகள், 2 ஆண்டுகள் ஆகும் என்று சொன்னார்கள். உடனே
அவர் பார்லிமெண்டுக்குப் போனார். என்ன புள்ளிவிவரம்
சொல்ல வேண்டுமோ, அதை அவர் அங்கே பேசிக்கொண்டிருந்
தார். அதிகாரிகளுக்கு எல்லாம் ஆச்சரியமாக இருந்தது. நாம்
கொடுக்கவே இல்லையே, அவர் எப்படிச் சொன்னார் என்று
ஆச்சரியமாக இருந்தது. அவர் வந்தவுடன், எப்படிச் சொன்
னீர்கள் என்று கேட்டார்கள். ஆட்சியிலே இருக்கிறவர்களுக்கே
2 வருடங்கள் ஆகுமென்றால், எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்
களுக்கு 20 வருடங்கள் ஆகும்; அவர்கள் வந்து திருப்பிக்
கேட்கும்போது நான் இருப்பேனோ, எவன் இருப்பானோ
என்று அவர் சொன்னாராம். அதைப் போல அரசு அதிகாரிகள்
புள்ளி விவரங்களைத் தருவார்கள். அதிலே ஐயமே இல்லை
என்பதற்காக இதைச் சொன்னேன்.



1992 பிப்ரவரி 6] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

அடுத்து அறிவொளி இயக்கம். அது வேஸ்ட். மாதம் 3
கோடி ரூபாய் கொடுத்து, ஊரிலே இருக்கிற கிழவன், கிழவி
களை எல்லாம் பிடித்து, இரவிலே உட்கார வைத்து, கை
யெழுத்து போடச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இந்தியா
பூராவும் ஆயிரம் கோடி இதற்காக செலவாகிறது. அதை
ஆரம்பப் பள்ளிகளுக்குச் செலவு பண்ணினால், அதனால் பிர
யோசனம் இருக்கும். நேரம் இல்லாததால் இதை விட்டு
விடுகிறேன்.

அடுத்து கூட்டுறவுத் துறை தேர்தல் வந்திருக்கிறது. அதோடு
சேர்த்து பஞ்சாயத்து, உள்ளாட்சித் தேர்தல்களையும் நடத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபற்றி குறிப்பு
இல்லை.

அடுத்து, ஆண்டுத் திட்டம். இப்போது 1,486 கோடி கொடுத்
திருக்கிறார்கள். நீங்கள் 1700 கோடி கேட்டீர்கள். 1,600
கோடி போன வருடம் கொடுத்தார்கள். இந்த வருட திட்டத்
திற்கு 120 கோடி பற்றாக்குறை. மத்திய அரசிடம் முறையான
வகையிலே வற்புறுத்த வேண்டும். ஒவ்வொரு தடவையும்
தமிழ்நாட்டிலே இருந்து போகும்போது அல்லது வேறு மாநிலங்
களிலிருந்து போகும்போது இப்படித்தான் நடக்கும். புரட்சித்
தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலும் இப்படித்தான்.
கடந்த ஆட்சியிலும் இப்படித்தான் நடந்தது. கேட்ட உடனே
கொடுக்கமாட்டார்கள். நம்முடைய முதலமைச்சர் கோபித்துக்
கொண்டு வருவார்கள். பிறகு மத்திய நிதி அமைச்சரைப்
பார்ப்பார்கள், பிரதம அமைச்சரைப் பார்ப்பார்கள். எனவே
நம்முடைய முதலமைச்சரைக் கேட்டுக்கொள்வது, மீண்டும்
பிரதம அமைச்சரைச் சந்தியுங்கள்; சென்ற ஆண்டைவிட இந்த
ஆண்டு ஒரு கோடி ரூபாய் கூடக் குறையாமல், அதைவிட
அதிகமாக வாங்க முயற்சி செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து அரிசி விலை அல்லது மற்ற அத்தியாவசியப் பண்
டங்கள் விலை தமிழகத்தில் அதிகமாக இருக்கிறது. அதற்குக்
காரணம் மத்திய அரசு ஏற்றியிருக்கிறது என்று சொல்லப்படு
கிறது. ஒத்துக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
13 ஆண்டுக்காலம் இருந்தபோது அரிசி விலையை உயர்த்தாமல்
பார்த்துக்கொண்டார்கள். நான் மீண்டும் அரசிடம் தெரி
வித்துக்கொள்வது, இதை ஏழை எளிய மக்கள் தாங்க மாட்
டார்கள். இங்கே பேசும்போது நண்பர்கள் ஒன்றைப் பாராட்டி
னார்கள். ஒரு கோடியே 20 லட்சம் பேருக்கு இலவசமாக
வேட்டி, சேலை கொடுக்கிறார்கள். பாராட்டுக்குரியது. ஒரு
சேலை எவ்வளவு தெரியுமா? 15 ரூபாயாகும். ஒரு ரூபாய
ஏற்றினால் அதன் விலை 20 ரூபாய் வரையாகும். தேனெட்
டாம்பிலே. அரிசி ஒரு கிலோவிற்கு ஒரு ரூபாய் உயர்த்தினால்,
20 கிலோ ஒரு குடும்பம் வாங்கினால், 80 ரூபாய் கூடுதல்

செலவாகிறது. நீங்கள் இதை ஏற்றாமல் விட்டால், மாதம் ஒரு சேலை அவர்களே வாங்கிக்கொள்வார்கள். எனவே கிலோவிற்கு ஒரு ரூபாய் அரிசியிலே ஏற்றிவிட்டு, ஆண்டுக்கு ஒரு சேலையும், வேட்டியும் கொடுப்பதை பாராட்டுக்குரிய திட்டமாகச் சொல்ல முடியாது. இதெல்லாம் விளம்பரத்திற்குத்தான் உதவும். (மணி அடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்திலே முடித்து விடுகிறேன். அரிசி விலையை நீங்கள் தயவு செய்து குறைக்க வேண்டும். (மணி அடிக்கப்பெற்றது) இவ்வளவு நெருக்கடியை நான் எப்போதுமே சந்தித்தது இல்லை. எந்த ஸ்பீக்கரும் இந்த மாதிரி படாதபாடு படுத்தியது இல்லை (மணி அடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சத்தியமூர்த்தி. (குறுக்கீடு) எனக்கு வேறு வழி கிடையாது. நான் உங்களுக்கு 15 நிமிடங்கள் கூடுதலாகக் கொடுத்துக் கொண்டே வருகிறேன். (குறுக்கீடு) ஒவ்வொரு நிமிடமாக உங்களுக்கு எவ்வளவு நிமிடம் கொடுத்திருக்கிறேன் (குறுக்கீடு) திரு. சத்தியமூர்த்தி, உட்காருங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : ஒரு நிமிடம். இறுதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது அனைத்துக் கட்சிகள் அல்லது மற்ற எதிர்க் கட்சிகள் ஊர்வலம் நடத்தும்போது அதற்கு முதலமைச்சர் விதித்திருக்கிற கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் 4 லட்சம் பேர் போகக்கூடிய ஊர்வலத்தில் 4 பேர்கள் கலகம் செய்ய முடியும். அதை ஆளுங் கட்சியும் செய்ய முடியும், எதிர்க் கட்சியும் செய்ய முடியும். சம்பந்தம் இல்லாத விஷமிகள்கூடச் செய்ய முடியும். காவல் துறைதான் அதில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும், பாதுகாப்பு தர வேண்டும். எனவே அதைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் ஒன்று. வெளியேற்றம் செய்யப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர் மீண்டும் வந்து சட்டமன்றத்தில் பேச நீங்கள் வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு, இந்த அளவிலே உங்களுக்கு நன்றி கூறி இவ்வளவு பாடுபடுத்தியதற்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஊர்வலம் பற்றிச் சொன்னார்கள். 9 மணி நேரம் நடந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஊர்வலத்தில் சிறு சம்பவம்கூடக் கிடையாது. எனவே அங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடந்த ஊர்வலத்தையும், ஏற்கெனவே நடந்த ஊர்வலங்களையும் அவர் கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டும்.





திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த வன்முறைக்கும் நான் வக்காலத்து வாங்க வில்லை. நான் கேட்பது, அப்படி நடவடிக்கை எடுக்கிறபோது திருச்சியிலே சிதம்பரம் அடிபட்டார்; அதே நேரத்திலே காரைக் குடியிலே போகும்போது அடிபடவில்லை. அவரைக் காப்பாற்றியது யார்? அங்கே இருக்கிற எஸ்.பி., டி.ஐ.ஜி. காப்பாற்றினார்கள். அவர்கள் அன்றைக்கு டிரான்ஸ்பர் செய்யப்பட்டார்கள்.

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதத்திற்கு இடம் இல்லை. விவாதம் எங்கோ போகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, அவர் வேறு எங்கோ போய் விட்டார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் படாத பாடு படுத்தி விட்டார் என்று இரண்டு மூன்று முறை அவர் சொல்லிவிட்டார். எனவே அது அவைக் குறிப்பில் இல்லாமல் இருந்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியே இருப்பது நல்லதுதான். அவருக்கு 15 நிமிடம் கொடுக்கப்பட்டு, மேற்கொண்டு 15 நிமிடம் பேசியிருக்கிறார். அப்போதும் பேரவைத் தலைவராகிய நான் படாத பாடு படுத்தியிருக்கிறேன் என்று அவர் அதற்குப் பொருள் கொள்கிறார். அவருக்கு அதிக நேரம் கொடுத்தது படாத பாடு என்று அவர் ஒத்துக் கொண்டதற்கு நன்றி. திரு. சத்தியமூர்த்தி அவர்கள் பேசலாம்.

*திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு அலட்சியப் படுத்தப்பட்டாலும், எனைத்திற்கு ஆனாலும், எடுத்த காரியத்தை முடித்தே தீருவது என்ற திட சித்தமும், விடா முயற்சியும் இருந்தால் வெற்றி கிடைத்தே தீரும்; 'தூற்றினோரே துதிபாடி நிற்பர், ஏனைய பேசியோர் ஏற்றி ஏற்றிச் சொல்வர்' என்பது பேரறிஞர் அண்ணா அவர்களின் நம்பிக்கை. அந்த நம்பிக்கைக்கு ஒரு உருவகம் கொடுக்கிற வகையில் இன்றையதினம் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் முதல்வராக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய

பவளவிழாவை நினைவூட்டினார்கள். எங்களைப் பொறுத்த வரையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டனானாலும் சரி, இதயதெய்வம் புரட்சித் தலைவி ஆனாலும் சரி, புரட்சித்தலைவரோடு வாழ்ந்து கொண்டிருப்பதாகத்தான் எண்ணி செயல்படுகிறோம். புரட்சித் தலைவர் எங்களை விட்டு மறைந்துவிட்டார் என்ற எண்ணமே எங்களுக்கு எழவில்லை. புரட்சித்தலைவர் மறைந்துவிட்டார் என்று எண்ணிக்கொண்டு மற்ற எவரையும் போல் அவர் பெயரைச் சொல்லி, அரசியல் பிழைப்பு நடத்தவேண்டிய அவல நிலையில் நாங்கள் இல்லை என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நமது அன்பிற்குரிய உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் பேசு கின்றபோது, திட்டங்கள் எதுவுமே இல்லையென்று சொன் னார்கள். அதற்குப் பின்பும் சொன்னார், ரூ. 7,000 கோடியில் மின் உற்பத்தித் திட்டம் இன்று....

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு</u> : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சத்தியமூர்த்தி அவர்கள், மறைந்த இதயதெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர் களுடைய பெயரைச் சொன்னால், அது பிழைப்பு நடத்துவது என்று பொருள்படுகின்றாரா அல்லது அதை சொல்லாமலேயே பிழைப்பு நடத்திக்கொண்டிருக்கிறார் என்று சொல்கிறாரா? அல்லது அவர் பெயரைச் சொல்லவேண்டியது இல்லை என்று சொல்கிறாரா? என்ன சொல்ல வருகிறார் என்று எனக்குப் புரியவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : திரு. சத்திய மூர்த்தி அவர்கள் இதை விவாதப் பொருளாக்காமல், முன்னாள் முதல்வர் அவர்களுடைய பெயரை விவாதப் பொருளாக்காமல், ஆளுநர் உரை மீதான பேச்சைத் தொடர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. வ. சத்தியமூர்த்தி</u> : பேசியதை முழுமையாகக் கவனித் தால் அதனுடைய பொருள் என்ன என்று விளங்கும். இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எங்களோடு வாழ்ந்து கொண்டிருப்பதாகவே எண்ணி, பயந்துகொண்டு அவர் வழியில் நாங்கள் நடந்துகொண்டிருக்கிறோம். அவர் இறந்து விட்டார் என்று அவர் பெயரைச் சொல்லி பிழைப்பு நடத்த நாங்கள் விரும்பவில்லை என்று தான் சுட்டிக்காட்டினேன்.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு</u> : துணைத் தலைவர் அவர்களே. .............

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : இதில் மேற் கொண்டு விவாதம் வேண்டாம். தயவுசெய்து அமருங்கள். நாம் அனைவரும் மரியாதை செலுத்தக்கூடிய தலைவர் அவர். அவர் பெயரை வைத்து இங்கே ஒரு விவாதம் நடந்தது என்ற நிலை வேண்டாம்.



<u>திரு. எஸ். திருநாவுக்கரசு</u> : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உங்கள் இதயத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்ற காரணத்தாலே தான், எம்.ஜி.ஆருடைய பெயரை * இங்கேசொல்லும்போது யாரும் கை தட்டுவது இல்லையா? எம்.ஜி.ஆருடைய படத்தை விளம்பர போஸ்டர்களில் போடுவது இல்லையா என்று கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

<u>மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்</u> : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, புரட்சித்தலைவி அவர்கள் பொறுப் பேற்ற இரண்டே வார காலத்தில், போக்குவரத்துக் கழகத்திற்கு அவருடைய பெயரை பொறித்தார்கள். அதைப்போல் மருத்து வக் கல்லூரிக்கும் வைத்தார்கள். நீங்கள் சேர்ந்திருக்கிறீர்களே, அந்த தி.மு.க.வுக்கு வக்காலத்து வாங்கிய நேரத்தில், மருத்துவக் கல்லூரிக்கும் எம்.ஜி.ஆருடைய பெயரை நீக்கிய நேரத்தில், 'தாமரை' என்று பெயரை மாற்றிய நேரத்தில், அன்றைக்கு அதை எதிர்த்துச் சொல்லாமல், இன்றைக்கு இங்கே சொல்வது தான் வியப்பாக இருக்கிறது.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு</u> : நான் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு என்றும் சேர்ந்திருக்கவில்லை. அரசியல் கூட்டணி என்பது வேறு. அதிலும் ஏதோ செங்கோட்டையன் எல்லாம் அப்படியே இந்த முதலமைச்சரோடு ஐக்கியமாகிவிட்டதைப்போல பேசுகிறார்கள். அங்கே கொண்டு போய்ச் சேர்த்ததே நான்தான். எவ்வளவு கட்டாயப்படுத்தி அவரைச் சேர்த்தேன் என்பது எனக்குத்தான் தெரியும். ஏதோ இன்றைக்கு அமைச்சர்கள் எல்லாம்....

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : முன்னாள் அமைச்சர்களும் இன்னாள் அமைச்சர்களும், தங்களது சொந்த விவகாரங்கள் குறித்து விவாதத்தில் ஈடுபடுவது சரியல்ல. அதை இதோடு நிறுத்திக் கொண்டு, திரு. சத்தியமூர்த்தி அவர்கள் தொடர்ந்து பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்....

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்</u> : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில் சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வெற்றி பெற்று, அதற்குப் பிறகு புறமுதுகு காட்டி ஓடியவர்கள் எல்லாம், இன் றைக்கு சபையில் இப்படி பேசுவதுதான் இதில் வேடிக்கையாக இருக்கிறது.

பிற்பகல் 12-05

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு</u> : நான் கட்சியிலிருந்து டிஸ்மிஸ் பண்ணப்பட்டேன். நான் ஓடவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : திரு. சத்திய மூர்த்தி அவர்கள்.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் பேசுகின்றபோது, ஆளுநர் உரையில் பெரிய திட்டங்கள் எதுவுமில்லை என்று எடுத்தவுடனேயே விமர்சனம் செய்தார். பிறகு, இறுதியில் பேசுகின்றபோது ஏழாயிரம் கோடி ரூபாய் மின் திட்டத்தைப் பற்றிப் பேசினார். இது பெரிய திட்டம் இல்லையா என்று அவரைப் பார்த்து நான் கேட்க விரும்புகிறேன். அதே போன்று குடிநீர்த் திட்டத்தின் மூலம், வருகின்ற மார்ச் மாதத்திற்குள்ளாக இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட கிராமங்களுக்குக் குடிநீர் கொடுக்கப்படும் என்ற திட்டத்தைப் பற்றி விமர்சனம் செய்தார். அந்தத் திட்டம் பெரிய திட்டம் இல்லையா ' என்று நான் கேட்க விரும்புகிறேன்.

நமது அன்பிற்குரிய உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகின்றபோது, காங்கிரஸ் கட்சி, கட்சிக்காக ஆட்சியை நடத்தவில்லை, ஆட்சிக்காக கட்சியை நடத்திக்கொண்டிருக்கிறது என்று சொன்னார். நான் அவருக்குச் சொல்லிகொள்ள விழைகிறேன். இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்காக கட்சியையோ, கட்சிக்காக ஆட்சியையோ நடத்தவில்லை; இந்தத் தமிழக மக்களுடைய நலனுக்காக, தமிழகத்தினுடைய உரிமைக்காக, தமிழ்நாட்டில் வாழ்கின்ற ஏழையெளிய அடித்தள மக்களைத் தூக்கிவிடுவதற்காக(அவர்களுடைய உரிமைகளை பாதுகாப்பதற்காக), இந்தத் தமிழ்நாட்டை உயர்த்துவதற்காகத்தான் கட்சியையும், ஆட்சியையும் சேர்த்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான், மத்தியில் தோழமைக்கட்சி ஆண்டுக்கொண்டிருந்தாலும், காவிரி நீர்ப் பிரச்சினையானாலும் சரி, திட்ட நிதி ஒதுக்கீடானாலும் சரி, தட்டிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். உரிமைக் குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறு கிராமங்களிலே சின்னஞ்சிறு பிள்ளைகள் ஒரு விளையாட்டை விளையாடுவார்கள். கிச்சுக்கிச்ச தாம்பளான், கியா கியா தாம்பளான், என்று சொல்லுவார்கள். தெருவில் இருக்கின்ற மணலை முகடு கட்டி ஒரு குழந்தை கையில் ஒரு சிறு குச்சியை வைத்துக்கொண்டு, கிச்சுகிச்சுத் தாம்பளா என்றுச் சொல்லி அந்தக் குழந்தை எதிரில் உள்ள குழந்தையின் கண்ணுக்குத் தெரியாமல் அந்தக் குச்சியை ஒளித்து வைத்துவிடும். இன்னொரு குழந்தை அந்தக் குச்சி எங்கேயிருக்கும் என்று உத்தேசமாக கையை வைத்து மூடும். ஆனால், அந்தக் குச்சியை கண்டுபிடிக்க முடியாது. மறுபடியும் அழித்துக் கிழித்து விளையாடுவோம் என்று சொல்லி அந்தக் குழந்தைகள் மீண்டும் மணல் மேடு கட்டுவார்கள். அப்படி ஒரு விளையாட்டு உண்டு. (மணி அடிக்கப்பெற்றது). மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே எனக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தில் என்னைப் பேச அனுமதிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



கர்நாடகத்திலிருந்து தமிழகத்திற்கு வர வேண்டிய நதிநீர்ப் பங்கீடு பற்றி 20 ஆண்டுகளுக்கு மேலாக தமிழக அரசும், கர்நாடக அரசும் பல முறை உட்கார்ந்து பேசிவிட்டன. அந்தப் பேச்சுவார்த்தையில் பலன் இல்லாமல், உச்சநீதிமன்றத்தை அணுகி, உச்சநீதிமன்றம் நடுவர் மன்றத்திற்கு அனுப்பி, நடுவர் மன்றம் தீர்ப்பு அளித்த பிறகு அந்தத் தீர்ப்பை அமல்படுத்தவாமா என்று மத்திய அரசு உச்சநீதிமன்றத்தை மீண்டும் கேட்டு உச்சநீதிமன்றம் அமல்படுத்த வேண்டும் என்ற சொல்லி, அதன் கட்டாயச் சூழ்நிலையில் மத்திய அரசாங்கம் அரசிதழில் வெளியிட்டப் பிறகு, இன்றைய தினம் மத்தியில் உள்ளவர்கள் மீண்டும் பேசுங்கள் என்று சொன்னால் இந்த தமிழகத்தில் உயிர்நாடியான காவிரி நதிநீர் பங்கீடு பிரச்சினை**
என்பதை இந்த நேரத்தில் நான் கேட்க விரும்புகிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடியுங்கள்.

திரு. வ. சத்தியமூர்த்தி : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, ஒரு சில வார்த்தைகள் சொல்ல அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படிப்பட்ட குறுக்கீடுகளும், விவாதங்களும் இருந்தால், உங்களுக்குத் தரப்பட்ட நேரம் எல்லாவற்றையும் சேர்த்துத்தான் கணக்கிடப்படும். ஒரே நிமிடத்திலே நீங்கள் முடித்து விடுங்கள்.

திரு. வ. சத்தியமூர்த்தி : கொஞ்சம் தாராள மனப்பான்மையோடு நடந்து கொள்ள வேண்டும் என்று அன்போடு, பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சத்தியமூர்த்தி அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இன்று எதிர்க்கட்சித் தலைவர்கள் அத்தனை பேரும் பேசியாக வேண்டும். ஆகவே, நீங்கள் உடனடியாக முடிக்க வேண்டும்.

திரு. எஸ்.பீட்டர் அல்போன்ஸ்: பாயிண்ட் ஆப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் கிடையாது.

திரு. வ. சத்தியமூர்த்தி : இராமநாதபுரம் மாவட்டம் வறட்சியின் கோரப் பிடியில் இந்த ஆண்டு சிக்கியிருக்கிறது. குடிநீர் தட்டுப்பாடு இருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறது. (குறுக்கீடு).

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.

Hon. DEPUTY SPEAKER : The Deputy Speaker is confident that there is no point of order.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் ; நான் பாயிண்ட் ஆப் ஆர்டரையே இன்னும் ரெய்ஸ் பண்ணவில்லையே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் ரெய்ஸ் பண்ணுவதற்கு பாயிண்ட் ஆப் ஆர்டரே இல்லை. முறைப்படி நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவை நிகழ்ச்சிகளில் இப்போது பிரச்சினை இல்லை, மாறுபாடும் இல்லை. (குறுக்கீடு). புரசீடிங்ஸ் என்னவென்று எனக்குத் தெரியும் அல்லவா? ஆகவே, எதுவும் இல்லை. பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன் என்று சொல்லிவிட்டு வேண்டுமானால் கேளுங்கள்.

பிற்பகல் 12-10

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : Point of order தான் நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : Point of order என்ன இருக்கிறது?

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : ** மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார். அப்படிப் பேசினால் அது சரியாக வருமா? அந்தப் பேச்சு பத்திரிக்கையில் வந்தால் மாநில அரசின் interest safe ஆக இருக்குமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைச் சொல்லி சொல்லி நீக்க வேண்டுமென்று வேண்டுமானால் கேளுங்கள். It is not a point of order. I want the Member to understand the difference between Point of Order and Point of clarification.

Thiru S. PETER ALPHONSE : When we are entertaining a debate, we should see that the decorum and dignity of the House is also maintained.

Hon. DEPUTY SPEAKER : It is very well maintained in this House.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்கு point of order என்று கேட்க வேண்டாம். அதை நீக்க வேண்டுமென்று வேண்டுமானால் நீங்கள் கேட்டுக் கொள்ளலாம்.

THIRU S. PETER ALPHONSE: Is that word proper?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதை ஒரு கோரிக்கையாக வைக்கலாமே தவிர, point of order என்று வராது.

---

பேரவைத் துணைத்தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: *** I leave it to you.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தச் சொற்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி : எனக்கு சில கருத்துக்களைச் சொல்ல உரிமை இருக்கிறது. அதை, விதிக்கு மாறாக எடுக்கக் கூடாது........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைத் துணைத் தலைவரின் முடிவு சொன்னதற்குப் பின்பு, அதன் மீது உறுப்பினர் பேசுவது முறையல்ல. நீங்கள் தொடர்ந்து பேச வேண்டி இருக்கிறது.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் வறட்சியின் கோரப்பிடியில் இந்த ஆண்டு சிக்கி இருக்கின்றது. அங்கு குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கின்றது. வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டு இருக்கின்றது. அன்பிற்குரிய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த மாவட்டத்தினுடைய வறட்சி நிலையைப் பார்வையிட்டு நிவாரணப் பணிகளில் ஈடுபட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் நயினார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளராக இருந்த சர்வதீர்த்தம் என்பவர் 12ஆம் தேதி பணி ஏற்பதாகச் சென்றவர், இரண்டு தினங்களாகக் காணாமல் போய், 13ஆம் தேதி மாலையில் ஒரு காட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் ஏணிப்படியில் பிணமாகத் தொங்கி இருக்கின்றார். அவருடைய மரணத்தில் மர்மம் இருப்பதாகவும், யாரோ கொலை செய்துவிட்டதாகவும் அவருடைய குடும்பத்தினர் புகார் செய்து இருக்கின்றார்கள். அந்த மரணம் தற்கொலையா, கொலையா என்ற கேள்விக் குறி அங்கே எழுப்பப்பட்டு இருக்கின்றது. நான் கூட மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்களிடமும் காவல் துறைக் கண்காணிப்பாளரிடமும், மாவட்ட ஆட்சியரிடமும் பிரத்யேக விசாரணை செய்து இவருடைய மரணத்திற்குக் காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கின்றேன். இரகசிய குற்றப் புலனாய்வுத் துறை மூலமாவது, வேறு ஏதேனும் இரகசிய

---

** பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

புலனாய்வுத்துறையின் மூலமாவது இந்த மரணத்தின் காரணத்தைக் கண்டு ஆராய்ந்து, அது கொலையாக இருப்பின் அதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

ஒரே ஒரு நிமிடம், நீதிமன்றத்தின் மூலம், நமது முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் கொலையில் பிரபாகரன் "குற்றவாளி"யாக பிரகடனப்படுத்தப்பட்டு, கெடு விதிக்கப்பட்டு இருக்கின்றது. அந்த கெடுவிற்குள் பிரபாகரன் ஆஜராகவில்லை என்று சொன்னால் மத்திய அரசு இலங்கை அரசோடு தொடர்புகொண்டு, இங்கிருந்து இராணுவத்தையோ, தனிப்பட்ட காவல் துறையினரையோ அனுப்பி பிரபாகரனை கைது செய்து, இங்கு நீதிமன்றத்தின் கூண்டில் நிறுத்த வேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலம் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம். மிகச் சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தென்னவன் அவர்கள் தொடங்கிய இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானம் எட்டப் பார்வையில் தொடங்கி, கிட்டப் பார்வை, குட்டப் பார்வையிலே வந்து இன்று கிட்டப் பார்வையிலே நாம் விவாதித்துக் கொண்டு இருக்கின்றோம். அதே நேரத்தில் எட்டப் பார்வையானாலும், குட்டப் பார்வையானாலும் அல்லது கிட்டப் பார்வையானாலும், எட்டப்பன் பார்வை இல்லாமல் இருந்தாலே போதும் என்பதுதான் என்னுடைய கருத்தாகும். இன்னும் சிலர் அக்கினிப் பார்வையும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத்தட்டும் ஒலி). அந்த அக்கினிப் பார்வை, எட்டப் பார்வை, கிட்டப் பார்வை, குட்டப் பார்வை—இவைகளுக்கெல்லாம் சேர்த்து "ஷாக் ட்ரீட்மெண்ட்" கொடுக்கின்ற முதல்வர் தான் நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி). சரியான நேரத்தில், சரியான காலத்தில் on the basis of merit திறமையின் அடிப்படையில், நிர்வாகத்தின் அடிப்படையில் நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு "டாக்டர் பட்டம்" கிடைத்து இருக்கிறது என்பதிலே நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அந்த டாக்டர் தமிழகத்தினுடைய ஏழை எளிய மக்களுக்கெல்லாம்....(குறுக்கீடு) எனக்குக் கிடைத்தது 5 நிமிஷம்; ப்ளீஸ் உட்காருங்கள். உட்காருங்கள். எனக்கு 5 நிமிஷம்தான் கொடுத்திருக்கிறார்கள். தமிழகத்தினுடைய ஏழை எளிய மக்களின் நாடி நரம்புகளையெல்லாம் தேடிப் பிடித்து, நாடி பார்த்து, இந்த மக்களுக்கு



எப்படியெல்லாம் "ட்ரீட்மெண்ட்" செய்ய வேண்டும், இந்த ஏழை எளிய மக்களை எப்படியெல்லாம் காப்பாற்ற வேண்டும் என்ற அடிப்படையில் "ட்ரீட்மெண்ட்" செய்து கொண்டிருக்கிற முதலமைச்சர்தான் நம்முடைய (குறுக்கீடு) டாக்டர் புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா அவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதே நேரத்தில் பல நண்பர்கள் குறைபட்டுச் சொன்னார்கள். இங்கே பல நண்பர்கள் குறைபட்டு சொன்னார்கள் (குறுக்கீடு) நான் சாதாரண தொண்டன் பேசிக்கொண்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12.15]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ். திருநாவுக்கரசு......

திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, அவர் என்னென்னவோ பார்வைகளைச் சொன்னார். அக்கினிப் பார்வை என்பது முதலமைச்சருக்கு எதிராகவோ அல்லது எதிர்க் கட்சிகளுக்கு எதிராகவோ, யாருக்கும் எதிராக எடுக்கப்படவில்லை. அது ஒரு கமர்ஷியல் படம். அவர் சொன்னதைப் பார்த்தால் ஏதோ நான் ஆளுங்கட்சிக்கு அக்கினிப்பார்வை பார்த்தேன், முதலமைச்சருக்கு அக்கினிப்பார்வை பார்த்தேன் என்று சொன்னார். அவர் ஏதோ பாராட்டிப் பேசுவது என்றால் பேசட்டும். அதற்கு நான்தானா கிடைத்தேன். அவருக்கு—அவர் ஆளுங்கட்சியைப் பாராட்டிப் பேசட்டும். அதற்கு நான்தானா கிடைத்தேன்?

திரு. ஆர். சிங்காரம்: துணைத் தலைவர் அவர்களே, நான் படத்தைச் சொல்லவில்லை. அவருடைய பார்வையைத்தான் சொன்னேன். ஆகவே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் யாரையும் கொன்று குவித்துவிட்டு, எந்த உதயகுமாரையும் கொலை செய்துவிட்டு, அவருடைய பெற்றோர்களிடத்தில் என்னுடைய மகன் இல்லை இவன் என்று தேடிப்பிடித்து கையெழுத்து வாங்கி இங்கே டாக்டர் பட்டம் வாங்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதே நேரத்தில் டாக்டர் புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா அவர்கள் இங்கே மிக நாணயமாக, மிக நம்பிக்கையாக ஏழ்மையிலுள்ள மக்களை முன்னேற்றுவதில் சிறப்பிடமாக திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நயவஞ்சக எண்ணத்தோடு பலர் செயல்பட்டார்கள். நாணயமற்ற முறையில் பலர் செயல்பட்டார்கள். பழிவாங்கும் தன்மையில் பலர் செயல்பட்டார்கள். ஆனால், நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் பெருந்தன்மையானவர் என்பதற்கு உதாரணமாக இரண்டு நாட்களுக்கு முன்னதாக கூட, இந்த ஆட்சியை மிக

[திரு. ஆர். சிங்காரம்] [1992 பிப்ரவரி 6

மோசமான முறையில் வெளியிலும் சரி, உள்ளேயும் சரி விமர்சனம் செய்து, மிக மோசமான முறையில் கொலைக் குற்றங்களைச் செய்து கொண்டிருந்த விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு கொடுத்த அந்த உறுப்பினர் இங்கே பேச சபாநாயகர் அனுமதி மறுத்தும் கூட, பெருந்தன்மையானஉள்ளதோடு, தாராளமான கருணையுள்ளத்தோடு அனுமதி கொடுத்தவர், பேச அனுமதித்தவர் டாக்டர் ஜெயலலிதா அவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இது மட்டுமா, யாரையோ பழிவாங்கி விட்டது என்று சொல்கிறார்கள். யாரை இந்த ஆட்சி பழி வாங்கி விட்டது? நான் தெளிவாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். யாரைப் பழி வாங்கி இருக்கிறது? பழிவாங்கவேண்டுமென்றால் இங்கே முதலமைச்சராக இருந்து எதிர்க்கட்சி வரிசையில் இருந்த புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்களை பழிவாங்கிய அதே கருணாநிதி அவர்களை தான் பழி வாங்கியிருக்க வேண்டும். ஆனால், பழி வாங்கினார்களா? இல்லை, நாணயமான முறையில் முறையான முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஏதோ சுப்புலட்சுமி அவர்களை பழிவாங்கிவிட்டார்கள் என்றெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் வெளியில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அது முற்றிலும் தவறு. அந்த அம்மையார் அவர்கள், பத்மநாபா போன்ற 15 நபர்களை படுகொலை செய்துவிட்டு விடுதலைப்புலிகள் அவருடைய இல்லத்தில் சென்றபோது பாதுகாப்பு கொடுத்ததன் காரணமாக தக்க தடயங்கள் நாகராஜன் ஸ்டேட்மெண்ட் போன்ற விஷயங்கள் சேர்த்து தான், வாக்குமூலம் பெற்று நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்ட அ-தனை பேரையும் தக்க தடயங்களோடு கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தடா என்பது யாருக்கும் படா. நிச்சயமாக தடா என்பது சரியான 'தடா'வாக இருக்கும். இதற்கு யாரும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. பல பேர் அஞ்சுகிறார்கள், பலபேர் கெஞ்சுகிறார்கள். அதே நேரத்தில் இங்கே அஞ்சுகிறவர்கள் தங்களை நாடி வந்துவிடுமோ என்று பயப்படுகிறார்கள். அப்படி பயப்பட வேண்டியதில்லை. குற்றமுள்ள மனது தான் குறுகுறுக்கும். ஆகவே, குற்றமுள்ளவர்கள் குறுகுறுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாக, ஸ்டெப்-பை-ஸ்டெப்பாக வந்து விடும். நான் முதலமைச்சராக இருந்திருந்தால் நான் நிச்சயமாக இங்கே பழி வாங்கியிருப்பேன். நான் பார்த்தேன் அந்த காட்சியை. ஆனால் நம்முடைய முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெயலலிதா அவர்கள் நிதானமான முறையில், நேர்மையான முறையில், தூய்மையான முறையில் நடவடிக்கையெடுத்து கொண்டிருக்கிறார்கள். தன் கட்சிக்காரனாக இருந்தாலும் தவறு செய்தால் அவனை கைது செய், நடவடிக்கை எடு, உள்ளே போடு என்று சொல்கிற பாணி, திராணி, தெம்பு யாருக்கு வர முடியும்? யாருக்கும் வர முடியாது (மேசையைத் தட்டும் ஒலி).



1992 பிப்ரவரி 6] [திரு. ஆர். சிங்காரம்]

இந்த நாட்டிலே எத்தனையோ முதலமைச்சர்களை நான் பார்த்து இருக்கிறேன், சந்தித்து இருக்கிறேன், கேட்டிருக்கிறேன், சட்டமன்ற நடவடிக்கைகளைப் பார்த்து இருக்கிறேன். எந்த முதலமைச்சராவது எதிர்க்கட்சியை மதித்து, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுடைய வெட்டுத் தீர்மானங்களுக்கு பதில் அளித்து காரியங்களை செயலாற்றிய முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா அவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது (மேசையைத் தட்டும் ஒலி).

அப்படிப்பட்ட தானைத் தலைவி, புரட்சித்தலைவி செல்வி ஜெயலலிதா அவர்களுடைய ஆட்சி சிறப்பான முறையில் நடந்து கொண்டிருக்கிறது. ஒருசில குறைகள், குற்றங்கள் இருக்கத்தான் செய்யும். ஆளுங்கட்சி என்று சொன்னாலே இவைகள் இல்லாத ஆளுங்கட்சியே கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். அவர்கள் ஆளும்போது குறை இல்லையா? இருந்தது. இல்லாமல் இல்லை. ஆனால் எதையும் சுட்டிக்காட்டுகிற முறையோடு சுட்டிக்காட்ட வேண்டும்.

அடுத்து காவிரிப் பிரச்சினை பற்றி ஒன்றை சொல்ல ஆசைப்படுகிறேன். காவிரிப் பிரச்சினை என்பது நடமாடும் காவேரிப் பிரச்சினை அல்ல. தஞ்சை மாவட்டத்தினுடைய ஜீவாதார காவிரிப் பிரச்சினையாகும். இந்த காவேரிப் பிரச்சினை பற்றி ஒரு வார்த்தை மட்டும் கூறி விடை பெற எண்ணுகிறேன். இந்த காவிரிப் பிரச்சினையை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்றோ அல்லது பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்றோ பலபேர் இங்கே பேசினார்கள். வெளியில் சிலர் பேசுகிறார்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர்கள் எல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-20]

காவிரிப் பிரச்சினைக் குறித்து கர்நாடக அரசோடு தமிழ் நாட்டிலேயிருக்கிற அத்தனை கட்சிகளும் போர்க் கொடி தூக்கியது காங்கிரஸ் பேரியக்கம், என் அருமைத் தலைவன் வாழப்பாடி ராமமூர்த்தி, ராஜினாமா, கண்டனக்குரல், போராட்டம் என்றெல்லாம் அறிக்கை விட்டு இருந்தார்கள். காங்கிரஸ், அண்ணா தி.மு.க. இது வேறு கட்சி என்று மாறுபட்ட எண்ணத்தோடு இல்லாமல் அனைவருமே ஒன்றுபட்டு திரண்டோம். ஆனால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மட்டும், சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு வரவில்லை. (குறுக்கீடு) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உறுப்பினர் பேசும்போது, சொல்லலாம். நீங்கள் அவர்கள் பேசும்போது, பதில் சொல்லலாம். நீங்கள் பேசும்போது பதில் சொல்லுங்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அந்த சர்வ கட்சி கூட்டத்திலே கலந்துகொள்ளவில்லை. டெல்லிக்குச் சென்ற சர்வ கட்சிக் கூட்டத்திலும் மார்க்சிஸ்ட்

கம்யூனிஸ்ட் கட்சி கலந்து கொள்ளவில்லை. ஏன் பேச்சு வார்த்தை வேண்டும் என்று சொல்கிறார்கள். என்ன பேச்சு வார்த்தை வேண்டியிருக்கிறது. 25 ஆண்டுக்காலமாக பேசிப் பேசியே புளித்துப்போன, சலித்துப்போன அந்த மேட்டர் காவேரி நீர்ப் பிரச்சினை. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பெங்களூரிலே சொன்னார்கள். இனி பேச்சு வார்த்தைக்கே இடம் இல்லை, இனிமேல், நடுவர் மன்றக் குழு தான் 'தேவை' என்றார்கள். அன்றே சொன்னார்கள். இன்று நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் வந்ததற்கு முன்னாலே, வருவதற்கு முன்னாலே, 'தம்பி கடலாடி, தம்பி கடலாடி, நீ கடலாடி வருவாய் என்று காத்திருந்தேனடா, துறைமுகத்தில், நான் காத்தோடிப் போய்விட்டேனடா தம்பி கடலாடி' என்று சொல்லிய தி.மு.க. ஆட்சி போனபிறகுதான், இந்த நடுவர் மன்றம் இங்கே தமிழகத்திற்கு வந்தது. அங்கே கர்நாடகத்திலே இருக்கிற அனைத்துக் கட்சி நண்பர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்பட, அனைவரும் ஏற்றுக்கொண்டு, அங்கே சிறப்பான முறையில் வரவேற்றார்கள். கோரிக்கைகளைச் சொன்னார்கள். அதேபோல் தமிழகத்திலே இருக்கிற அத்தனை கட்சிகளும் சேர்ந்து கோரிக்கைகளைச் சொன்னோம். ஆனால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கலந்து கொள்ளவில்லை. உங்கள் கொள்கை என்ன? தமிழ்நாட்டிற்கு ஒரு கொள்கை, இந்தியாவிற்கு ஒரு கொள்கையா? மார்க்சிஸம் அப்படியாச் சொல்கிறது; எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும், அரசினுடைய எதிர்ப்பு சக்தி வருகிற நேரத்திலே, மக்களை எல்லாம் ஒன்று திரட்டி, தெருவிலே விட்டு, கொடியைப் பிடித்து, கோஷம் போடு, மக்களின் உணர்வை அரசுக்குத் தெரிவி என்பதுதான் மார்க்சியக் கொள்கை, ஏன் கம்யூனிஸ்ட் கட்சி கலந்து கொள்ளவில்லை என்பதை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். (மணி யடிக்கப்பட்டது). அதேபோல் ஒன்றிரண்டு கோரிக்கைகளை மட்டும் சொல்லி, முடித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) நான் ஒன்றும் தப்பாகச் சொல்லவில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் பேசும்போது, பதில் சொல்லலாம்.

அதேமாதிரி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள். அடிக்கடி கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டங்களிலே எல்லாம் சொல்வார்கள். ரஷ்யாவைப் பார், ரஷ்யாவைப் பார், ரஷ்யாவைப் பார் என்றார். அதை இப்போது எப்படிப் பார்க்கப் போகிறார்கள். அதை எப்போது பார்ப்பது? (குறுக்கீடு). நீங்கள் பேசும்போது பேசுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று பல மாண்புமிகு உறுப்பினர்கள் கள்ளச்சாராயத்தைப் பற்றி இங்கே சொன்னார்கள். புரட்சித் தலைவி டாக்டர் செல்வி ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக வந்தபிறகு, கள்ளச் சாராயத்தை ஒழிக்கவேண்டும் என்ற ஒரே நினைவோடு, ஒரு



டான்டிங்காக, நிரந்தரமாக, நாணயமாக கள்ளச் சாராயத்தை ஒழித்தே தீருவேன் என்று அன்றும் சொன்னார்கள். அதற்கான சட்டத்தைப் பிறப்பித்தார்கள். 90 சதவிகிதம் ஒழிந்துவிட்டது. அதே நேரத்தில், ஜெயலலிதாவினுடைய பெயர் வரப்போகிறது நாட்டிலே, கள்ளச்சாராயத்தை ஒழிக்கப் போகிறார்கள், என்று தி.மு.க. நண்பர்களும், தோழமைக் கட்சி நண்பர்களும் எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

நான் ஒரு ஊருக்குச் சென்றேன். கனந்தூர் என்ற கிராமத் திலே ஒரு கமிட்டியை அமைக்கச் சென்றிருந்தேன். சாராயத்தை ஒழிக்கவேண்டும் என்று அத்தனை மக்களும் ஒன்றாகத் திரண்டு, அந்தக் கமிட்டியை அமைக்க வந்தார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள், கள்ளச்சாராயத்தைக் காய்ச்சு கிற பேர்வழிகள், அதை எதிர்த்து சமாளிப்போம் என்று எதிர்த்து ஒரு கமிட்டியை அமைக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை தமிழகம் பூராவிலும் இருக்கிறது. இந்தக் கள்ளச் சாராயத்தை ஒழித்துவிடக்கூடாது என்ற சவாலை ஏற்றுக் கொண்டு, செயல்படுகின்றவர்கள், திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களும், அதனுடைய தோழமைக் கட்சி நண்பர் களும்தான் என்பதை நான் தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, இந்த தடாவெல்லாம்....(குறுக்கீடு).

திரு. வே. தம்புசாமி : அதை அனுமதிக்க முடியாது. துணைத் தலைவர், அவர்களே

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து டாக்டர் குமாரதாஸ் அவர்கள் பேச வேண்டும்.

திரு. ஜி. பழனிசாமி : அவர்கள் தவறான தகவலைக் கொடுக்கிறார்கள்.

திரு. வே. தம்புசாமி : அதை வாபஸ் வாங்குங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து டாக்டர் குமாரதாஸ் அவர்கள். அவர்கள் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. கட்சிக்காரர்கள் என்று சொல்லியிருக்கிறார். தோழமைக் கட்சிக் கட்சிக்காரர்களைச் சொல்லியிருக்கிறார். தோழமைக் கட்சிக் காரர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. வே. தம்புசாமி : அதை வாபஸ் வாங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் குமாரதாஸ் அவர்கள். (குறுக்கீடு) திரு. சிங்காரம் அவர்கள் அமர வேண்டும். உங்கள் நேரம் முடிந்தது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சிங்காரம் தயவுசெய்து அமருங்கள். உங்கள் நேரம் முடிந்துவிட்டது. அடுத்து டாக்டர் குமாரதாஸ் அவர்கள் (குறுக்கீடுகள்).

பிற்பகல் 12-25

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உறுப்பினர்கள் அனைவரும் அமரவேண்டும். (குறுக்கீடு) என்னவென்று கேட்டுச் சொல்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் பேசுகின்றபோது மற்றைய கட்சிகளைக் குற்றம் கூறுகின்ற அளவிற்கு எடுத்துச் சொல்லக் கூடாது என்ற விதி முறை இருக்கிறது. *என்று சொல்லாமல் கள்ளச் சாராயத்தை ஒழிக்கமுடியாது என்ற ஒரு கொள்கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர, ஒழிக்கக் கூடாது என்கின்ற கொள்கையை எந்த ஒரு கட்சியும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆக அந்த அளவிற்கு மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் மாற்றிக் கொள்ளவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை முன்னவர் அவர்கள் சொன்ன கருத்தையொட்டி, திரு. சிங்காரம் அவர்கள் பேசிய பேச்சில் சில கட்சிகளும், அவற்றினுடைய தோழமை கட்சிகளும் ஒழிக்கமுடியாது என்ற கொள்கையை உடையவர்களாக இருக்கிறார்கள் என்று மாற்றப்படுகிறது (குறுக்கீடு). உங்களுக்கு 5 நிமிடம் கொடுத்ததில் நீங்கள் கேட்கவில்லை. நீங்கள் அடிக்கடி பேசக் கூடியவர். காலையில்கூட நீங்கள் உங்களுடைய தொகுதியைப் பற்றி பேசிவிட்டீர்கள்.

டாக்டர் கே. குமாரதாஸ் : நமது தமிழக சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது நடைபெறுகின்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகின்ற வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்ததற்காக முதலாவது எனது நன்றியினை கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் அதை .. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து டாக்டர் குமாரதாஸ், அதுதான் இங்கே தவறான விவாதத்திற்குப் போகும். ** அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



டாக்டர் குமாரதாஸ் அவர்கள் ஆளுநர் உரையின்மீது பேச வேண்டும். உங்களுடைய விமர்சனங்களை அடுத்த கட்சியின் மீது சொல்வதாக இருந்தால், அதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும். சரியாக 15 நிமிடத்தில் முடித்துக்கொள்ள வேண்டும். 16-வது நிமிடம் அடுத்த உறுப்பினரை அழைத்து விடுவேன். குறுக்கீடுகள் இருந்தாலும் அதுவும் உங்களைச் சார்ந்தது தான். எனவே குறுக்கீடுகள் இல்லாமல் பேச வேண்டும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, இதை நீங்கள் முதலிலேயே அமல்படுத்தியிருந்தால் இந்தப் பிரச்சினை இருந்திருக்காது. இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் எங்களுடைய தோழமை கட்சியைப் பற்றியும், எங்களைப் பற்றியும் விமர்சிக்கின்றபோது நாங்கள் அதற்குப் பதில் சொல்லக் கடமைப் பட்டவர்களாக இருக்கின்றோம். நண்பர்களே, பெரியோர்களே, பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரைக்கு நான் வருவதற்கு முன்பாக சில மிக முக்கியமான கவன ஈர்ப்புத் தீர்மானங்களை நான் இந்த அவையிலே கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் குமாரதாஸ், நீங்கள் ஆரம்பத்திலேயே தவறாகப்போகிறீர்கள். முக்கியமான கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எல்லாம் பேரவைத் தலைவர் சம்பந்தப் பட்டது. பேரவைத் தலைவர் எடுப்பதைப் பொறுத்திருக்கிறது. நீங்கள் அதை இந்த ஆளுநர் உரையில் பேசும்போது பேசக் கூடாது. இப்போது உட்காருங்கள். நான் நிற்கிறேன்.

6. விதி 110-இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை. 1992–93 ஆம் ஆண்டிற்கென மத்திய அரசு ஒதுக்கியுள்ள திட்ட ஒதுக்கீடு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் பேரவைக்கு ஒரு முக்கிய அறிவிப்பைச் செய்ய இருக்கிறார்கள். அவருக்கு அனுமதி அளித்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கக் கூடிய ஒரு நல்ல தகவலை இப்பொழுது அறிவிக்க விரும்புகின்றேன். இப்போது தான் மத்திய திட்டக் குழுத் துணைத் தலைவரிடமிருந்து எனக்குக் கடிதம் வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 1992–93-ஆம் ஆண்டுக்கான

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திட்ட ஒதுக்கீட்டினை ரூ. 1,751 கோடியாக அறிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திட்டக் குழுத் துணைத் தலைவர் அனுப்பியிருக்கிற கடிதத்தை இப்போது வாசிக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-30*

"Dear Dr. Jayalalitha,

Kindly refer to your D. O. No. 2/FSC/92 dated 21st January 1992. The total plan outlay for Tamil Nadu of Rs. 1486 crores for 1992-93 was arrived at in our meeting on 10th January 1992. This itself meant a step up in the net Central assistance to Tamil Nadu. You have indicated in your recent letter there will be a further resource mobilisation effort of Rs. 165 crores. This will take the total outlay o Rs. 1651 crores. If additional credit of Rs. 50 crores under xternally aided projects, subject to implementation and Rs. 50 crres as the likely central assistance in respect of Centrally sponsom schemes transferred to the State, the exact amount will be detemined as and when the schemes are transferred or provided teh total will come to Rs. 1751 crores. Thus, the total approved out lay may now be taken as Rs. 1751 crores. This would give a growth rate ofabout 9.5 per cent over the approved outlay for the previous year Given the constraint of resources you would appreciate my difficluty in further increasing the central support I have done the maximum that is possible.

மத்திய அரசாங்கத்திற்கு இருக்கின்ற கடுமையான நிதி நெருக்கடியிலும் நமது கோரிக்கையை ஏற்று 1992-93க்கான ஆண்டு திட்ட ஒதுக்கீட்டினை உயர்த்திக் கொடுத்த மத்திய அரசுக்கும், மாண்புமிகு பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்களுக்கும், திட்டக் குழுத்துணைத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்களுக்கும் இந்த அவையின் சார்பிலேயும், தமிழக அரசின் சார்பிலேயும், தமிழக மக்கள் அனைவரின் சார்பிலேயும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்ட முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த அவை நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழக திட்ட ஒதுக்கீட்டை நாம் கோரிய வண்ணம் பெற்றுக் கொடுத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மகிழ்ச்சிகரமான செய்தி வந்திருக்கிறது. ஆகவே மகிழ்ச்சிகரமாகவே பேசி முடிக்கலாம். டாக்டர் குமாரதாஸ்.



டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நமது ஆளுநர் உரைக்கு செல்வதற்கு முன்பு, நீங்கள் அது உங்களுடைய அலுவல் சம்பந்தப்பட்ட விஷயம் என்று சொன்னாலும், ஒரு வார காலமாக கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டு, அது நடைமுறைக்கு வராத காலக் கட்டத்தில் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அதைப் பேச முடியாது. அவைத் தலைவருடைய உரிமைக்குள்ளே நீங்கள் புகுந்து பேசுவது முறையல்ல. பிரச்சினையைப் பேசாமே தவிர, நான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன் அதை எடுத்துக் கொள்ளவில்லை என்று பேசுவது சரியல்ல. நான் அதை கவன ஈர்ப்புத் தீர்மானமாகவும் கொடுத்திருக்கிறேன் என்று சொல்லி உங்களுடைய பிரச்சினைக்கு வரவும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிற ஒன்றிரண்டு நிகழ்வுகளை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

'தாய்' பத்திரிகை என்ற ஒரு பத்திரிகையில் விஸ்வகர்மா எனப்படும் பொற்கொல்லர் சமூகத்தைச் சேர்ந்த தாய்மார்களை மிகவும் இழிவுபடுத்தி ஒரு செய்தியை திரு. கி. ராஜ்நாராயணன் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அவர் ஒரு மிகப்பெரிய எழுத்தாளர்தான் எல்லோராலும் பாராட்டப்பெற்றவர்தான். ஆனால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரைக்கும், 'வயதுவந்தவர்களுக்கு மட்டும்' என்ற தலைப்பில் இந்த சமுதாயத்தை மிகவும் கேவலமாக, அந்த சமுதாயத்தைச் சேர்ந்த தாய்மார்கள் மனங்கள் புண்படும் விதத்திலே எழுதியிருக்கிறார்கள். இப்படி எழுதுகின்றவர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டனையும் வழங்கப்பட வேண்டும். அது மட்டும் அல்லாமல் எந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களானாலும் சரி, அவர்களுடைய மனங்கள் புண்படும் விதத்தில் யார் எழுதினாலும் அதைத்தடுக்க இந்த அரசு முன் வரவேண்டுமென்று ஒரு வேண்டுகோளை முதலாவதாக வைத்துக் கொண்டு, என்னுடைய பிற கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆளுநர் உரையிலே (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே குறுக்கிடுவதற்கு என்ன இருக்கிறது. இதிலே மேற்கொண்டு விளக்கம் வேண்டாம். அவர் பேசி கொண்டிருக்கிறார். டாக்டர் குமாரதாஸ் தொடர்ந்து பேசுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : காவல் துறையை விரிவு படுத்த [illegible] 80.85 கோடி ரூபாயை அதிகமாக ஒதுக்கி அந்த துறைக்கு நீங்கள் ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். பாராட்டுகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் [1992 பிப்ரவரி 6

பிற்பகல் 12-35

அதே நேரத்தில் நேற்றைய தினம் பேசிய இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாய்' என்ற வாரப் பத்திரிகையில் விஸ்வகர்மா இனத்தவரைப் பற்றி ஏதோ தவறாக எழுதப்பட்டிருந்தது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். இப்படி பொதுப்படையாகச் சொன்னால் இந்த அவைக்கும், அரசுக்கும் விவரங்கள் தெரிய வருவது சாத்தியம் அல்ல. எனவே என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரங்கள் திரு. குமாரதாஸ் அவர்களிடம் இருக்குமானால் அதை இந்த அவைக்குத் தெரிவிப்பது நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ச்சியாக அவர் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் என்று குறிப்பிடுகிறார்கள். அது சரி அல்ல. காங்கிரஸ் உறுப்பினர் என்றே குறிப்பிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காங்கிரஸ் (ஐ) என்று தான் இருக்கிறது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் குறிப்பிட்டது, இந்த அவையிலே சொல்லி பதிவு செய்யப்படக் கூடாததாக இருக்கக் கூடும். ஆகவே அதுபற்றிய குறிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்தால் அதற்கு என்ன நடவடிக்கைகளை முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ள முடியுமோ அவற்றை எடுத்துக் கொள்வார்கள். அந்தக் குறிப்புகளை அவர் மட்டும் அவர்களுக்குத் தரும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். இங்கே வெளியிட வேண்டும் என்ற அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை முதலமைச்சருக்குக் கொடுத்துவிட கேட்டுக் கொள்கிறேன்.



[1992 பிப்ரவரி 6]

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, தாய் பத்திரிகையை யாரும் படிக்கவில்லை. நீங்கள் இங்கே சொல்வதிலிருந்து இந்தச் சமுதாயத்திற்குப் பரவலாக ரொம்ப அசிங்கமாகிவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றிய விவரம் தெரிவிக்க வேண்டாம் என்றுசொல்லியாகிவிட்டது. முதலமைச்சருக்குக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதற்காக குறிப்பை கேட்டிருக்கிறார்கள். நான் கொடுத்திருக்கிறேன். அவர்கள் எடுக்கின்ற முயற்சிக்கு எனது இதயம் கனிந்த பாராட்டுக்களை கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காவல்துறையைப் பொறுத்தவரைக்கும் 80.45 கோடி ரூபாயை புதுப்பிப்பதற்காக பணம் ஒதுக்கீடு செய்திருப்பதாக கூறியிருக்கிறார்கள். நன்றி. அதே நேரத்தில் காவல் துறையினுடைய சீரழிந்த தன்மைகளையும் நான் இங்கே கூறாமல் இருக்க முடியாது. நேற்றைய தினம், நமது இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர் டாக்டர் செல்லக்குமார் அவர்கள் ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் ஆட்சேபிக்கின்ற அதையே திரும்பத் திரும்ப சொல்லக்கூடாது.

டாக்டர் தே. குமாரதாஸ் : தேர்தல் கமிஷனிலே இந்திரா காங்கிரஸ் என்ற போர்வையிலே தான் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த மாதிரி நீங்கள் தேர்தல் கமிஷன் சொன்னதை அப்படியே சொல்ல வேண்டுமானால் காங்கிரஸ் (ஐ) என்று சொல்லுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : நான் தமிழ்நாடு என்பதால் தமிழிலே சொல்லலாம் என்று பார்த்தேன். நீங்கள் ஆங்கிலத்திலே சொல்ல வேண்டுமென்று சொல்கிறீர்கள். நான் (ஐ) என்றே சொல்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : நாங்கள் வேண்டுமென்று தான் 'ஐ' வைத்துக் கொண்டோமே தவிர It is not the Election Commission's Ruling. Election Commission's Ruling is 'Indian National Congress'. நாங்களாகவே வைத்துக் கொண்டோம் 'ஐ' என்று. அவ்வளவுதான்.

டாக்டர் தே. குமாரதாஸ் : எனக்கு அந்த சப்ஜெக்டுக்கு போனால் நேரம் ஆகிவிடும். இந்த சப்ஜெக்டிலே விளக்காமலும் இருக்க முடியாது. கேரளாவில் உன்னிக்கிருஷ்ணன்

காங்கிரஸ் என்று இருக்கிறது. அதற்கு 'யு' என்று போட்டிருக்கிறார்கள். ஐக்கியமாக காங்கிரஸ் இருந்த நேரத்தில் என். காங்கிரஸ் என்று போட்டிருந்தார்கள். அதே போல மரியாதைக்குரிய முன்னாள் மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அன்றைய காங்கிரஸிலிருந்து தான் விடுபடுகின்ற காலகட்டத்தில் காங்கிரஸ் (ஐ) என்கிற போர்வையிலே தான் 'ஐ' யை அன்றைக்குக் கொடுத்தார்கள். அதை யாரும் மறுக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி 1969 ஆம் ஆண்டு பிளவுபட்ட போது காங்கிரஸ் 'ஆர்', காங்கிரஸ் 'ஓ' என்று அன்றைய மக்கள் அவை சபாநாயகர் அவர்கள் அதற்குப் பெயரிட்டார்கள். அதே பெயரை அப்படியே எலக்ஷன் கமிஷன் முதலிலே ஏற்றுக் கொண்டது. — நான் பேசும்போது அவர் நின்று கொண்டிருக்கிறார் — பிறகு தேர்தல் கமிஷன் ஆணையம் அவர்களுடைய தீர்ப்பை — சென்வர்மா அவர்கள், அவருடைய தீர்ப்பை அறிவித்தார்கள். ஜகஜீவன்ராம் தலைமையிலே இயங்கிக் கொண்டிருந்த காங்கிரஸ் தான் உண்மையான காங்கிரஸ் — இண்டியன் நேஷனல் காங்கிரஸ் என்று அங்கீகாரம் அளிக்கப்பட்டது. அது 1970 ஆம் ஆண்டு. அப்போதே சில பேர் கேட்டார்கள். யார் இந்த சென்வர்மா? காங்கிரஸ், உண்மையான காங்கிரஸ் என்று தீர்ப்பு அளிக்க இந்த சென்வர்மா யார், மக்கள் தீர்ப்பு அளிக்கட்டும் என்று சொன்னார்கள். 1971ல் நாடு முழுவதும் மக்கள் தெளிவாகத் தீர்ப்பு அளித்தார்கள். இந்திரா காந்தியின் தலைமையிலே இருக்கின்ற காங்கிரஸ் தான் உண்மையான காங்கிரஸ் என்று 1971 ஆம் ஆண்டு மக்கள் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே உன்னிகிருஷ்ணன் காங்கிரஸ் என்று ஒரு காங்கிரஸ் எப்போதுமே இருந்ததே கிடையாது. தேவராஜ் அர்ஸ் காங்கிரஸ் தனியாக தலைமை தாங்கியபோது காங்கிரஸ் 'யு' என்று வைத்துக் கொண்டார்கள். பிறகு தேர்தல் கமிஷனிலே தெளிவாக இண்டியன் நேஷனல் காங்கிரஸ் என்று எங்களுடைய காங்கிரஸுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டதற்குப் பின்னாலே, நாங்கள் விரும்பி இண்டியன் நேஷனல் காங்கிரஸ் ஐ. என். சி. 'ஐ' என்று வைத்திருக்கிறோமே தவிர இந்திரா காங்கிரஸ் என்ற பெயர் தேர்தல் கமிஷனிலோ வேறு எந்த அடிப்படையிலோ இந்திரா காங்கிரஸ் என்ற பெயரே கிடையாது. எனவே இண்டியன் நேஷனல் காங்கிரஸ் என்று தான் அவர் குறிப்பிட வேண்டும். வேண்டுமானால் காங்கிரஸ் 'ஐ' என்று குறிப்பிடட்டும்; எனக்கு ஆட்சேபணை இல்லை.

பிற்பகல் 12-40.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரட்டைக் காளைச் சின்னம், பசுவும் கன்றுமாக மாறி, பசுவும் கன்றும் சின்னம் கைச் சின்னமாக மாறி.......





THIRU S.R. BALASUBRAMONIYAN : It is with us. All the symbols are with us. we have freezed the. . (Interruption) we have asked the Election Commission to freeze them. It is not for him. .. .. .. .. .. .. .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விவரங்களுக்கு எல்லாம் போய்க் கொண்டிருந்தால் நேரம் ஆகும். தயவு செய்து முடியுங்கள். நீங்கள் 12.26-க்கு பேச ஆரம்பித்து இப்போது 12.40 ஆகிவிட்டது. (குறுக்கீடு) ஆளுநரின் உரையின்மீது பேசுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : நீங்கள் எல்லோரும் சொன்னதால் தான் அதை விட்டுவிடுகிறேன். இந்த காவல் துறையைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அதில் பல குளறுபடிகள் இருக்கின்றன. நான் அதை நினைவுபடுத்துவது என்னுடைய கடமையென்று கருதுகிறேன். மிக வேதனையோடு சொல்லுகிறேன்ற இன்றைக்கு தமிழ்நாட்டில் நீங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று மக்கள் மத்தியில் நல்ல பெயர் எடுக்கிற நேரத்தில் சில சந்தர்ப்பங்களில் 6 மாத காலத்திற்கு இடையில் 12 முறை துப்பாக்கிச் சூடு தமிழ்நாட்டில் நடைபெற்றிருக்கிறது. எடுத்ததற்கெல்லாம் துப்பாக்கி ஏந்துகின்ற ஒரு காலக்கட்டம் வருமென்று சொன்னால் அதை தாக்கு பிடிக்க முடியாது. எனவே, நீங்கள் மிக கண்டிப்புடன் துப்பாக்கிச் சூடு நடத்துவதை அவாய்டு செய்கிற விதத்தில் காவல் துறையினருக்கு நீங்கள் புத்திமதி சொல்லவேண்டும். எங்களுக்கு எல்லாம் ஒரு பயம் என்னவென்று சொன்னால் இப்போது இருக்கிற துப்பாக்கியின் மூலம் இப்படி சுட்டால் நீங்கள் நவீன ரக துப்பாக்கிகள் வாங்கிக் கொடுக்கிறபோது அதனுடைய எண்ணிக்கை அதிகமாக போய்விடுமோ என்கிற ஒரு எண்ணம் ஏற்படுகிறது. எனவே, அதிலே நீங்கள் மிக கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

இரண்டாவது சில நாட்களுக்கு முன்பு பத்திரிகையில் வந்த செய்தியை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு கொலை நடக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்தக் கொலை, கொலை தான் என்று டாக்டர் சர்டிபை செய்கிறார்; போலீஸ் அதிகாரிகள் சொல்கிறார்கள்; சாட்சியங்கள் இருக்கின்றன. அத்தனையையும் வைத்து கோர்ட்டுக்குப் போகிறார்கள். கோர்ட்டில் விவாதம் நடக்கிறது. 'பெனிபிட் ஆப் டவுட்' ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்பதற்காக அந்தக் கொலைக்காரன் விடுதலை செய்யப்படுகிறான். ஆனால் அந்த நீதிமன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பில் உண்மை குற்றவாளியைக் கண்டுபிடி என்று சொல்லி இதுவரைக்கும் தீர்ப்பு எழுதப்படாத காரணத்தால் தொடர்ச்சியாக வன்முறைச் சம்பவங்கள் இந்த நாட்டில் நடைபெறுகிறது என்பது என்னுடைய ஒரு குற்றச்சாட்டு. 2 மாதத்திற்கு முன்பாக பத்திரிகையில் வந்த ஒரு செய்தியைச் சொல்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு தாய் சொல்லி யிருக்கிறார்; என்ன சொல்லியிருக்கிறார் என்று சொன்னால் என்னுடைய மகன் ஒரு வயது குழந்தையாக இருந்த நேரத்தில் அவனுடைய தகப்பனார் கொலை செய்யப்பட்டார். கொலை செய்தவனுக்கு நீதி மன்றத்தின் தீர்ப்புகள் வழங்கப்பட வில்லை, அவனை விட்டு விட்டார்கள். எனவே அவன் திருமணம் செய்யாமல் 34வயது வரை அவனுடைய சகோதரி களுக்கு எல்லாம் திருமணம் செய்து வைக்கும் வரை வளர்ந்தான், அதற்கு பிறகு அவனுடைய தகப்பனாரைக் கொலை செய்த வனை, கொலை செய்ய விட்டு விட்டான் என்று சொல்லுகிற அளவுக்கு இன்றைக்கு மனதிலே பதிந்து இருக்கிறது என்று சொன்னால் சட்டம், நியாயம் சரியாக இருக்கும் என்று சொன்னால் நாட்டிலே நடைபெறுகின்ற வன்முறைகளில் 75 சதவிதம் தடுத்து விட முடியும் என்று நம்புகிறேன். எனவே, நீங்கள் நீதிபதிகளுக்கு உத்தரவுப் போடுகின்ற தகுதி நமக்கு—எனக்கு — கிடையாது. இருந்தாலும் உண்மையான குற்றவாளிகளை கண்டு பிடிக்கின்ற விதத்தில் நீதியை நீங்கள் இடையிலே நிறுத்தி விடக்கூடாது. அப்படி செய்கின்ற பட்சத்திலே தான் அந்த உள் உணர்வின் காரணமாகத்தான் அது வன்முறையைத் தூண்டுகின்ற வாய்ப்பு ஏற்படுகிறது. அதை உங்களுடைய மேலான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அதற்கான நடவடிக்கையை நீங்கள் மேற் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நமது அரசு ஆட்சிப் பொறுப்பில் வந்த பிறகு முதலாவதாக என்னுடைய கோரிக்கையாக ஏற்று ஊதியம் இல்லாத ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப்படவேண்டும் என்ற ஒரு கோரிக்கையினை நான் வைத்த நேரத்தில் சிலபல கோடிகள் ஆனாலும் தருகிறேன் என்ற ஒரு உத்தரவாதத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஒப்புதலோடு இங்கே அறிவித்தார்கள். ஆனால் அறிவித்த 6 மாதங்கள் ஆகியும் அவர்களுக்கு ஊதியம் கிடைக்கப்பட வில்லை என்ற காரணத்தால் மீண்டும் அவர்கள் வறட்சியின் கோரப் பிடியில் இருக்கிற காரணத்தால் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் சம்பளம் இல்லாத சூழ்நிலையில் அவர்கள் போராட வேண்டும் என்பதற்காக மீண்டும் போராட்டத்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இக்கோரிக்கையை கனிவோடு பரிசீலிப்பதாக நேற்றையதினம் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை 1988 வரைக்கும் இப்போது அரசு பரிசீலிப்ப தாக, பரிசீலிக்க இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் 1991 ஆம் ஆண்டு வரைக்கும் அரசு அங்கீகாரம் பெற்ற, அரசினுடைய முழு அனுமதியைப் பெற்ற பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்திப் போராடி வருகிறார்கள். அந்தப் போராட்டத்தில் கிட்டத்தட்ட 300 தாய்மார்கள்.— ஆசிரியைகள்—மதுரை சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.



கிட்டத்தட்ட 200 ஆசிரியர்கள் பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். நீங்கள் தான் கருணை உள்ளத்தோடு அவர்களுக்கு விடுதலை வழங்கலாம் என்ற உத்திரவாதத்தைக் கொடுத்து விட்டீர்கள். எனவே, கடந்த முறை நான் இந்த வேண்டுகோளை வைத்த நேரத்தில் நமது தமிழக முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு அவர் களை உடனே விடுதலை செய்வதற்கான உத்தரவைப் பிறப் பித்தீர்கள். நன்றி. அதேபோல் இப்போது அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்பட்டிருக்கிற காலகட்டத்தில் அவர்களை நீங்கள் விடுதலை செய்யவேண்டுமென்று மிக பணிவன்பான வேண்டுகோளை உங்கள் முன்னால் வைக்க நான் கடமைப்பட் டிருக்கிறேன்.

அடுத்து, கழிந்த முறை ஜனதாதள ஆட்சி மத்தியில் இருந்த நேரத்தில் விவசாய பெருங்குடி மக்கள் கூட்டுறவுச் சங்கங்களில் வாங்கிய கடன்களை தள்ளுபடி செய்யும் என்ற உத்தரவினை இட்டார்கள். இந்திய நாடு முழுவதும் தள்ளுபடி செய்வதற் கான ஆணை பிறப்பிக்கப்பட்டது.

பிற்பகல் 12.45

தமிழ்நாட்டில்கூட ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த நேரத் தில், அவர்களுக்கு, உங்களுடைய கடன்களெல்லாம் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டன. 25 ரூபாய் அல்லது 150 ரூபாய் மட்டும் நீங்கள் கட்டவேண்டுமென்கிற உத்தரவெல்லாம் வந்தது. ஆனால் இப்போது மீண்டும் அதே பணத்தைத் திருப்பிக் கட்டு என்று சொல்லி நிர்பந்தப்படுத்துகின்ற ஒரு சூழ்நிலை எங்களுடைய பகுதியிலே பல கூட்டுறவுச் சங்கங்களிலே வந்திருக்கிறது. மற்ற மாவட்டங்களைப் பற்றி எனக்கு தகவல் இல்லை. எனவே நீங்கள் இதிலே உடனடியாகத் தலையிட்டு, தள்ளுபடி செய்த பணத்தை மீண்டும் கட்ட வேண்டுமென்கிற சூழ்நிலையை மாற்றித் தந்திட வேண்டுமென்று நான் மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, பினாமி நிலங்களை ஒழிப்பதுபற்றி நீங்கள் சென்ற கவர்னர் உரையிலே குறிப்பிட்டு இருந்தீர்கள். இது உங்களுடைய தகவலுக்கு, அரசினுடைய எண்ணத்திற்கு எட்டு கின்ற விதத்தில் இருக்குமா என்று தெரியவில்லை. எங்கள் பகுதியில் ஆயிரம் ஏக்கர், இரண்டாயிரம் ஏக்கர் என்ற அளவில் ரப்பர் தோட்டங்களை வைத்திருக்கிறார்கள். இவைகளை- யெல்லாம் 'பி' மெமோ பட்டாக்களைப்போட்டு, அவர்கள் கைவசப்படுத்தி வைத்திருக்கிறார்கள். இதுபற்றி கேட்டால் 'பி' மெமோவில் பணம் கட்டுகிறோம் என்று சொல்லி, அதிலே ஆண்டொன்றுக்கு பல கோடி ரூபாய் வருமானம் அவர் களுக்கு வந்துகொண்டிருக்கிறது. எனவே இதில் அரசு

தீவிரமாக கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்க வேண்டும். காத்திமதி எஸ்டேட் என்று ஒன்று இருக்கிறது. இதுபோன்று இன்னும் பல இருக்கின்றன. மூன்றாயிரம் ஏக்கர், இரண்டாயிரம் ஏக்கர் என்று தனித்தனியாக வைத்திருக்கிறார்கள். அவைகளில் நீங்கள் தனியாக கவனம் செலுத்தி, அவைகளை அவர்கள் எப்படி கைவசப்படுத்தி இருக்கிறார்கள் என்டதைப் பார்த்து, அவைகள் அரசினுடைய சட்ட திட்டங்களுக்குப் புறம்பாக இருக்கும் என்று சொன்னால், அப்படிப்பட்ட நிலங்களை எடுத்து நீங்கள் ஏழைகளுக்கு வழங்குவதற்கு முன்வரவேண்டுமென்று நான் இங்கே இந்த நல்ல சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, சென்ற முறை, நீங்கள் ஆளுநர் உரையில் குறிப்பிட்டு இருந்தபடி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கான தேர்தல்கள் மிக விரைவில் நடத்தப்படும் என்று குறிப்பிட்டு இருந்தீர்கள், ஆனால் இந்த ஆண்டு அதை மறந்து விட்டீர்கள். ஏனென்று தெரியவில்லை. ஆகவே, இந்த ஆண்டு நீங்கள் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கான தேர்தல் நடத்தப்படும் என்ற உத்தரவாதத்தைத் தந்து, மிக விரைவில் அதை நடத்தித் தந்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தல் நடத்துவதை இந்த அரசு மறந்து விட்டது என்பது சரியல்ல. இந்த ஆண்டு இப்போதுதான் தொடங்கி இருக்கிறது. இப்போது சட்டசபை கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கிறது. இதனை அடுத்து, இன்னும் சில நாட்களிலேயே பட்ஜெட் கூட்டத் தொடர் நடைபெற உள்ளது. பட்ஜெட் கூட்டத் தொடர் முடிவதற்கே ஏப்ரல் மாத இறுதி ஆகிவிடும் அல்லது மே மாத முதல் வாரம் ஆகிவிடும். அதன் பின்னர் ஏற்கெனவே ஹைகோர்ட்டுக்குக் கொடுத்திருக்கிற உத்தரவாதத்தின்படி நாங்கள் மே மாதம் 31-ஆம் தேதிக்குள் கூட்டுறவு சொசைட்டிகளுக்கான தேர்தல்களை நடத்தி முடிக்க வேண்டியிருக்கிறது. எனவே, இவையெல்லாம் முடிந்தபிறகுதான், ஊராட்சி மன்றங்களுக்கு உள்ளாட்சித் தேர்தல்களை நடத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் குமாரதாஸ் சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள், மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள்



தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த நேரத்திலே எல்லா பள்ளிகளிலேயும், தொழிற் பயிற்சிக் கல்லூரிகளிலேயும் தொழிற் பயிற்சி பகுதி நேர ஆசிரியர்களை நியமித்தார்கள் ஆனால் அவர்களில் யாருக்குமே, தமிழ்நாடு முழுவதும் சம்பளம் இதுவரைக்கும் கிடைத்ததாகத் தெரியவில்லை. அப்படி ஒரு ஆசிரியர்களை நியமித்து, பகுதி நேர ஊழியர்களாக நியமித்த பிறகு அவர்களுக்கு ஊதியம் கொடுக்காமல், பல ஆண்டுகளாக அவர்கள் தொ்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பணி நிரந்தரம் செய்யப்படுமா? ஊதியம் வழங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமா என்கிற தகவல்களையும் எங்களுக்கு நீங்கள் சொல்வீர்கள் என்று சொன்னால், எங்களைவிட பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு மன ஆறுதலாக இருக்கும். அவற்றையும் நீங்கள் கவனத்திலே கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கம். பகுதி நேர ஆசிரியர்களாக இருந்தவர்களுக்கு, பகுதி நேர ஊதியம் தரப்பட்டிருக்கிறது. அவர்கள் முழு நேரமும் தங்களை ஆசிரியர்களாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இருந்தார்கள். அதுதான் கோரிக்கையே தவிர, சம்பளமே இல்லாமல் இல்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்தில் நான் கொஞ்சம் கருத்து வேறுபாடு கொள்கிறேன். டென்டேடிவ் வாக 600 ரூபாய் சம்பளம் என்று ஃபிக்சேஷன் செய்து கொடுத்து இருக்கிறார்கள். இது பல ஆண்டுகளாக கிடைக்காத பள்ளி ஆசிரியர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுக்கு, அவர்கள் யார் என்கின்ற விவரங்களைச்சொல்ல வரவில்லை. அவரே ஒரு புள்ளி விவரக் கணக்கை எடுத்து, பாதிக்கப்பட்டவர்கள் யார் என்பதைப் பார்த்து, அவர்களுக்குச் சம்பளம் கொடுத்து விட்டால் போதுமானது என்பதுதான் என்னுடைய வேண்டுகோளே தவிர, நான் அதிலே விவாதத்திற்குச் செல்ல விரும்பவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி யாராவது ஆசிரியர்கள் இருந்தால் அவர்கள் அரசின் அனுமதியைப் பெறாமல் அவர்களாகவே நியமித்துக் கொண்டவர்களாக இருப்பார்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுடைய நிலை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன். நான் குறிப்பிடுவதெல்லாம் அரசு பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களைத்தானே தவிர, இந்தப் பகுதி நேர ஆசிரியர்களைப் பொறுத்தவரைக்கும், அரசு பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களைத்தான் சொல்கிறேன் ; தனியார் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களைப் பற்றிச் சொல்லவில்லை.

பிற்பகல் 12-50

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத்திரம், எனக்குத் தெரிய 17 பேர் என்னிடம் ஒட்டுமொத்தமாகக் கையெழுத்துப் போட்டு மனுக் கொடுத்து இருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது). முக்கியமான விஷயத்தைச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடித்து விடுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : முடித்து விடுகிறேன். பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றி இங்கே ஒன்றை அறிமுகம் செய்திருக்கிறீர்கள். நான் கேட்டுக் கொள்கிறேன், கழிந்த முறை சட்டமன்றக் கூட்டம் நடைபெற்ற நேரத்திலே கன்னியாகுமரி மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்த—வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலேயும், மாண்புமிகு முதலமைச்சரவர்களிடத்திலேயும் வேண்டுகோள் அனுப்பிய நேரத்தில், நாங்கள் சட்டமன்றத்தை விட்டு வெளியேறுவதற்கு முன்பாகவே இங்கிருந்து ஒரு குழுவைக் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அந்தப் பெருந்தன்மையை நான் பாராட்டுகிறேன். அதற்காக 42 இலட்சம் ரூபாயையும் ஒதுக்கீடு செய்தார்கள். ஆனால் ஆயிரக்கணக்கான, நூற்றுக்கணக்கான வாழையும், இரப்பர் மரங்களும் அழிக்கப்பட்ட அந்தப் பகுதியில் ஒரு வாழை மரம் பழுதடைந்து விவசாயப் பெருங்குடி மக்கள் பாதிக்கின்றபொழுது ஒரு வாழைக்கு 18 காசு நஷ்டயீடு என்ற வீதத்தில் நீங்கள் ஒதுக்கீடு செய்தால் அதை எந்த விதத்தில் நாங்கள் ஏற்றுக் கொள்வது ? உண்மையிலேயே அந்த வாழைமரம் விவசாயம் செய்பவனெல்லாம் தாலியை அடகு வைத்து, கம்மலை அடகு வைத்து, இப்படியெல்லாம் விவசாயம் செய்கிறவனுக்கு ஆயிரம் வாழை மரங்களுக்கு 150 ரூபாய் என்று கையிலே கொடுத்தால் அவன் எப்படித் தப்ப முடியும் ? ஆகவே, இப்படி ரொம்பக் கொடூரமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு தனியாகக் கருணை செய்து, இரப்பர் மரமானாலும் சரி, வாழை மரமானாலும் சரி, (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்துப் பேசும்பொழுது மற்ற கோரிக்கைகளை வைக்கலாம். திரு. எஸ். வி. சண்முகம்.



டாக்டர் தே. குமாரதாஸ் : முக்கியமான விஷயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 4 பேர் பேச வேண்டும். இது உங்கள் நேரம் மட்டுமே அல்ல. மற்றவர்களுக்கும் நேரம் கொடுக்க வேண்டும் அல்லவா ? உட்காருங்கள். நான் உங்களுக்கு இரண்டு மூன்று முறை எச்சரித்து விட்டேன். போதும். அடுத்துப் பேசும்பொழுது மற்றக் கோரிக்கைகளை வையுங்கள். திரு.சண்முகம்.

திரு. எஸ். வி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ......

டாக்டர் தே. குமாரதாஸ் : ஒரேயொரு நிமிஷம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சண்முகம், உட்காருங்கள். ஒரு நிமிஷத்தில் முடியுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் ஒரு மிக முக்கியமான பிரச்சினையை நான் இதற்கு முன்பு சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில் சொல்லி வந்திருக்கிறேன், இப்பொழுதும் சொல்கிறேன். யானைக்கால் நோய். இந்த யானைக்கால் நோய் ஒட்டு மொத்தமாக எங்கள் மாவட்டத்தில் வேக வேகமாகப் பரவி வருகிறது. அதைத் தடை செய்யுங்கள், தடை செய்யுங்கள் என்று எல்லாச் சட்டமன்றக் கூட்டத்திலும் அலறிக் கொண்டிருக்கிறேன். ஆனால் யானைக்கால் தானே, நடப்பதற்கு வசதியாக இருக்குமே என்று விட்டு விடுகிறீர்களோ என்று எனக்குப் புரியவில்லை. எனவே, உடனடியாக அதைக் கவனத்திலே கொண்டு, மாவட்டத்தில் பல சென்டர்களில் அது மிக வேகமாகப் பரவி வரக்கூடிய நோய். அதைத் தடுத்து நிறுத்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நான் சித்த மருத்துவ டாக்டர் என்கிற காரணத்தினால், அதிலே ஒரு கோரிக்கையைப் பேசியாக வேண்டும். இந்த அலோபதி—ஆங்கில முறை மருத்துவத் துறைக்கு நீங்கள் செலவிடுகின்ற பணத்தில் பத்தில் ஒரு பங்கு—இது தமிழ் மருத்துவம், தமிழர் தமிழ் தமிழ் என்று சொல்லுகின்ற நம்மைச் சார்ந்த மருத்துவம். இது வளர வேண்டுமென்று சொன்னால், ஆங்கில முறை மருத்துவத்தில் தீர்க்க முடியாத சிலபல நோய்களை இதில் தீர்க்க முடிகிறது. அதை நடைமுறையில் கண்கூடாகக் கண்டவர், பரிசோதித்தவர். ஆகவே, நீங்கள் அதைக் கருத்திலே கொண்டு, இந்தத் துறை—சித்த மருத்துவத் துறை வளர்வதற்கு

அதிகமாகப் பண ஒதுக்கீடு செய்வதோடு மட்டுமல்லாமல், நீடித்து வேலை இல்லாமல் இருக்கக்கூடிய மருத்துவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்திடல் வேண்டுமென்று கேட்டு, இறுதியாக ஒரு கருத்தினை சொல்லி முடிக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும் இரண்டு நிமிஷங்கள் ஆகிவிட்டன. ஒரு நிமிஷம் கேட்டீர்கள். இரண்டு நிமிஷங்களாக எடுத்துக் கொண்டீர்கள். போதும். அமருங்கள் (குறுக்கீடு) இனி அல்ல. திரு சண்முகம்.

திரு. எஸ். வி. சண்முகம்: பேரவைத் தலைவரவர்களே மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது நன்றி கூறுகின்ற தீர்மானத்தில் ..............

டாக்டர் தே. குமாரதாஸ்: ஒரேயொரு கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசுகிறார். உட்காருங்கள் சரி.

டாக்டர் தே. குமாரதாஸ்: ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். குழித்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நாலேகால் கோடி ரூபாய் செலவாகி விட்டது. இன்னும் 25 இலட்சம் ரூபாய் செலவு செய்யாத காரணத்தினால், அந்த திட்டம் செயல்படாமல், கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. இன்னும் 25 இலட்சம் ரூபாய் செலவு செய்து அந்தக் குழித்துறை ஆற்றுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சண்முகம்.

பிற்பகல் 12.55

**திரு. எஸ். வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது நான் சார்ந்திருக்கிற ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்கிற நல்ல வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இந்தத் தமிழகத்தில் உருவாக்கப்பட்டதற்குப் பின்பு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்தில் இரண்டாவது தடவையாக உரை நிகழ்த்தியிருக்கிறார்கள் என்றாலும் இரண்டிற்கும் இடைவெளி 6 மாதம்





என்பதை கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். 6 மாதம் என்பது அரசியல் வரலாற்றில் மிகக் குறுகிய காலமாகும். 6 மாதம் என்பது ஆளுமையின் தன்மைகளை, அதுவும் முதல் முறையாக அதிகாரத்திற்கு வந்திருக்கக் கூடிய ஒருவர் புரிந்து கொள்வதற்கே 6 மாதம் தேவைப்படும். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆற்றல் மிக்க செயல் திறனால் ஓயாது உழைக்கின்ற தன்மையால் இந்த 6 மாதத்தில் இந்த மண்ணில் தன்னுடைய ஆளுமையின் முத்திரைகளைப் பதித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தமிழகத்தில் ஆட்சிப் பீடத்திற்கு வருவதற்கு முன்பு எத்தகைய நிலைமை இருந்தது என்பதை எண்ணிப் பார்த்தால் இப்போது இருக்கிற அருமை புரியும். தமிழகம் பஞ்சாபாக மாறி விட்டதோ, தமிழகம் பயங்கர வன்முறையாளர்களின் வேட்டைக் காடாகச் சிதறி விட்டதோ என்ற நிலைமை இருந்தது. எங்களுடைய மதுரை மாநகரில் கூடல்நகர் என்ற பகுதியில் வாரம் தோறும் குண்டுகள் வீசி விளையாடிக் கொண்டிருந்தார்கள். எப்படி லட்டு உருண்டைகளை பைகளில் கொண்டு செல்கிறார்களோ அதைப் போல குண்டுகளை பைகளில் கொண்டு சென்ற போது பஸ்களில் வெடித்து சேதம் அடைந்த சம்பவங்கள் எல்லாம் தமிழ்நாட்டில் நடைபெற்றன.

இதே தலைநகரில் நடுநாயகமான ஓரிடத்தில் 16 பேர்களைச் சுட்டுக் கொன்று விட்டு 350 கிலோ மீட்டர் ஒரு வேனில் டேப் போட்டு பாட்டுப் பாடிக்கொண்டே போய், தோப்பிலே இருந்து விருந்தும் மருந்தும் சாப்பிட்டுவிட்டு மறுநாள் கப்பலேறி தப்பிப் போகும் நிலைமை இந்த மண்ணிலே இருந்தது.

அதைப் போல இந்தியாவினுடைய மிகப் பெரும் தலைவர், உலகத் தலைவர்களிலே ஒருவர் இந்த மண்ணிலே தான் வீழ்த்தப் பட்டார். இத்தகைய அச்சம் சூழ்ந்திருக்கிற நிலைமையை மாற்றி முதலிலே இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்கு அமைதியைத் தந்தது இந்த அரசு என்பதை யாரால் மறுக்க முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி).

இங்கே ஏராளமான பிரச்சினைகள் உண்டு. விலைவாசிப் பிரச்சினை உண்டு. வேலையில்லாத் திண்டாட்டம் உண்டு. அவை இப்போது வந்தவை அல்ல; நீண்ட நெடுங்காலமாகவே இருக்கின்றன. ஆனால் அமைதி அழிந்து போனால் எல்லோரும் [illegible] என்பதை உணர்ந்து இந்த அரசு [illegible] பாராட்டாமல் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி).

[திரு எஸ்.வி. சண்முகம்] [1992 பிப்ரவரி 6

அடுத்து, பொதுவாக இந்த அரசினுடைய அணுகுமுறை மிகத் திருப்திகரமாக இருக்கிறது. நேற்று கூட முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய தாயாரின் பெயரில் ஒரு போக்குவரத்துக் கழகத்தை உருவாக்க வேண்டுமென்று ஓர் உறுப்பினர் கூறிய போது வேண்டாம் என்று சொன்னார்கள். இங்கே ஒரு அரசு இருந்தது. ஏற்கெனவே தாய் பெயரை வைத்து மகிழ்ந்தது. பாசிப் பயறுக்குத் தன்னுடைய டைய பெயரை வைத்து மகிழ்ந்தது. என் நெல்லுக்குத் தன்னு முதலமைச்சர் அவர்களே, உங்களுடைய அணுகுமுறை எங்களுக் குத் திருப்தி தருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு

இன்னொரு கருத்தும் சொல்லப்படுகிறது. இந்த மாநில அரசு மத்திய அரசோடு மோதிக் கொண்டிருப்பது போன்ற ஒரு தோற்றம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அது உண்மை அல்ல. ஒரு மாநில அரசு உரிமைகளைக் கேட்பது மோதுதல் ஆகாது. ஒரு மாநில அரசு என்பது தன்னுடைய உரிமைகளைக் கேட்பது, மத்திய அரசு தன்னுடைய நிலைமைகளைச் சொல்வது அத்தகைய தன்மையிலே இருப்பதை இந்த அறிக்கையிலேயும் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். "The acute economic crisis confronting the nation has affected almost every citizen while the Central Goverment is taking all possible steps." இப்படித் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசி னுடைய கஷ்டங்களை இந்த மாநில அரசு உணர்ந்திருக்கிறது. ஒவ்வொரு குடிமகனையும் பாதித்திருக்கிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே இந்த அரசு ஏதோ மத்திய அரசோடு மோதிக் கொண்டிருக்கிறது என்பது எல்லாம் உண்மையல்ல. இந்த அரசு இயங்குகின்ற ஓர் அரசாக இருக்கிறது. இந்த 6 மாதத்தில் புதிய போக்குவரத்துத் தடங்கள் உருவாக்கப்பட்டு உள்ளதை நாம் பார்க்கிறோம்.

அதைப் போல பொதுப்பணித் துறையிலிருந்து ரோடுகளைச் சீர்படுத்துவதற்கு எல்லாவிதமான வேலைகளுக்கும் டெண்டர் கேட்கப்பட்டு, வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதைப் போன்று உள்ளாட்சித் துறையும் இயங்கிக் கொண்டிருக் கிறது. அதே மாதிரி எல்லா இலாக்காக்களும் இயங்கிக் கொண்டிருக்கும் போது இது எப்படி இயங்காத அரசு என்று சொல்ல முடியும்? இதிலே எதுவும் இல்லை என்று சொன்னால் என்ன நியாயம்? எதையாவது [illegible]? எப்படியாவது [illegible] வேண்டும் என்பதற்காக [illegible] சொன்னால் இது [illegible]? (மேசையைத் தட்டும் ஒலி)



1992 பிப்ரவரி 6] [திரு. எஸ். வி. சண்முகம்]

பிற்பகல் 1-00.

கள்ளச் சாராயம் இந்த நாட்டிலே இப்போதும் இருக்கிறது என்பது உண்மை. ஆனால், முதலமைச்சருடைய அதிரடி அறிக் கையின் மூலமாக அது கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது, என்பது உண்மையா? இல்லையா? 75 சதவீதம் ஒழிக்கப்பட்டு இருக் கிறது. இன்னும் சட்டமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து நடவடிக்கை எடுத்தால், நூற்றுக்கு நூறு சதவிகிதம் ஒழிக்கப்படும். அவ் வளவு அச்சம் சூழ்ந்த நிலை இருக்கிறது.

இப்போது இருக்கிற நிலைமைகளை வைத்து, ஏதோ மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் மோதல் வருகிறது; மிக விரை விலே இந்த அணி பிளவுபட்டுப் போகும்; இடையிலே வந்து விடலாம் என்று கற்பனைக் கனவுகளைக் காண்பவர்கள் எல்லாம் இப்போதும் இருக்கிறார்கள். மத்திய அரசு, மாநில அரசு அணுகுமுறைகளை நம்மில்கூட சிலர் மிகைப்படுத்திக் கொள்கி றோம். உதாரணமாக, தமிழகத்திற்குச் சேர வேண்டிய காவிரி தண்ணீர் கிடைப்பதற்கு உறுதியாகக் கேட்பது எப்படி மோதலா கும்? கேட்காமல் இருந்தால், தமிழ்நாட்டிற்கு நாம் எப்படி நன்மை செய்ய முடியும்?

அதேபோல், இனவெறியைக் கிளப்புகிற பங்காரப்பா அவர்க ளுடைய அரசு—காவிரிப் பிரச்சினையில் டிரிபியூனல் தீர்ப்பு வேண்டுமென்று கேட்டோம்; வந்தது. டிரிப்யூனல் தீர்ப்பை கெசட்டில் வெளியிட வேண்டுமென்று நாம் கேட்டோம். உடனே, பங்காரப்பா அங்கிருந்து அறிக்கை விட்டார். கெசட்டில் வந்தா லும் ஏற்க மாட்டோம் என்று சொன்னார். அப்போது, நம் முடைய உணர்வுகளை வெளிப்படுத்தினோம். உணர்வுகளை வெளிப்படுத்தாமல் இருந்தால், எப்படி பொறுப்புள்ள அரசாக இருக்க முடியும்? தேசிய ஒருமைப்பாட்டிற்கும், அதனுடைய நடவடிக்கைகளுக்கும் உறுதுணையாக நிற்கின்ற இந்த அரசாங்க மும், தேசிய ஒருமைப்பாட்டை உடைக்கின்ற கர்நாடக அர சாங்கமும் ஒன்று என்று மத்திய அரசு பார்க்கக்கூடாது என்று கூறினால் அது மோதலா? அதை எப்படி சொல்லாமல் இருக்க முடியும்?

அதேபோல், அத்தியாவசியப் பொருட்களினுடைய விலை களையெல்லாம் உயர்த்தும்போது, மாநில அரசுடன் மத்திய அரசு கலந்து பேச வேண்டும் என்று கேட்டால் அது மோதலா? கேட்கக் கூடாதா? இந்த மாநிலத்தில் பாதிக்கக்கூடிய அரிசி விலையை எங்களோடு கலந்து பேசி, பின்னர் உயர்த்துங்கள் என்று கேட்டால் அது மோதல் ஆகாது. அதேபோல், 20 ஆண்டு காலத்தில், தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு ஒரு திட்டம் இல்லை; ஒரு திட்டம் வேண்டுமென்று கேட்டால், மத்திய

[திரு எஸ்.வி. சண்முகம்] [1992 பிப்ரவரி 6

அடுத்து, பொதுவாக இந்த அரசினுடைய அணுகுமுறை மிகத்
திருப்திகரமாக இருக்கிறது. நேற்று கூட முதலமைச்சர் அவர்
கள் தன்னுடைய தாயாரின் பெயரில் ஒரு போக்குவரத்துக்
கழகத்தை உருவாக்க வேண்டுமென்று ஓர் உறுப்பினர் கூறிய
போது வேண்டாம் என்று சொன்னார்கள். ஏற்கெனவே
இங்கே ஒரு அரசு இருந்தது. பாசிப் பயறுக்குத் தன்னுடைய
தாய் பெயரை வைத்து மகிழ்ந்தது. என் நெல்லுக்குத் தன்னு
டைய பெயரை வைத்து மகிழ்ந்தது. ஆகவே, மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களே, உங்களுடைய அணுகுமுறை எங்களுக்
குத் திருப்தி தருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தும் சொல்லப்படுகிறது. இந்த மாநில
அரசு மத்திய அரசோடு மோதிக் கொண்டிருப்பது போன்ற
ஒரு தோற்றம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அது உண்மை
அல்ல. ஒரு மாநில அரசு உரிமைகளைக் கேட்பது மோதுதல்
ஆகாது. ஒரு மாநில அரசு என்பது தன்னுடைய உரிமைகளைக்
கேட்பது, மத்திய அரசு தன்னுடைய நிலைமைகளைச் சொல்வது
அத்தகைய தன்மையிலே இருப்பதை இந்த அறிக்கையிலேயும்
தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். "The acute economic
crisis confronting the nation has affected almost every citizen
while the Central Goverment is taking all possible steps."..
இப்படித் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசி
னுடைய கஷ்டங்களை இந்த மாநில அரசு உணர்ந்திருக்கிறது.
ஒவ்வொரு குடிமகனையும் பாதித்திருக்கிறது என்று சொல்லப்
பட்டிருக்கிறது. ஆகவே இந்த அரசு ஏதோ மத்திய அரசோடு
மோதிக் கொண்டிருக்கிறது என்பது எல்லாம் உண்மையல்ல.
இந்த அரசு இயங்குகின்ற ஓர் அரசாக இருக்கிறது. இந்த 6
மாதத்தில் புதிய போக்குவரத்துத் தடங்கள் உருவாக்கப்பட்டு
உள்ளதை நாம் பார்க்கிறோம்.

அதைப் போல பொதுப்பணித் துறையிலிருந்து ரோடுகளைச்
சீர்படுத்துவதற்கு எல்லாவிதமான வேலைகளுக்கும் டெண்டர்
கேட்கப்பட்டு, வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
அதைப் போன்று உள்ளாட்சித் துறையும் இயங்கிக் கொண்டிரு
கிறது. அதே மாதிரி எல்லா இலாக்காக்களும் இயங்கி
கொண்டிருக்கும் போது இது எப்படி இயங்காத அரசு என்
சொல்ல முடியும்? இதிலே எதுவும் இல்லை என்று சொன்னா
என்ன நியாயம்? எனதியாவது சொல்வதா? எப்படியாவ
எதிர்த்தாக வேண்டும் என்பதற்காக அதைச் சொன்னால் இ
மனசாட்சியுள்ள அரசியல்வாதியா? (மேஜையைத் தட்டும் ஒ



1992 பிப்ரவரி 6] [திரு. எஸ். வி. சண்முகம்]

பிற்பகல் 1-00.

கள்ளச் சாராயம் இந்த நாட்டிலே இப்போதும் இருக்கிறது என்பது உண்மை. ஆனால், முதலமைச்சருடைய அதிரடி அறிக்கையின் மூலமாக அது கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது, என்பது உண்மையா? இல்லையா? 75 சதவீதம் ஒழிக்கப்பட்டு இருக்கிறது. இன்னும் சட்டமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து நடவடிக்கை எடுத்தால், நூற்றுக்கு நூறு சதவிகிதம் ஒழிக்கப்படும். அவ்வளவு அச்சம் சூழ்ந்த நிலை இருக்கிறது.

இப்போது இருக்கிற நிலைமைகளை வைத்து, ஏதோ மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் மோதல் வருகிறது; மிக விரைவிலே இந்த அணி பிளவுபட்டுப் போகும்; இடையிலே வந்து விடலாம் என்று கற்பனைக் கனவுகளைக் காண்பவர்கள் எல்லாம் இப்போதும் இருக்கிறார்கள். மத்திய அரசு, மாநில அரசு அணுகுமுறைகளை நம்மில்கூட சிலர் மிகைப்படுத்திக் கொள்கிறோம். உதாரணமாக, தமிழகத்திற்குச் சேர வேண்டிய காவிரி தண்ணீர் கிடைப்பதற்கு உறுதியாகக் கேட்பது எப்படி மோதலாகும்? கேட்காமல் இருந்தால், தமிழ்நாட்டிற்கு நாம் எப்படி நன்மை செய்ய முடியும்?

அதேபோல், இனவெறியைக் கிளப்புகிற பங்காரப்பா அவர்களுடைய அரசு—காவிரிப் பிரச்சினையில் டிரிபியூனல் தீர்ப்பு வேண்டுமென்று கேட்டோம்; வந்தது. டிரிப்யூனல் தீர்ப்பை கெசட்டில் வெளியிட வேண்டுமென்று நாம் கேட்டோம். உடனே, பங்காரப்பா அங்கிருந்து அறிக்கை விட்டார். கெசட்டில் வந்தாலும் ஏற்க மாட்டோம் என்று சொன்னார். அப்போது, நம்முடைய உணர்வுகளை வெளிப்படுத்தினோம். உணர்வுகளை வெளிப்படுத்தாமல் இருந்தால், எப்படி பொறுப்புள்ள அரசாக இருக்க முடியும்? தேசிய ஒருமைப்பாட்டிற்கும், அதனுடைய நடவடிக்கைகளுக்கும் உறுதுணையாக நிற்கின்ற இந்த அரசாங்கமும், தேசிய ஒருமைப்பாட்டை உடைக்கின்ற கர்நாடக அரசாங்கமும் ஒன்று என்று மத்திய அரசு பார்க்கக்கூடாது என்று கூறினால் அது மோதலா? அதை எப்படி சொல்லாமல் இருக்க முடியும்?

அதேபோல், அத்தியாவசியப் பொருட்களினுடைய விலைகளையெல்லாம் உயர்த்தும்போது, மாநில அரசுடன் மத்திய அரசு கலந்து பேச வேண்டும் என்று கேட்டால் அது மோதலா? கேட்கக் கூடாதா? இந்த மாநிலத்தில் பாதிக்கக்கூடிய அரிசி விலையை எங்களோடு கலந்து பேசி, பின்னர் உயர்த்துங்கள் என்று கேட்டால் அது மோதல் ஆகாது. அதேபோல், 20 ஆண்டு காலத்தில், தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு ஒரு திட்டம் இல்லை; ஒரு திட்டம் வேண்டுமென்று கேட்டால், மத்திய

[திரு. எஸ். வி. சண்முகம்] [1992 பிப்ரவரி 6

அரசோடு மாநில அரசு மோதுகிறது என்று பொருளா? ஜெயங்கொண்ட சோழபுரத்தில் 7,000 கோடி ரூபாய் செலவில் மின் நிலையம் வேண்டும்; எங்களுக்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டால் அது மோதலா? மதுக் கடைகளை மூடுவதால், எங்களுக்கு இழப்பு ஏற்படுகிறது; இழப்புக்களுக்கு ஈடுசெய்ய பணம் தாருங்கள் என்று கேட்டால் அது எப்படி மோதலாகும்? இந்த அரசு, முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, 600 கோடி ரூபாய் வட்டி கட்டக்கூடிய நிலையில் ஆட்சிக்கு வந்த அரசாங்கம், இந்த ஆறுமாத காலத்தில் எவ்வளவு செய்ய வேண்டுமோ, அவ்வளவையும் செய்திருக்கிறது. ஒரு பொறுப்புள்ள அரசு என்பதைக் காட்டுகிறது. இதைவிட வேறு எவரால் செய்ய முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி)

காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், அண்ணா தி. மு. க. உறுப்பினர்களும் ஒருவரையொருவர் விமர்சனம் செய்து கொள்கிறார்கள். மத்திய அரசினுடைய புதிய பொருளாதாரக் கொள்கையை மத்திய அமைச்சர்களே விமர்சனம் செய்திருக்கிறார்கள். தினேஷ்சிங் அவர்கள் விமர்சனம் செய்து இருக்கிறார்கள். அர்ஜுன்சிங் அவர்கள் விமர்சனம் செய்திருக்கிறார்கள். விமர்சனம் என்பது, இந்த சகாப்தத்தில் அவசியமானது; அத்தகைய விமர்சனங்களின் வாயிலாகத்தான் இன்றைக்கு கூடுதல் தொகையினை நாம் பெற்றிருக்கின்ற அறிவிப்பை முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் பேசாமல் இருந்திருந்தால், இந்தப் பெரிய தொகை நமக்குக் கிடைத்திருக்குமா? ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆய்வில் இன்றைக்கு நல்ல திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். (அத்தகைய திட்டங்களை மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள்). (மணியடிக்கப் பெற்றது)

பல நல்ல திட்டங்கள் எல்லாம் இன்றைக்கு இருந்தாலும், நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம், உங்களுடைய ஆளுகையின் தன்மையால், ஒரு நல்ல ஆட்சியை நீங்கள் நடத்த விரும்புகிறீர்கள் என்றாலும், உங்களுடைய ஆட்சியினுடைய சாதனைகளைச் சிதைப்பதற்காக ஒரு கூட்டம் இந்த நாட்டிலே இருக்கிறது. அவர்கள் கட்சியாக மாத்திரமல்ல; அதிகார வர்க்கத்திலேயும் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நீங்கள் விழிப்புடன் கண்டுபிடித்து, ஒடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). என்னுடைய உள்ள உணர்வை நான் இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய ஆட்சியினுடைய நல்ல திட்டங்களை—யாரெல்லாம் இந்த ஆட்சி இந்த மண்ணில் வரக்கூடாது என்று விரும்பினார்களோ, அவர்களெல்லாம் தொலைப் புறவழியாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இந்த நிலைமையைச் சொல்லும்போது, சட்டமன்ற உறுப்பினர்கள் மிரட்டுகிறார்கள்; மோதுகிறார்கள் என்று



1992 பிப்ரவரி 6] [திரு. வே. தம்புசாமி]

வில்லை. அதே நேரத்தில், விவசாயிகள் இவ்வளவு சிரமங்களுக்கும்
பிறகு, சங்கடப்பட்டு செய்கிற உற்பத்தி பொருள்களுக்கு கட்டுப்
படியான விலைக்கு உத்தரவாதமும் அளிக்கப்படவில்லை.
அதே நேரத்தில் உரம், பூச்சிமருந்து போன்ற இடுபொருள்களின்
விலையைக் குறைப்பதற்கான உத்தரவாதமும் சொல்லப்பட
வில்லை.

அதே நேரத்தில் தமிழகத்தில் மின் இணைப்பு கொடுக்கப்பட
வேண்டிய லட்சோபலட்சம் மின் இணைப்புகள் கொடுக்கப்
படாமல் இருக்கின்றன. எதிர்காலத்தில் எத்தகைய நடைமுறை
யை பின்பற்ற போகிறோம் என்றும் சொல்லப்படவில்லை.
அதேநேரத்தில் குடிமனைப் பட்டா வழங்குவது பற்றி தமிழக
அரசு அறிவித்திருக்கிறது. தமிழகத்தில் ஏறக்குறைய 5 லட்சம்
பேர்களுக்கு குடிமனைப் பட்டா வழங்க தமிழக அரசு நட
வடிக்கை எடுத்திருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் அறி
வித்தார்கள். ஆனால் அதிலே கடுமையான சிக்கல் ஏற்பட்டிருக்
கிறது. குடிமனைப் பட்டா பெறுகிறபோது, குடிமனை பட்டா
தங்களுக்கு வேண்டுமென்று கேட்கிறபோது, அந்த நிலத்திலே
குடியிருப்பவர்கள், அந்த குடிமனை நிலம் யாருக்குச் சொந்தமாக
இருக்கிறதோ, அந்த நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து சம்மதக்
கடிதம் வாங்கி வந்தால்தான் இந்த குடிமனைப் பட்டா வழங்கப்
படும் என்று கீழே இருக்கிற அந்த வருவாய்த் துறையைச் சார்ந்த,
குடிமனைப் பட்டா வழங்கக்கூடிய நீதிமன்ற அதிகாரிகள்
சொல்லி, மனுக்கள் முழுமையும் திருப்பி அனுப்பிக்கொண்
டிருக்கிறார்கள். இந்த நிலைமைகளை எல்லாம் விளக்கி
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் வருவாய்த்துறை அமைச்
சர் ஆகியோர்களுக்கு கடிதம் எழுதியும் இதுவரை பதில் இல்லை.
ஆனால் குடிமனைப் பட்டா வழங்குவதைப் பொறுத்தவரை
யில், தமிழகத்தில் எந்த குடிமனைச் சொந்தக்காரர்களும் வேறு
ஒரு நபர் தன்னுடைய மனையிலே குடியிருப்பாரேயானால்
அவர் அந்த மனைக்கு அரசு மூலம் பட்டா பெற்றுக்கொள்ள
சம்மதிக்க மாட்டார்கள். அப்படி என்றால் நாம் எவ்வளவு
குடிமனைப் பட்டா வழங்குவோம் என்று அறிவித்திருந்தாலும்
எதிர் காலத்தில் இந்த ஒரு சரத்து இருந்தால் நிச்சயமாக
யாரும் குடிமனைப் பட்டா பெற முடியாதாகையால் உடனடி
யாக இது மாற்றப்பட வேண்டும்.

அதே மாதிரி, இன்றையதினம் ஊராட்சி ஒன்றியத்திற்கு
ஒரு கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால்
மொத்தத்தில் அதிலுள்ள நடைமுறை என்னவென்றால்
அதிலே சொல்லியிருக்கக்கூடிய பல்வேறு சரத்துக்களைப்
பார்ப்போமேயானால் முன்னாள் ஜவஹர் வேலைவாய்ப்புத்
திட்டத்தின்மூலம் செலவழித்த அந்தத் தொகையை விட
ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஏறக்குறைய 4 லட்சம், 3
லட்சம் ரூபாய் அளவுக்கு அது குறைகின்ற ஒரு அபாயம் இருக்
கிறது.

[1992 பிப்ரவரி 6

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. (குறுக்கீடு) அது நீக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடு) அவர் முடிக்கட்டும். இதோடு முடித்துவிடுங்கள்......(குறுக்கீடு) அந்த சொற்றொடர் நீக்கப்பட்டுவிட்டது,

திரு. வே. தம்புசாமி : .. இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. நான் காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்கிற அரசு என்று சொல்கிறேன். இல்லையென்று சொல்கிறார்களா ? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தவறு கிடையாது. காங்கிரஸ் அரசாங்கம் என்பதில் தவறு கிடையாது.

திரு. ஜி. பழனிசாமி : கர்நாடகத்தை ஆட்சி செய்வது எந்தக் கட்சி ?

திரு. வே. தம்புசாமி : எனவே அதுபோன்று இன்றையதினம்......(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் கேட்டார். அவரும் பதில் சொல்லி விட்டார். அவர் முடிக்கட்டும். பேசுங்கள்(குறுக்கீடு) அதை நீக்கியாகிவிட்டது.

திரு. வே. தம்புசாமி : அதே நேரத்தில் இன்றையதினம் 'தடா' சட்டத்தைப் பயன்படுத்தி வருகிறீர்கள். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அப்படிப்பட்ட சட்டம் கொண்டுவரப்பட்டாலும், இதுவரை எந்த அரசும் அந்த 'தடா' சட்டத்தைப் பயன்படுத்தவில்லை. 1911–ம் ஆண்டு வெள்ளையர்களால் உருவாக்கப்பட்ட இந்தச் சட்டத்தை இதுவரை எந்த அரசும் பயன்படுத்தவில்லை. ஆகவே இப்போதுள்ள தமிழக அரசும் இதைப் பயன்படுத்தக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் குற்றங்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவும், வேறு பல்வேறு வழிமுறைகள் இருக்கின்றன. அதற்கான சட்ட விதிகள் முழுமையாக இருக்கின்றன. அதைப் பயன் படுத்தலாம். அதில் நாங்கள் குறுக்கிடவில்லை. தப்பு யார் செய்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் எங்களுக்கு ஆட்சேபனை கிடையாது. தடா சட்டத்தை விட குற்றவியல் சட்டங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அதைப் பயன்படுத்த வேண்டும்......(மணியடிக்கப் பெற்றது) எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும்......(குறுக்கீடு)....எந்த அரசியல் தலைவராக இருந்தாலும் .........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதோடு முடித்து விடுங்கள், போதும். நேரமாகிவிட்டது.



1992 பிப்ரவரி 6]

திரு. வே. தம்புசாமி : ஆசிரியர் நியமனத்தில் இப்போது இன்டர்வியூ முறை பயன்படுத்தப்படுகிறது. முன்னாலே இருந்த முறையையே தமிழக அரசு அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியர்கள் தொடர்ந்து போராடிக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கு விரைவில் தீர்வு காண வேண்டும். கன்னியாகுமரியில் 450 ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டு இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அதை தமிழக அரசு பரிசிலனை செய்து; அவர்களை விடுதலை செய்ய வேண்டும். தென் ஆற்காட்டில் தொடர்ந்து 3.0–க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் அரசு நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு உதவ வேண்டும்.

உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை விரைவாக நடத்திட தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் மாநகராட்சி தேர்தலை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதே நேரத்தில் சட்டம் ஒழுங்கை சீரமைத்து, பயங்கரவாதத்தை ஒடுக்கியிருக்கிறோம் என்று ஆளுநர் உரையில் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் இன்றையதினம், தமிழகத்தில் பொதுவாகவும், சென்னை மாநகரத்திலும் ஒருவிதமான பதட்டநிலை ஏற்பட்டிருக்கிறது. பத்திரிகைகளில் வருகின்ற செய்திகளை நாம் பார்த்தால், அங்கே கொலை, இங்கே கொள்ளை நடக்கிறது என்று இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்று, அச்சத்தோடு இருக்கக்கூடிய சூழ்நிலை இன்றையதினம் இருக்கிறது. ஒரு சட்டமன்ற உறுப்பினரின் பெட்டியே பறிபோனதாக அவையில் இன்றையதினம் பேசினார்கள். பெட்டி காணாமல் போய் விட்டதாக இங்கே சொல்லப்பட்டது. அதுபோன்று விஷயங்களில் காவல்துறையினரை இன்னமும் கடுமையாக முடுக்கிவிட்டு, மக்கள் அச்சமின்றி வாழ்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் ஆதரித்த, வி.பி. சிங் அவர்களின் தேசிய முன்னணியின் அரசில் உள்துறை அமைச்சராக இருந்தவரின் மகளையே காஷ்மீரில் கடத்தினார்களே, அதற்கு இவர்கள் எல்லாம் முன்மாதிரி அல்லவா ?

பிற்பகல் 1–35.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் இத்தோடு முடித்துவிட வேண்டும்.

**திரு. வே. தம்புசாமி :** தமிழ்நாட்டில் நடக்கிற நிகழ்ச்சிகளைப் பற்றி நான் கூறுகிறேன். மற்ற மாநில நிகழ்ச்சிகள் அல்ல. அதே நேரத்தில் அரிசியின் விலை உயர்ந்திருக்கிறது. மண்ணெண்ணெய் தட்டுப்பாடு இருக்கிறது. கார்டுகள் கிடைக்காமல் ஏழையெளிய மக்கள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே கார்டுகளை விரைவாக தமிழக அரசு நியாயமானவர்களுக்கு, தகுதியானவர்களுக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து திரு. ச. இராமச்சந்திரன். கார்டுகள் கொடுக்க வேண்டும் என்பதோடு முடியுங்கள் போதும். முடித்துவிடுங்கள். உட்காருங்கள். திரு. ச. இராமச்சந்திரன். (குறுக்கீடு)

**திரு. வே. தம்புசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல அனுமதி அளித்த தங்களுக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ச. இராமச்சந்திரன். (குறுக்கீடு). நேரம் ஆகிவிட்டது. அது முடிந்துவிட்டது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) தகவல்கள் வேண்டாம் (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அமருங்கள். நான் உங்களுக்கு அனுமதி அளிக்கவில்லை. அமருங்கள்.

***திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இவ்வாண்டு திட்ட நிதி ஒதுக்கீடு கூடுதலாக ஆக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை அறிவித்தார்கள். திட்டக் கமிஷனுடைய துணைத் தலைவர் அவர்கள், மதிப்பிற்குரிய பிரணாப் முகர்ஜி அவர்களுடைய கடிதத்தை இங்கே படித்துக் காட்டினார்கள். அதன்படி மாநில அரசு வரியையும், வருவாயையும் அதிகப்படுத்துவதன் மூலமாக ரூ. 165 கோடி additional resources mobilisation வெளிநாட்டு உதவியோடு கூடிய திட்டங்கள் external aided projects ரூ. 50 கோடி; Centrally Sponsored schemes மத்திய அர்சாங்கம் சொல்லி மாநில அரசு செய்யக்கூடிய சில திட்டங்களுக்கு எல்லா மாநிலங்களுக்கும் இந்திய அரசு பங்கிட்டுக் கொடுக்கிறது— அவ்வகையில் வருவாய் ரூ. 50 கோடி, ரூ. 165 கோடியை மாநில அரசு வரி மூலம், வருவாய் மூலம் திரட்ட வேண்டும். மற்றவை ஏற்கெனவே எடுத்த கொள்கை முடிவின்படி வருகிறது. அதிலே இந்திய அரசினுடைய உதவி Central assistance



அவர்களுடைய உதவி இதிலே என்ன என்ற விவரங்கள் இல்லை. ஏனென்றால் உதவி இல்லை. ஆகவே திட்ட ஒதுக்கீடு ரூ. 1,751 கோடி என்று அதிகமாக்கி இருப்பது என்பது தமிழ்நாடு அரசே அந்த நிதியைத் திரட்டப் போகிறதே தவிர, இந்திய அரசு தருகின்ற உதவி அதிகப்படுத்தப்படவில்லை. ஆகையினாலே நீங்கள் அரிசியைக் கொண்டு வாருங்கள், நாங்கள் உமியைக் கொண்டு வருகிறோம், இருவரும் ஊதி ஊதி சாப்பிடுவோம் என்ற வகையிலேதான் இந்திய அரசு திட்டத்தை அனுமதித்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு இந்த ஆண்டு திட்டத்தைவிட வரும் ஆண்டு திட்டம் ஒன்பதரை சதவீதம் அதிகம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டினுடைய விலைவாசியின் உயர்வு - Inflation—அவர்களே அறிவித்திருப்பது 13 சதவீதம். அநேகமாக 20 சதவீதம் விலைவாசி உயர்வு வரும் என்கிறார்கள். ஆகவே இந்த ஆண்டு எவ்வளவு செயல்களைச் செய்கிறோமோ அதே அளவிற்குச் செயல்களைச் செய்ய அடுத்த ஆண்டுக்கு 20 சதவீதம் கூடுதல் நிதி இருந்தால்தான் முடியும். ஆகவே 9 சதவீதம்தான் கூடுதல் என்கிறபோது, இந்த ஆண்டு எவ்வளவு பணிகள் நடைமுறையில் நடைபெறுகிறதோ அதைவிட குறைவான பணிகள்தான் நடத்த வேண்டிவரும் என்பதையும் நான் இந்தப் பேரவையின் கவனத்திற்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே இதிலே மிக முக்கியமாக கவனத்திலே வைக்க வேண்டிய பிரச்சினை....... (மணியடிக்கப் பெற்றது) மாண்புமிகு தலைவர் அவர்களே எனக்குக் கொஞ்சம் நேரம் கூடுதலாகக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோருக்கும் கொடுத்த உரிய நேரம் உங்களுக்கும் உண்டு. சிறப்பு அனுமதியைப்போல நீங்கள் கேட்கக்கூடாது. எல்லோருக்கும் கொடுத்த அந்த நேர ஒதுக்கீடு உங்களுக்கும் உண்டு. உங்களுக்குக் குறைக்கப்படவில்லை.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.**

பிற்பகல் 1-40.

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள், பட்ஜெட் கூட்டத் தொடரில் பேச வேண்டிய விஷயங்களைப்பற்றி எல்லாம், இப்பொழுது விவாதத்தைத் தொடங்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருப்பது, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதம். எனவே, அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினால் அவையின் நேரம் வீணாகாமல் இருக்கும் என்று கருதுகிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து, அந்த மாதிரிப் பேசினால் நன்றாக இருக்கும் இப்பொழுது முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தது ஒரு அறிவிப்பு. அந்த அறிவிப்பு ஆளுநர் உரைக்கு அப்பாற்பட்டது. அந்த அறிவிப்புப் பற்றிய முழு விவரங்களும் பட்ஜெட் உரையிலேதான் வரும். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு என்னால் பதில் சொல்ல முடியும். ஆனால், சொல்ல வேண்டிய நேரம் இது அல்ல; சொல்ல வேண்டிய கூட்டத் தொடரும் இது அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி). அவர் எழுப்பிய கேள்விகளுக்கு விடைகள் பட்ஜெட் கூட்டத் தொடரின்போது அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரம் இங்கே வந்ததனால் நான் அந்தக் கருத்தைச் சொன்னேன். மாண்புமிகு தலைவர், வேண்டாம் என்றால் விட்டுவிடுங்கள். நான் ஆளுநர் உரைக்குப் போகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஆளுநர் உரைக்கு சம்பந்தம் இல்லாதது என்பதைத்தான் சொல்ல வந்தேன். ஒரு அறிவிப்புச் செய்தார்கள். அந்த அறிவிப்பு பற்றிய முழு விவரங்களும் பட்ஜெட்டிலேதான் வரும். இதிலே நீங்கள் அந்தப் பிரச்சினையை எடுத்த எடுப்பிலே எழுப்பிவிட்ட காரணத்தால், ஆளுநர் உரை மீது பேசுவது நல்லது என்று சொன்னேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சில குறிப்பிட்ட குறைகளை மட்டும் எடுத்துச் சொல்லி என்னுடைய உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். கடந்த 6 மாத காலத்தில் இந்த அரசும், இந்திய அரசும் மேற்கொண்டு இருக்கின்ற பல்வேறு காரியங்களின் விளைவாக சாதாரண மக்களுடைய வாழ்க்கைச் சுமை அதிகரித்து இருக்கிறது என்பது என்னுடைய குற்றச்சாட்டு ஆகும். ஆகையினாலே, ஆளுநர் உரையில் ஏழை எளிய மக்களுடைய வாழ்வுக்குத் தனிக் கவனம் செலுத்தப்படும்; அவர்களது வாழ்வு உயர்வதற்காகப் பாடுபடுவோம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அது ஏட்டளவிலேதான் இருக்குமே தவிர, செயலளவிலே இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அண்மையிலே வெள்ள நிவாரணப் பணிகள் மேற்கொண்டபொழுது, வெள்ள நிவாரணப் பணிகள் எதிர்பார்த்த அளவுக்கு நடைபெறவில்லை. ஒருவேளை, இந்திய அரசிடத்தில் 400



வில்லை. அதே நேரத்தில், விவசாயிகள் இவ்வளவு சிரமங்களுக்குப் பிறகு, சங்கடப்பட்டு செய்கிற உற்பத்தி பொருள்களுக்கு கட்டுப்படியான விலைக்கு உத்தரவாதமும் அளிக்கப்படவில்லை. அதே நேரத்தில் உரம், பூச்சிமருந்து போன்ற இடுபொருள்களின் விலையைக் குறைப்பதற்கான உத்தரவாதமும் சொல்லப்படவில்லை.

அதே நேரத்தில் தமிழகத்தில் மின் இணைப்பு கொடுக்கப்பட வேண்டிய லட்சோபலட்சம் மின் இணைப்புகள் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. எதிர்காலத்தில் எத்தகைய நடைமுறையை பின்பற்ற போகிறோம் என்றும் சொல்லப்படவில்லை. அதேநேரத்தில் குடிமனைப் பட்டா வழங்குவது பற்றி தமிழக அரசு அறிவித்திருக்கிறது. தமிழகத்தில் ஏறக்குறைய 5 லட்சம் பேர்களுக்கு குடிமனைப் பட்டா வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் அதிலே கடுமையான சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. குடிமனைப் பட்டா பெறுகிறபோது, குடிமனை பட்டா தங்களுக்கு வேண்டுமென்று கேட்கிறபோது, அந்த நிலத்திலே குடியிருப்பவர்கள், அந்த குடிமனை நிலம் யாருக்குச் சொந்தமாக இருக்கிறதோ, அந்த நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து சம்மத கடிதம் வாங்கி வந்தால்தான் இந்த குடிமனைப் பட்டா வழங்கப்படும் என்று கீழே இருக்கிற அந்த வருவாய்த் துறையைச் சார்ந்த, குடிமனைப் பட்டா வழங்கக்கூடிய நீதிமன்ற அதிகாரிகள் சொல்லி, மனுக்கள் முழுமையும் திருப்பி அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகளை எல்லாம் விளக்கி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் ஆகியோர்களுக்கு கடிதம் எழுதியும் இதுவரை பதில் இல்லை. ஆனால் குடிமனைப் பட்டா வழங்குவதைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் எந்த குடிமனைச் சொந்தக்காரர்களும் வேறு ஒரு நபர் தன்னுடைய மனையிலே குடியிருப்பாரேயானால் அவர் அந்த மனைக்கு அரசு மூலம் பட்டா பெற்றுக்கொள்ள சம்மதிக்க மாட்டார்கள். அப்படி என்றால் நாம் எவ்வளவு குடிமனைப் பட்டா வழங்குவோம் என்று அறிவித்திருந்தாலும் எதிர் காலத்தில் இந்த ஒரு சரத்து இருந்தால் நிச்சயமாக யாரும் குடிமனைப் பட்டா பெற முடியாதாகையால் உடனடியாக இது மாற்றப்பட வேண்டும்.

அதே மாதிரி, இன்றையதினம் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மொத்தத்தில் அதிலுள்ள நடைமுறை என்னவென்றால் அதிலே சொல்லியிருக்கக்கூடிய பல்வேறு சரத்துக்களைப் பார்ப்போமேயானால் முன்னாள் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்மூலம் செலவழித்த அந்தத் தொகையை விட ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஏறக்குறைய 4 லட்சம், 3 லட்சம் ரூபாய் அளவுக்கு அது குறைகின்ற ஒரு அபாயம் இருக்கிறது.

[திரு. வே. தம்புசாமி] [1992 பிப்ரவரி 6

பிற்பகல் 1–25

அடுத்து குடிநீர் வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது,
ஆனால் முன்னால் ஏற்படுத்திய குடிநீர் உயர் மட்டத் தொட்டி
கள் செயல்படவில்லை, கை பம்புகள் செயல்படவில்லை,
மார்க் 2 பம்புகள் செயல்படவில்லை. இப்படி இவை செயல்
படாத காரணத்தால் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்
கிறது. அவற்றைச் சீரமைக்க துரிதமான நடவடிக்கை
களை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
அதே நேரத்தில் குடிநீர்த் திட்டங்களை இன்றையதினம்
மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைப்பதற்கு தமிழக
அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இதனால் எதிர் காலத்
திலே இன்று இருக்கும் சிக்கலைவிட அதிகமான சிக்கலை இது
ஏற்படுத்தும் என்று கருதுகிறேன். ஒரு புறத்திலே குடிநீர்
வாரியம் தன்னுடைய வேலைகளைச் செய்து கொண்டிருந்
தது. இப்போது அந்தப் பணி மாவட்ட ஆட்சித் தலைவர்
பொறுப்புக்கு விடப்படுமானால் பெரிய குடிநீர்த் திட்டங்
கள் பாதிக்கப்படலாம். உதாரணத்திற்கு தம்பிக் கோட்டை
யிலிருந்து வேதாரண்யத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம்;
அதுமாதிரி கொள்ளிடத்திலிருந்து நாகை நகருக்கு குடிநீர்
வழங்குகின்ற திட்டம்; அதைப்போல திருவாரூர் நகரத்திற்கு
ஏறத்தாழ 65 இலட்சம் ரூபாயில் நிறைவேற்றும் குடிநீர்த்
திட்டங்கள்—இது போன்ற திட்டங்களை எப்படிச் செயற்
படுத்துவது? எதிர்காலத்திலே இவற்றைச் செயல்படுத்து
வதிலே சிக்கல் ஏற்படும். எனவே மீண்டும் குடிநீர் வாரியத்தை
ஒழுங்குபடுத்தி, சீரமைத்து, பணியை சிறப்பாகச் செய்ய நட
வடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே
கேட்டுக்கொள்கிறேன். அடுத்து புதிய தொழிற் கொள்கை அறிவிக்
கப்பட்டிருக்கிறது. புதிய தொழிற் கொள்கை சம்பந்தமாக தொழில்
மூலதனம் போடக்கூடியவர்களை மட்டும் அழைத்து பேசப்பட்டி
ருக்கிறது. தொழிற் சங்கங்களிலே இருக்கிற தலைவர்களையும்
அழைத்துப் பேசினால் எதிர்காலத்திலே தொழிற் கொள்கை
யை சிறப்பாக நிறைவேற்ற அனுபவங்களைப் பெற முடி
யும். ஒரு தரப்பாரை மட்டும் அழைத்து, பேசப்பட்டிருக்கிறது.
எனவே தொழிற் சங்கத் தலைவர்களையும் அழைத்து எதிர்
காலத்தில் பேசி, ஒரு தொழிற் கொள்கையைஉருவாக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது)
அதே நேரத்தில் திருச்சியிலே உள்ள பெல் நிறுவனத்
திற்கு இன்றைய தினம் மத்திய அரசு ஆர்டர் பெறவேண்டு
மென்று தமிழக அரசு வற்புறுத்த வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். அதேபோல கூடங்குளம்
அணு மின் நிலையத்தை மத்திய அரசு கை விடுகின்ற ஒரு
நிலைமை இருக்கிறது. அதையும் நிறைவேற்றுவதற்கான
நல்ல சூழ்நிலைகளை தமிழக அரசு உருவாக்க வேண்டுமென்று



1992 பிப்ரவரி 6] [திரு. வே. தம்புசாமி]

கேட்டுக்கொள்கிறேன். அடுத்து மின்சார உற்பத்தியை தனி
யார் துறைக்கு ஒப்படைப்பதாக இருக்கிறது. அது தவிர்க்கப்
பட வேண்டும். தனியார் துறை கையிலே இருந்துதான் முழு
வதுமாக அரசு அதை எடுத்துக்கொண்டது. அதைப்போல
சாலை பராமரிப்பு போன்றவைகளையும் தனியாரிடம் ஒப்படைக்
கும் நிலைமை இருக்கிறது. இது எதிர்காலத்தில் பல்வேறு
சிக்கல்களை ஏற்படுத்தும். எனவே இதையெல்லாம் தமிழக
அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
(மணி அடிக்கப்பெற்றது)

ஒரு நிமிடம். இன்றைக்கு தமிழகத்திலே ஒரு விளக்கு
திட்டத்தை விரைவாக அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். அடுத்து காவிரி நீர் பங்கீடு சம்பந்தமாக
மத்திய அரசின் மெத்தனப் போக்கு நிலைமைகளை மேலும்
மோசமடையச் செய்து விட்டது. இதிலே எங்கள் நிலை,
மத்திய அரசு இனியும் காலதாமதம் செய்யாமல் சம்பந்தப்
பட்ட மாநில அரசுகளை அழைத்து நடுவர் மன்றம் அளித்த
தீர்ப்பை அடிப்படையாக வைத்து பேசி, சுமுகமான தீர்வு காண
வேண்டும். நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு தமிழகத்தின்
பக்கம் நியாயம் உள்ளது என்பதை வலியுறுத்த பேச்சு வார்த்
தையில் பயன்படும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்தப்
பொறுப்பை மத்திய அரசு தட்டிக் கழிக்க கூடாது. சம்பந்தப்
பட்ட மாநில அரசுகள் இதில் ஒத்துழைக்க வேண்டும். அதே
நேரத்தில் இன்றைய தினம் கர்நாடகத்தில் நடந்துள்ள சம்பவங்
கள் பற்றி எனக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் திரு.
சிங்காரம் அவர்கள் பேசினார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன்
**காங்கிரஸ் கட்சி அரசு. அதே நேரத்தில் தமிழகத்தில் . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> எதிர்க் கட்சித்
தலைவர் அவர்கள்.

<u>திரு. எஸ்.ஆர் பாலசுப்ரமணியன் :</u> மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அவர் எந்த வாதத்தை வேண்டுமானா
லும் சொல்லட்டும். மத்திய அரசு கொள்கையை விமர்சிக்
கட்டும். மத்திய அரசு கொள்கைக்கு எதிராகச் சொல்லட்டும்.
எதை வேண்டுமானாலும் சொல்லட்டும். ** என்று அபாண்ட
மாக உண்மைக்கு புறம்பாக, இன்னும் சொல்லப்போனால்
**இந்த அவையிலே சொல்வது முறையல்ல. அதை அவைக்
குறிப்பிலிருந்து அகற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> **என்பது வேண்டாம்.
**என்று அவருடைய வாசகம் இருக்கிறது. **என்று இருக்கிற
சொற்றொடர் நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக் கிணங்க
அகற்றப்பெற்றது.

*பிற்பகல் 1–30*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. (குறுக்கீடு) அது நீக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடு) அவர் முடிக்கட்டும். இதோடு முடித்துவிடுங்கள்......(குறுக்கீடு) அந்த சொற்றொடர் நீக்கப்பட்டுவிட்டது.

திரு. வே. தம்புசாமி : .. இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. நான் காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்கிற அரசு என்று சொல்கிறேன். இல்லையென்று சொல்கிறார்களா ? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தவறு கிடையாது. காங்கிரஸ் அரசாங்கம் என்பதில் தவறு கிடையாது.

திரு. ஜி. பழனிசாமி : கர்நாடகத்தை ஆட்சி செய்வது எந்தக் கட்சி ?

திரு. வே. தம்புசாமி : எனவே அதுபோன்று இன்றையதினம்......(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் கேட்டார். அவரும் பதில் சொல்லி விட்டார். அவர் முடிக்கட்டும். பேசுங்கள்(குறுக்கீடு) அதை நீக்கியாகிவிட்டது.

திரு. வே. தம்புசாமி : அதே நேரத்தில் இன்றையதினம் 'தடா' சட்டத்தைப் பயன்படுத்தி வருகிறீர்கள். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அப்படிப்பட்ட சட்டம் கொண்டுவரப்பட்டாலும், இதுவரை எந்த அரசும் அந்த 'தடா' சட்டத்தைப் பயன்படுத்தவில்லை. 1911–ம் ஆண்டு வெள்ளையர்களால் உருவாக்கப்பட்ட இந்தச் சட்டத்தை இதுவரை எந்த அரசும் பயன்படுத்தவில்லை. ஆகவே இப்போதுள்ள தமிழக அரசும் இதைப் பயன்படுத்தக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் குற்றங்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவும், வேறு பல்வேறு வழிமுறைகள் இருக்கின்றன. அதற்கான சட்ட விதிகள் முழுமையாக இருக்கின்றன. அதைப் பயன்படுத்தலாம். அதில் நாங்கள் குறுக்கிடவில்லை. தப்பு யார் செய்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் எங்களுக்கு ஆட்சேபனை கிடையாது. தடா சட்டத்தை விட குற்றவியல் சட்டங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அதைப் பயன்படுத்த வேண்டும்......(மணியடிக்கப் பெற்றது) எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும்......(குறுக்கீடு)....எந்த அரசியல் தலைவராக இருந்தாலும் ..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதோடு முடித்துவிடுங்கள், போதும், நேரமாகிவிட்டது.





திரு. வே. தம்புசாமி : ஆசிரியர் நியமனத்தில் இப்போது இன்டர்வியூ முறை பயன்படுத்தப்படுகிறது. முன்னாலே இருந்த முறையையே தமிழக அரசு அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியர்கள் தொடர்ந்து போராடிக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கு விரைவில் தீர்வு காண வேண்டும். கன்னியாகுமரியில் 450 ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டு இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அதை தமிழக அரசு பரிசிலனை செய்து, அவர்களை விடுதலை செய்ய வேண்டும். தென் ஆற்காட்டில் தொடர்ந்து 3.0( –க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் அரசு நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு உதவ வேண்டும்.

உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை விரைவாக நடத்திட தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் மாநகராட்சி தேர்தலை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதே நேரத்தில் சட்டம் ஒழுங்கை சீரமைத்து, பயங்கரவாதத்தை ஒடுக்கியிருக்கிறோம் என்று ஆளுநர் உரையில் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் இன்றையதினம், தமிழகத்தில் பொதுவாகவும், சென்னை மாநகரத்திலும் ஒருவிதமான பதட்டநிலை ஏற்பட்டிருக்கிறது. பத்திரிகைகளில் வருகின்ற செய்திகளை நாம் பார்த்தால், அங்கே கொலை, இங்கே கொள்ளை நடக்கிறது என்று இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்று, அச்சத்தோடு இருக்கக்கூடிய சூழ்நிலை இன்றையதினம் இருக்கிறது. ஒரு சட்டமன்ற உறுப்பினரின் பெட்டியே பறிபோனதாக அவையில் இன்றையதினம் பேசினார்கள். பெட்டி காணாமல் போய் விட்டதாக இங்கே சொல்லப்பட்டது. அதுபோன்று விஷயங்களில் காவல்துறையினரை இன்னமும் கடுமையாக முடுக்கிவிட்டு, மக்கள் அச்சமின்றி வாழ்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் ஆதரித்த, வி.பி. சிங் அவர்களின் தேசிய முன்னணியின் அரசில் உள்துறை அமைச்சராக இருந்தவரின் மகளையே காஷ்மீரில் கடத்தினார்களே, அதற்கு இவர்கள் எல்லாம் முன்மாதிரி அல்லவா ?

பிற்பகல் 1–35.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் இத்தோடு முடித்துவிட வேண்டும்.

[1992 பிப்ரவரி 6

திரு. வே. தம்புசாமி : தமிழ்நாட்டில் நடக்கிற நிகழ்ச்சிகளைப் பற்றி நான் கூறுகிறேன். மற்ற மாநில நிகழ்ச்சிகள் அல்ல. அதே நேரத்தில் அரிசியின் விலை உயர்ந்திருக்கிறது, மண்ணெண்ணெய் தட்டுப்பாடு இருக்கிறது. கார்டுகள் கிடைக்காமல் ஏழையெளிய மக்கள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே கார்டுகளை விரைவாக தமிழக அரசு நியாயமானவர்களுக்கு, தகுதியானவர்களுக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. ச. இராமச்சந்திரன். கார்டுகள் கொடுக்க வேண்டும் என்பதோடு முடியுங்கள் போதும். முடித்துவிடுங்கள். உட்காருங்கள். திரு. ச. இராமச்சந்திரன். (குறுக்கீடு)

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல அனுமதி அளித்த தங்களுக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன். (குறுக்கீடு). நேரம் ஆகிவிட்டது. அது முடிந்துவிட்டது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) தகவல்கள் வேண்டாம். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அமருங்கள். நான் உங்களுக்கு அனுமதி அளிக்கவில்லை. அமருங்கள்.

*திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இவ்வாண்டு திட்ட நிதி ஒதுக்கீடு கூடுதலாக ஆக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை அறிவித்தார்கள். திட்டக் கமிஷனுடைய துணைத் தலைவர் அவர்கள், மதிப்பிற்குரிய பிரணாப் முகர்ஜி அவர்களுடைய கடிதத்தை இங்கே படித்துக் காட்டினார்கள். அதன்படி மாநில அரசு வரியையும், வருவாயையும் அதிகப்படுத்துவதன் மூலமாக ரூ. 165 கோடி additional resources mobilisation வெளிநாட்டு உதவியோடு கூடிய திட்டங்கள் external aided projects ரூ. 50 கோடி; Centrally Sponsored schemes மத்திய அரசாங்கம் சொல்லி மாநில அரசு செய்யக்கூடிய சில திட்டங்களுக்கு எல்லா மாநிலங்களுக்கும் இந்திய அரசு பங்கிட்டுக் கொடுக்கிறது— அவ்வகையில் வருவாய் ரூ. 50 கோடி, ரூ. 165 கோடியை மாநில அரசு வரி மூலம் வருவாய் மூலம் திரட்ட வேண்டும். மற்றவை ஏற்கெனவே எடுத்த கொள்கை முடிவின்படி வருகிறது. அதிலே இந்திய அரசினுடைய உதவி Central assistance



1992 பிப்ரவரி 6] [திரு. ச. இராமச்சந்திரன்]

அவர்களுடைய உதவி இதிலே என்ன என்ற விவரங்கள் இல்லை. ஏனென்றால் உதவி இல்லை. ஆகவே திட்ட ஒதுக்கீடு ரூ. 1,751 கோடி என்று அதிகமாக்கி இருப்பது என்பது தமிழ்நாடு அரசே அந்த நிதியைத் திரட்டப் போகிறதே தவிர, இந்திய அரசு தருகின்ற உதவி அதிகப்படுத்தப்படவில்லை. ஆகையினாலே நீங்கள் அரிசியைக் கொண்டு வாருங்கள், நாங்கள் உமியைக் கொண்டு வருகிறோம், இருவரும் ஊதி ஊதி சாப்பிடுவோம் என்ற வகையிலேதான் இந்திய அரசு திட்டத்தை அனுமதித்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு இந்த ஆண்டு திட்டத்தைவிட வரும் ஆண்டு திட்டம் ஒன்பதரை சதவீதம் அதிகம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டினுடைய விலைவாசியின் உயர்வு - Inflation—அவர்களே அறிவித்திருப்பது 13 சதவீதம். அநேகமாக 20 சதவீதம் விலைவாசி உயர்வு வரும் என்கிறார்கள். ஆகவே இந்த ஆண்டு எவ்வளவு செயல்களைச் செய்கிறோமோ அதே அளவிற்குச் செயல்களைச் செய்ய அடுத்த ஆண்டுக்கு 20 சதவீதம் கூடுதல் நிதி இருந்தால்தான் முடியும். ஆகவே 9 சதவீதம்தான் கூடுதல் என்கிறபோது, இந்த ஆண்டு எவ்வளவு பணிகள் நடைமுறையில் நடைபெறுகிறதோ அதைவிட குறைவான பணிகள்தான் நடத்த வேண்டிவரும் என்பதையும் நான் இந்தப் பேரவையின் கவனத்திற்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே இதிலே மிக முக்கியமாக கவனத்திலே வைக்க வேண்டிய பிரச்சினை. . . . . . . (மணியடிக்கப் பெற்றது) மாண்புமிகு தலைவர் அவர்களே எனக்குக் கொஞ்சம் நேரம் கூடுதலாகக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோருக்கும் கொடுத்த உரிய நேரம் உங்களுக்கும் உண்டு. சிறப்பு அனுமதியைப்போல நீங்கள் கேட்கக்கூடாது. எல்லோருக்கும் கொடுத்த அந்த நேர ஒதுக்கீடு உங்களுக்கும் உண்டு. உங்களுக்குக் குறைக்கப்படவில்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-40.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள், பட்ஜெட் கூட்டத் தொடரில் பேச வேண்டிய விஷயங்களைப்பற்றி எல்லாம், இப்பொழுது விவாதத்தைத் தொடங்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருப்பது, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதம். எனவே, அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினால் அவையின் நேரம் வீணாகாமல் இருக்கும் என்று கருதுகிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவுசெய்து, அந்த மாதிரிப் பேசினால் நன்றாக இருக்கும் இப்பொழுது முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தது ஒரு அறிவிப்பு. அந்த அறிவிப்பு ஆளுநர் உரைக்கு அப்பாற்பட்டது. அந்த அறிவிப்புப் பற்றிய முழு விவரங்களும் பட்ஜெட் உரையிலேதான் வரும். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு என்னால் பதில் சொல்ல முடியும். ஆனால், சொல்ல வேண்டிய நேரம் இது அல்ல; சொல்ல வேண்டிய கூட்டத் தொடரும் இது அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி). அவர் எழுப்பிய கேள்விகளுக்கு விடைகள் பட்ஜெட் கூட்டத் தொடரின்போது அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரம் இங்கே வந்ததனால் நான் அந்தக் கருத்தைச் சொன்னேன். மாண்புமிகு தலைவர், வேண்டாம் என்றால் விட்டுவிடுங்கள். நான் ஆளுநர் உரைக்குப் போகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது ஆளுநர் உரைக்கு சம்பந்தம் இல்லாதது என்பதைத்தான் சொல்ல வந்தேன். ஒரு அறிவிப்புச் செய்தார்கள். அந்த அறிவிப்பு பற்றிய முழு விவரங்களும் பட்ஜெட்டிலேதான் வரும். இதிலே நீங்கள் அந்தப் பிரச்சினையை எடுத்த எடுப்பிலே எழுப்பிவிட்ட காரணத்தால், ஆளுநர் உரை மீது பேசுவது நல்லது என்று சொன்னேன்.

**திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சில குறிப்பிட்ட குறைகளை மட்டும் எடுத்துச் சொல்லி என்னுடைய உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். கடந்த 6 மாத காலத்தில் இந்த அரசும், இந்திய அரசும் மேற்கொண்டு இருக்கின்ற பல்வேறு காரியங்களின் விளைவாக சாதாரண மக்களுடைய வாழ்க்கைச் சுமை அதிகரித்து இருக்கிறது என்பது என்னுடைய குற்றச்சாட்டு ஆகும். ஆகையினாலே, ஆளுநர் உரையில் ஏழை எளிய மக்களுடைய வாழ்வுக்குத் தனிக் கவனம் செலுத்தப்படும்; அவர்களது வாழ்வு உயர்வதற்காகப் பாடுபடுவோம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அது ஏட்டளவிலேதான் இருக்குமே தவிர, செயலளவிலே இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அண்மையிலே வெள்ள நிவாரணப் பணிகள் மேற்கொண்டபொழுது, வெள்ள நிவாரணப் பணிகள் எதிர்பார்த்த அளவுக்கு நடைபெறவில்லை. ஒருவேளை, இந்திய அரசிடத்தில் 400



கோடி ரூபாய் இந்த அரசு கேட்டது, அந்தப் பணம் வரவில்லையோ, வந்ததோ—எனக்குத் தெரியாது; அதனால் நடைபெறவில்லையோ என்று நான் குறை சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் எண்ணம் நமக்கு நன்றாகவே புரிகிறது. இப்பொழுதுதான் 1,751 கோடிக்கான ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை மத்திய அரசாங்கம் 'அப்ரூவ்' செய்து இருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த அவை முன் தெரிவித்தேன். எனவே, வெள்ள நிவாரணப் பணிகளுக்கு மத்திய அரசாங்கம் பணம் கொடுக்கவில்லை, போதிய அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என்று எங்களைச் சொல்ல வைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கிறார் என்றே கருதுகிறேன். நாங்கள் எதிர்பார்த்த அளவிற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து நிதி வரவில்லை. நாங்கள் கேட்டது 400 கோடி ரூபாய் அளவில்தான். அது உண்மைதான். மத்திய அரசாங்கம் இதுவரை கொடுத்தது 40 இலட்சங்கள் தான். ஆனால் மேலும் எதிர்பார்க்கிறோம். மத்திய அரசாங்கம் தேவையான உதவிகளைச் செய்யும் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடிந்த குடிசைகளுக்குப் பணம் கொடுத்து இருக்கிறார்கள். சில குடிசைகளுக்குப் பணம் வரவில்லை. ஆகையினாலே எல்லா குடிசைகளுக்கும் கணக்கு எடுத்து, பணம் கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. அதற்காகத்தான் நான் அதைச் சொன்னேன். ஆக, இன்னும் சில இடங்களிலே குடிசை வீடுகளுக்குப் பதிலாக கல் வீடுகளைக் கூட சில அதிகாரிகள் கணக்கு எடுத்து, கல் வீடுகளுக்கு அந்த இழப்பீட்டுத் தொகை தந்து இருக்கிறார்கள். அந்தக் குறையை என்னிடத்திலே தந்து இருக்கிறார்கள். அதை மாண்புமிகு சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே தருகிறேன். அந்தக் குறை இல்லாமல் அவர் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், இலவச வேஷ்டி சேலை வழங்கும் திட்டத்திலேயும் தகுதி வாய்ந்தவர்கள் நிறைய பேர் இருக்கிறபொழுது ஒருசிலருக்கு மட்டும்தான் கொடுக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் கொடுக்கப் போகிறோம் என்றார்கள். அதிலே எல்லோரையும் கணக்கு எடுத்து 300 ரூபாய்க்குக் கீழே உள்ளவர்கள் அத்தனை பேரையும் கணக்கு எடுத்து எல்லோருக்கும் அது விநியோகிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக மேட்டூர் பகுதியிலே இருந்து எனக்கு ஒரு தகவல் வந்து இருக்கிறது. அங்கே சுமார்......

டி2 WS 53-421—17

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விட்டுப்போனவர்களுக்கு எல்லாம் கொடுக்க வேண்டுமென்று, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த மாதம் 28ஆம் தேதிக்குள் கொடுக்க வேண்டுமென்று தனியாக உத்தரவு போட்டு இருக்கிறார்கள். அது செய்தித்தாள்களிலே வந்து இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவார் என்று கருதுகின்றேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1 கோடி 20 இலட்சத்துக்கு மேல் கூடப் போகலாம். அதற்காகச் சொல்கிறேன். இதை வழங்கிய அதிகாரிகளே, வசவுக்கு ஆளாகி இருக்கிறார்கள். என்னிடத்திலே அந்த மனுவே இருக்கிறது. நான் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்குத் தர விரும்புகிறேன். வேஷ்டி சேலையைக் கொடுத்த அந்த கிராம நிர்வாக அதிகாரிகளையே மிகவும் கேவலமாக ஏசி இருக்கிறார்கள். அதை ஒருவர் எழுதி இருக்கிறார். செந்தமிழ் முழக்கத்திலே திட்டினார் என்று எல்லாம் எழுதி இருக்கின்றார். ஆகையினால் எல்லோருக்கும் கொடுங்கள். ஏனென்றால் சாதாரணமான மக்கள், ஏழை எளிய மக்களுக்குச் செய்யக்கூடிய காரியம் என்பதனாலே நான் அவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 1-45

மூன்றாவதாக விலைவாசி உயர்வைப் பொறுத்தவரையில், அடிப்படையில் விலைவாசி உயர்வு என்பது இந்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்தது. ஆனால் அதே நேரத்தில் அதிலிருந்து ஏழை மக்களைக் காப்பாற்ற வேண்டிய கடமை மாநில அரசைப் பொறுத்தது. ஆகவே, விலை உயர்வு பிரச்சினை என்று பார்க்கிறபோது இந்திய அரசானாலும் சரி, மாநில அரசானாலும் சரி, அந்தக் கொள்கையைக் கடைபிடித்து இருக்கிறார்களா என்பதைப் பற்றி உண்மையிலேயே நான் அச்சப்படுகிறேன். ஏனென்றால், சாதாரண மக்கள் பயன்படுத்துகிற வாகனம் பேருந்து. அந்தப் பேருந்துக் கட்டண உயர்வு அளவுக்கு மீறி உயர்த்தப்பட்டிருக்கிறது. அதனாலே நகரத்திற்கு அருகில் இருந்து நகரங்களில் வேலை செய்கிற சாதாரணத் தாய்மார்கள் கூட தினந்தோறும் சென்று வருகிறவர்கள் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய், காலையில் 50 பைசா, மாலையில் 50 பைசா என்று செலவு செய்கிற நிலைமை ஏற்படுகிறபோது அத்தகையோரால் அதை ஈடுகட்ட முடியவில்லை என்பதை நானே அறிவேன். அதே நேரத்தில் வீட்டில் வேலை செய்கிற தாய்மார்கள் கூட அவர்கள் வந்து அந்த வேலையைச் செய்துவிட்டுப் போகிறபோது அதனால்



ஏற்படுகிற இந்தச் செலவைச் சரிகட்ட முடியாமல் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகிறார்கள். ஆகவே, பஸ் கட்டண உயர்வு வெகுவாக ஏழை மக்களை பாதித்து இருக்கிறது. அதேபோல் பால் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. பால் என்பது பணக்காரர்கள்தான் பயன்படுத்துகிறார்கள் என்பதல்ல. ஏழைத் தாய்மார்களும் தங்களுடைய குழந்தைகளுக்கு அரை லிட்டர் அல்லது ஒரு லிட்டர் பால் வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்த விலை உயர்வு ஏழைகளை வெகுவாகப் பாதித்து இருக்கிறது என்பதை மாநில அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, சர்க்கரை விலையை இந்திய அரசாங்கம் உயர்த்தி இருந்தாலும் அதனுடைய விளைவாக இன்றைக்கு மற்ற பொருள்களின் விலை உயர்ந்திருக்கிறது. சாதாரணமாக டீ விலை கூட பாமர மக்களுக்கு உயர்ந்திருக்கிறது. பாமர மக்கள் இந்த விலை உயர்வைச் சரி கட்டலாம், எப்போது என்றால் அவர்களால் வருமானத்தைப் பெற முடிகிறபோது அந்த விலை உயர்வைச் சரி கட்டலாம். அண்மையில் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டில் கூட ஏழை மக்களைப் பார்த்து ஒரு பேட்டி வந்தது. அதிலே ஒரு ரிக்ஷா தொழிலாளி சொல்கிறார். 10 ரூபாயிலிருந்து 25 ரூபாய் ஒரு நாளைக்குக் கூலி வருகிறது. அதிலே 7 ரூபாய் அந்த ரிக்ஷா உரிமையாளருக்கு கொடுக்கவேண்டியிருக்கிறது. மீதி ரூபாயிலே தங்களுடைய குடும்பத்தை நடத்த வேண்டியிருக்கிறது. அந்தச் சூழ்நிலையில் எங்களால் அரைப் பட்டினி, அல்லது முழுப் பட்டினி என்ற நிலையில் தான் இருக்க வேண்டியிருக்கிறது. எங்களுடைய கட்டணத்தை நாங்கள் உயர்த்த முடியவில்லை. ஏனென்றால் ரிக்ஷாவிற்கு யாரும் வருவதில்லை. கட்டணத்தை உயர்த்தினால் யாரும் வர மாட்டார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள்.

அரிசி விலை உயர்வைப் பற்றி நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அரிசி விலை உயர்வு என்பது அரிசி விலையோடு மட்டுமல்ல. அரிசி விலை உயர்வினாலே வெளி விலையும் உயரும். அதோடு மட்டுமல்ல, அரிசி விலை உயர்வதனாலே அதை வாங்கிச் சாப்பிட முடியாதவர்கள் கம்பு, கேழ்வரகு போன்ற கோர்ஸ் கிரெய்ன்ஸ், (Carerls)) வாங்குவதால் அவற்றின் விலை உயரும். அது மட்டுமல்ல. அரிசி எல்லோரும் வாங்கிச் சாப்பிடுகிற பொருள் என்ற காரணத்தாலே அரிசி விலை உயர்வால் வாழ்க்கைச் செலவும் உயரும். ஆகவே, மூன்று முறைகளில் அரிசி விலை உயர்வு மக்களைப் பாதிக்கும். அரிசி விலை உயராமல் தடுக்க வேண்டியது மிக மிக இன்றியமையாத கடமை. அரிசி விலை என்று சொல்கிற போது பொது மார்க்கெட்டிற்கு வருகிறேன். அது அடுத்தது. பொதுவான விலை இப்போது 8 ரூபாய், 10 ரூபாய் என்று அரிசி விற்கிறது என்றால் இந்த விலை நாட்டு மக்களை மிகவும் பாதிக்கும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அதற்குக் காரணம் நம்முடைய

மக்கள் பயன்படுத்துகிற உணவில் முக்கால் பங்கு, அதாவது 2/3-லிருந்து 3/4 வரை உணவு தானியங்களைப் பொறுத்திருக்கிற காரணத்தால் இப்போது பொதுவான விலை வாசி உயர்வு என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை மிகவும் பாதித்து இருக் கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதிலேயிருந்து சாதாரண ஏழை எளிய மக்களைக் காப்பாற்றுவதற்கு பொது விநியோக முறையைப் பலப்படுத்த வேண்டும. பொது விநி யோக முறையில் கார்டு கிடைக்காதவர்கள் இருக்கிறார்கள். கடை இல்லாத ஊர்கள் இருக்கின்றன. சாதாரணமாக ஒரு ஊர் விட்டு இன்னொரு ஊருக்குப் பிழைக்கப் போவார்களானால் அவர்களுக்குக் கார்டு கிடையாது. வீடு இல்லாதவர்கள் இருக்கி றார்கள். அவர்களுக்கும் கார்டு கிடையாது. அதே நேரத்தில் அந்தப் பங்கீட்டு கடைகளில் உரிய நேரத்தில் பொருள்கள் கிடைப்பதில்லை. அந்தப் பொருள்கள் வருகிற நேரத்தில் ஏழை எளிய மக்களிடத்தில் கையில் பணமும் இருப்பதில்லை. அது மட்டுமல்லாமல், கடைக்குப் பொருள்கள் வருவதற்குப் பதிலாக, அதாவது வழியிலேயே அதிலே இருக்கக் கூடிய ஊழியர்கள் தவறு செய்கிறார்கள். இந்த முறைகளில் எல்லாம் பொது நிர்வாக முறை சீராக்கப்பட்டு, பலப்படுத்தப்பட்டு எல்லா இடங்களிலும் அது பரவலாக்கப்பட்டு, எல்லா மக்களுக்கும் பயன்படுத்தப்பட்டா லொழிய, இன்றைக்கு இருக்கக் கூடிய விலைவாசி உயர்வால் மிக மிக பாதிப்புக்கு ஆளாகிறவர்கள் ஏழை மக்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தச் சூழ்நிலை உருவாவதற்கு முக்கியமான காரணம் இந்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கை என்று சொன் னால் அது மிகையாகாது. இந்திய அரசினுடைய கொள்கை சரியா, இல்லையா என்பது வேறு. ஆனால் அந்தக் கொள்கை யினுடைய விளைவை அனுபவிக்க வேண்டியது மக்கள் என்ற காரணத்தால், இன்றைக்கு அரிசி விலையை ரேஷன் கடைகளில் உயர்த்துகிறோம். அதனால் ஒரு நஷ்டத்தைக் குறைக்கிறோம் என்று நினைக்கிறோம்.

பிற்பகல் 1-50.

இதிலே ஒன்றை நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசாங்கத்திலே அல்லது தொழிற்சாலைகளிலே பணியாற்று கின்றவர்கள், விலைவாசி கூடுகிற போது பஞ்சப்படியைப் பெறு கிறார்கள். ஆனால் ஏழை எளியவர்களுக்கு யார் பஞ்சப்படி யைத் தருகிறார்கள் ? ஆகையினாலே நியாய விலைக் கடைகள் மூலம், பொது விநியோக முறை மூலம் இந்த அரிசியை நாம் விநியோகிக்கிறோம் என்றால், அதிலே வருகிற இழப்பு, ஏழை எளியவர்களுக்கு அரசாங்கம் தருகிற பஞ்சப்படி என்று தான் அதை நினைத்துக் கொள்ள வேண்டுமே தவிர, அதை நஷ்டம் என்று நினைத்துக் கொண்டு, நாம் உயர்த்தக் கூடாது. அது கேரளாவிலே அல்லது ஆந்திராவிலே, அல்லது மற்ற மாநிலங்





களிலே உயர்த்தப்பட்டு இருக்கிறது என்ற காரணத்திற்காக இங்கே உயர்த்துவது என்பது—அந்த அளவிற்கு வாங்கும் சக்தி— இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதனால் தான் தமிழகத்தைப் பொறுத்த வரையில், அரிசியின் விலையை உயர்த்துவதிலே மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டியதாக இருக்கிறது. அரிசியினுடைய விலையை இந்த அரசு உயர்த்தியதன் விளைவாக மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் ஏழை எளிய மக்கள் என்பதைச் சொல்லக்கடமைப்பட்டு இருக் கிறேன்.

இந்திய அரசோ, ஐ எம்.எப்போ. அல்லது உலக வங்கியோ அவர்கள் சொல்கிறார்கள் என்று பல்வேறு மானியங்களைக் குறைத்து இருக்கிறார்கள். இதிலே வேடிக்கை என்னவென் றால், ஐ.எம்.எப்பே. கூட இந்த ஃபுட் சப்சிடி பற்றி, அரிசிக்குத் தருகிற அந்த மானியத்தைக் குறைக்க வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"The interesting aspect of this operation however, is the fact that the Government is rot bound to the I.M.F. or World Bank to reduce its food subsidy burden. Under its agreements with the I.M.F. the Government Food Subsidy burden should remain constant as a percentage to G.D.P. Thus the Government can justify the rise in food subsidy with the rise in procurement price and with the rice in G.D.P. Quite obviously the Government is trying to reduce the food subsidy burden as much as it can so that it can have greater flexibility to that extent in other areas."

ஆகவே, இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி, இதிலே ஆயிரம் கோடி ரூபாயை— அந்த சப்சிடியை எடுத்து விட்டால், அதை—வேறு எங்கேயாவது பயன்படுத்தலாம் என்கிற முயற்சி யிலே இந்திய அரசு உயர்த்தியிருக்கிறது ஐ.எம்.எப். கூட அதைச் சொல்லவில்லை என்று தெரிகிறது.

அதோடு மட்டுமல்லாமல், இந்திய அரசு உர விலை, அரிசி விலை, பெட்ரோல் விலை...... (குறுக்கீடு).

திரு. வ. சத்தியமூர்த்தி : உங்களிடம் காண்பித்து அனுமதி பெற்றிருக்கிறாரா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காண்பித்தார்.

திரு. ச. இராமச்சந்திரன் : உர விலை, அரிசி விலை, பெட்ரோல் விலை, டீசல் விலை, மண்ணெண்ணெய் விலை, சர்க்கரை விலை, நிலக்கரி, ரயில் கட்டண உயர்வு என்று அடி

[திரு. ச. இராமச்சந்திரன்] [1992 பிப்ரவரி 6

மேல் அடி அடித்ததைப் போல, இந்திய அரசு தொடர்ந்து இந்தக் காரியங்களைச் செய்து வருவதால், பொருளாதாரம் இன்றைய தினம் சீரழிந்து வருகிறது. அதற்கு மேலாக ரூபாயின் மதிப்பை வேறு குறைத்து விலைவாசியை அதிகப்படுத்தி, இன்று மிகப் பெரிய நெருக்கடியை உருவாக்கியிருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்லாமல், இந்திய அரசுக்கு அனுமதித்ததே, ரூபாய் நோட்டு அச்சடிப்பதற்கு 7,700 கோடிதான். பட்ஜெட் எஸ்டிமேட். ஆனால் Printing of notes by mid January 14,700 கோடி ரூபாய். ஆகவே, இரு மடங்கு ரூபாய் நோட்டினை அச்சடித்ததன் காரணமாக, மத்திய அரசினுடைய வரவு—செலவுத் திட்டத்தை ஈடுகட்டுவதற்கு அச்சடித்ததன் காரணமாக ஏற்பட்ட ரூபாய் நோட்டு புழக்கத்தின் காரணமாக, விலை இன்று அதிமாகிக் கொண்டிருக்கிறது. ...... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்குப் பதில் சொல்வதற்கு மத்திய நிதியமைச்சர் தான் வர வேண்டும். (குறுக்கீடு). இத்தனை கோடி ரூபாய்க்கு அச்சடித்தார்களா, இல்லையா என்பதற்கு. நோட் அடித்த விவகாரம், அதற்குப் பதில் சொல்வதற்கு அவர்கள் வரவேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மத்திய சர்க்கார் பட்ஜெட்டுக்கு மட்டுமல்ல, எல்லாத் துண்டுகளுக்கும் அங்கே தான் வரவேண்டும்.

திரு. ச. இராமச்சந்திரன் : ஜெனரல் சிட்டுவேஷன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெனரல் சிட்டுவேஷன், அதைத்தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்பிளேஷனைச் சொல்லலாம். இவ்வளவு என்று சொல்கிறீர்கள். அது ஒரு குற்றச்சாட்டு போல வரும் என்பதால் சொன்னேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : நெட் ரிசர்வ் பேங்க் கிரடிட்டைச் சொன்னேன். Net Reserve Bank Credit to Goverment or India அதைத் தான் சொன்னேன். ஆகையினாலே இவற்றின் காரணமாக ஏற்பட்டு இருக்கக் கூடிய சூழ்நிலையிலே பார்க்கிற போது, உணவுத் துறைக்குத் தரவேண்டிய மானியத்தைத் தரமுடியாமல் மாநில அரசு அரிசி விலையை உயர்த்தியிருக்கிறது. நான் மாநில அரசை மீண்டும் கேட்டுக்கொள்வது, அரிசி விலையை தயவு செய்து உயர்த்தாதீர்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்றைக்குப் பேசுகிறபோது சொன்னார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலே மது விலக்கு இருந்தது. ஆகையினாலே அவர்கள் சமாளித்தார்கள், எங்களாலே சமாளிக்க முடியவில்லை என்று சொன்னார்கள்



1992 பிப்ரவரி 6] [திரு.ச. இராமச்சந்திரன்]

[பிற்பகல் 1-55.]

நான் தயவுசெய்து சொல்கிறேன். அரசாங்கத்திற்கு எவ்வளவோ செலவுகள் இருக்கின்றன. இருந்தாலும் அரிசி விலையை உயர்த்துவது கூடாது. அது பாமர மக்களுக்குத் தரக் கூடிய பஞ்சப்படி என கருதப்பட வேண்டும். ஏனென்றால் அரிசி இருந்தால், அறிஞர் அண்ணா அவர்கள் மொழியில் சொல்லப் போனால், கொதிக்கிற உலையிலே அரிசியைப் போட்டு கஞ்சியாகக் காய்ச்சிக் கூட நம்முடைய மக்கள் குடித்துவிட்டு காலம் தள்ளி விடுவார்கள் என்று சொல்வார்கள். ஆகையினால் அந்தக் கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டும். இந்த நிலைகளிலே எல்லாம் செலவு உயர்கின்ற போது ஏழை எளிய மக்கள் மேலும் ஏழைகளாகவும், நடுத்தர வர்க்கத்தில் இருக்கின்றவர்கள் கூட கடந்த ஆறு மாதத்திலே சொல்கிறார்கள். ரூ. 1,000 செலவில் குடும்பம் நடத்தியவர்கள் இப்போது ரூ. 1,500 தேவைப்படுகிறது என்று சொல்கிறார்கள். இவை எல்லாம் நடைமுறை உண்மை என்பதைப் பார்த்து அந்தச் சுமையைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான திட்டங்களை வருகிற வரவு-செலவுத் திட்டத்திலே தெரிவிப்பார்கள் என்று நம்புகின்றேன். வறுமையினுடைய விளைவு தான் நம்முடைய மக்கள் கர்நாடகத்திற்குப் போய் பிழைக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டு, கர்நாடகத்திலே இன்றைக்கு அந்த நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. கர்நாடகத்திலே இங்கேயிருந்து போயிருக்கின்ற தமிழர்கள் பெரிய கோடீஸ்வரர்களாக அங்கே இருக்கின்ற செல்வத்தைச் சுரண்டியாக வேண்டும் என்று இல்லை. அங்கே போய் இருக்கின்றவர்கள் கூலி வேலைக்காரர்கள். கட்டிடத் தொழில் செய்கின்றவர்கள், ரோடு போடுகின்றவர்கள், தையல் வேலை செய்கின்றவர்கள், கொத்து வேலை செய்கின்றவர்கள், விவசாயத்திலே வேலை செய்கின்றவர்கள் இப்படித் தான் அவர்கள் தங்களுடைய பிழைப்பிற்காகச் சென்றார்கள். அந்த மக்களுக்கு, காவிரிப் பிரச்சினை காரணமாக, இந்திய அரசினுடைய நடுவர் மன்றத்தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டதன் விளைவாக ஏற்பட்ட நிலைமைகள் உண்மையிலேயே நெஞ்சை நெக்குருகச் செய்யக் கூடியவை. அந்த நிகழ்ச்சிகளை எல்லாம் நான் தொகுத்துச் சொல்ல வேண்டுமென்கிற அவசியமில்லை. பத்திரிகைகளிலே பார்த்தவர்களுக்கு நன்கு தெரியும். உண்மையிலேயே ஒரு மனித நாகரீகமுள்ள சமுதாயத்தில் நடைபெறக் கூடாத சம்பவங்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது 20 நிமிடங்கள் ஆகிவிட்டன, இரண்டொரு நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கருத்துரையை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கி
றேன். அரசிதழில் வெளியிடுகிறார்கள். அமைச்சரவை கூடு
கிறது. அமைச்சரவையிலே நாங்கள் ராஜினாமா செய்வோம்
என்று மிரட்டுகிறார்கள். 13 ஆம் தேதி பந்த். 12 ஆம்
தேதியிலிருந்து. ஆரம்பித்து 1 மாதம் அங்கே இவ்வாறு நடக்
கிறது. நான் கேட்கிறேன். கர்நாடகத்திலே இருக்கக் கூடிய
அரசு நினைத்திருந்தால் அதைத் தடுத்திருக்க முடியாதா? இப்
போது அங்கே உலகப் பட விழா நடந்தது. அதிலே கூட அந்த கர்
நாடக வெறியர்கள் நாங்கள் பட விழாவை நடத்த விடமாட்டோம்
என்றார்கள். ஆனால் அதே கர்நாடக அரசு அவர்களைத் தடுத்து
நிறுத்தி காப்பாற்றியதே. கற்பழிக்கப்படுவதும், வீடுகள் கொளுத்
தப்படுவதும், குழந்தைகள் தூக்கிச் சாக்கடையில் எறியபடுவதும்,
போலீசே செய்திருக்கிறார்கள். மருத்துவ மனைகளிலே அவர்
களுக்குச் சிகிச்சை கிடையாது. ஒரு ஆட்டோவிலே ஏறிப் போக
வேண்டுமென்றால் அதற்கும் வழி கிடையாது. ஆக முழுக்க
முழுக்க அந்தக் குற்றத்தைச் செய்தது கர்நாடக அரசு. அதில்
எந்தவிதமான சந்தேகமும் இல்லை. அதை எல்லாம் செய்து
இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, இவை அவ்வளவும்
நடந்த போது அவர் என்னவென்றால் பூனாவிலே இசை
கேட்கப் போய் விட்டார். ஆக இந்த மக்களுக்கு, ஏழை எளிய
மக்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது?

அதோடு மட்டுமல்ல, இந்திய அரசும் அந்த அறிவிப்பை வெளி
படுகிறது. இந்திய அரசுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இந்திய
அரசும் தகவல் கிடைத்தவுடன் என்ன நடவடிக்கை எடுத்தது?
இவ்வளவு பெரிய காட்டுமிராண்டித்தனம் நடக்கிறது. கொலை
நடக்கிறது. சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை.
இந்திய அரசினுடைய கடமை என்ன? இந்திய அரசு அந்த
அரசாங்கத்தை அனுமதித்திருக்கலாமா? இதே வேறு ஒரு
அரசாங்கம் இருந்திருக்குமேயானால், இந்திய அரசு சும்மா
இருந்திருக்குமா? தயவு செய்து இதை நீங்கள் எண்ணிப் பார்க்க
வேண்டும். அரசியல் சட்டத்திலே சொல்லப்படுகிறது. மொழி
வழி சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டியது
இந்த அரசு என்று. ஆனால் இந்த அரசு கொடுக்கவில்லை.
அரசியல் சட்டத்தின்படியே டிஸ்மிஸ் பண்ண வேண்டியது தானே.
சட்ட வழிப்படி ஆட்சி. "ரூல் ஆப் லா" இல்லவேயில்லை.
ஒரு சிவிலைஸ்டு சொசைட்டி. ஒரு மனித உரிமை, மானம்
உள்ளவன் வாழ வேண்டும். ஒரு நாகரீகமான சமுதாயம்.
"ஹியூமன் ரைட்ஸ்" "வயலேஷன்" ஒரு நடவடிக்கையும்
இல்லையே. சரி, ஒரு மாகாணத்திலேயிருந்து இன்னொரு மாகாண
த்திலே நடக்கிறது. What has happened to the national Integration
இந்திய அரசு குற்றம் செய்பவர்களை தண்டிக்கத் தவறிவிட்டது.
[illegible]ர்கள் மட்டும் 12 ஆம் தேதியன்றே நடவடிக்கை எடுத்து
இருப்பார்களேயானால், ஒன்றுமில்லை, அந்த அரசாங்கத்[illegible]

டிஸ்மிஸ் பண்ணி அந்த அசெம்பிளியைக் கூட சஸ்பெண்ஷனில் வைத்து, வேறு ஒரு முதல் மந்திரியைக் கூட கொண்டு வரலாம் அல்லது கவர்னர் ஆட்சியைக் கொண்டு வந்திருக்கலாம். கவர்னர் ஆட்சியை வேறு எதெற்கோ பயன்படுத்துகிறார்கள். ராணுவத்தைக் கொண்டு வந்திருக்கலாம். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த முதலமைச்சரை மாற்றி இருக்கலாம் என்று சொல்வதில் முதலமைச்சரை மாற்றுவதும், மாற்றாததும் அந்தக் கட்சிக்குள்ளே இருக்கிறது. அது வேண்டாம். கவர்னர் ஆட்சி என்பதில் நீங்கள் ஏதோதோ சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள், அதெல்லாம் வேண்டாம்.

பிற்பகல் 2.00

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : 13 ஆம் தேதி பந்த், 11 ஆம் தேதி அதை டிஸ்மிஸ் பண்ணியிருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. வி. இராஜேந்திரன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு பாதுகாக்கத் தவறி விட்டது உரிய நடவடிக்கைகளை, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கத் தவறி விட்டது என்று சொல்லுகிறார்கள். அதே போல மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அமெரிக்காவிலே இருந்தபோது இங்கே குறிப்பாக சென்னையைச் சுற்றியிருக்கிற மாவட்டங்களிலே தாழ்த்தப்பட்ட மக்கள் கொலை செய்யப்பட்டபோது அமைச்சராக இருந்த அவர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அமெரிக்காவிலே இருந்தபோது இங்கே பொறுப்பேற்றிருந்த இவர்கள் என்ன நடவடிக்கையை, முன்னெச்சரிக்கை நடவடிக்கையை எடுக்க முடிந்தது. அதை எப்படி அவர்கள் தடுத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ரெலவன்டாக இல்லை. திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் கவர்னரே வேண்டாம் என்று சொன்னதாகச் சொன்னார். நான் சொன்னது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சரை அல்ல கர்நாடகத்திலே இருக்கிற முதலமைச்சர் நியமிக்கப்பட்ட முதலமைச்சர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் இல்லை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வேண்டாம். இது தவறான வாதத்திற்கு போய்க்கொண்டிருக்கும். முதலமைச்சராக யார் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், சட்ட மன்ற உறுப்பினர் களால் தேர்தெடுக்கப்பட்டவர் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் என்றுதான் பொருள்படுமே தவிர நியமிக்கின்ற முதலமைச்சராக இருக்காது.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சரெல்லாம் வேறு, அங்கே உள்ள முதலமைச்சரெல்லாம் வேறு. அவர்கள் எல்லாம் நியமிக்கப்படுபவர்கள் அதனால் அதை மாற்றலாம் என்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஜனநாயக அமைப்பில் முதலமைச்சராக யார் வந்தாலும் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர் என்றுதான் பொருள் பெறும். திரு. ச. இராமச் சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல நம்முடைய அரசைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு அரசும் இதிலே செய்ய வேண்டிய காரியங் களை விரைந்து செயலாற்ற வில்லை என்பது என்னுடைய குறைபாடாகும்.

13 ஆம் தேதி இது ஆரம்பித்த உடனேயே, 15 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை திராவிட முன்னேற்றக் கழகம் கண்டன ஊர்வலம் என்று ஆரம்பித்தார்கள். நாங்கள் அப்பொழுதே ஒரு அறிக்கையை விட்டோம். அனைத்துக் கட்சி கூட்டத்தையும் தயவுசெய்து கூட்டுங்கள் என்று கேட்டுக் கொண்டோம். திராவிட கழகப் பொது செயலாளர் வீரமணி அவர்கள் கூட காரைக்குடியிலேயிருந்தபோது கேட்டுக் கொண்டார். ஆனால் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை 30 ஆம் தேதிதான் கூட்டினார் கள். அதற்குள்ளே எல்லாம் நடந்து முடிந்து விட்டது. அனைத்துக் கட்சி கூட்டத்தையும் கூட்டி அந்தப் பந்த்-ஐ 2, 3 நாட்களுக்குள்ளாக நடத்தியிருந்தால் அதனுடைய விளைவே வேறாக இருந்திருக்கும்.

அது மட்டுமல்ல இலங்கையிலே தமிழின படுகொலைகள் நடைபெற்றபோது அப்படி செய்யப்பட்டது. ஆனால் இப் போது நீங்கள் பேசாமல் இருந்ததன் விளைவாகத்தான் இந்த ரி-ஆக்ஷன் அங்கே ஏற்பட்டது. ஆகவே அதை இந்த அரசு செய்ய தவறியது என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே போய் இருக்க வேண்டும். எந்த ஒரு சூழ்நிலை ஏற்பட்டு மக்கள் ஓடி வருகிறார்களோ அங்கே போய் பார்த்து அவர்களுக்கு வேண்டிய காரியங்களை நாம் செய்ய வேண்டும். அவர்கள்



என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்க வேண்டும். ஆனால் அவர்கள் ஏராளமான குற்றங் குறைகளோடு இன்றைய தினம் வந்திருக்கிறார்கள். இப்பொழுதும் நான் கேட்டுக் கொள் கிறேன், ஒரு பெண் நீதிபதியைப் போடுங்கள், அவர்களிடத்திலே இரகசியமாக எல்லாத் தகவல்களையும் பெற்று அவர்களுக்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம். செய்யுங்கள். 19 ஆம் தேதி நாங்கள் எல்லாம் அங்கே சென்று பார்த்த போது 6 கிலோ அரிசி தான் கொடுத்திருக்கிறார்கள் அவர்களுக்கு தங்க இடம் இல்லை. அவர்களுக்கு எந்த தொழிலும் இல்லை. உண்ண உணவு கிடைக்கவில்லை, உடை கிடைக்கவில்லை, ஆனால் ஒரே ஒரு பஸ் பாஸ்தான் கொடுத் தார்கள். ஆகவே அங்கேயிருந்து வந்த மக்களுக்கு முறையாக அவர்களுக்கு ஏற்பாடு செய்து எங்கே தங்க வைக்க வேண்டும் என்னென்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று ஒரு முறை யான திட்டம் வகுக்கப்பட்டு செயல்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதனுடைய விளைவாக அங்கே கோபியிலே நடந்த துப்பாக்கி சூடு பற்றி உங்களுக்கு தெரியும். ஏதோ ஒரு லாரி வர, அதிலே ஆத்திரம் கொண்ட சில பேர் போய் தாக்க, அப்படி ஏன் ஒரு கலவரம் அங்கே ஏற்பட்டது என்றால், அந்தக் கலவரம் நடந்த, உடனேயே அங்கே போலீஸைப் பலப்படுத்தியிருக்க வேண்டும். அங்கே காவல் துறையினர் பலம் இல்லாமல் இருந்தார்கள். கூட்டம் வந்தபோது அவர்கள் ஒரு லாரியையோ வேனையோ காப்பாற்றுவதற்காக 3 பேரை துப்பாக்கியாலே சுட்டுக் கொன் றிருக்கிறார்கள். இது கர்நாடக அரசுக்கு ஒரு சாட்சி. அது மட்டும் அல்ல நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அப்போது டெல்லிக்கு போனார்கள். நம்முடைய பிரதமர் நரசிம்ம ராவிடம் அவர்கள் என்ன பேசினார்கள். (குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : நான் கர்நாடகத் திற்குச் சென்றிருந்தேன். அப்போது பத்திரிகையாளர்களை சந்தித்தேன். உங்களுடைய ஊரிலேயும் வன்முறை இருந்தது என்று சொன்னார்கள். நான் சொன்னேன், வன்முறை அங்கே அடக்கப்பட்டது. எந்தப் பகுதியிலேயும் தொடர்ந்து வன்முறை நடந்ததாக யாராலும் சொல்ல முடியாது என்று சொன்னதை அனைவரும், அத்தனைபேரும் அங்கே ஒப்புக் கொண்டார்கள். ஆனால் உறுப்பினர் என்ன சொல்கிறார் என்றால் அதை மாற்றிச் சொல்கிறார். எனவே நடவடிக்கை எடுத்தது தவறு என்று சொல்வது முறையாகாது. இங்கே நாம் நடவடிக்கை எடுத்ததன் விளைவாகத்தான் அங்கே நம்முடைய தமிழர்கள் பாதுகாப்பான உணர்வோடு இருக்கிறார் கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன் இந்தப் பிரச்சினையோடு முடித்துக் கொள்ளுங்கள்.

[1992 பிப்ரவரி 6

பிற் பகல் 2—05

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் முறையாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள். ஆனால் இப்படி நடந்தவுடன் முதலமைச்சர் அவர்கள் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் தொடர்பு கொண்டார்கள். அவருடைய அலுவலகமும் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அது மட்டுமல்லாமல் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அதிகாரியை அனுப்பினார்கள். அதுவும் முதுநிலை அதிகாரிகளாக எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பினார்கள். அதுமட்டுமல்லாமல் இருக்கின்ற அமைச்சர்களையும், பெரியார் மாவட்டத்திற்கு ஒரு அமைச்சரும், நீலகிரி கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு ஒரு அமைச்சரும், தர்மபுரி மாவட்டத்திற்கு ஒரு அமைச்சரும் அனுப்பப்பட்டார்கள். அப்படி எல்லா அமைச்சர்களும் நேரடியாகப் போய் பார்த்து அங்கே எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு இருக்கிறது. எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல்கிறீர்கள். உங்களுக்கு ஒன்றைச் சொல்லவேண்டும். சாதாரணமாக அவர்களுக்கு கொடுக்கப்படுவது வேஷ்டி, சேலை. வேஷ்டி சேலை மட்டுமல்லாமல், குழந்தைகளுக்குச் சட்டை, பனியன் அரைக்கால் சட்டை, புடவை, பாவாடை, ஜாக்கெட் இப்படி எல்லாவிதமாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாத்திரங்கள் பாய் போர்வையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரைக்கும் இப்படிப்பட்ட நடவடிக்கை எப்போதும் எடுக்கப்பட்டதில்லை. இப்படி அகதிகளாக வருகின்றவர்களுக்கு இதுவரைக்கும், தமிழக அரசு இதற்கு முன்னாலேயும், பின்னாலேயும் என்ன கொடுத்ததோ அதைவிட, அதையும் தாண்டி மத்திய அரசு கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் சரி என்று இவைகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி). இலங்கையிலிருந்து இங்கு வருகின்றவர்கள்—அவர்கள் பல ஆண்டுகளாக அங்கு இருந்தவர்கள். திரு. இராமச்சந்திரன் அவர்கள் சொன்னபடி இங்கேயிருந்து அங்கு சென்றவர்கள் எல்லாம் பிழைப்புக்குச் சென்றவர்கள் ; இங்கே வீடு வாசல் இருக்கிறது. யார், யார் வீடு வாசலுக்குப் போகவேண்டுமென்று சொன்னார்களோ அவர்கள் இலவசமாக பஸ்ஸில் அனுப்பப்பட்டார்கள். இல்லையென்றால் முகாமில் இருக்கவேண்டுமென்றால் முகாமில் இருக்க அனுமதிக்கப்பட்டார்கள். எல்லா இடங்களிலும், எல்லா ஊர்களிலும் முகாம்கள் இருக்கின்றன. எல்லாவிதமான உதவிகளும் அவர்களுக்குச் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, முதலமைச்சர் மட்டுமல்ல, முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து தினமும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் பேசி எல்லா நடவடிக்கைகளும் முறையாக எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1992 பிப்ரவரி 6]

மாண்புமிகுபேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி
இராமச்சந்திரன் அவர்கள் முக்கிய குற்றச்சாட்டாகக் கூறியது,
கர்நாடகத் தமிழர்கள் அங்கிருந்து வந்தபோது அவர்களைப்
பார்க்க முதலமைச்சர் போகவில்லை, போயிருக்க வேண்டாமா
என்று கேட்டார். அவர்களுக்குத் தேவையான உதவிகளைச்
செய்யவில்லை என்றும் குற்றம் சாட்டினார். அதற்கு இப்
பொழுதுதான் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விளக்கத்தை
அளித்தார்கள். நாளை என் பதிலை நான் இந்த அவையில்
அளிக்கும்போது புள்ளி விவரங்களோடு, கர்நாடகத்திலிருந்து
வந்த தமிழர்களுக்காக என்ன உதவிகள் செய்திருக்கிறோம்,
அதற்காக எவ்வளவு செலவு செய்து இருக்கிறோம் என்பதை
யும் குறிப்பிட இருக்கிறேன். ஆனால் நான் நேரில் செல்ல
வில்லை என்று அதை ஒரு பெரிய குற்றமாக அவர் கூறுகிறார்.
ஏன் செல்லவில்லை என்ற விளக்கத்தையும் நான் கூற
இருக்கிறேன். இப்படி கர்நாடகத்திலிருந்து தமிழர்கள் பெரு
மளவில் தமிழகத்திற்கு வந்துகொண்டிருக்கிறார்கள் என்று
கேள்விப்பட்டவுடனேயே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு,
அவர்களுக்கு உதவி செய்கின்ற முகாம்களை அமைக்க வேண்டும்
என்று உத்தரவு போட்டவுடனேயே நான் சென்று நேரில்
அவர்களைப் பார்க்க விரும்பினேன். அதற்காக ஒரு
ஹெலிகாப்டர் விமானத்தை கூட நான் ஏற்பாடு செய்யச்சொல்லி
இருந்தேன். ஆனால் எனக்கு வந்த தகவல்கள்—மொத்தமாக,
ஒட்டுமொத்தமாக, ஓரிடத்திலோ, இரண்டு இடங்களிலோ
இவர்கள் இருக்கவில்லை. கர்நாடகத்திலிருந்து தமிழகத்திற்கு
வருவதற்கு 5 வழிகள் இருக்கின்றன. 5 ரூட்டுகள் இருக்
கின்றன. இந்த ஐந்து வழிகளாகவும் அவர்கள் வந்து கொண்
டிருந்தார்கள். ஒரே சமயத்தில் 20,000, 30,000 என்று மொத்த
மாக அவர்கள் வரவில்லை. ஒரு நாள் ஆயிரம் பேர் வருவார்
கள். மற்றொரு நாள் 2,000 பேர் வருவார்கள். இன்னொரு
நாள் 500 பேர் வருவார்கள். இப்படி எந்த நேரத்தில் எந்த
நாளில் எத்தனை பேர்கள் வருவார்கள் என்று சொல்ல இயலாத
நிலைமை இருந்தது.

அதுமட்டுமல்ல. அப்படி வந்த தமிழர்கள், கர்நாடகத்
தமிழர்கள், ஒரு முகாமிற்கு வரும்பொழுது எல்லோரும்
அங்கேயே தங்கிவிட மாட்டார்கள். எத்தனையோ பேர்
களுக்கு இங்கே தமிழகத்தில் உள்ள பல்வேறு ஊர்களில் பல்வேறு
மாவட்டங்களில் உறவுக்காரர்கள் இருக்கிறார்கள் ; சொந்தக்
காரர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கே சொந்தமான வீடுகள்
நிலங்கள் இங்கே இருக்கின்றன. அவர்களுக்கு நண்பர்களும்
இருக்கிறார்கள். எனவே அவர்களில் பல பேர் அந்த முகாம்

களில் தங்க விருப்பமில்லாமல் அவர்கள் சொந்த ஊர்களுக்குச்
செல்ல வேண்டும் அல்லது உறவினர்கள் இருக்கின்ற இடங்
களுக்குச் செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டதன் அடிப்
படையில் தமிழக அரசாங்கம் அவர்கள் விரும்பிய இடங்களுக்குப்
போவதற்கான போக்குவரத்து வசதியும் செய்து கொடுத்தது.

பகல் 2-10

அந்த நிலைமையில் நான் சுற்றிப் பார்த்து கர்நாடகத்தி
ருந்து வந்த தமிழர்களை எல்லாம் நான் கண்டு நேரில் அவர்
களை விசாரிக்கவேண்டும் என்றால் தேர்தல் நேரத்தில் செய்
வதைப் போல் தமிழகம் முழுவதும் ஒரு சுற்றுப்பயணம் நான்
மேற்கொண்டிருக்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அது
இந்த நிலைமையில் இயலாது என்ற காரணத்தால் தான் செல்ல
வில்லை என்பதை விளக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியுங்கள், மணி 2-10
ஆகிவிட்டது. இந்தப் பிரச்சினையோடு முடித்து விடுங்கள்.
அரை மணி நேரத்திற்கு மேல் பேசியிருக்கிறீர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எந்த
உதவியுமே கிடைக்கவில்லை என்று என்னிடத்திலே கொடுத்த
மனுக்களை நான் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்
அவர்களிடம் உங்கள் அனுமதியோடு கொடுக்கிறேன்.
நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொன்னது,
அந்தப் பகுதி அதாவது பெரியார் மாவட்டம், தர்மபுரி மாவட்
டம், சேலம் மாவட்டம் (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் விளக்க
விரும்புகிறேன். அவர் கூறுகின்ற சில மாவட்டங்களில் கூட
கர்நாடகத்திலிருந்து வந்த தமிழ் மக்கள் ஒரு இடத்தில்
இருக்கவில்லை, அல்லது இரண்டு இடத்தில் இருக்கவில்லை.
சேலம் மாவட்டம் என்று எடுத்துக்கொண்டால் சேலம் மாவட்
டத்தில் எத்தனை கிராமங்கள் இருக்கின்றன ? எத்தனை நகரங்
கள் இருக்கின்றன ? அவர்கள் கர்நாடகாவிலிருந்து வந்த பிறகு
பரவி சென்று விட்டார்கள். அவர்களுக்கு வேண்டியவர்கள்,
உறவுக்காரர்கள் இருக்கின்ற ஊர்களுக்கு அவர்கள் சென்று
விட்டார்கள். எனவே ஒரு மாவட்டம் முழுவதும் சுற்றிப்
பார்க்கவேண்டும் என்றால் கூட நாலு, ஐந்து நாட்கள் தேவைப்
படும். அப்படி இருக்கின்ற நிலைமையில் 10 மாவட்டங்களைச்
சுற்றிப் பார்க்கவேண்டும் என்றால் அதற்கே ஒரு மாதம், இரண்டு
மாதங்கள் பிடிக்குமே. (மேசையைத் தட்டும் ஒலி).



திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான்
ஒருவன்தான் பேசுகிறேன். அதற்கே இந்த மாதிரி கட் பண்ணி
னால் எப்படி ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை,
உங்களுக்கு மட்டும் 20 நிமிடங்கள் கொடுத்து இருந்தேன். இது
வரை அரை மணி நேரத்திற்கு மேல் ஆகிறது. குறுக்கீடுகளை
எல்லாம் குறைத்தால் கூட உங்களுக்குக் கொடுத்த நேரத்திற்
கும் அதிகமாகப் பேசியிருக்கிறீர்கள். நீங்கள் ஒவ்வொரு பிரச்
சினையிலும் ரொம்ப விரிவாகப் போய்க்கொண்டிருக்கிற காரணத்
தால்தான் இப்படி ஏற்படுகிறது. ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான்
மீண்டும் சொல்கிறேன், இந்த மாதம் 19ஆம் தேதி கர்நாட
கத்தில் இருக்கக்கூடிய சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்
கள் எல்லோரும் பதவி விலகப் போகிறோம் என்று ஏற்கனவே
சொல்லியிருக்கிறார்கள். அதனுடைய விளைவு — It is a
Provocative Act என்ன ஆகுமோ ? அதற்கு முன்கூட்டியே
நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு வன்முறை சூழ்நிலையை
மாற்றவேண்டுமென்று இந்த அரசு உண்மையிலேயே விரும்பி
னால் அதற்கு ஒரே வழி நல்ல ஜனநாயக உணர்வுகளை வளர்ப்
பதன் மூலம் தான். வன்முறை நெருப்பு என்றால் அதை
அணைக்கக்கூடிய நீர் ஜனநாயக முறை. ஜனநாயக முறை
என்கிறபோது எல்லா அரசியல் தரப்பினரும் இயங்குவதற்கு
ஏற்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டியது ஆளுங்கட்சியினுடைய
பொறுப்பு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் மூலம்
தான் வன்முறையை தவிர்க்க முடியும். உதாரணத்திற்கு
'தடா' என்கிற ஆக்ட் இருக்கிறது. Terrorism is
organised violence. A riot is different from organised violence.
ஒரு அரசாங்கத்தை அல்லது அரசியல் அமைப்பை அல்லது
ஒரு பொது அரசியல் நோக்கத்திற்காகத் திட்டமிடப் பட்டு ஒரு
குழுவினர் ஆயுதம் ஏந்தி இங்கே தமிழ்நாட்டிலா போராடு
கிறார்கள். ஆகவே, Terrorist and Disruptive Activities (Prevention)
Act இருக்கிறதே அது பஞ்சாபிற்கும் சரி, அசாமிற்கும் சரி
காஷ்மீருக்கும் சரி அங்கே அமல்படுத்த.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்டத்
துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தடா சட்டத்தைப் பற்றி ஒரு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். மாண்புமிகு பண்ருட்டி. இராமச்சந்திரன் அவர்களுக்குத் தெரியும், 2 ஆண்டுக்கு முன்பு இருந்த தமிழகத்திற்கும், இன்று இருக்கின்ற தமிழகத்திற்கும் வித்தியாசம் இருக்கின்றது. 1990-ல் கோடம்பாக்கத்தில் ஒரு படுகொலை நடைபெற்றது. அன்றைய ஆட்சி அந்தப் படு கொலையை மட்டும் தடுத்து இருந்தால் ராஜீவ் காந்தியினு டைய படுகொலையே நடந்து இருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் இன்றைக்கு ஒரு வாதத்தைச் சொல்லு கிறார். தடா சட்டம் தேவை இல்லை என்று. தேவை இல்லை என்பது உண்மைதான். ஆனால் இன்றைக்கு பயங்கரவாதத் தை 2 ஆண்டு காலத்திலே அவர்கள் வளர்த்து விட்டார்களே அதை மாற்ற தடாவைத் தவிர வேறு என்ன மார்க்கம் இருக் கிறது என்று அவர் சொல்லட்டும். அவர் சொல்லலாம், எல்.டி.டி.இ. புரட்சித் தலைவர் காலத்தில் இல்லையா? மற்றவர் காலத்தில் இல்லையா என்று. அன்றைக்கு புரட்சித் தலைவரோடு அணுக்கமான தொண்டராக அவரும் இருந் தார், நாமும் இருந்தோம். அன்றைக்கு எல்.டி.டி.இ.-ஐ புரட்சித் தலைவர் அவர்கள் கட்டுப்படுத்தி இருந்தார். ஆனால் மாண்புமிகு முதலமைச்சராக இருந்த கருணாநிதி காலத்தில் கட்டுப்படுத்தப்பட்டதா? தயவு செய்து அவர் சொல்லட்டும். 1990-ல் பயங்கரவாதம். It is a Special Criminal Lawfor a Special Crime. தமிழ்நாட்டில் பயங்கரவாதம் 1988-ல் இருந்ததா? 1987-ல் இருந்ததா? 1986-ல் இருந்ததா? புரட்சித்தலைவர் காலத் திலே நாம் எல்லாம் இருந்தோம் அன்றைக்கு இந்த பயங்கர வாதம் இருந்ததா? எல்.டி.டி.இ.-க் காரர்கள் இருந்தார்கள். ஆனால் 1989—90-ல் எப்படி அது வளர்ந்தது. கோடம்பாக்கம் படுகொலையை மட்டும் தடுத்திருந்தால், அது ராஜீவ் காந்தியின் படுகொலையிலே...............

பிற்பகல் 2–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் முதலில் சொன்ன குறிப்புகளோடு முடித்துக் கொள்ளுங்கள்; நேரம் ஆகிறது.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தடா' என்பது தவிர்க்க முடியாதது. 'தடா' இல்லையென்றால் இன்னும் பல கொலைகள் நடந்திருக்கும். அது மட்டுமல்ல, It is a Security Act. ஒரு நாட்டைப் பாதுகாப்பதற்காகக் கொண்டுவரப்பட்டது. ஏதோ ஒரு அரசியல் கட்சியைப் பழிவாங்குவதற்கோ அல்லது அவர் சொல்வதுபோல, இது ஒரு புதிய சட்டம் அல்ல என்ப தனையும் மாண்புமிகு பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவருக்குத் தெரி யும். அவர் 10 ஆண்டுகள் புரட்சித் தலைவர் அவர்களுடைய அமைச்சரவையிலே இருந்தவர்...



மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குரிய பதிலுரை
யை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள்.
நீங்கள் குறிப்பிட்ட சில குறிப்புகள் மட்டும் போதும். அவர்
பேசட்டும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ''தடா'' சட்டம் என்பது
ஏதோ பழிவாங்குவதற்காகக் கொண்டு வரப்பட்டதல்ல. அமை
தியைக் கொண்டு வருவதற்காகக் கொண்டு வரப்பட்டது.
அமைதி இன்றைக்கு இருக்கிறது என்றால் அது ''தடா''
சட்டத்தினால்தான்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த ''தடா'' சட்டம் இந்திய குடி
மக்களுக்கு மட்டுந்தான். இது எல்.டி.டி.இ.-க்கு வராது.
ஆகையினாலே நான் சொல்ல வந்தது, crime is different from
terrorism. கிரைமை நீங்கள் தடை பண்ணுங்கள்; நான்
வேண்டாம் என்று சொல்லவில்லை. அதைத் தான் மற்றவர்களும்
சொன்னார்கள். கொலைக் குற்றத்திலே ஈடுபடுகிறார்கள்
என்றால் அதைக் கண்டுபிடித்து தண்டியுங்கள் பண்ணுங்கள். அது
ஒரு அரசாங்கத்தினுடைய கடமை. டெர்ரரிஸம் என்கிறபொழுது
It is organised violence இந்தச் சட்டத்தைக் கொண்டு
வருவதன்மூலம், இதனால் மறுபடியும் அந்த நிலைமை வந்து
விடக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். இந்தச்
சட்டத்தை அமல்படுத்துவதனுடைய விளைவாக, சரி இதை
யும் பார்க்கலாமே என்கின்ற ஒரு சூழ்நிலை வருமேயானால்
அது பேராபத்தாக முடியும். வன்முறையை, டெர்ரரிஸத்தை
இதுவரையிலே ஜனநாயக சசக்திகள் எல்லோரும் சேர்ந்துதான்
முறியடித்து இருக்கிறார்களே தவிர, ஒரு சட்டத்தின் மூலம்
எந்த நாட்டிலேயும் முறியடித்தது கிடையாது.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஜனநாயக சக்தி
கள் அனைத்துமே இந்த ''தடா'' சட்டத்தை ஆதரிக்கிறார்
கள். தேச விரோதிகளும், தேசத்தை ஒன்றுபடுத்த வேண்
டாம் என்று கருதுகிறவர்களும்தான் இன்றைக்கு எதிர்க்
கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, organised terrorism,
எந்த நாட்டிலேயும் ஜனநாயக முறைப்படி, அதைத் தடுத்து
நிறுத்த முடிந்ததில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது நடைபெற்ற ஐக்கிய

நாடுகள் சபைக் கூட்டத்தில் கூட, சர்வதேச அள்வில் நடைபெறுகின்ற இந்த பயங்கரவாதத்தைத் தடுத்து நிறுத்தியாகவேண்டும் என்று தான் அத்தனை தலைவர்களும் பேசியிருகிறார்கள். அதுமட்டுமல்ல, ஒரு குறிப்பிட்ட நாட்டிலே பயங்கரவாதிகள் இரண்டு பேருக்குப் புகலிடம் தரப்படுவதாகக் குற்றம் சுமத்தி, அவர்களுக்கு சாங்ஷன்ஸ் வரும் என்கிற அச்சுறுத்தல் வந்தபோது, யாருக்காக, எந்த நாட்டுக்காக, எந்த நாட்டுக்காரன் பயங்கரவாதத்தில் ஈடுபட்டானோ அந்த இனத்தின் தலைவர் இந்தியாவிலே வந்து, அதை நான் கண்டிக்கிறேன்; ஏற்றுக் கொள்ள முடியாது 'என்று யாசர் அராபத் இந்த மண்ணிலே வந்து சொல்லியிருக்கிறார்கள். யாசர்' அராபத்துக்காகத்தான் அங்கே பயங்கரவாதம் நடைபெற்றதாகக் குற்றச்சாட்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் விவரமாகப் போகவேண்டாம். நேரம் ஆகிறது. மாண்புமிகு அமைச்சருக்கு சொன்னதையே உங்களுக்கும் சொல்கிறேன். உறுப்பினர் எழுப்பிய பிரச்சினைக்கு நீங்கள் பதில் சொல்லி விட்டீர்கள். விரிவாகப் போக வேண்டாம்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் : ஆர்கனைஸ்டு டெரரிஸம் இந்த மண்ணிலே இல்லை என்று சொல்வது தவறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆர்கனைஸ்டு டெரரிஸம் என்பது தவறு என்று அவர் சொல்கிறார்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் : தமிழர் மீட்சிப் படை என்பது ஆர்கனைஸ்டு டெரரிஸம் அல்லாமல் அதற்கு பெயர் என்ன? ஆயுதப் பயிற்சி முகாம்கள் நடைபெறுகின்றன. தனியாக ஒவ்வொருவரும் சாட்சியம் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பெயர்தான் ஆர்கனைஸ்டு டெரரிஸம்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெரரிஸத்தை ஜனநாயக சக்திகள் சில நாடுகளிலே முறியடித்து இருக்கின்றன. எங்கும் முறியடிக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. நான் ஐ.நா. சபை போனபொழுதே டெரரிஸம் பற்றி பேசப்பட்டிருக்கிறது. ஒரு நாட்டிலே டெரரிஸம் என்று ஒரு அரசாங்கம் சொல்லும். அதையே இன்னொரு நாடு அதை விடுதலை இயக்கம் என்று சொல்லும். அது வேறு சமாச்சாரம். நான் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலேதான் சொல்கிறேன். இங்கு எந்த அரசியல் கட்சியானாலும் சரி ஜனநாயகத்திலே நம்பிக்கை கொண்ட கட்சிகளானாலும் சரி; இங்கே யார் ஆயுதம் ஏந்தி, தமிழ் நாட்டைப் பிரிக்க வேண்டுமென்று, யார் போராடுகிறார்கள்? எந்தக் கட்சி போராடுகிறது? யாரும் இல்லை. தமிழர் புரட்சிப் படை என்றால் நீங்கள் அவர்கள் மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள். அது வேறு.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதோடு முடித்துக் கொள்ளலாம்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து ஜனநாயக சக்திகளும் சேர வேண்டுமென்று நான் சொல்வதற்கு காரணம். இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே யாரும் பேசுவதற்கே ஆள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து நீங்கள், யாரும் இல்லை என்று சொல்லக் கூடாது. திரு செல்வராஜ் அவர்கள் வந்து பேசலாம் என்று போட்டிருந்தோம். அவர் வரவில்லை என்று சொல்கிறபோது, நாம் யாரும் அவரைத் தடுக்கவில்லை, அதாவது நேற்றையதினம், உங்களை, ஒரு மூத்த உறுப்பினர், அந்த உறுப்பினருக்காக நீங்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறீர்களா என்று கேட்டேன்; மற்ற உறுப்பினர்களையும் கேட்டேன். ஒருவராலும் பொறுப்பேற்க முடியவில்லை. அதன் பின்னர் இந்த நிலைமை உருவாகி இருக்கிறது. செல்வராஜ் அவர்கள் இப்போது வந்தும் பேசலாம். செல்வராஜ் அவர்கள் பேசவேண்டுமென்று அவருக்காக நேரம் ஒதுக்கி வைத்திருக்கிறோம். அவர் வரவில்லை. இதை நீங்கள் ஒரு குறைபாடாகச் சொன்னால் எப்படி? நீங்கள் இப்போது சொல்வது அவையைப் பற்றியசெய்தி. அவையில் ஏன் இல்லாமல் இருந்திருக்கிறார்கள்? அவையினுடைய விதி முறைகளுக்கெல்லாம் புறம்பாக நடப்பேன் என்று ஒருவர் முரண்டு பிடித்தால், அவருக்கு வக்காலத்து வாங்குவது போல் நீங்கள் பேசுவது சரியல்ல.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வக்காலத்து வாங்கவில்லை. நான் சொல்வது

பிற்பகல் 2-20.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்வது, இங்கே இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறீர்கள். அந்த நிலைமையை உருவாக்கிக் கொண்டது அவர்களாகவே. இன்னொரு உறுப்பினர் இப்பொழுது வந்து பேசலாம். அவர் அடிபட்டேன் என்று வந்து பேசுவதற்கு வந்தவர், மக்கள் பிரச்சனைகளைப் பேசுவதற்கு இப்பொழுது கூட வந்து பேசலாம். அவர் அடிபட்டதற்கு அவர் கொடுத்த முக்கியத்துவம், மக்கள் பிரச்சனைகளைப் பற்றியோ, இந்த நாட்டைப் பற்றியோ பேசுவதற்குக் கொடுக்க முன் வரவில்லை என்றுதான் பொருள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலே, மாற்றான் கருத்துக்கும் மதிப்பு உண்டு. மல்லிகைக்கும் மனம் உண்டு என்று சொன்ன அறிஞர் அண்ணா அவர்களின் வழி வந்த இயக்கங்கள்

பல இருக்கின்றன. அனைத்து ஜனநாயகக் கருத்துக்களும் இங்கே உலவுகின்ற வண்ணம் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ எடுக்க வேண்டும். சான்றாக, இந்த ஊர்வலத்திற்குக் கையெழுத்துப் போட்டால் தான் அனுமதி தருவோம் என்று சொன்னதையெல்லாம் அவர்கள் மறுபரிசீலனை செய்து, எல்லோரும் எல்லாக் கருத்தையும் சொல்லட்டும். நாட்டு மக்கள் நல்ல தெளிவானவர்கள், நல்ல தீர்ப்பு வழங்குவார்கள். ஆகையினாலே இந்தக் கருத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (7—2—1992) முற்பகல் 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-21 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் :

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

58. தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 1988-89 ஆம் ஆண்டிற்கான பதினோறாம் ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1|1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

59. 1986-87ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிர்வாக அறிக்கை. (1948 ஆம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54|1948) 75(1) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

22. மனுக்கள் குழுவின் முதலாவது அறிக்கை, 1991-92.

23. மனுக்கள் குழுவிச் இரண்டாவது அறிக்கை, 1991-92.

162265
600 009

# LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

## IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

## IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Ammen Sannathi, Madurai-1

## IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

---

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.